வரு.74 இல. 23 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2022 ஜூன் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

June 05 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-



















# பெருந்தோட்ட கம்பனிகளின் பயன்படுத்தப்படாத அனைத்து காணிகளிலும் உணவுப் பயிர்ச்செய்கை

### உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை



**எரிபொருள், உரங்களை வழங்குவதில் முன்னுரிமை வழங்கவும் பணிப்பு**

பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்துப் பயன்படுத்தப்படாத நிலங்களையும் கண்டறிந்து, உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கான துரித வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான 9,000 ஹெக்டேயர்களுக்கும் அதிகமான பயிரிடப்படாத நிலங்களுள்ளன. 23 கம்பனிகளுக்குச் சொந்தமான அந்த தோட்டங்களில் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற பயிர்களை இனங்கண்டு, அவற்றை பயிரிடுபவர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

04

ஒரு நாளைக்கு இரு வேளை சாப்பிடும் நிலை வரலாம்

# பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தற்போது ஆரம்பம்

## பெரும் உணவு பற்றாக்குறைக்கு முகம்கொடுக்க நேரிடலாம் - பிரதமர் ரணில் எச்சரிக்கை



அடுத்தடுத்து வரும் மாதங்களில் மிகவும் மோசமான நிலையை இலங்கை மக்கள் எதிர்கொள்ளவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். உக்ரேன்-ரஷ்யா போரினால் இலங்கையின்

04

### 21 ஆவது திருத்தச் சட்டமூலம் நாளை அமைச்சரவைக்கு

# நான்கு முக்கிய விடயங்களில் சகல கட்சிகளும் இணக்கப்பாடு

### ஓரிரு வாரங்களில் வர்த்தமானியில் வெளியிடவும் எதிர்பார்ப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

திருத்தங்களுடனான முழுமையான 21 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூல வரைபு நாளை திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உத்தேச 21ஆவது திருத்தச் சட்டமூலத்தில், இரட்டைக் குடியுரிமை விவகாரம், பிரதமரை பதவி நீக்கும் விடயம், அமைச்சின் விடயதானங்கள், ஜனாதிபதி அமைச்சுப் பதவியை வகித்தல் உள்ளிட்ட நான்கு பிரதான விடயங்கள் குறித்தும் ஒருமித்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய திருத்தங்களுடனான முழுமையாக திருத்தச்சட்டமூல வரைபு நாளை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு ஓரிரு வாரங்களில் வர்த்தமானியில் வெளியிடவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் 21ஆவது திருத்தம்

**தமிழர் பிரச்சினைகளும் உள்வாங்கி பூரணத்துவம் கொண்டதாக அமைய சுமந்திரன் MP வலியுறுத்து**

குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பூரணமற்ற வகையில் இந்த திருத்தத்தை கொண்டு வராமல் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வை உள்ளடக்கிய வகையில் திருத்தம் கொண்டுவர வேண்டுமெனதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தில் அரசியலமைப்பின்

04

# இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன்

**தமிழக முதல்வர் ஸ்டாலின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவிடம் தெரிவிப்பு**



இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து தாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவிடம் நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் முதல் கப்பலை உடனடியாக அனுப்பியதாகவும் இரண்டாவது கப்பலை அனுப்பவுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். தமிழக அரசின் உடனடி நிவாரணம் தொடர்பில் தமிழக முதலமைச்சருக்கும் தமிழக மக்களுக்கும் தனது நன்றிகளையும் உயர் ஸ்தானிகர்

04



# நாளை முதல் தனியார் பஸ் சேவை மட்டுப்படுத்தப்படும்

சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவிப்பு

04

### நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை

# முற்றாக ஒழிக்க முயல்வது ஆபத்திலேயே முடிவடையும்

### அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் எச்சரிக்கை



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க எடுக்கப்படும் முயற்சிகள் ஆபத்தானது. இந்தப் பதவிக்கு வரும் ஆட்களைப் பொறுத்தே, இதன், ஆழ, அகலங்கள் அறியப்படுவதாக மு.கா. பிரதித் தலைவர் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். இது குறித்து ஊடகங்களுக்கு அவர் தெரிவித்ததாவது;

நிறைவேற்று அதிகாரம் மக்களுக்கு உச்ச பாதுகாப்பளிக்கிறது. கடந்தகாலங்களில் அனுபவிக்க நேர்ந்தவைகள் சிலவற்றால், இப்பதவியை ஒழிக்க வேண்டுமென்ற கோஷங்கள் எழுந்துள்ளன. ஆனால், இதை, ஒழிக்கக் கூடாதென்ற நிலைப்பாட்டிலேயே

04

### ரஷ்ய ஏரோஃப்ளோட் விமான பிரச்சினை;

# இருதரப்பு உறவுகள் பாதிக்காது ரஷ்ய பிரச்சினையை தீருங்கள்



**அதிகாரிகளிடம் நடவடிக்கை எடுக்க தினேஷ் கோரல்**

ரஷ்ய 'ஏரோஃப்ளோட்' விமானம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண விரைவாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ரஷ்ய 'ஏரோஃப்ளோட்' விமானமொன்று இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதையடுத்து கொழும்புக்கான விமான சேவைகளை அந்நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது.

எனவே இரு நாடுகளுக்குமிடையே பொருளாதாரத்துக்கும் பாரிய பாதிப்புகள் ஏற்படுவதற்கு முன்னர்

04

# பொலிஸார் தேடும் MP யின் மகன் அவுஸ்திரேலியாவில்?

### முகநூல் பதிவால் பலரும் வியப்பில்



பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நிந்தித்த குற்றச்சாட்டின் கீழ் தேடப்படும் பாராளுமன்ற உறுப்பினரின் மகன் தான் தற்போது அவுஸ்திரேலியாவில் உள்ளதாக தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினரின் மகனை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நிந்தித்த குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்வதற்காக பொலிஸார் தேடி வருகின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே அவர் தனது

04

# 21ஆவது திருத்தம்; TULF ஆதரவு

### வி. ஆனந்தசங்கரி தெரிவிப்பு



21ஆவது திருத்தச் சட்டத்துக்கு தங்களது முழுமையான ஆதரவை வழங்குவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்துள்ளது.

நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவுடன் நடைபெற்ற

04

## எங்கள் கருத்து...

# லண்டனில் மலையக இலக்கிய மாநாடு

அறுபதுகளுக்குப்பின் கிளர்ந்தெழுந்த மலையக இலக்கிய வளர்ச்சியில் தினகரனின் பங்கு மகத்தானதாகும். பேராசிரியர் க.கைலாசபதி தினகரனின் ஆசிரியராக இருந்த போது மலையக இலக்கியத்தை தினகரனில் நீரூற்றி வளர்த்தாரென்று சொல்வது பொருந்தும். அவர் சி.வி.வேலுப்பிள்ளை, என்.எஸ்.எம்.ராமையா, சாரல் நாடன் ஆகியோரது மலையக எழுத்துகளுக்கு தனி முக்கியத்துவம் கொடுத்திருந்தார். தினகரனில் சி.வி.வேலுப்பிள்ளையை மலையகத் தலைவர்களைப்பற்றி தொடர்ந்து எழுதுமாறு ஊக்குவித்து 26 வாரங்கள் அவரது கட்டுரைகளை கைலாசபதி தினகரனில் தொடர்ந்து வெளியிட்டார். அந்தக்கட்டுரைகள்தான் இன்று தொகுக்கப்பட்டு 64 ஆண்டுகளுக்குப்பின் 'மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்' என்ற தலைப்பில் லண்டனில் நடைபெறவிருக்கும் மலையக இலக்கிய மாநாட்டில் வெளியிடப்படவிருக்கிறது என்பது தினகரனுக்கு உண்மையில் பெருமை சேர்க்கும் செய்தியாகும்.

மலையக இலக்கியத்தின் பிதாமகன் என்று மு.நித்தியானந்தன் குறிக்கும் சி.வி.வேலுப்பிள்ளையின் மிக முக்கிய நாவல்கள் தினகரன் ஏட்டிலேயே வெளியாகின என்பது எங்களுக்கு பெருமை தருகிறது. தினகரனின் உதவி ஆசிரியராகவிருந்த மு.நித்தியானந்தன் எழுதிய மிக முக்கிய இலக்கிய வரலாற்றுத் தொடரான 'துங்ஹிந்த சாரலில்...' என்ற இலக்கியத் தொடர் கட்டுரை தினகரனிலேயே வெளியாகியது. 'மலையகப் பரிசுக் கதைகள்' பாரிஸ், லண்டன், கொழும்பில் வெளியான போது தினகரன் தலையங்கங்கள் எழுதிக் கௌரவித்திருக்கிறது.

04

### 2022 இரண்டாம் தவணைக்காக

# பாடசாலைகள் நாளை முதல் மீள ஆரம்பம்




2022ஆம் ஆண்டு, பாடசாலைகளின் இரண்டாம் தவணையின் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பான அறிவிப்பை கல்வி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ளது. இதன்படி நாடு முழுவதிலுமுள்ள அனைத்து பாடசாலைகளும் நாளை 06ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இருப்புகள் சகலதும் தீர்ந்துவிட்டன

# மறு அறிவித்தல் வரை Gas விநியோகம் நடைபெறாது

### வீணாக வரிசையில் காத்திருக்க வேண்டாம்



மறு அறிவித்தல் வரும் வரை சமையல் எரிவாயு (12.5 கிலோ, 5 கிலோ மற்றும் 2.3 கிலோ) விநியோகம் செய்யப்படமாட்டாதென லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

தற்போதைய இருப்புகள் அனைத்தும் தீர்ந்து

04

### 28 மில். டொலர் பெறுமதியான

# சீன நன்கொடை மருந்து வகைகள் நாட்டை வந்தடைவு



சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 28 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

இதில் 14 அத்தியாவசிய மருந்துகள் உட்பட மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சர்

04

# அரசியலமைப்பு பேரவையில் சிறுபான்மையினர் அவசியம்

### மூவருக்கு இடமளிக்க அரவிந்தகுமார் MP வலியுறுத்து



21ஆவது திருத்த சட்டத்தின் கீழ் அமையவிருக்கும் அரசியலமைப்புப் பேரவையில் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அருணாச்சலம் அரவிந்தகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள அவர், அதன் பிரதிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,

04

### தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு

# இளம் இராணுவ வீரர் ஒருவர் தற்கொலை

**சுமந்திரன் MPயின் வீட்டின் அருகே சம்பவம்**



இளம் இராணுவ வீரர் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று வெள்ளவத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது. 22 வயதான இராணுவ வீரர் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டதாகவும் மேலதிக விசாரணைகள்

04

### திருமலை – ஹபரணை பகுதியில்

# ரயிலில் மோதுண்டு இரு யானைகள் உயிரிழப்பு



மற்றொரு யானை படுகாயம்

ஹபரணை பொலிஸ் பிரிவின் 120 ஆம் கட்டை தல்பந்தகந்தை பகுதியில் ரயிலில் மோதுண்டு இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொரு யானை படுகாயமடைந்துள்ளது.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி பொருட்களை ஏற்றிச்சென்ற சரக்கு

04

# ஆயிஷா

## சேற்றில் புதைந்த செந்தாமரை



நமது நாட்டிலே ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு, பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு, கேஸ் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, என இன்னோரன்ன பிரச்சினைகளை மையப்படுத்தி செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாக கைபேசியில் குறுஞ்செய்திகளாக வந்து மறைந்து கொண்டிருந்தன. திடீரென வித்தியாசமான செய்தி ஒன்று வரவே திடுக்குற்றேன். அச்செய்தி இப்படி இருந்தது

"பண்டாரகம, அட்டுலுகமயில் கோழி இறைச்சி வாங்க கடைக்குச் சென்ற ஒன்பதுவயது சிறுமியைக் காணவில்லை."

இச்செய்தி காட்டுத்தீபோல நாடெங்கும் பரவியது.

நமது நாட்டில் உயிர்களுக்கு பெறுமதியே இல்லாதுபோன இக்காலகட்டத்தில் அதிலும் நாளைய வச்சிரத்தூண்களான இன்றைய சிறார்களை கொடூரமாக கொலைசெய்யப்படுவது முடிந்தபாடில்லை இதற்கு முற்றுப்புள்ளி எப்போது என்று நினைக்க தோன்றுகிறது,

1984 இல் சமன்குமார, 1999 இல் அளுத்தகம சதீபலக்க்ஷான், 2015 இல் சேயா சந்தெவுமி, 2015 இல் யாழ்ப்பாணம் வித்யா, செவ்வந்தி, பியோமி, இஷாலினி, என்ற பட்டியலில் தான் அட்டுலுகம ஆயிஷாவும் இணைகிறாள். இந்த சூடுதணிய முன் மற்றுமொன்று, 30 ஆம் (30.05.2022) திகதி வவுனியாவின் கணேசபுரத்தில் ராஜேந்திரன் யதுர்ஷி பாழடைந்த கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டாள் என்ற செய்தி வெளிவந்தது.



### தன் நண்பரின் குட்டி மகளை கொடூரமாக கொன்றதன் காரணம் என்ன?

### இன்றும் துலங்காத மர்மங்கள்...

### விரைந்து செயல்படும் பொலிஸார்...


பாணதுறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமந்த வெதகே

### அன்று வெள்ளிக்கிழமை 27 ஆம் திகதி..

அட்டுலுகமை முஸ்லிம் கொலனியைச் சேர்ந்த பாத்திமா ஆயிஷா அக்ரம் என்ற ஒன்பது வயது சிறுமிபோன இடம் தெரியவில்லை.

அட்டுலுகமை அல்கஸ்ஸாலி ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்வி கற்பவள் சொல்லிக்கொடுக்கும் விடயங்களை நுணுக்கமாக அவதானித்து புரிந்து கொள்ளக் கூடியவர். வசீகரமான அழகு. இவள் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை. அண்ணன் இம்முறை க.பொ.த. சாதாரணதர பரீட்சை எழுதியவர். இரண்டாவதும் ஒரு அண்ணன் ஆண்டு பத்தில் பயில்பவர். கொலை செய்யப்பட்ட ஆயிஷா மூன்றாவது. நான்காவது மூன்றுமாதக் குழந்தை. ஆயிஷாவின் தந்தை கூலி வேலை உட்பட ஏதாவது செய்து வீட்டு செலவைத்தேடி வாழ்க்கை நடத்துபவர், இடையில் கொடிய போதைபொருள் பழக்கத்திற்கு அடிமையானவர்..

தனது குடும்பநிலை கண்டும், தந்தையின் நிலை கண்டும் ஆயிஷா பெரிதும் மனம் வருந்தினாள். கவலையோடு வாழ்க்கை நடத்தும் தாயை நினைத்து வருந்தி தாய்க்கு மேலும் கவலையை கொடுக்காமல் உதவிசெய்து ஒத்தாசையாக விளங்கினாள். சம்பவதினம் பரீட்சைக்கு செல்லும் அண்ணனுக்கு தேநீர் தயாரித்துக் கொடுத்து அனுப்பியதாக குடும்பத்தினர் கூறினார்.

அட்டுலுக்கமை வழமையாக வெள்ளிக்கிழமைகளில் பெருநாள் போன்று காட்சியளிக்கும். அதிகமான வர்த்தகர்கள் வியாபாரத்தில் ஈடுபட மாட்டார்கள்.

சம்பவதினம் ஒரு வெள்ளிக்கிழமை. ஆகையால் ஏனைய வீடுகளைபோல் நமது வீட்டிலும் ஜும்மா தினத்தில் கோழிக்கறி ருசியாக சமைக்க வேண்டும் என்று ஆசைகொண்டு காலை பத்து மணியளவில் தாயிடம் 300 ரூபா கேட்டுக்கொண்டு 250 கிராம் கோழி இறைச்சி வாங்க வீட்டில் இருந்து சுமார் 350 மீற்றர் தூரத்தில் உள்ள கோழிக் கடைக்கு போனாள் ஆயிஷா. ஆயிஷா கோழி இறைச்சி வாங்கிக்கொண்டு வீடு திரும்புவது எதிரில் உள்ள வர்த்தகநிலைய சிசிடிவீ கமராவில் பதிவாகி இருந்தது. அச்சிறுமி அங்கிருந்து திரும்பும்போது ஒரு வான் அங்கு குறுக்கிட்டு செல்வதால் , அந்த வானில் வந்தவர்கள் சிறுமியை கடத்திக்கொண்டு சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்தை சமூக வலைத்தளங்களில் பலரும் பதிவிட்டனர்.

கோழி இறைச்சி வாங்கச்சென்ற சிறுமி மாயமாக மறைந்தது அனைவரையுமே வியப்புக்குள்ளாக்கியது. இதைக் கேள்வியுற்ற அனைவரும் சிறுமி ஆயிஷாவின் வீட்டுக்கு வந்தனர். ஆரம்பத்தில் கூறியதுபோல் வெள்ளிக்கிழமை என்பதால் பலரும் கூடினார்கள்.

ஆயிஷாவின் தயார் உட்பட பலரும் பல இடங்களில் தேடிவிட்டு இறுதியில் பண்டாரகம பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்தனர். உடன் செயல்பட்ட பொலிசார் மோப்பநாயை வரவழைத்து பொதுமக்களின் தேடியதிலும் பலன் கிடைக்கவில்லை.

அட்டுலுகமை பெரிய பள்ளிவாசல் முன்னால் உள்ள ஒழுங்கையில் சுமார் 150 மீற்றர் அளவில் சென்று வலதுபக்கம் திரும்பினால் ஆயிஷாவின் சிறிய வீடு வரும். பெரிய பள்ளிவாசல் முன்னால் ஒழுங்கை ஆரம்பமாகும் இடத்தில் சிறுமி பேக்குடன் நிற்பதைக் கண்ட அயலவர் ஒருவர் விசாரித்தபோது அப்பா வரும்வரை நிற்கிறேன் என்று சிறுமி பதிலளித்துள்ளார்.


ஆயிஷாவின் வீடு

காணமற்போன ஆயிஷா பாணந்துறை, புறக்கோட்டைப் பகுதிகளில் காணப்பட்டதாக போலித் தகவல்கள் கிடைக்கப்பெற்ற போது பாணந்துறை, புறக்கோட்டைப் பொலிசார் அதையும் விசாரித்தனர்.

அட்டுலுக்கமை பெரியபள்ளிக்கு முன்உள்ள வீதிக்கு அருகில் ஆரம்பமாகும் காட்டுப்பகுதி ஆயிஷா வசித்த கொலனி வரை விரிந்திருந்தது. காட்டுப்பகுதியோடு ஒட்டியதாக கொலனிக்கு செல்லும் ஒழுங்கை. இதில் காட்டுப்பக்கமாக மரக்கறி விளைச்சல் செய்யப்பட்டிருந்தது. அந்த விளைச்சல் பண்ணிய இடத்துக்குச் சென்றால் அக் காட்டின் அடர்த்தியான நடுப்பகுதியை அடையலாம்.

காட்டுப்பகுதியில் சந்தேகம்கொண்ட பொலிசார் ஊர்மக்களின் ஆதரவோடு காட்டுக்குள் தேடும் பணியை ஆரம்பித்தனர். அந்த அடர்த்தியான காட்டில் நீர்நிரம்பிய இடத்தில் சதுப்பு நிலத்தில் சிறுமியின் கால்கள் தெரிந்தன. இதைக் கண்ட பலரும் முண்டியடித்து கொண்டு செயல்பட்டனர். உடல் மீட்கப்பட்டபோது முகம் சேற்றில் புதைந்த நிலையில் காணப்பட்டது.

சிறுமியின் கொலை செய்யப்பட்டு விட்டாரா என்பது தெரிந்ததுமே அட்டுலுகம கிராம மக்கள் சோகத்தில் மூழ்கினர். மீட்கப்பட்ட சிறுமியின் உடலைப்பார்க்க ஏராளமானோர் அந்த அடர்த்தியான காட்டுக்குள் கூடினர்.சிறுமியின் சடலம் இருந்த இடத்திற்கு நேரடியாக வருகைதந்த பாணந்துறை பதில் மாஜிஸ்திரேட் இந்திராணி உடவத்த அந்த ஸ்தலத்திலே விசாரணைகளை மேற்கொண்டார். பாணந்துறை ஆதார வைத்தியசாலை உதவி மருத்துவ அதிகாரி ரொஷான் விஜேதுங்கவும் நேரடியாக வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டார்.


கூர்ந்து பார்த்தால் பிஞ்சுப் பாதங்கள் தெரியும்

பிரேதத்தை பாணந்துறை ஆதார வைத்தியசாலை பிரேத அறைக்கு அனுப்புமாறும் அங்கு பிரேத பரிசோதனை மேற்கொண்டு நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பதில் மாஜிஸ்திரேட் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

பண்டாரகம பொலிசாருடன் அலுபோமுல்லை, பாணந்துறை வடக்கு ஆகிய பொலிஸ் நிலைய அதிகாரிகளும் புலனாய்வுத்துறை அதிகாரிகளும் ஈடுபடுத்தப்பட்டதாக பாணந்துறை பொலிஸ்பிரிவின் சிரேஷ்ட அத்தியட்சகர் சமந்தாவெதகே தகவல் தெரிவித்தார். இதையடுத்து ஜனாதிபதியின் டுவிட்டர் பக்கத்தில் அனுதாபத்தை தெரிவித்ததுடன் குற்றவாளியை உடனடியாக கண்டுபிடித்து சட்டத்தின் முன்நிறுத்துமாறு அறிவுரை வழங்கி இருந்தார்.

ஜனாதிபதியின் பணிப்பை அடுத்து இரகசியப் பொலிசார், பாணந்துறை பொலிஸ் பிரிவின் விசேட புலனாய்வுப் பிரிவினர், களுத்துறை விசேட பொலிஸ் பிரிவு , பண்டாரகம பொலிஸ், என்று பல கோணங்களில் விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டனர்.

ஆயிஷாவின் தந்தை உட்பட அயலவர்கள் மற்றும் சந்தேகத்திடற்கிடமானவர்கள் என்று 20க்கும் மேற்பட்டவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டன. வீடுகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

விசாரணைக்கு உட்படுத்தப்பட ஆயிஷாவின் தந்தை தனது போதைப் பொருள் பாவனையால்தான் இந்த அநியாயம் நடைபெற்றதாகவும் எனது தவறாலே மகளை இழந்ததாகவும் வருந்தி அழுதார்.



கடந்த சனிக்கிழமை சந்தேகத்தின் பேரில் கைதான இருவருள் ஒருவர்மீது பொலிசாரின் சந்தேகம் வலுவானது. அவரிடம் விசாரணைகளை பொலிசார் தொடர்ந்து மேற்கொண்டனர். அயல் வீடொன்றில் வசித்த 27 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே யையே பொலிஸார் கடுமையாக சந்தேகித்தனர்.

இச்சந்தேகநபரின் வீட்டிலிருந்துதான் சேறுபடிந்த சாரம் ஒன்றை கட்டிலுக்கு அடியில் இருந்து பொலிசார் மீட்டனர். இவரது கழுத்து உட்பட மேனியில் பல இடங்களில் நகக்கீறல்கள் காணப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். சந்தேகநபரின் மனைவி காலி நகரைச் சேர்த்தவர் என்றும் அவர் மீண்டும் கர்ப்பமுற்றுள்ளார் என்பதும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இச்சந்தேகநபர் ஆயிஷாவின் தந்தையைப்போல் போதைப்பொருள் (ஐஸ்) பாவனையுள்ளவர் என்றும் இருவரும் ஒன்றாக பாவனையில் ஈடுபடுகிறவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இச்சிறுமியை தேடும்பணியில் ஊரார் ஈடுபட்டிருந்தபோது சந்தேகநபரும் சுறுசுறுப்பாக பற்றைகளை துப்பரவு செய்த்து உதவினா'. என்னும் பிரேதம் இருந்த பக்கமாக நாட்டம் கொள்ளாமல் எதிர்த்திசையிலே அவர் நாட்டம் கொண்டிருந்தார் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.


கடந்த வெள்ளியன்று அட்டுளுகமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

தான்செய்த குற்றத்தை ஒப்புக்கொண்ட சந்தேகநபர் கொலை செய்த விதத்தையும் பொலிசாரிடம் விபரித்துள்ளார்.

சிறுமி கோழி இறைச்சி வாங்கிக் கொண்டு வந்த பள்ளிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் நடந்து சனநடமாட்டம் இல்லாத விளைச்சல் செய்ந்திருந்த இடத்துக்கு வந்தபோது சிறுமியை இழுத்துச் சென்று காட்டின் அடர்ந்த மத்திய பகுதியை அடைந்ததாக பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

அடுத்தநாள் அதாவது 30ஆம் திகதி ஆயிஷாவின் பிரேதம் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பாணந்துறை வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி எச்.கே.ஜே.விஜேவீர, உத்பல ஆட்டிக்கல, அனுர ஆகிய மூவர் கொண்ட மருத்துவ குழுவினரால் இப்பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

சிறுமியின் முகத்தை சேற்றில் அழுத்தும்போது சிறுமி உயிருடன் இருந்துள்ளார். எனவே சேற்றுநீரில் முகத்தை பல தடவைகள் அழுத்திய போது சிறுமி அவசரமாக மூச்சை உள் வாங்க வேண்டியிருந்தது. இச் சமயத்தில் மூச்சுடன் நீர் கலந்த சேறு மூக்கு மற்றும் வாய் வழியாக உள்ளே சென்றுள்ளதாகவும் இது நுரையீரல் உட்பட உள் உறுப்புக்களுக்கு போய் சேர்த்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் மூச்சு திணறி மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படவில்லை என்றும், அது தொடர்பான எந்த தடயங்களும் காணப்படவில்லை என்றும் வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியெனில் இக்கொலைக்கு காரணம் என்ன என்பது புரியாத புதிராகவே உள்ளது. சிலவேளை சந்தேகநபர் செய்திருக்கக் கூடிய தவறுகளை/ குற்றங்களை சிறுமி கண்டிருக்கக் கூடும். அவற்றை சிறுமி வெளியே சொல்லிவிடலாம் என்ற அச்சத்தால் இக் கொலை நிகழ்ந்ததா என்ற கேள்வி உள்ளது.

இக்கொலை தொடர்பில் அதே கொலனியைச் சேர்ந்த முஹம்மது பாரூக் என்பவரே பொலிசாரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டவர். இவர் நாட்டாமி, கொத்துரொட்டி பாஸ் போன்ற தொழில்களை செய்துவந்தவர். பின்னரேயே போதை வஸ்துக்கு அடிமையானார். சமீப காலத்தில் இரண்டு வீடுகளில் புகுந்து பொருட்களை திருடிச் சென்றிருப்பதாகவும் பொலிஸார் தகவல் தெரிவிக்கின்றனர். இவரை இரண்டு நாட்கள் தடுத்துவைத்து விசாரணை செய்ய பொலிசாருக்கு அனுமதியை மாஜிஸ்திரேட் சென்ற 30 ஆம் திகதி வழங்கினார். அதன்படி மீண்டும் சென்ற முதலாம்திகதி புதனன்று சந்தேகநபரை ஆஜர்படுத்தியபோது சந்தேகநபரை எதிரவரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பாணந்துறை பிரதான மாஜிஸ்திரேட் ஜயருவான் திசாநாயக்க உத்தரவிட்டார்.

எம். கே. எம். அஸ்வர் ...

படங்கள் : மொறட்டுவை மத்திய விசேட நிருபர்

# வெறும் அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க முடியாது!




## குழப்பத்தை மேலும் அதிகரிக்கும் என்கிறார் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டுமெனில், வெறும் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அதனைச் செய்ய முடியாது. அவ்வாறு செய்வது குழப்பத்தை மேலும் அதிகரிக்கும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். 21ஆவது அரசியலமைப்புத் திருத்த யோசனைகள் உள்ளிட்ட தற்போதைய நிலைமைகள் குறித்து எமக்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.**



**கே: தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண முன்மொழியப்பட்ட தேசிய கவுன்சில் ஊடாக அரசியல் கட்சிகளிடையே பொதுவான ஒருமித்த கருத்தை எட்ட முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: உண்மையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியும் எனக் கருதுகின்றேன். 21ஆவது திருத்தம் கொண்டுவரப்படுவதற்கு முன்பே நாங்கள் அதை முன்மொழிந்தோம். தற்போதைய நெருக்கடியை ஓரளவுக்கு தீர்க்க இது உதவும் என்று நினைக்கின்றேன்.

**கே: பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் உடனடி நடவடிக்கை எடுத்திருந்தால், காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அரசாங்க அரசியல்வாதிகளின் வீடுகள் மீதான தாக்குதல்களைத் தடுத்திருக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர்கள் கருதுகின்றனர். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: நிச்சயமாக இது தடுக்கப்பட்டிருக்க வேண்டும், குறிப்பாக பொலிஸார் வினைத்திறனாக செயற்படவில்லையென்ற கருத்துக் காணப்படுகிறது. தெளிவான உத்தரவு வழங்கப்படாவிட்டால் பாதுகாப்புப் படையினரால் செயற்பட முடியாது. எனினும், அனைத்துப் பிரஜைகளையும் பாதுகாக்க வேண்டிய கடமை பொலிஸாருக்கு உள்ளது. பொலிஸ்மா அதிபர் கூறிய கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

> "மக்கள் போராட்டத்தை ஆரம்பித்து வீதிகளில் இறங்குவார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அதனால்தான், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் பங்கேற்புடன் இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தேன்"

**கே: இது அரசியல் நெருக்கடி மட்டுமல்ல, பொருளாதார நெருக்கடியும் கூட. இதற்குத் தீர்வு காண அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்றனர். நீங்கள் இதனை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

பதில்: உண்மையில், மக்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து வீதிகளில் இறங்குவார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அதனால்தான், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் பங்கேற்புடன் இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தேன். இருப்பினும், அது பெரிதாகக் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இதனால், கடும் நெருக்கடியை சந்திக்க வேண்டியுள்ளது. நிச்சயமாக, தற்போதைய அரசாங்கம் தனது வேலையைத் தொடங்கிய போதும் அரசியல் நெருக்கடி நீண்ட காலமாக இருந்தது. ஆனால், அது பொருளாதார நெருக்கடியை உருவாக்கும் அளவிற்கு சென்றதை மக்கள் உணர்ந்தனர். பின்னர் மக்கள் மட்டுமே அதைப் பார்க்கத் தொடங்கினர் மற்றும் தங்கள் எதிர்ப்புகளையும் பிற போராட்டங்களையும் தொடங்கினார்கள்.

**கே: அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தின் வரைவில் 19வது திருத்தச் சட்டத்தின் பல விதிகள் கைவிடப்பட்டிருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது. நீங்கள் இதுபற்றி கருத்துத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

பதில்: எல்லா அமைப்புகளும் தனிநபர்களும் தங்களுக்கு மாத்திரம்தான் சரியான விடயங்கள் தெரியும் என நினைக்கின்றனர். அவர்கள் நான்கு முன்மொழிவுகளை அனுப்பிய போது, இரண்டு அல்லது மூன்று ஏற்கனவே காணப்படுபவை ஆகும்.

**கேள்வி: இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு பதிலாக, ஆளும் கட்சியான தலைமைகளை மாற்றுவதன் மூலம் அரசாங்கம் தனது சொந்த அமைச்சரவையை நியமித்துள்ளதாக பிரதான எதிர்க்கட்சி சாடியுள்ளது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: உண்மையில், எதிர்க்கட்சிகள் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான பரிந்துரையை முன்வைக்கவில்லை. அதற்கான பரிந்துரையை நானே முதலில் முன்வைத்தேன். அதன் பின்னர், பாராளுமன்றத்தில் உள்ள 53 சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவின் ஊடாக அந்தக் கோரிக்கையை முன்வைத்தோம். எனவே, இடைக்கால அரசை முதலில் பரிந்துரைத்தவர்கள் நாங்கள்தான், எதிர்க்கட்சிகள் அல்ல. பிரதமர் பதவி மற்றும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுமாறு பிரதான எதிர்க்கட்சியிடம் நாம் கோரியிருந்தோம். பின்னர் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினராகிய நாம் பிரதான எதிர்க்கட்சியை ஆட்சி அமைக்க அழைத்தோம். அதனையும் அவர்கள் மறுத்து விட்டார்கள். இப்போது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இப்போது எதிர்க்கட்சிகள் அனைத்தையும் மறுத்து விட்டு குற்றச்சாட்டுகளை கூற முடியாது. எனவே, அவர்கள் கூறுவது கேலிக்குரிய குற்றச்சாட்டு. அது தொடர்பில் ஜனாதிபதியின் மீது குற்றம் சுமத்த முடியாது. ஆட்சியையும், பிரமர் பதவியையும் ஏற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி எதிர்க்கட்சிகளுக்குப் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார். அவர்கள் அதற்கு முன்வரவில்லை என்பதாலேயே ஜனாதிபதியினால் பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிக்க வேண்டி ஏற்பட்டது.

> பிரதான எதிர்க்கட்சியை ஆட்சி அமைக்க அழைத்தோம். அவர்கள் மறுத்து விட்டார்கள். இப்போது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். அவர்கள் கூறுவது கேலிக்குரிய குற்றச்சாட்டு!

**கே: நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி 19 ஆவது திருத்தத்தை வலுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தற்போது எழுந்துள்ளது. இந்தத் தருணத்தில் அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் உண்டா?**

பதில்: நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டுமெனில், வெறும் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அதனைச் செய்ய முடியாது. அப்போது நாடு முழுவதும் குழப்பத்தை அதிகரிக்கும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கப் போகின்றோமானால் நாம் புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் அல்லது கடுமையான மாற்றங்களைச் செய்ய வேண்டும். மக்கள் எவ்வளவோ விரும்பினாலும் எங்களால் அதைச் செய்ய முடியாது. உயர் நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவைப்படும். நாட்டில் நிலவும் பொருளாதார சூழலுக்கு ஏற்ப சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லக் கூடிய சூழல் ஏற்பட்டால் அதனை செய்வோம். ஆனால் இப்போது செய்ய முடியுமா?

> நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதானால் நாம் புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் அல்லது கடுமையான மாற்றங்களைச் செய்ய வேண்டும். மக்கள் எவ்வளவு விரும்பினாலும் எங்களால் அதைச் செய்ய முடியாது!

---




# சமூக பொருளாதார கட்டமைப்புக்கு ஏற்ற அரசியலை உருவாக்க தவறி விட்டோம்!

இலங்கையின் பொருளாதாரத்தில் மூன்றாவது திறந்த விரிவாக்கம் அவசியம். அது சமூகத்துக்கு நீதி மற்றும் நியாயத்தை நிறைவேற்றும். காலிமுகத்திடல் உள்ளிட்ட நாடு பூராவும் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்ட போராட்டம் நமக்கு அதையே உணர்த்துகின்றது.

1971 இலும், 1987 காலத்திலும் தெற்கில் இளைஞர்களின் எழுச்சி அதனாலேயே ஏற்பட்டது. இளைஞர்களின் எழுச்சியை புரிந்து கொள்ள முயற்சி செய்யாத இந்நாட்டு பாரம்பரிய அரசியல் முறையானது இளைஞர்களின் கருத்தை ஒடுக்கியமை அடக்குமுறை மூலமாகும் என்பதை மறந்துவிட முடியாது. வடக்கில் ஆயுதப் போராட்டம் இறுதியில் தற்கொலைத் தாக்குதல் பயங்கரவாதம் வரை பரவியது. பொருளாதார அழுத்தத்தால், குலபேதத்தால் பிழியப்பட்ட இளைஞர்கள், முறைமையை மாற்ற வேண்டும் என முயற்சி செய்தார்கள். பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும் தெற்கு மற்றும் வடக்கில் அறியப்பட்ட விடயங்களுக்கு தீர்வுகள் வழங்கப்படவில்லை.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் உரத்துக் கூறும் கருத்துகள் தெளிவானவை. ஆனால் முறைகளை அழிப்பதன் மூலம் எவ்விதப் பலனும் கிடைக்காது. தாம் அனைத்தும் அறிவோம் என எண்ணும், மற்றவர்களின் கருத்துக்களுக்கு ஒத்துப்போகாத சிலரும் போராட்டத்தில் உள்ளார்கள். இலக்கு, நோக்கு அற்ற புரட்சிகளால் அபிவிருத்தி ஏற்படாது. இளைஞர் பரம்பரை பலியாவதை தவிர வேறொன்றும் நடப்பதில்லை. ஒழுக்கமுடைய, சமூக ஒருமைப்பாட்டுடன் கூடிய சக்திக்கு முறைகளை மாற்ற முடியும்.

இலங்கையில் அரசியல் முறைகள் மற்றும் அரசியல் கட்சிகள் மீளமைப்பு செய்யப்படாமை தவறாகும். கட்சி திறந்து விடப்பட வேண்டும். அதற்குள் நுழைவதற்கு இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் இல்லை. புதிய கோட்பாடானது கொள்கைகள் அற்றது மாத்திரமல்ல முக்கிய கட்சிகளில் இருந்து விலகும் வாக்குகளைச் சேகரிக்கும் திட்டமாக மாறியிருப்பது கவலைக்குரியது. உயர்தொழில்நுட்பம் கொண்ட யுகத்தில், சமூகபொருளாதார கட்டமைப்புக்கு ஏற்ற அரசியலை உருவாக்க நாம் தவறியுள்ளோம். சமூக ஊடகங்களில் செயற்படும், இளைஞர்களின் துயரத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் கற்ற பாடங்களை மறக்கக் கூடாது. அடக்குமுறை கடந்தகால சரித்திர துயரங்களில் அடங்கியுள்ளது. எதிர்ப்புகளுக்கு வழங்கும் இறுதி நடவடிக்கை என்ன? பதில் குறித்த புரிந்துணர்வு எமக்குஉள்ளதா?

அரசியல் சார்பு, அதிகாரவாதம், ஒழுங்கமைக்கப்படாத அபிவிருத்தி ஆகியவற்றை மக்கள் கண்டிப்பதோடு இளைஞர் சமுதாயம் அதன் தவறுகளை ஆராய்ந்து வருகின்றது. திறமையுள்ள பிள்ளைகளுக்கு தொழில் முனைவுக்கான வாசலைத் திறக்க வேண்டும். முகத்தை மாற்றுவதால், அமைச்சர்களை மாற்றுவதால் மாத்திரம் மக்களின் பிரச்சினைகள் தீராது. அரசியலமைப்பை மாற்றுவது பதிலல்ல. சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் இலங்கையில் வருமானத்துக்கு ஏற்ப வாழும் உபாயத்தையே முயற்சி செய்கிறார்கள். செலவு அதிகரிக்கும் போது கடனை பெறுகிறார்கள், வரியை அதிகரிக்கிறார்கள். அதற்கு அப்பாலுள்ள முறைகளுக்கு தயாரில்லை. சவால்கள் மற்றும் அவதானங்களுக்கு முகம் கொடுத்ததில்லை. நாட்டில் உள்ள வளங்களை அறிந்து கொண்டு அவற்றை தொலைநோக்கோடு பயன்படுத்தியிருக்கலாம்.

சிறிய நாடான சிங்கப்பூர் உலகின் பிரபல முதலீட்டாளர்களை அழைத்து உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. துபாய் இராச்சியம் ஆசியாவின் நிதி மத்திய நிலையமாக மாறியுள்ளது. இந்தியா பாரிய உணவு உற்பத்தி நாடாக மாறியுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளை நோக்கி பயணிப்பது தனிமையான நாடுகள் என்ற ரீதியில் அல்ல. வர்த்தக ஒப்பந்தம், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் மீள் ஏற்றுமதி பிரிவுகளை இணைத்தே அந்நாடுகள் வளர்ச்சி அடைந்துள்ளன. தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்காக இலங்கை பிரபலமாக உள்ளது. இந்த பெருந்தோட்டப் பயிர்கள் ஏற்றுமதி ஏகாதிபத்தியவாதிகளின் கட்டமைப்பின்படி 500 வருடங்களுக்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்ட ஒன்றாகும்.

தேயிலை ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு கிடைக்கும் அந்நிய செலாவணியின் அளவு ஒரு பில்லியன் அமெரிக்க டொலராகும். பெருமளவு காணிகள், அதிகளவு உழைப்பு பயன்படுத்தப்படுகின்றது. அக்காணிகளை இதைவிட அதிகமாக பலனைத் தரும் புதிய பயிர்ச் செய்கைக்கு மாற்ற முடியாதா? விவசாயத்துறைக்கு அதற்கான பொறுப்புகள் உள்ளன. எதிர்காலத்தில் ஏற்படவுள்ள உணவு தட்டுப்பாட்டுக்கு விரைவான திட்டங்கள் அவசியமாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

என்றுமில்லாத வகையில் டீசல் தட்டுப்பாடு

# நாளை முதல் தனியார் பஸ் சேவை மட்டுப்படுத்தப்படும்

## சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவிப்பு

பஸ்களுக்கான டீசல் தட்டுப்பாடு காரணமாக நாளை திங்கட்கிழமை (6) முதல் இயங்கும் பஸ்களின் எண்ணிக்கையை தனியார் பஸ் நடத்துநர்கள் மட்டுப்படுத்தியுள்ளனர்.

இதனை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

"தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சில மாதங்களாக பஸ் சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

பஸ்களுக்கு டீசல் வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும், அதற்கான வேலைத்திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில்லை.

இதனால், பஸ்களை எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கருகில் நீண்ட நேரம் வரிசையில் நிறுத்த வேண்டியுள்ளது.

பொதுப் போக்குவரத்துத் துறையிலுள்ள குறைகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டியது அரசின் பொறுப்பென்று கூறிய அவர், பஸ்களுக்கு குறைந்தபட்சம் ஒரு வாரத்திலாவது டீசல் வழங்கும் திட்டத்தை போக்குவரத்து மற்றும் எரிசக்தி அமைச்சுகள் வகுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இல்லையாயின் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை தோன்றும் எனவும் தெரிவித்துள்ளார்.



நாளை திங்கட்கிழமை முதல் இரண்டு வாரங்களுக்கு 6,000 பஸ்கள் மட்டுமே இயங்குமெனவும் தெரிவித்துள்ளார்.

"ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கொவிட்19 தொற்றுநோய் காரணமாக, நாங்கள் பஸ்களை இயக்குவதை நிறுத்த வேண்டியிருந்தது. எங்களால் பஸ்களுக்கான வாடகையை செலுத்த முடியவில்லை. தற்போதும் நாம் அதேபோன்றதொரு நிலையை எதிர்கொண்டுள்ளோம். இந்நிலையில் பஸ் சேவையை நிறுத்துவதை தவிர வேறு வழியில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

க.பொ.த சாதாரண தர பரீட்சைகள் முடிவடைந்துள்ளதால், எமக்குத் தீர்வு வழங்கப்படாவிடின் பஸ் சேவை செயற்பாடுகளை இடைநிறுத்தவும் தயங்க மாட்டோமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உலகின் முன்னணி அணுசக்தி நிறுவனத்தில்

# பொறியியலாளராக கடமைபுரிய தமிழ்ப் பெண்ணுக்கு வாய்ப்பு

## தமிழக பெண்ணுக்கு பாராட்டுக் குவியல்

லண்டனிலுள்ள உலகின் தலைசிறந்த அணுசக்தி நிறுவனம் ஒன்றின் பொறியியலாளராக பணியாற்றும் வாய்ப்பை தமிழ்ப் பெண் ஒருவர் பெற்றுள்ளார்.

தமிழகத்தின் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள தென்னடார் கிராமத்தைச் சோ்ந்த சுபிக்ஷா என்ற பெண்ணே இந்த வாய்ப்பை பெற்றுள்ளார்.



கடந்த 2021ஆம் ஆண்டு லண்டனுக்குச் சென்ற அவர், யுஎஸ்ஏவில் எம்.எஸ் படிப்பைத் தொடர்ந்து அதில் தேர்வாகியுள்ளார்.

இதையடுத்து சுபிக்ஷாவை பலரும் வரவேற்று பாராட்டியுள்ளதுடன், சமூக வலைதளங்களிலும் அவருக்கு வாழ்த்துக்கள் குவித்து வருகின்றன.

# வங்கி கட்டமைப்பு மூலமாக வருமானத்தை அனுப்புங்கள்

## புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடம் மத்திய வங்கி கோரிக்கை

வங்கி கட்டமைப்பு உட்பட முறையான வழிகளில் தங்கள் வருமானத்தை அனுப்புமாறு இலங்கை மத்திய வங்கி, இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்துள்ள தொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுவரை இலங்கைப் பொருளாதாரத்துக்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆற்றிய பங்களிப்புகளுக்கு நன்றி தெரிவித்துள்ள மத்திய வங்கி, அவர்களின் தொடர்ச்சியான உதவிகளையும் கோரியுள்ளது. நாட்டில் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில், தற்போதைய அந்நிய செலாவணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணம் அனுப்புவது முக்கியமான தருணமென்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. ஹவாலா மற்றும் உண்டியல் போன்ற முறைசாரா வழிகளூடாக வங்கி வலையமைப்புக்கு வெளியே செயற்படுவதால் இவ்வாறான முறைமைகளினூடாக அனுப்பப்படும் அந்நியச் செலாவணியை அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பயன்படுத்த முடியாதென மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

# 208 Kg கேரள கஞ்சாவுடன் ஒருவர் கிளிநொச்சியில் கைது

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சி விவேகானந்த நகரிலுள்ள வீடொன்றை (03) விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய போது சொகுசு வானத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 208 கிலோ கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.



கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி நேற்று முன்தினம் (03) மாலை 6.00 மணியளவில் விவேகானந்தநகர் கிராமத்தில் மன்னாரிலிருந்து வருகை தந்து வாடகைக்கு வீடொன்றில் வசித்து வந்தவரின் வீடு சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன் போதே 208 கிலோ கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் சந்தேகநபரை சட்ட நடவடிக்கைகளுக்காக விசேட அதிரடிப்படையினர், கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## எங்கள் கருத்து...

# லண்டனில் மலையக இலக்கிய மாநாடு...

பேராசிரியர் கைலாசபதிக்குப் பின்னர் தினகரன் ஆசிரியராக இருந்த கலாசூரி ஆர் சிவகுருநாதனது பங்களிப்பும் இவ்விடத்தில் ஞாபகம் ஊட்டப்பட வேண்டும். மலையகத்தில் எழுத்தாளர்கள், சிறுகதை ஆசிரியர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் என பலரும் இன்று சமூகத்தில் இனங்காணப் படுவதற்கு இவரது பங்களிப்பும் இன்றியமையாதது.

அதன் பின்னர் சிறிது காலம் ஆசிரியராக இருந்த இலக்கிய ஆர்வலர் மறைந்த ராஜ ஸ்ரீகாந்தனின் மலையகத்துக்கான இலக்கிய பணியையும் நாங்கள் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். அவ்வாறு தினகரனின் ஆசிரியர்களாக இருந்த சகலருமே மலையக இலக்கியத்துக்கு தங்களால் ஆன பணிகளை செய்தே வந்துள்ளனர்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு, குறிப்பாக மலையகத்து இலக்கிய வளர்ச்சிக்கு தினகரன் ஆற்றிய சேவை வரலாற்றில் பதிவு பெற்றிருக்கிறது. அப்பெரும் பாரம்பரியத்தின் வழிநின்று இன்றும் மலையக ஆக்கங்களுக்குத் தொடர்ந்து தினகரன் ஆதரவு கரம் நீட்டி நிற்கிறது.

இலங்கைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் தினகரனில் வெளியான மலையகம் சார்ந்த கட்டுரைகளின் பழைய இதழ்களை தேடி தினகரன் அலுவலகத்தை நாடுவது ஒன்றும் வியப்பல்ல.

ஜுன் மாதம் 11 ஆம் திகதி லண்டனில் நடைபெறும் மலையக இலக்கிய மாநாட்டை தினகரன் மனம் நிறைந்து வரவேற்கிறது. மலையகம் தொடர்பான இப்பெரும் மாநாட்டை நடத்த புலம்பெயர்ந்து வாழும் அனைத்துத் தமிழர்களும் பிரதேச எல்லைகளை மேவி நின்று ஒத்துழைப்பு வழங்கி வருவது பாராட்டுக்குரியது.

மலையகத்தின் முன்னோடி எழுத்தாளர்களையும் அரசியல் செயற்பாட்டாளர்களையும் நினைவிலிருத்தி, காத்தாயி, சி.வி.வேலுப்பிள்ளை, கோகிலம் சுப்பையா, இர.சிவலிங்கம், தமிழோவியன், சோ.சந்திரசேகரம் போன்றோரின் பெயரால் தனி அரங்குகள் அமைத்து அம்மாநாடு அமைவது பாராட்டுக்குரியது.

மலையகத்தின் மூத்த, இளைய, புதிய எழுத்தாளர்களை இனங்கண்டு, நாவல், சிறுகதை, கவிதை, வரலாறு, அரசியல், சமூகவியல், சமூக அகழாய்வியல், சட்டம், கூத்து, இன வரைவியல், மொழிபெயர்ப்பு, தாயகம் திரும்பிய தமிழர்கள் வாழ்நிலை என்று பல்துறைசார்ந்து இம்மாநாடு செயற்படுவது மாநாட்டு அமைப்பாளர்களின் பரந்து விரிந்த நன்னோக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

மலையகத்திலிருந்து வெளியான நூல்களோடு அமெரிக்கா, லண்டன், கனடா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து வெளியான நூல்களையும் கணக்கிலெடுத்து பரந்த மலையக இலக்கியப் பரி மாணத்தை இம்மாநாடு தருகிறது. நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து லண்டன் உள்ளிட்ட உரையாளர்களை இணைத்து இம்மாநாடு செயற்படுவது மனங் கொள்ளத்தக்கது.

மலையகச் சிறுவர்களின் ஓவியங்களைத் தெரிந்தெடுத்து, லண்டனில் வெளிப்படுத்துவதென்பது மலையகச் சிறுவர்களுக்கு பெரும் மனவெழுச்சியை ஏற்படுத்தவல்லது என்பதை மறுக்க இயலாது.

இலங்கையிலும் பார்க்க இயலாத சஞ்சிகைகளையும் நூல்களையும் இம்மாநாட்டு மலையக நூல் கண்காட்சி காண்பிக்கவிருக்கிறது என்பதும் இம்மாநாட்டுக்குத் தனித்துவ முக்கியத்தை வழங்குகிறது.

மலையக மக்களை இலங்கைக்குக் கொண்டுவந்து அவர்களை அரசியல் அனாதைகளாக்கி விட்டுச் சென்ற ஆங்கிலேயர்களின் தேசத்திலேயே மலையகத்தின் குரல் ஒலிக்கிறது என்பது நாம் அவதானிக்கவேண்டிய ஒன்றாகும்.

லண்டனில் இம்மாநாட்டை நடத்துவதில் முன்னின்றுழைக்கும் மு.நித்தியானந்தன், கே. கிருஷ்ணராஜா, சாந்தகுணம், எச்.எச்.விக்கிரமசிங்க ஆகியோருக்கு தினகரன் மனமுவந்த பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறது.

இம்மாநாடு மலையகத்தின் இலக்கிய வளர்ச்சிப்பாதையில் ஒரு மைல்கல்லாக நிலைபெறும் என்பது எமது நம்பிக்கை. லண்டனில் மட்டுமல்ல, தொடர்ந்தும் மலையக இலக்கிய மாநாடு செயற்பட்டு மலையக இலக்கிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் என்று நம்புகிறோம். அதுவே எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் செய்யும் சிறந்த பணியாக அமையும் என்பது எங்கள் கருத்தாகும்.

## பெருந்தோட்ட கம்பனிகளின்...

பெருந்தோட்டத்துறை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் (03) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தேயிலை ஏற்றுமதியினால் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி வெளிப்படைத் தன்மையுடன் பேணப்பட வேண்டும். அதற்காக தேயிலை ஏலத்தை டொலர்களில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து உடனடியாக ஆராயுமாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

பெருந்தோட்டத் துறையில் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக எரிபொருளை வழங்கும் போது முறையான வேலைத்திட்டமொன்றின் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அமைச்சு அல்லது பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து எரிபொருளை விநியோகிப்பதற்கு முன்னுரிமை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் ஏற்றுமதி பயிர்களுக்கு வரலாற்றில் அதிக விலை தற்போது விவசாயிகளுக்கு கிடைத்துள்ளது.

அமைச்சர் ரமேஷ் பத்திரன, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திஸாநாயக்க, அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜி தர்ம கீர்த்தி மற்றும் அமைச்சின் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## முற்றாக ஒழிக்க முயல்வது...

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது. அக்கட்சியின் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் தெளிவான நிலைப்பாடும் இதுவே.

மக்களால், நேரடியாகத் தெரிவு செய்யப்படும் போதுதான் எல்லோருக்குமான எமது ஜனாதிபதி என்ற உரிமையிருக்கும். இலங்கையிலுள்ள அத்தனை பிரஜைகளும் வாக்களிப்பதால் ஜனாதிபதிக்கும் ஒரு கடப்பாடு ஏற்படுகின்றது. மாறாக பாராளுமன்றம் பிரதமர் ஒருவரை தெரிவு செய்வதால் அவர், ஒரு மாவட்டத்துக்கு அல்லது பிரதேசத்துக்கு உரியவராகவே அர்த்தப்படும்.

அதுமட்டுமல்ல, தேர்தலுடான தெரிவு வரும்போதுதான், சமூகங்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இவருக்கு ஏற்படும்.

குறிப்பாக சிறுபான்மை மக்களின் தேவைப்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு அவர் கடமைப்பட்டவராகிறார். ஏதாவதொரு அவசர தேவைகளை அடைந்து கொள்ள ஜனாதிபதியுடனுள்ள உறவுகள் அல்லது புரிந்துணர்வுகள் வழிவகுக்கும்.

இவ்வாறு, பல விடயங்கள் கடந்தகாலங்களில் பெறப்பட்டுள்ளன. தனியொருவரின், மனநிலைகளுக்காக, இந்த அதிகாரத்தையே முற்றாக ஒழிக்குமாறு கோருவது அர்த்தமுள்ள சிந்தனையாகாதென்றும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## ரயிலில் மோதுண்டு இரு...

ரயிலுடன் காட்டுயானைகள் நேற்று முன்தினமிரவு மோதுண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்து காரணமாக கொழும்பு ஹபரணைக்கிடையிலான ரயில் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. விபத்தின் போது ரயில் தடம் புரண்டதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டறை தெரிவித்துள்ளது. ரயில் பாதையின் போக்குவரத்தை சீர்செய்ய குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டதாக ரயில்வே திணைக்கள் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஹபரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இலங்கையின் தற்போதைய நிலைமை...

மிலிந்த மொரகொட தெரிவித்துக் கொண்டார்.

இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினை நேற்று சனிக்கிழமை (04) காலை சென்னையிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் இறை அன்பு மற்றும் மிக முக்கிய மாநில அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

புதுடில்லியிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் ஒருவர் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழக அரசின் முதல்வரைச் சந்தித்தது இதுவே முதல் முறையாகும்.

ஆரம்பத்தில், இலங்கை உயர் ஸ்தானிகருக்கு முதலமைச்சர் அன்பான வரவேற்பு அளித்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மிகவும் சுமுகமான கலந்துரையாடலின் போது, உயர் ஸ்தானிகர், தற்போதைய பொருளாதார நிலைமையை நிர்வகிக்க உதவுவதற்காக அண்மையில் இலங்கைக்கு வழங்கிய இ ரண்டு பில்லியன் ரூபா பெறுமதியான ம னிதாபிமான உதவிகளுக்காக முதலமைச்சர் மற்றும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்து முதல்வர் ஸ்டாலின், இலங்கையின் நிலைமை குறித்து தாம் அக்கறை கொள்வதாகவும், அத்தியாவசியப் பொருட்களின் முதல் கப்பலை உடனடியாக அனுப்பியதாகவும் இரண்டாவது கப்பலை அனுப்பவுள்ளதாகவும் மேலும் சிலவற்றை ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

உயர் ஸ்தானிகரும், முதலமைச்சரும் இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான உறவுகள், மீனவர்கள் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விவாதித்தனர். இருவரும் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்குமிடையிலான பழமையான மற்றும் வலுவான இன, கலாச்சார மற்றும் மத தொடர்புகளை மீளாய்வு செய்து அவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடினர். இது குறித்து, முதல்வர் ஸ்டாலின், இலங்கையில் பல்கலைக்கழகம் போன்ற பொருத்தமான வளாகங்களில் திருவள்ளுவரின் சிலையை நிறுவலாம் என்று கேட்டுக் கொண்டார். முதலமைச்சரின் ஆலோசனையை உயர் ஸ்தானிகர் வரவேற்றதுடன், இந்த முயற்சிக்கு ஆதரவளிப்பதற்கும் வசதி செய்வதற்கும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கைக்கும் தமிழ்நாடு அரசுக்குமிடையிலான உறவின் அனைத்து அம்சங்களிலும் சிறந்த ஒருங்கிணைப்பைக் கொண்டிருக்கும் நோக்குடன், உயர் ஸ்தானிகர் மொறகொட, மாநில மட்டத்தில் ஒரு கேந்திர நிலையத்தை அமைக்குமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

முதலமைச்சர் ஸ்டாலினை இலங்கைக்கு வருமாறும் உயர் ஸ்தானிகர் மொறகொட அழைப்பு விடுத்தார்.

உயர் ஸ்தானிகர் மொரகொட தனது பாராளுமன்ற உரைகள் அடங்கிய புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பின் பிரதியொன்றையும் முதலமைச்சரிடம் கையளித்தார். 2006ஆம் ஆண்டு இதே புத்தகத்தின் பிரதியை தமிழக முதல்வர் ஸ்டாலினின் தந்தை மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியிடம் வழங்கியதை உயர் ஆணையர் நினைவு கூர்ந்தார்.

இந்த சந்திப்பில் உயர் ஸ்தானிகர் மொரகொடவுடன் தென்னிந்தியாவுக்கான இலங்கையின் பிரதி உயர் ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஸ்வரன், புதுடெல்லியிலுள்ள இலங்கையின் பிரதி உயர் ஸ்தானிகர் நிலுகா கதுருகமுவ மற்றும் சென்னையில் உள்ள இலங்கையின் பிரதி உயர் ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் சுபுன் தேசபிரேமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொலிஸார் தேடும் MP யின்...

முகநூலில், 'இலங்கை பொலிஸாரே, நான் படகு மூலம் சற்று முன்னர் மெல்பேர்ன் வந்து சேர்ந்தேன். இப்போ என்ன செய்வது?' என பதிவிட்டுள்ளார்.

## இருதரப்பு உறவுகள் பாதிக்காது...

உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொரகபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கொண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

## 21ஆவது திருத்தம் TULFஆதரவு ...

கலந்துரையாடலின் போதே இதனை குறிப்பிட்டதாக தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, மேலும் பல விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மறு அறிவித்தல் வரை...

விட்டதால் மறுஅறிவித்தல் வரும் வரை பாவனையாளர்கள் வரிசையில் காத்திருக்க வேண்டாமென மக்களை கேட்டுக் கொள்வதாகவும் லிட்ரோ நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சீன நன்கொடை மருந்து...

கெஹலிய ரம்புக்வெல்ல, இலங்கைக்கான சீனத் தூதுவர் Qi Zhenhong, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணரத்ன மற்றும் பல முக்கிய விருந்தினர்கள் விமான நிலையத்தில் இந்தப் பொருட்களைப் பெற்றுக்கொண்டனர். சீன அரசாங்கம் மற்றும் அந்நாட்டில் இயங்கிவரும் பல்வேறு பௌத்த அறக்கட்டளைகள் உட்பட பல்வேறு சமூக அமைப்புகளினால் இந்த மருந்துகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாக சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

## 04 முக்கிய விடயங்களில் சகல...

19ஆவது திருத்தத்திலுள்ள அடிப்படை விடயங்கள் உள்வாங்கப்படவில்லையென ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இதன் போது சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த 21ஆவது திருத்த யோசனை தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை கருத்திற் கொள்ளவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

## அரசியலமைப்பு பேரவையில்...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கும் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியினால் அரசியலமைப்பு பேரவைக்கு ஒருவரை நியமிக்க வேண்டுமென்ற முன்மொழிவு ஏற்கனவே முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அதில் ஜனாதிபதியினால் நான்கு பேரை நியமிக்கும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் அருணாச்சலம் அரவிந்தகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய பெரும்பான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரையும், வடக்கு, கிழக்கசெ் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதி ஒருவரையும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரையும், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒருவரையும் ஜனாதிபதி தெரிவு செய்ய வேண்டுமெனவும், அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## பொருளாதார நெருக்கடியின்...

பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடையக்கூடும்.

இலங்கையர் பலருக்கு இரண்டு வேளை உணவுடன் தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள வேண்டி வருமெனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கம் இப்போதுதான் ஆரம்பமாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் ரஷ்ய போரின் முழு தாக்கத்தை இலங்கை இன்னும் அனுபவிக்கவில்லை. இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் உலகளாவிய உணவுப் பற்றாக்குறை ஏற்படும். அதன் தாக்கம் இலங்கையில் 2024 ஆம் ஆண்டு வரை நீடிக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய உணவு நெருக்கடிக்கு மேலதிகமாக, இலங்கை இந்த ஆண்டு சிறுபோக மற்றும் பெரும்போகத்தின் போது உணவுப் பயிர்களை பயிரிடாமை பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதன் விளைவாக, இலங்கையர் விரைவில் ஒரு நாளைக்கு இரண்டு வேளை மட்டுமே சாப்பிட வேண்டியிருக்குமென பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

## இளம் இராணுவ வீரர்...

முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் இல்லத்தின் பாதுகாப்புக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவ வீரரே தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

இந்த இராணுவ வீரர் தனது பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டவர். இருப்பினும் தனக்கு இராணுவ பாதுகாப்பு தேவையில்லையென தான் மறுத்து விட்டதாகவும் தெரிவித்தார்.

இருந்த போதும் இராணுவ வீரர் சில இராணுவ வீரர்களுடன் தனது வீட்டிலிருந்து சில வீடுகள் தள்ளி வீதிப் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வந்துள்ளாரெனவும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தற்கொலை செய்து கொண்ட இராணுவ வீரருக்கும் தனக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லையெனவும் இராணுவ பாதுகாப்புத் தேவையில்லையென முன்னரே மறுத்து விட்டதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

## அதிரடி ஆய்வு!



# நுவரெலியாவில் அமோக வசூல் தரும் டீசல், மண்ணெண்ணெய் கொள்ளை வர்த்தகம்!



## ஷெட்களின் பின்கதவால் வெளியேறும் எரிபொருள் அதிக விலைக்கு விற்பனை!

**நுவரெலியா எஸ்.தியாகு**

எரிவாயு நிலையங்கள் தவிர வெளியாரிடம் இருந்து பெற்றோல் டீசல் மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்ள வேண்டாம். என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்ஜன விஜேசேகர கேட்டுக்கொண்டிருக்கிறார். இது தொடர்பாக தன்னுடைய டிவிட்டரில் இது தொடர்பாக அவர் நீண்ட பதிவொன்றை 25.05.2022 அன்று பதிவிட்டிருந்தார்.

இவருடைய இந்த தகவலை உறுதிப்படுத்துவது போல பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ 25.05.2022 அன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் பொழுது சட்ட விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 27000 லீற்றர் பெற்றோல் 22000 லீற்றர் டீசல் 10000 லீற்றர் மண்ணெண்ணை கைப்பற்றப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தினார். இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில் இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் ஒரு புறம்: அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு மறுபுறம் என்றால் அத்தியாவசிய பொருட்களுக்கு செயற்கையாக எற்படுத்தப்படுகின்ற தட்டுப்பாடு பூதாகரமாகக் கிளம்பியுள்ளது.

இதற்கிடையே பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக நீண்ட வரிசைகளில் நின்று அந்த பொருட்களை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை. இதன் காரணமாக வரிசைகளில் நின்று கொண்டிருந்தவர்கள் உயிரை விடுகின்ற மிகவும் துர்ப்பாக்கியமான சம்பவங்களும் நடக்கின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் பல அத்தியாவசிய பொருட்களை இலஞ்சம் கொடுத்தும் அதிக விலை கொடுத்தும் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாக பொது மக்களிடம் இருந்து தொடர்ந்தும் புகார் கிடைத்த வண்ணம் உள்ளது. இந்த விடயத்தை ஊடகங்கள் கண்டு கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டையும் பொது மக்கள் முன் வைத்து வருகின்றனர்.



இது தொடர்பாக ஒரு ஆய்வை மேற்கொண்டு ஒரு அறிக்கையை தயார் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தடன் என்னுடைய தேடலை நோக்கி பயணிக்க ஆரம்பித்தேன்.

எங்கிருந்து இதனை ஆரம்பிப்பது என்ற கேள்வியுடன் பயணத்தை ஆரம்பித்த போது எனக்கு தென்பட்ட ஒரு விடயம் மண்ணெண்னை டீசல் பெற்றோல் மற்றும் எரிவாயுயை பெற்றுக் கொள்வதிலேயே மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். இந்த பொருட்களுக்கே அதிகம் தட்டுப்பாடும் நீண்ட வரிசையும் காணப்படுகிறது. இந்தப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் நின்றவர்களே தங்களுடைய உயிரையும் மாய்த்துக் கொண்டுள்ளனர்.

இதற்காக நான் நுவரெலியா மாவட்டத்தில் கந்தப்பளை, ஹட்டன் மஸ்கெலியா ஆகிய பகுதிகளுக்கு பயணம் செய்து இந்த ஆய்வை மேற்கொண்டேன். ஏனெனில் இந்தப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக அதிக விலை கொடுத்தே இவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு 84638 லீற்றர் மண்ணெண்ணையும் சமையல் எரிவாயு 48456 (12.5 கிலோ) சிலின்டர்களும் தேவைப்படுவதாகவும் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் புள்ளி விபர பிரிவிற்கு பொறுப்பான கே.பி. விஜேரத்ன தெரிவிக்கின்றார். இந்த புள்ளிவிபரமானது 2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பிறப்பு இறப்பு கணிப்பீட்டின்படியே கணிக்கப்பட்டுள்ளது. அதன்படி 780000 பேருக்கே இந்த மண்ணெண்னையும் சமையல் எரிவாயுவும் தேவைப்படுவதாக கே.பி.விஜேரத்ன குறிப்பிடுகின்றார்.

அதே நேரத்தில் நுவரெலியா மாவட்டத்தில் 25 எரிவாயு நிரப்பு நிலையங்கள் இருப்பதாகவும் அவற்றில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 16 நிரப்பு நிலையங்களும் இந்திய நிறுவனத்திற்கு சொந்தமான 9 நிரப்பு நிலையங்களும் இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தலுக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார்.

அதே நேரம் நுவரெலியா மாவட்டத்திற்கு மாதாந்தம் 35 இலட்சம் லீற்றர் டீசலும் 22 இலட்சம் லீற்றர் பெற்றோலும் தேவைப்படுவதாக கொட்டகலை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானத்தின் பொறுப்பாளர் தெரிவிக்கின்றார்.

எனவே இந்த விடயங்களை கருத்தில் கொண்டு நானும் பொது மக்களுடன் பயணிக்க ஆரம்பித்தேன். முதலில் கந்தப்பளை பகுதிக்கு விஜயம் செய்த நான் அங்குள்ள விவசாயிகளை சந்தித்து தங்களுக்கு தேவையான அளவு விவசாயத்திற்கு மண்ணெண்ணெய் பெற்றோல் கிடைக்கின்றதா? என்பதை ஆராய்ந்தோம். விவசாயத்திற்கு நீர் பாசனத்திற்கு மண்ணெண்ணெய் கிருமி நாசினி தெளிப்பதற்காக பயண்படுத்தப்படுகின்ற கருவிகளுக்கு பெற்றோலும் பாவிக்கப்படுகின்றது.

கந்தப்பளை நகரில் வசிக்கின்ற பல விவசாயிகளையும் கண்டு விடயங்களை கேட்ட பொழுது பலரும் உண்மையை சொல்வதற்கு தயாராக இல்லை. அதற்கு பல காரணங்கள் உள்ளன. ஆனால் பாலச்சந்திரன் என்பவர் தனது அனுபவத்தையும் தான் எவ்வாறு பெற்றோல் மண்ணென்னை பெற்றுக் கொள்கின்றேன் என்பதையும் எங்களுடன் பகிர்ந்து கொண்டதுடன் தனது பெயருடன் விடயத்தை வெளிப்படுத்தினாலும் தனக்கு ஆட்சேபனை இல்லை என்பதையும் எங்களிடம் கூறினார்.

நான் கடந்த 30 வருடங்களாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றேன். என்னிடம் 25 பேர் தினமும் தினக்கூலிகளாக வேலை செய்கின்றார்கள். எனது தேவைகளுக்காக வாரத்திற்கு 300 லீற்றர் மண்ணெண்ணெயும் 25 லீற்றர் பெற்றோலும் தேவைப்படுகின்றது. இதனை என்னால் வரிசையில் நின்று பெற்றுக்கொள்ள முடியாது. எனவே நான் எங்களுடைய பகுதியில் இருக்கின்ற நிரப்பு நிலையங்களில் வேலை செய்கின்றவர்களிடம் எனக்கு தேவையான எரிபொருட்களை பெற்றுத் தருமாறு கேட்பேன். அவர்கள் தங்களுக்கு மேலதிகமாக ஒரு தொகை கிடைக்குமாக இருந்தால் அதனை பெற்றுத் தர முடியும் என கூறினார்கள். நான் வேறு வழியில்லாமல் மேலதிகமான ஒரு தொகையை கொடுத்தே பெற்றுக் கொள்கின்றேன்.

இது தவறு என்பதை நான் அறிவேன் ஆனாலும் நான் மட்டுமல்ல பெரிய அளவில் விவசாயத்தில் ஈடுபடுகின்ற பலரும் இவ்வாறே செய்கின்றனர். ஆனால் யாரும் இதை வெளியில் சொல்வதில்லை. என்னைப் பொறுத்த அளவில் அநேகமான விவசாயிகளிடம் தேவைக்கு அதிகமான பெற்றோல் டீசல் இருப்பில் இருக்கவே செய்கிறது. தட்டுப்பாடு இல்லாமல் பொருட்கள் கிடைக்குமாக இருந்தால் மேலதிகமான தொகையை கொடுத்தே தேவைக்கு அதிகமாகவோ வாங்கி வைக்க வேண்டிய தேவை ஏற்படாது. இதன் மூலம் பாதிக்கப்படுகின்றவர்கள் சிறு விவசாயிகளே. காரணம் அவர்களுக்கு மேலதிகமான ஒரு தொகையை செலுத்தி பெற்றோல் அல்லது மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வது சிரமம். மேலும் ஒரே நேரத்தில் பெரும் தொகையை பெற்றுக் கொண்டு இருப்பில் வைத்துக் கொள்வதற்கான பொருளாதாரமும் அவர்களிடம் இல்லை.

இது இவ்வாறு இருக்க நுவரெலியா நகரில் பேருந்து உரிமையாளரான பிரதீப் பிரசன்ன (புனைப் பெயர்) என்பவரிடம் இது தொடர்பாக பேசினோம். ஆரம்பத்தில் அவர் எங்களிடம் பேசுவதற்கு தயங்கினார். பின்பு பெயர் குறிப்பிடக்கூடாது என்ற நிபந்தனையுடன் பேசினார்.

"நான் ஒரு தனியார் பேருந்து உரிமையாளர் இருக்கின்றேன். என்னிடம் 16 பேருந்துகள் இருக்கின்றன. அவற்றில் சொகுசு பேருந்து 6. சாதாரண பேருந்து 10.

இன்றைய சூழ்நிலையில் டீசல் பெற்றுக் கொள்வது என்பதே ஒரு பெரும் போராட்டமே எனவே நான் டீசலை அதிக விலை கொடுத்தே வாங்குகின்றேன். ஆனால் என்னிடம் டீசல் தட்டுப்பாடு கிடையாது. அதற்கு காரணம் நான் மேலதிக தொகையை கொடுத்தே டீசல் வாங்குகின்றேன்.

அதுவும் விடியற்காலை ஒரு மணி இரண்டு மணியளவில் நித்திரை கொள்ளாமல் இந்த டீசலை பெற்றுக் கொண்டே எனது தொழிலை நடத்துகிறேன். நான் ஒரு நாளைக்கு 5000 முதல் 7500 ரூபா வரை மேலதிகமாக செலுத்தியே டீசல் பெற்றுக் கொள்கிறேன். வேறு வழியில்லை. என்ன செய்வது எங்களுடைய தொழிலை கொண்டு செல்ல வேண்டும். என்னை நம்பி சுமார் 25 குடும்பங்கள் உள்ளன."

அடுத்ததாக நாங்கள் சந்தித்த நபர் நுவரெலியாவில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு மரக்கறிகளை கொண்டு செல்கின்ற லொரி உரிமையாளர் பரமநாதன்.

"நான் 4 லாரிகள் வைத்திருக்கின்றேன். உண்மையை சொல்ல வேண்டுமாக இருந்தால் இந்த டீசல் தட்டுப்பாடு ஏற்பட்ட நாளில் இருந்து என்னுடைய வருமானம் நன்றாகவே இருக்கின்றது.

ஏனெனில் நான் லொரிக்கு வாங்கும் கூலியை அதிகரித்துள்ளேன். ஏனெனில் சாதாரண விலைக்கு அல்லாமல் அதிக விலை கொடுத்தே டீசல் வாங்குகின்றேன். தட்டுப்பாடு இல்லாமல் டீசல் கிடைக்கின்றது. எனது வாகனங்கள் தினந்தோறும் கொழும்பு கண்டி தம்புள்ளை சென்று வருகின்றன. எனது வியாபாரத்தில் பாதிப்பு இல்லை. எனவே கொச்சையாக சொல்ல வேண்டுமாக இருந்தால் மேலதிகமாக கொடுத்து டீசல் வாங்குகின்றேன். வேறு வழியில்லை எனது தொழிலை செய்ய வேண்டும்.வேறு தொழில் எங்களுக்கு தெரியாது.இப்பொழுதும் என்னிடம் இருப்பில் 200 லீட்டருக்கு குறையாத டீசல் இருப்பில் இருக்கின்றது. இந்த நிலையை ஒழிக்க வேண்டுமாக இருந்தால் தட்டுப்பாடு இல்லாமல் பொருட்கள் கிடைக்க வேண்டும். டீசல் மட்டுமல்ல இன்று பல பொருட்கள் அதிக விலை கொடுத்தே அல்லது கையூட்டு கொடுத்தே வாங்கப்படுகின்றது.

**கடை உரிமையாளர் வரதகுமார்**

என்னை பொறுத்தவரையில் எல்லா பொருட்களும் தட்டுப்பாடு இல்லாமல் என்னிடம் உள்ளன. நான் அதிக விலை கொடுத்து வாங்குகின்றேன். அதிக விலைக்கு விற்கின்றேன். விரும்பியவர்கள் வாங்கலாம். நான் யாரையும் வற்புறுத்தி விற்பனை செய்வதில்லை. வேறு எதனையும் கூறுவதற்கு நான் தயாரில்லை. இன்று நாட்டில் கட்டுப்பாடு விலை என்று ஒன்று இல்லை. அப்படியானால் எப்படி அதனை கட்டுப்படுத்துவது? அதனை அரசாங்கமே பார்த்துக் கொள்ள வேண்டும்.

**வசந்தி (புனைப் பெயர்)**

நான் ஏற்கனவே சிறிய சாப்பாட்டுக் கடை ஒன்றை நடத்தி வந்தேன் விலைவாசி காரணமாக என்னால் அதனை தொடர்ந்து நடந்த முடியவில்லை. எனவே நான் தற்பொழுது எனது வீட்டடியில் டீசல், பெற்றோல்,மண்ணெண்ணெய் விற்பனை செய்கின்றேன். ஆதிக விலைக்கே விற்பனை செய்கின்றேன். இரவு எத்தனை மணியானாலும் தேவையானவர்களுக்கு இதனை வழங்குகிறேன். கடந்த ஏப்ரல் வசந்த காலத்தின் நல்ல இலாபம் கிடைத்தது. வெளி மாவட்டங்களில் இருந்து வந்த பலரும் டீசல் பெற்றோல் இல்லாமல் என்னிடமே வாங்கினார்கள். நான் இங்கிருக்கின்ற ஒரு பெற்றோல் நிலையத்தில் வேலை செய்கின்ற உறவினர் மூலமாக இந்த பொருட்களை பெற்றுக் கொள்கிறேன். அவருக்கு ஒரு தொகையை கொடுக்கின்றேன். என்னை பொறுத்த வரை இது இலகுவான இலாபகரமான ஒரு வியாபாரம்.

**பெற்றோல் நிலைய உரிமையாளர் சந்தருவன் (புனைப் பெயர்)**

அதிக விலைக்கு இரவு நேரங்களில் டீசல் மண்ணெண்ணெய் விற்கப்படுவதாக பலமுறை என்னிடம் பொலிசார் விசாரணை செய்தார்கள்.அதற்கான ஆதாரங்கள் எதனையும் அவர்கள் கண்டு பிடிக்க முடியவில்லை.

## "வேறென்னங்க செய்யிறது, கொள்ளை விலையில் வாங்கினால்தானே எங்க வண்டி ஓடுது!" என ஒப்புக் கொள்ளும் பாவனையாளர்கள்...

எங்களுடைய ஊழியர்கள் அப்படி செய்கின்றார்களா என்பது தெரியவில்லை. ஏனெனில் நாங்கள் இரவு நேரங்களில் வீடுகளுக்கு சென்று விடுகின்றோம். காலையில் வந்தவுடன் இருப்பு கணக்கை மாத்திரமே பார்க்க முடியும். அதிக விலைக்கு விற்றார்களா என்பதை எங்களால் கண்டுபிடிக்க முடியாது.சில வேளைகளில் அப்படியும் நடக்கலாம்.

நுவரெலியாவில் உள்ள நுகர்வோர் அபிவிருத்தி அதிகாரசபையிடம் தொடர்பு கொண்டு இந்த விடயங்கள் தொடர்பாக வினவிய பொழுது கே.பி.விஜேரத்ன என்பவர் எம்முடன் பேசினார். நாங்கள் அண்மையில் கினிகத்தேனை பகுதியில் சமையல் எரிவாயு பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு சென்று அவற்றை கைப்பற்றியதுடன் அதனை பொது மக்களுக்கு விற்பனை செய்தோம். அந்த தொகையை எங்களுடைய நுகர்வோர் அதிகார சபையின் அரசாங்க நிதியத்திற்கும் தண்டப்பணமாக பத்தாயிரம் ரூபாவையும் அறவிட்டோம்.



ஆனால் எங்களுடைய சட்டங்களுக்கு அமைய எங்களால் கடைகளில் பெற்றோல் டீசல் மண்னெண்ணை விற்பனை செய்வதையோ அதிக விலைக்கு விற்பனை செய்வதையோ கைப்பற்றவோ அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவோ முடியாது. அதனை பொலிசாரே செய்ய வேண்டும்.

இதே நேரம் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வெளியிட்டுள்ள தகவல் ஒன்றின் அடிப்படையில் 27.05.2022 அன்று 36388 வாகனங்களை ஆய்விற்கு உட்படுத்திய பொழுது அதில் 1347 வாகனங்கள் பலமுறை எரிபொருட்களை பெற்றுக் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதன் மூலம் நிச்சயமாக இந்த விடயத்தில் ஊழல் நடைபெறுவதை உறுதி செய்ய முடியும் என குறிப்பிடுகின்றார் பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ.

இது தொடர்பாக கணணித்துறையில் புள்ளி விபரங்களை முகாமைத்துவம் செய்கின்ற அமிர்தநாதன் என்பவருடைய கருத்து இது.

உண்மையிலேயே இந்த எரிபொருள் நெருக்கடிக்கு முக்கிய காரணம் அதனை சரியான முறையில் முகாமைத்துவம் செய்யாமையே. இதனை முகாமைத்துவம் செய்ய முடியும் அதற்காக உடனடியாக ஒரு செயலியை செயற்படுத்த வேண்டும். இதன்மூலம் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக ஒரு இலத்திரனியல் அட்டையை பயன்பாட்டிற்கு அறிமுகம் செய்யலாம். இதன் மூலம் வாகனத்தின் இலக்கம் உட்பட்ட தகவல்களை இதற்கு உட்படுத்தி ஒவ்வொரு முறை எரிபொருள் பெறுகின்ற பொழுதும் அதனை உட்படுத்துவதன் மூலமாக கடைசியாக அவர் எங்கே எப்பொழுது எவ்வளவு எரிபொருள் பெற்றுக் கொண்டார் என்ற தகவலை பெற்றுக் கொள்ள முடியும். இதன் மூலமாக சரியான முகாமைத்துவம் செய்ய முடியும் வெளிநாடுகளில் இந்த விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய எரிபொருள் அளவையும் அதில் குறிப்பிட முடியும்.

இப்படி பல முறைகள் இருக்கின்றன. இதனை நடைமுறைப்படுத்த துணிச்சல் வேண்டுமே! என்று புன்னகையுடன் கூறி முடித்தார் இவர்.

# மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற அரசியலமைப்பு ஊடாகவே வழியுண்டு!

**பாராளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தும் நோக்கில் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படும் உத்தேச 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் அரசியல் கட்சிகள் மத்தியில் பல்வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.**

நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் மத்தியில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான கட்டமைப்பு மாற்றத்தை இலக்காகக் கொண்டு 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தமொன்று முன்வைக்கப்பட வேண்டும் ஒன்ற கருத்தாடல் பொதுமக்கள் மத்தியிலும், அரசியல் கட்சிகளின் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் ஆளும் கட்சியிலிருந்து சுயாதீனமான பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவின் சார்பில் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் தனிநபர் சட்டமூலமாக 21 ஆவது திருத்த யோசனையை சமர்ப்பித்திருந்தனர்.

இந்த நிலையில் விஜயதாச ராஜபக்ஷ நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டு அரசாங்கத்தின் சார்பில் 21 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் வரைபை அமைச்சரவையில் சமர்ப்பித்திருப்பதால் அவருடைய தனிநபர் சட்டமூலம் மீளப்பெறப்படவுள்ளது.

இது இவ்விதமிருக்க அரசாங்கத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள விஜயதாச ராஜபக்ஷவின் 21 ஆவது திருத்தச் சட்டமூல வரைபு தொடர்பில் பல்வேறு கட்சிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களுக்கு 21 ஆவது திருத்தச்சட்டமூல வரைபு தொடர்பில் அமைச்சர் விஜயதாச விளக்கமளித்திருந்தார். இதில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் பரஸ்பர நிலைப்பாடுகளைத் தெரிவித்திருப்பதாகவும், இதனால் அவர்களுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்பொழுதுள்ள அரசாங்கத்தில் பொதுஜன பெரமுன கட்சிக்கே அதிக பெரும்பான்மை இருப்பதால், 21 ஆவது திருத்தச்சட்டமூலத்தை நிறைவேற்றும் விடயத்தில் அவர்கள் இறுதி முடிவு எடுக்கவில்லையெனத் தெரியவருகிறது.

குறிப்பாக இரட்டைப் பிரஜாவுரிமை விடயத்தை நீக்குவதற்கு பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான பசில் ராஜபக்ஷவும் அவருக்கு ஆதரவான சிலரும் விரும்பவில்லையென்றும், இதனால் 21 ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படலாம் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அரசாங்கம் தயாரித்துள்ள உத்தேச 21 ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக வாசித்து ஆராய்வதற்கு சில வாரங்கள் தேவை என பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இரட்டைப் பிரஜாவுரிமை விடயம் நீக்கப்படக் கூடாது எனக் கூறியதும் அங்கு கலந்து கொண்டிருந்த பிரதான கட்சியொன்றின் செயலாளருக்கும் அவருக்கும் இடையில் கருத்துப் பரமாற்றம் இடம்பெற்றுள்ளது.




**ஒட்டுமொத்த நாடுமே பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், மக்கள் பிரதிநிதிகள் மீண்டும் மீண்டும் தமது குறுகிய அரசியல் நோக்கங்களை பற்றிச் சிந்திக்காது கூட்டுப்பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்**



**நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்காக சர்வதேச நாடுகளின் உதவியை நாடுவதாயின் அந்நாடுகள் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான கட்டமைப்பு மாற்றத்தையே எதிர்பார்க்கின்றன. எனவே இதற்கான அடித்தளத்தை அரசியலமைப்பின் ஊடாக ஏற்படுத்துவதற்கு அரசியல்வாதிகள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவது அவசியம்**

அதேநேரம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சில நாட்களுக்கு முன்னர் 21 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடியிருந்தார். இதன் மற்றுமொறு சந்திப்பும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருந்தபோதும் 21 ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளார். இவ்வாரம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சி உறுப்பினர்களின் சந்திப்பில் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இச்சந்திப்பில் மாறுபட்ட கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன. பொதுஜன பெரமுனவின் ஒரு சில உறுப்பினர்கள் 21 வது திருத்தத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கூறிய போதும் சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். எனினும், தனது முழுமையான சம்மதத்துடனேயே 21 ஆவது திருத்தச்சட்டமூலம் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது அரசாங்கம் உண்மையான நோக்கத்தில் 21 ஆவது திருத்தச்சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சித்தாலும் ஆளும் கட்சியில் உள்ள ஒரு தரப்பினரே இதற்கு முட்டுக்கட்டை போடுவதாகத் தெரிகிறது. எதுவாக இருந்தாலும் காலிமுகத்திடல் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் கட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அடித்தளம் அரசியலமைப்பின் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதிகாரத்தை ஓரிடத்தில் மாத்திரம் குவிப்பதால் ஏற்படும் பாதகமான விளைவுகளை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு மக்கள் பிரதிநிதிகள் உள்ள பாராளுமன்றத்திடம் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். *(15ஆம் பக்கம் பார்க்க)*

**பி.ஹர்ஷன்...**

# உணவு நிவாரணங்களுடன் மாத்திரம் இந்திய உதவிகள் நின்று விடவில்லை!

**இலங்கையில் தற்போது மோசமான பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது. பெற்றோலிய எரிபொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன. எரிபொருள் விலையேற்றம் காரணமாக போக்குவரத்துச் செலவுகளும் அதிகரித்து விட்டன. மருந்துப் பொருட்கள், உணவுகள் உட்பட அனைத்துக்கும் விலைகள் அதிகரித்து விட்டன.**



இலங்கை தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதென்பது இலகுவான காரியமல்ல. ஏனெனில் அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்ற பொருளாதாரத்தை முன்னைய நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு சிறப்பான திட்டங்கள் அவசியம். அதற்கான திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டு வருவதானால் அதற்கு சில காலம் செல்லுமென்பதே பொருளாதார நிபுணர்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினைத்திறன் மிகுந்த திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகின்றார். இலங்கையின் எதிர்காலம் விரைவில் சீராகி விடுமென்பதே நம்பிக்கையாக இருக்கின்றது.



**இலங்கையின் விவசாயத்துறையைக் கட்டியெழுப்பி, பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதிலும் இந்தியாவின் விசேட உதவிகள்**

இலங்கை எத்தனைதான் சிறப்பான திட்டங்களை வகுத்தாலும் வெளியுலகின் உதவிகளின்றி மீண்டெழுவதென்பது இலகுவாக இருக்கப் போவதில்லை. இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலைமையில் உலகில் உதவிகள் வழங்குகின்ற பிரதான நாடாக இந்தியா உள்ளது. இலங்கையின் நெருக்கடி தீர்க்க உடனடி உதவிகளை வழங்கிய முதலாவது நாடாக இந்தியா திகழ்கின்றது. அத்துடன் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்தும் பலவிதத்திலும் தனது உதவிகளை வழங்கி வருகின்றது.

உணவுப் பொருட்கள், சமையல் எரிவாயு உட்பட எரிபொருட்கள், மருந்துகள் என்றெல்லாம் இந்தியாவின் மனிதாபிமான உதவிகள் தொடர்கின்றன. இலங்கையில் விவசாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக இரசாயன உரத்தை வழங்குவதற்கும் இந்தியா உறுதியளித்துள்ளது. இந்தியாவின் இரசாயனப் பசளை இலங்கையில் விவசாயிகளை சென்றடையத் தொடங்கியதும் நாட்டில் விவசாயம் மீண்டும் முன்னைய நிலைமைக்கு வந்து விடுமென்பதே நம்பிக்கையாக உள்ளது.

இந்தியா வெறுமனே உணவு நிவாரணங்களையும் மருந்துப் பொருட்களையும் வழங்குவதுடன் மாத்திரம் நின்று விடவில்லை. இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் விடயத்திலும் அக்கறையாக உள்ளது. விவசாயம் தற்போது வீழ்ச்சி நிலைமைக்குச் சென்றுள்ளதால், அதனை மீளக்கட்டியெழுப்புவது பிரதானமென இந்தியா கருதுகின்றது. எனவேதான் இரசாயனப் பசளையை இலங்கைக்கு கொடுத்துதவுவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இதற்கான உறுதியை வழங்கியுள்ளதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்.

வெறுமனே உணவு நிவாரணத்தை மாத்திரம் வழங்குவதால் இலங்கையின் இன்றைய நெருக்கடியானது தற்காலிகமாகத் தீருவதற்கே வழியேற்படும். விவசாயத்தையும் ஏனைய தொழில்துறைகளையும் ஊக்குவிப்பதன் மூலமே இலங்கை மீண்டெழுவதற்கான வழியேற்படுமென்பதுதான் உண்மை.



**உணவு உற்பத்தியை அதிகரிக்க இந்தியாவிலிருந்து இரசாயனப் பசளைகள்**

இந்திய மத்திய அரசு மாத்திரமன்றி தமிழக அரசும் இலங்கை மக்களுக்கென அதிக உதவிகளை சமீபத்தில் வழங்கியுள்ளது. தமிழக மக்களினதும், அம்மாநில அரசினதும் அன்பையும் அக்கறையையும் எக்காலத்திலும் மறந்து விட முடியாது. தமிழகம் வழங்கிய உதவிப் பொருட்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது வறிய நிலைமையிலுள்ள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை இந்திய அரசாங்கம் இலங்கைக்கு சமீப காலமாக மனிதாபிமான உதவிகளை பெருமளவில் அனுப்பி வைத்திருந்தது. 25 தொன் மருந்துகள், 9,000 தொன் அரிசி, 50 தொன் பால்மா ஆகியவை உதவிப் பொருட்களில் அடங்குகின்றன.

"இந்திய அரசாங்கம் எந்த நாட்டுக்கும் இந்த அளவுக்கு உதவிகளை வழங்கியதில்லை. இதற்கு நாங்கள் நன்றி தெரிவித்து கொள்கிறோம்" என வெளிநாட்டமைச்சர் ஜி.எல். பீரிஸ் அந்த உதவிகளைப் பொறுப்பேற்ற சமயத்தில் தெரிவித்திருந்தார்.

"உள்நாட்டுப் பிரச்சினைகள் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு ஒரு பொறுப்பான அயல்நாடு என்ற முறையில் இந்தியா பலவித உதவிகளை தொடர்ந்து செய்து வருகிறது. கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவிக்கரம் நீட்டி வருகின்றது. எரிபொருள் வாங்குவதற்கு இலங்கைக்கு இந்தியா 200 மில்லியன் டொலர் கடனுதவி வழங்கியுள்ளது. இந்தியா ஏற்கனவே 200 மில்லியன் டொலர் கூடுதல் கடன் வழங்கியுள்ளது" என்று இலங்கையின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார்.

இதேவேளை சென்னையில் பத்து தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை விடயம் தொடர்பாகவும் பிரஸ்தாபித்திருந்தார்.

"இலங்கை இப்போது கடினமான காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. அங்கே உள்ள நடப்பு நிலை கவலை அளிக்கின்றது. நமக்கு நெருங்கிய நண்பன் என்ற வகையிலும், அண்டை நாடு என்ற முறையிலும் இலங்கைக்கு அனைத்து உதவிகளையும் அளித்து வருகிறோம். குறிப்பாக, நிதியுதவி, எரிபொருள், உணவு, மருத்துவம் மற்றும் இதர அத்தியாவசியப் பொருள்களை மத்திய அரசு அளித்து வருகிறது" என்று நரேந்திர மோடி கூறியிருந்தார்.

"நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்காக இந்தியா தொடர்ந்து துணை நிற்கும்" என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி அங்கு மேலும் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு உதவும் வகையில் பல்வேறு திட்டங்களை இந்திய மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. சுகாதாரம், போக்குவரத்து, வீட்டு வசதி, கலாசாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருந்தார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

**சாரங்கன்...**



# பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கும் வகையில் சட்டங்களை வலுப்படுத்துவது அவசியம்!

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**நாட்டில் தற்பொழுது நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நொருக்கடி என்பவற்றைத் தீர்ப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும், இந்த இரு பிரச்சினைகளும் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பதால் சரியான அணுகுமுறையுடன் தீர்வுகளை எட்டுவதே நீண்டகால ஸ்திரத்தன்மைக்கு அவசியமானதாகும்.**

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தாமல் பொருளாதார நெருக்கடிக்கு மாத்திரம் தீர்வு கண்டால், அது குறுகிய காலத்துக்கானதாகவே அமையும். எனவே தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்பவர்கள் இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு செயற்படுவது அவசியமானதாகும்.

## நாட்டின் பொதுவெளியில் பரவலாக ஒலிக்கும் கோரிக்கைகள்!

அதேநேரம், காலிமுகத்திடல் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்களை முன்னெடுத்துள்ளவர்கள் நாட்டில் ஊழல், மோசடி அற்ற ஆட்சியாளர்களை உருவாக்கக் கூடிய அரசியல் கட்டமைப்பு மாற்றமொன்றையே வலியுறுத்தி வருகின்றனர்.

எதிர்கால சந்ததியினரின் நலன்களைக் கருத்தில் கொண்டு அரசியல் கட்டமைப்பு மாற்றமொன்றை உருவாக்குவதற்கான தேவையும் உணரப்பட்டுள்ளது. அதற்கான சிறந்த சந்தர்ப்பமாகவும் இதனைப் பார்க்க முடியும். எனவே நாட்டின் மீது உண்மை



யான பற்று வைத்துள்ள அரசியல் தலைவர்கள் இவற்றையும் கவனத்தில் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான பின்னணியிலேயே நிறைவேற்று அதிகாரத்துக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையிலான அதிகாரங்களைப் பகிர்வது குறித்த கருத்தாடல்கள் வலுப்பெற்றுள்ளன. அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட 20 ஆவது திருத்தத்தில் மீண்டும் திருத்தங்களைக் கொண்டு வந்து பாராளுமன்றத்துக்கான அதிகாரங்களைப் பலப்படுத்தும் வகையில் 21 ஆவது திருத்தத்தை முன்வைப்பது பற்றி இப்போது பேசப்படுகிறது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் 21 ஆவது திருத்தத்துக்கான வரைவை முன்வைத்திருந்ததுடன், இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளார்.

21 ஆவது திருத்தம் தொடர்பில் அரசியல் கட்சிகள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டாலும், நாட்டின் கள நிலைமையைப் புரிந்து கொண்டு தீர்மானம் எடுப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதே இன்றைய தேவையாகும்.

அதிகாரங்களைக் குறைப்பதற்கு சமாந்தரமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்ற குரல்களும் வலுத்து வருகின்றன. இதனை இரண்டாவது கட்டமாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்திருப்பதாக அண்மையில் நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தியிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். அது மாத்திரமன்றி பாராளுமன்றத்திற்குக் காணப்படும் அதிகாரங்களை வலுப்படுத்துவது பற்றியும் அவர் தனது உரையில் பிரஸ்தாபித்திருந்தார்.

### நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுவதற்கு அரசியல்வாதிகள், மக்கள் பெருமளவில் ஆதரவு. இதனை இரண்டாவது கட்டமாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

இலங்கையில் தற்பொழுது காணப்படும் பாராளுமன்ற பிரதிநிதித்துவ ஜனநாயகக் கட்டமைப்பில் பல்வேறு முக்கிய விடயங்களை முன்னெடுக்க முடியும். குறிப்பாகப் பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையில் மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் சபா மண்டபத்தில் கலந்துரையாடும் விடயங்களுக்கு அப்பால் பல்வேறு குழுக்கள் செயற்படுகின்றன.

நாம் அடிக்கடி கேள்விப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு), அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோப குழு), அரசாங்க நிதி பற்றிய குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் பலமான நிலையில் செயற்படுகின்றன.

சட்டவாக்கம், நிதி முகாமைத்துவம், மேற்பார்வை ஆகிய முக்கிய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாராளுமன்றத்தில் காணப்படும் குழு முறைமை மிகவும் முக்கியமானதாகும். பாராளுமன்ற உறுப்பினர்கள் சபா மண்டபத்தில் தமது அரசியல் நிலைப்பாடுகளை மாத்திரம் வெளிப்படுத்துவதற்கு அப்பால் சென்று நாட்டின் அரச கட்டமைப்பு உள்ளிட்டவற்றை கண்காணிக்கும் பணிகளை இந்தக் குழுக்கள் முன்னெடுக்கின்றன.

விசேட குழுக்களுக்கு அப்பால் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் ஊடாக அமைச்சு சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. இது தவிரவும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அநீதிகள் குறித்து பாராளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுமனுக்கள் பற்றிய குழு காணப்படுகிறது.

இவற்றை விடவும் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் கொண்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் காணப்படுகின்றன. இவை தற்பொழுது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும், அவற்றை மீண்டும் செயற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு துறை சம்பந்தமாக எடுக்கப்படும் தீர்மானங்களை குறித்த மேற்பார்வைக் குழுவில் ஆராய முடியும். கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்படும் போது பாராளுமன்ற மேற்பார்வைக் குழு அது பற்றி ஆராய்ந்து தனது பரிந்துரையை வழங்க முடியும்.

இதுபோன்ற பாராளுமன்ற குழு முறைமையை பலப்படுத்துவது குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் தெரிவித்திருந்தார். பிரதமர் தனது



உரையில் குறிப்பிடுகையில், தற்போது, பாராளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றி, தற்போதுள்ள பாராளுமன்ற முறை அல்லது 'வெஸ்ட்மின்ஸ்டர்' முறை மற்றும் அரசியலமைப்பு முறை ஆகியவற்றை இணைத்து புதிய அமைப்பை உருவாக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாராளுமன்றம் நாட்டை ஆள்வதில் பங்கேற்கலாம். முதலாவதாக, நாணய அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் பாராளுமன்றத்திற்கு அந்த அதிகாரங்களை வழங்குவதற்கு தற்போதுள்ள சட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி, நாங்கள் வலுவான மற்றும் சக்தி வாய்ந்த சட்டத்தை முன்மொழிகிறோம். தற்போது அரசாங்க நிதி தொடர்பாக மூன்று குழுக்கள் உள்ளன. பொது நிதிக் குழு, கணக்குக் குழு மற்றும் பொது நிறுவனங்களுக்கான குழு ஆகிய மூன்று குழுக்கள் ஆகும். இந்த மூன்று குழுக்களின் அதிகாரங்களை பலப்படுத்துவதற்காக சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன பல யோசனைகளை முன்வைத்துள்ளார். மேலதிகமாக அதற்கு. நாங்களும் பரிந்துரைகளை முன்வைக்கிறோம் எனப் பிரதமர் கூறியிருந்தார்.

### 21 ஆவது திருத்தம் தொடர்பில் அரசியல் கட்சிகள் மத்தியில் வேறுபட்ட கருத்துகள் காணப்பட்டாலும், நாட்டின் கள நிலைமையைப் புரிந்து கொண்டு தீர்மானம் மேற்கொள்வதற்கு மக்கள் பிரதிநிதிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதே இன்று கட்டாயம்!



இவற்றுக்கு மேலதிகமாக நிதிக் கட்டுப்பாடு என்ற பாராளுமன்றத்தின் செயற்பாட்டை நிறைவேற்றும் நோக்கில் புதிய குழுக்களை அமைப்பது பற்றிய பரிந்துரைகளையும் பிரதமர் முன்மொழிந்திருந்தார்.

"பண விவகாரங்கள் தொடர்பாக இரண்டு புதிய குழுக்களை அமைக்க நாங்கள் செயற்பட்டு வருகிறோம். இந்த விவகாரம் குறித்து ஆய்வு செய்ய சட்ட மற்றும் வழிமுறைக் குழுவை நியமிப்போம்" என்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

'இரண்டாவதாக, நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிதிநிலை ஆகும். பலவீனமான பிரச்சினைகள் பல இதில் உள்ளன. எங்களின் நிலையியற் கட்டளை 111 இன் கீழ் நாம் மேற்பார்வைக் குழுக்களை நியமிக்க முடியும். இதற்கு முன் கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்படவில்லை. எனவே, பத்து மேற்பார்வைக் குழுக்களை நியமிக்க நாங்கள் முன்மொழிகிறோம். அதற்கு பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஐந்து நிதிக் குழுக்கள் மற்றும் பத்து மேற்பார்வைக் குழுக்களின் தலைவர்கள் பின்வரிசை உறுப்பினர்களால் நியமிக்கப்படுகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் அமைச்சர்களால் நியமிக்கப்படுவதில்லை. எனவே, அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்து சுயாதீனமான மற்றும் அமைச்சர் மற்றும் பாராளுமன்றம் ஆகிய இருவருடனும் இணைந்து செயல்படும் ஒரு வழிமுறையை உருவாக்க எங்களுக்கு வாய்ப்பு உள்ளது" எனப் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இது இவ்விதமிருக்க, அரசியல் கட்டமைப்பு மாற்றமொன்றை எதிர்பார்க்கும் இளைஞர்களையும் இதில் இணைத்துக் கொள்வதற்கான யோசனையைப் பிரதமர் முன்மொழிந்துள்ளார். துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் உள்ளடங்கலான 15 குழுக்களிலும் வெளியிலிருந்து குறிப்பாக போராட்டங்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்களிலிருந்து தலா நான்கு பிரதிநிதிகளை நியமிப்பதற்கும் பிரதமர் முன்மொழிந்துள்ளார்.

அவர்களில் ஒருவர் இளைஞர் பாராளுமன்றத்தால் நியமிக்கப்படுவார். மற்ற மூவரும் போராட்டக் குழுக்கள் மற்றும் பிற ஆர்வலர் குழுக்களைச் சேர்ந்தவர்கள். இந்த நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறையை இளைஞர் அமைப்புகளே தீர்மானிக்க முடியும். அத்துடன், குறிப்பிட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தலாம் என்று நம்புகிறோம். இப்பணியின் மூலம் இளைஞர்கள் தாங்களாகவே பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வுகளை வழங்க முடியும். அவர்கள் விரும்பினால் தேர்தலில் போட்டியிட முடியும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக தேசிய கவுன்சிலையும் பிரதமர் முன்மொழிந்துள்ளார். சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய குழு தேசிய கவுன்சில் என்று அழைக்கப்படுகிறது. தேசிய சபை மிகவும் முக்கியமானது என்றே கூற வேண்டும். நாட்டின் கொள்கைகள் குறித்து இதில் பேசலாம். அமைச்சரவையின் முடிவுகள் குறித்தும் பேசலாம். இந்நாட்டின் பாராளுமன்ற மறுசீரமைப்பு குறித்தும் பேசலாம். அப்படியானால், அதை அரசியல் அமைப்பு என்று சொல்லலாம் எனப் பிரதமர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்திருந்தார்.

'நாம் முன்வைத்துள்ள புதிய முறைமையின்படி ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும். அமைச்சர்களின் அமைச்சரவையும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும். தேசிய கவுன்சிலும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும். பதினைந்து குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

அமைச்சரவை மூலம் அரசாங்கத்தை கட்டுப்படுத்தவும், ஜனாதிபதியின் பணிகளை ஆராயவும், தேசிய சபையின் மூலம் அரசியல் விவகாரங்களை மேற்பார்வையிடவும், மற்ற பதினைந்து குழுக்களின் நிதி விவகாரங்கள் மற்றும் பிற விஷயங்களை மேற்பார்வையிடவும் ஒரு அமைப்பு உள்ளது. வேறு பல அமைப்புகளும் இதே போன்ற திட்டங்களை முன்வைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்' எனக் கூறி பிரதமர் தனது உரையை முடித்திருந்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று அரசியல் கட்டமைப்பு மாற்றமொன்றை எதிர்பார்த்துப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளவர்களுக்கு ஒரு தெளிவான செய்தியை வழங்கும் வகையில் பிரதமரின் இந்த முன்மொழிவுகள் அமைந்துள்ளன. நாட்டின் எதிர்காலத்தையும், இங்குள்ள எதிர்கால சந்ததியினரையும் கவனத்தில் கொண்டு இந்த யோசனைகளை நடைமுறையில் கொண்டு வருவதற்கு மக்கள் பிரதிநிதிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். இதுபோன்று வெளிப்படையான கட்டமைப்பை உருவாக்கி அவற்றின் அடிப்படையில் பொருளாதார உதவிகளைக் கோரும் போது சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் எவ்வித அச்சமும் இன்றி இலங்கைக்கு உதவ முன்வருவதற்கான வாய்ப்புக்களும் அதிகம்.

> "அரசியல் கட்டமைப்பு மாற்றமொன்றை எதிர்பார்க்கும் இளைஞர்களையும் இணைத்துக் கொண்டவாறு முன்னோக்கிச் செல்வதில் பிரதமர் ஆர்வம்; துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் உள்ளடங்கலான 15 குழுக்களிலும் வெளியிலிருந்து குறிப்பாக போராட்டங்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்களிலிருந்து தலா நான்கு பிரதிநிதிகளை நியமிப்பதற்கு பிரதமர் முன்மொழிவு; அரசியல் கட்டமைப்பு மாற்றமொன்றை எதிர்பார்த்துப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளவர்களுக்கு இது சாதகமான செய்தி!"

# சிங்கள இளைஞர்களின் அரசியல் விழிப்புணர்வு மலையகத்திலும் ஒலிக்க வேண்டும்!

**‘ ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்கு என்ன நடந்தது என்பதை அனைவரும் அறிவார்கள். இக் கட்சிகள் சொந்தக்காலில், சொந்த சின்னத்தில் நின்று தேர்தல்களில் வெற்றிபெற வேண்டும். பெரிய கட்சிகளின் சின்னங்களில் வாக்கு கேட்பது என்பது சோரம் போகும் அரசியல். பெரிய கட்சிகளுடன் கூட்டு சேரும்போது நிபந்தனைகளை கோரிக்கைகளை முன்வைப்பதில்லை. அடிவருடித் தனம் இங்கே ஆரம்பித்து விடுகிறது ’**



பாகிஸ்தானில் மதவாத அரசியலைப் பார்க்க முடியும். முதலாவது அவர்களது மையம் சார்ந்த முரண்பாடுகள், சுன்னி ஸியா போன்றவை. இரண்டாவது இந்திய விரோத அரசியல் வடிவம். அதை இந்து என்றும் சொல்லலாம். இந்தியாவில் இந்து முஸ்லிம் மதவாத அரசியல்வாதி இந்தியாவில் நல்ல அரசியல் லாபத்துடன் விற்பனை செய்யப்படக்கூடிய சரக்கு. பா.ஜ.க இன்று வட மாநிலங்களில் மாத்திரமின்றி கர்நாடகத்திலும், மலைப்பாங்கான மணிப்பூரிலும் செல்வாக்கு மிக்க கட்சியாக விளங்குகிறது என்றால் அதற்குக் காரணம், இந்து முஸ்லிம் என்ற கேவலமான மதவாதம் தான்! இந்தியாவின் வட மாநிலங்களில் வாழும் கிராம மக்களை, முஸ்லிம்களால் பாதிக்கப்பட்ட சமூகமே இந்து சமூகம் என்ற விஷயத்தை திரும்பத் திரும்பச் செய்வதன் மூலம் நம்பச் செய்து விடலாம் என்ற உளவியலை தமது வெற்றிக்கான வழியாக பா.ஜ.க திரும்பத் திரும்ப உபயோகித்து வெற்றியும் கண்டு வருகிறது. இவ்வாறு மதமும் சாதியும் இந்தியாவில் வெற்றிகரமாக பிரயோகிக்கப்படக்கூடிய ஆயுதங்களாகத் திகழ்கின்றன.

இலங்கையிலும் இதுதான் கடந்த 70 ஆண்டுகளாக நிலவும் அரசியல் உத்தி. தமிழ் அரசியல்வாதிகள் தமது இருப்புக்காக சிங்கள துவேஷ அரசியலையும், சிங்களவர்களின் பாரம்பரிய இந்திய சந்தேகத்தை தமிழர் வெறுப்பு அரசியலாக தென்னிலங்கையில் சிங்களக் கட்சிகளும் பயன்படுத்தி வந்துள்ளன. ஶ்ரீ எதிர்ப்பு போராட்டம், தமிழ் எழுத்து அழிப்பு போராட்டம், இனக் கலவரங்கள், தமிழ்த் தீவிரவாதம், தமிழர் மீதான சந்தேக அரசியல் 2019இல் பச்சை இனவாத மதவாத தேர்தல் பிரசாரம் என்பன அரசியல் கட்சிகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் பதவிகளையும் அதிகாரங்களையும் அளித்திருக்கலாம். ஆனால் நாடு வங்குரோத்து அடைந்திருக்கிறது என்பதை மிகமிகத் தாமதமாகத்தான் தென்னிலங்கை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

எனவே காலிமுகத்திடல் 'கோட்டாகோஹோம்' போராட்டத்தை எதிர்கால அரசியல் வடிவம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை கட்டமிட்டும், சட்டமிட்டும், ஆதார கற்களை அமைத்தும் எடுத்துச் சொல்லிவரும் வடிவமாகத்தான் நாம் பார்க்க வேண்டும். வியட்நாம் யுத்தம் உக்கிரமடைந்து அமெரிக்கா தன் பொருளாதார வளங்களையும் மனித வளத்தையும் அப்போரில் இழந்து கொண்டிருந்தபோது அமெரிக்காவில் இளைஞர்களின் அமைதிவழிப் போராட்டங்கள் உக்கிரம் பெற்றன. வெற்றியா, தோல்வியா அல்லது அமெரிக்க பெருமையா என்பதெல்லாம் எமக்கு வேண்டாம்; அப் போரில் இருந்து அமெரிக்கா உடனடியாக வாபல் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அமெரிக்க இளைஞர்களின் போராட்ட அடிநாதமாக விளங்கியது. அதன்படியே அமெரிக்கா தலைகுனிந்து வியட்நாமை விட்டு வெளியேறியது. ஐம்பது வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க இளைஞர்களுக்குக் கிடைத்த வெற்றி இது. அமெரிக்காவில் தோன்றி வளர்ந்த ஹிப்பி கலாசாரத்தைக் கூட வியட்நாம் போர் வெறுப்பை அடிப்படையாகக் கொண்ட கலாசாரம்தான்.

அரபு நாடுகளில் ஏற்பட்ட தனிநபர் ஆட்சிமுறைக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி அரவு வசந்தம் என அழைக்கப்பட்டது. இலங்கையின் இளைஞர் கிளர்ச்சியை அரபு வசந்தம் என்ற பெயரை உபயோகித்து அழைக்கலாமா என்ற ஒரு விவாதம் உள்ளது. இலங்கை ஒரு ஜனநாயக நாடு; ஐந்து வருடங்களுக்கு இப் போராட்டத்தை ஒப்பிடுவதற்கில்லை என்ற ஒரு கருத்து பலமாக முன்வைக்கப்பட்டது. எனவே எவரும் இதை அரபு வசந்தத்துடன் ஒப்பிடுவதில்லை. இப்போராட்டத்தில் வன்முறை இல்லை. அலரிமாளிகையில் இருந்து புறப்பட்டு வந்தவர்கள் இளைஞர்களின் அமைதி ஆர்ப்பாட்டத்தில் புகுந்து வன்முறையில் ஈடுபட்டதன் விளைவாகவே நாட்டில் வன்முறை வெடித்தது என்பதை மறந்துவிடக் கூடாது.

இப்போராட்டம் 50 நாட்களைக் கடந்த பின்னரும் தன் பிரதான இலட்சியத்தை அடையவில்லை என்பது உண்மையானாலும் இதுவரை இருந்த அமைச்சரவை கலைந்து போக வழிசெய்தது. பிரதமரை பதவி விலக வைத்தது. பின்னர் அமைக்கப்பட்ட அமைச்சரவையும் அற்ப ஆயுசில் கலைந்துபோக வழிவகுத்தது. மத்திய வங்கிக்கு புதிய தகுதி வாய்ந்த ஆளுநரை கொண்டுவந்தது. 21ம் திருத்தத்துக்கு வழிசெய்திருக்கிறது. இளைஞர் போராட்டத்தில் படித்தவர்களும், உயர் பதவிகளில், உயர் மட்டத்தில் தானுண்டு தன் சொகுசு வாழ்க்கையுண்டு என்றிருந்தவர்களையும், பெண்களையும், மருத்துவ மாணவர்கள், பேராசிரியர்கள், விமானத் துறையில் பணியாற்றுபவர்கள், கலைஞர்களையும் இணைத்து வெகுஜன போராட்டமாகவும் மாற்றத்தை விரும்பும் சகல மக்களின் குறியீடாகவும் காலிமுகத்திடல் போராட்டம் மாறி இருக்கிறது.



## காலிமுகத்திடலில் 'கோட்டாகோகம' என்றால் மலையகத்தில் ஒரு 'சிந்தனை கம' அவசியம்

எழுபது ஆண்டுகளில் இப்படி ஒன்று நடந்ததே இல்லை. அரசியல்வாதிகள் சொன்னார்கள் மக்கள் செய்தார்கள் என்பதுதான் இவ்வளவு கலமாக இருந்த கதை. அரசியல்வாதிகள் ஏவுகிறவர்களாகவும் மக்கள் ஏவப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். இப்போதுதான் மக்கள் முதல் தடவையாக, நம்மால் ஏவப்படுபவர்களே அரசியல்வாதிகள் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அரசியல்வாதிகள் விலை மிகுந்த ஆடம்பரக் கார்களை மக்களை பயமுறுத்தும் ஒரு உத்தியாகவே பயன்படுத்தி வந்தார்கள். அரசியல்வாதிகள் குறிப்பாக அமைச்சர்கள் நடந்து வரும்போது அவரைச் சுற்றி ஒரு படை வந்து கொண்டிருக்கும். சாமானியர்களை அப்பாலே போ எனப் பிடித்துத் தள்ளும். ஆறுமுகன் தொண்டமானிடம் இந்த 'நடப்பை' அப்போது பார்க்க முடிந்தது. அவருக்கு விசுவாசமான ஒரு வாட்டசாட்டமான பொலிஸ்காரர் இப்படித்தான் பிடித்துத் தள்ளுவார். தயாராக இல்லை என்றால் கீழே விழுந்து விடுவோம்.

சிங்களத்தில் போராட்டத்தை 'அரகலய' என அழகாக அழைக்கிறார்கள். அது ஒரு முக்கியமான, அதிகம் உபயோகத்தில் உள்ள ஒரு சொல்லாக இன்று மாறியிருக்கிறது.

அரசியல்வாதிகளினால் மிகவும் பாதிப்படைந்த, சீரழிந்த சமூகமாக பெருந்தோட்ட சமூகத்தைச் சொல்லலாம். இதற்கு நிறைய உதாரணம் சொல்லலாம். மக்களுக்கு குடியுரிமையும், வாக்குரிமையும் கிடைத்த பின்னர் மலையக அரசியல்வாதிகள் பதவிகளில் ஏறி அமர்ந்து சொகுசு வாழ்க்கையை கமிஷன் வாழ்க்கையை எவ்வாறு நடத்துவது என்பதிலேயே குறியாக இருந்திருக்கிறார்களே தவிர மலையக சமூகம் ஏற்றம் பெறுவதற்கு உண்மையாகவெ உழைப்பவர்களாக இல்லை. ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்கு என்ன நடந்தது என்பதை அனைவரும் அறிவார்கள். இக் கட்சிகள் சொந்தக்காலில், சொந்த சின்னத்தில் நின்று தேர்தல்களில் வெற்றிபெற வேண்டும். பெரிய கட்சிகளின் சின்னங்களில் வாக்கு கேட்பது என்பது சோரம் போகும் அரசியல். பெரிய கட்சிகளுடன் கூட்டு சேரும்போது நிபந்தனைகளை கோரிக்கைகளை முன்வைப்பதில்லை. அடிவருடித் தனம் இங்கே ஆரம்பித்து விடுகிறது. சிங்கள இளைஞர்கள் இன்று நாங்கள் சொல்கிறபடி சொல் என சாட்டையை கையில் எடுத்திருக்கிறார்கள். இலங்கையில் தமிழ் வீடுகள், கடைகள் பற்றி எரிவதே வழமை. முதல் தடவையாக அரசியல்வாதிகளின் வீடுகள் எரிந்துள்ளன. வான்முறைகளில் சிக்கி பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் அதன் வரியைத் தமிழர்கள் அறிவார்கள். எனவே வன்முறையும் வீடு எரிப்பும் எவ்வகையிலும் தீர்வாகாது. வீடு என்பது ஒவ்வொரு தனிமனிதனின் பொக்கிஷம் என்பது உணர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

எனவே மலையக தமிழ் இளைஞர்கள் அற்ப சொற்பங்களுக்காக அரசியல்வாதிகளின் அடிகளை வருடுவதா அல்லது சிங்கள இளைஞர்களைப்போல சாட்டையைக் கையில் எடுத்துக் கொள்வதா என்பதை தீர்மானிக்கும் காலம் இது. காலிமுகத்திடல் 'அரகலை'யில் இருந்து மலையக இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் இன்றியமையாதவை உள்ளன. எந்த நாளையும் போல மலையக தமிழ் வாக்காளர்கள் மீது சவாரி செய்து பதவிகளைப் பிடித்து புறமுதுகு காட்டும் வேலை இனிமேலும் செல்லுபடியாகாது என்பதை அவர்களுக்கு சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது.

பெரிய பெயர், பாரம்பரியம், பெரிய குடும்பம், பழைய சாதனைக் கதைகள், வெள்ளைக்காரத் துரைமாரைவிட மோசமான முதலாளிகளாக ஜெயலலிதா பாணியைப் பின்பற்றி தம்மை வெளிப்படுத்தும் சங்க முதலாளி பாணி, கோவில் மணி, படிக்கட்டு அமைத்தல், விளையாட்டு உபகரணங்களை வழங்குதல், சாராயம் சோற்றுப் பார்சலுக்கு வாக்குகளை வாங்குதல் போன்ற முதலாளி பாணி அரசியல் என்பனவற்றுக்கு முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

1978 முதல், பின்னர் 1990 முதல் மலையக அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் மொத்தத் தொகை என்ன; அதனால் விளைந்த பலன்கள் என்ன என்பதெல்லாம் இளைஞர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விஷயம்.

இது மலையகத்தின் படித்த இளைஞர்கள் சிந்திக்க வேண்டிய தருணம். எமது எதிர்கால அரசியல் எவ்வாறு எதை எவற்றை நோக்கி அமைய வேண்டும் என்பதை இளைஞர் சமூகம் தீர்மானிக்க வேண்டும்.

'கோட்டாகோகம' வைப்போல இங்கேயும் ஒரு சிந்தனைப் பட்டி உருவாக்க வேண்டும். நாங்கள் ஆமாம் சாமி அமாங்கையா அல்ல என்பதை இளைஞர்கள் நிரூபித்தாக வேண்டும்.

சி.ப. சீலன் ...✍

# ரணில் காலத்தில் நடைமுறைக்கு வந்த சமூகநலத் திட்டங்கள் மீண்டும் உயிர்பெற வேண்டும்!

மறைந்த வேலாயுதம் நல்லாட்சிக் காலத்தில் பசுமை பூமி திட்டத்தின் கீழ் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உறுதியுடன் கூடிய வீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்தார். ஆனால் இக்காணி உறுதிப்பத்திரங்கள் சட்டரீதியிலானவையா என்ற கேள்வியை புத்திஜீவிகள் எழுப்பவே செய்தனர். ஏனெனில் தனியார் நிறுவனங்கள் குத்தகைக்குப் பெற்றுக் கொண்டுள்ள பெருந்தோட்டக் காணிகள் அனைத்துமே காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமானவை. இது தவிர அரச காணிகள் விநியோகம் செய்யப்படுமிடத்து வழங்கப்படும் காணி உறுதிகள் அந்தந்த காணிகளுக்குப் பொறுப்பான அமைப்புகளுக்கூடாகவே வழங்கப்படுகின்றன. சுவர்ண பூமி, ஜெய பூமி என்றெல்லாம் காணி உறுதிகளுக்கு பெயர்கள் உண்டு. 2015இல் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட காணி உறுதிகளை காணி சீர்திருத்த ஆணைக்குழுவே தயார் செய்திருந்தது. இக்காணி உறுதிகள் பொதுவான காணி உரிமைப்பத்திர நியமப்படி விற்பனை செய்யவோ கைமாற்றம் செய்யவோ உரிமை பெற்றிருந்தன. எனினும் இதில் சில குறைபாடுகள் இருந்ததாக அமரர் வேலாயுதம் கூட ஏற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



வேலாயுதம்

அமரர் வேலாயுதம் மறைவுக்கு பின் அப்போதைய அமைச்சர் பழனி திகாம்பரம் அதே தன்மையைக் கொண்ட காணி உரிமைப் பத்திரங்களையே வழங்கி வந்தார். இதில் எந்தவொரு மாற்றமும் ஏற்படுத்தப்பட்டதாக தெரியவில்லை. ஏற்கனவே ஒரு தடவை அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும் நுவரெலியா மாவட்டத்தில் மலையக மக்களுக்கு காணி உரிமங்களை வழங்கி வைத்தனர். பின்னர் தான் அம்பலமானது இந்த காணி உரிமைப் பத்திரங்கள் சட்டரீதியானவை அல்ல என்பது. எனவே பசுமை பூமி காணி உரிமைப் பத்திரங்களும் அப்படி ஆகிவிடக்கூடாது.

முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரத்துக்கூடாக வழங்கப்பட்ட காணி உரிமைப் பத்திரங்கள் நம்பகத்தன்மை வெளிப்படுத்தப்படாமலேயே உள்ளது. இதேவேளை பழனி திகாம்பரமே பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டங்களையும் கையாண்டார். குறைகள் இருந்தபோதும் அவரின் செயற்பாடுகள் நம்பிக்கையூட்டுவதாகவே அமைந்தன. எனினும் ஆட்சி மாற்றத்தின் பின் இந்த வீடமைப்புத் திட்டம் முடங்கிப் போய் விட்டது.

பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சராக ஜீவன் தொண்டமான் நியமனம் பெற்றிருந்தாலும் கொவிட் தொற்று, பின்னர் பொருளாதார வீழ்ச்சி போன்ற காரணங்களால் வீடமைப்புத் திட்டம் நடைமுறைக்கு வரவில்லை. இந்திய அரசின் நிதியொதிக்கீட்டின் பேரிலான தனி வீட்டுத் திட்டத்தைக் கூட தொடர முடியாத இக்கட்டே இதுவரை நிலவுகின்றது. முன்னைய ஆட்சியில் முழுமை பெறாத சுமார் 1000 வீடுகளை (இந்திய நிதி உதவியிலான வீடமைப்புத் திட்டம்) பூரணத்துவப்படுத்தி பயனாளிகளிடம் கையளித்ததாக ஜீவன் தொண்டமான் கூறியிருந்தார்.



ஜீவன் தொண்டமான் அமைச்சராவதும் ஆகாததும் அவர் சார்ந்த விடயம். ஆனால் யாரோ ஒருவர் அமைச்சராவது மலையகத்தை பொறுத்தவரை விசேடமானது. ஏனெனில் தற்போதைய சூழலில் பெருந்தோட்ட சமூகத்துக்கான அடிப்படையானதும் அத்தியாவசியமானதுமான சில விடயங்கள் செயலற்றுப் போயுள்ளன. பெருந்தோட்டத் தனிவீட்டுத் திட்டம், காணி உறுதிப்பத்திரம் வழங்கல், மலையக அதிகார சபை அடக்கம், பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்கப்படுவதற்கான முன்னகர்வுகள் முடக்கம் என அவசர காரியங்களுக்கான இயங்கு நிலைக்குத் தேவை ஏற்பட்டுள்ளது.




ஆனால் அரசியல் பிரதிநித்துவம் இருந்தாலும் ஆட்சியில் அங்கம் கிடைக்காது போனால் எதுவுமே ஆகாது. அரசியல் அதிகாரம் என்பது இங்கு முக்கியமானது. இதுவரை அரசியல் அதிகாரம் கிடைத்திருந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் மலையக தலைமைகள் பெரிதாக எதனையும் சாதித்து விடவில்லை என்பது வேறு விடயம். இடைக்கால அரசாங்கம் என்ற நிலைமையை மாற்றி எஞ்சியிருக்கும் இரண்டரை வருடங்களுக்கும் இதே ஆட்சியை தொடர வைக்கும் இலக்கோடு பிரதமர் ரணில் விக்ரமசிங்க காய்நகர்த்துவதாகத் தெரிகின்றது. தவிர உடனடியாக ஒரு தேர்தலைச் சந்திக்கும் நிலையில் நாட்டின் நிதி நிலைமை இல்லை.

எனினும் தீர்க்கதரிசனம் மிக்க ஒரு செல்நெறியைத் தெரிவு செய்தாக வேண்டிய நிலையில் மலையகக் கட்சிகள் இருக்கின்றன. தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒன்றும் ரணிலை எதிராளியாக பார்க்கப்போவது இல்லை.

ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு முடிவை எடுக்கும் பட்சத்தில் அது மலையக மக்களிடம் எதிர்ப்புணர்வை ஏற்படுத்தாது என்பது இ.தொ.காவுக்கும் தெரியும். த.மு கூட்டணிக்கும் புரியும். ஆனால் இக்கட்சிகளின் தயக்க நிலைக்குக் காரணம். எதிர்வரும் வாரங்களில் 21ஆவது அரசியல் சட்ட திருத்தம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படலாமென தெரிகிறது.

அப்படி நிகழ்ந்தால் கூடிய விரைவில் அச்சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு வரும். அது நிறைவேற்றப்பட்டதன் பின் மலையகக் கட்சிகள் தமது தற்போதைய போக்கில் நெகிழ்வுத் தன்மையை காட்டப்போவது என்னவோ நிச்சயம். அதற்கிடையில் ஏதாவது நடந்தாலும் நடக்கலாம். தற்போது பெருந்தோட்ட மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள். நிரந்தர வருமானமின்றி அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்ந்துள்ளதால் தர்மசங்கடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.கா ஸ்டாலின் அன்புடன் அனுப்பி வைத்த அரிசியை ஆசையாய் வாங்கிப் போனார்கள். பத்து கிலோ அரிசியை விநியோகிப்பதில் பெருந்தோட்ட மக்களுக்கு முன்னுரிமை கொடுத்ததன் மூலம் ரணில் தான் மக்கள் மனதில் வந்திருப்பார். அந்த வகையில் முதல்வர் ஸ்டாலின் மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கி ரணிலுக்கு வரவேற்பை பெற்றுத் தந்துள்ளார்.

இது தற்கால நிவாரணம். மலையக சமூகத்துக்கு விடிவு தரக்கூடிய வேலைத்திட்டங்களே அவசியம். பிரதமர் ரணில் ஒரு பெரும் போக்கான அரசியல்வாதி. பெருந்தோட்ட மக்கள் அவர்மீது ஓர் அபிமானத்தைக் கொண்டிருக்கின்றார்கள். ஜீவன் தொண்டமான் 1000 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுத்தந்தாலும் அதன் பயன் இன்னும் தோட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லை. இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக வழக்கு தொடரப் போவதாக அச்சுறுத்துகிறார். கம்பனி தரப்பு பனங்காட்டு நரி. இந்த சலசலப்புக்கெல்லாம் அஞ்சப்போவது கிடையாது.

இதேசமயம் கட்சிகள் தமது சுயநலத் தேவைகளுக்காக மட்டும் மலையக மக்களை பகடைக் காய்களாக பயன்படுத்த எண்ணினால் அது நம்பிக்கைத் துரோகம். இதுவரை அதிகமாக இப்படித்தான் நடந்து வந்திருக்கிறது. மக்களுக்காக அரசியல் செய்வது தான் மதிநுட்பம். கடந்த ஆட்சியில் ரணில் பிரதமர். மலையக மக்களைப் பொறுத்தவரை சில நல்ல காரியங்களுக்கு கைகொடுத்தார். தனி வீட்டுத் திட்டம், காணி உறுதி கையளித்தல், மலையக அதிகார சபை, பிரதேச சபை சட்ட திருத்தம், 5 பிரதேச செயலகங்களுக்கான முன்னகர்வு இப்படி சில. இப்போதும் ரணில்தான் பிரதமர்.

புதிதாக ஏதேனும் கிட்டாவிட்டால் கூட ஏற்கனவே ஆரம்பித்த வேலைத் திட்டங்களையாவது முன்னெடுக்க பச்சைக்கொடி காட்டுவாரா ரணில்?

பன். பாலா ...✍

# எட்ட நின்று வேடிக்கை பார்க்கும் தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள்

கருணாகரன்





நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்குத் தீர்வு எப்போது கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும் என்பதே இன்று மக்களின் மனதில் உள்ள ஆயிரம் டன் கேள்வியாகும். புதிய பிரதமர், (பழைய ஆட்களுடன்) புதிய அமைச்சரவை என்ற பிறகும் நெருக்கடி தீருவதாக இல்லை. பதிலாக மேலும் பொருட்களின் விலை கூடியிருக்கிறது. பஸ் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பொருட் தட்டுப்பாடு நீங்கவில்லை.

அப்படியென்றால் அடுத்து என்ன நடக்கும்? எப்படி இனி வரும் நாட்களைச் சமாளிப்பது? இதன் முடிவென்ன?

இந்த மாதிரிக் கேள்விகள் மக்களிடம் விடை பெருந்தீயாக எழுந்துள்ளது. கேள்வி மட்டுமல்ல, எதிர்காலத்தைக் குறித்த அச்சமும் உருவாகியுள்ளது. இது போர்க்கால அச்சத்தையும் விடப் பயங்கரமானது. அப்போது இந்த மாதிரி எல்லோரும் கஷ்டப்படவில்லை. ஏதேனும் சில வழிகளில் ஒரு சிறிய இடைவெளியோ ஆறுதலோ இருக்கும். அங்கே மரணம்தான் பெரிய பிரச்சினை. இங்கே மரணத்தைத் தவிர அனைத்தும் பிரச்சினை. அது உயிரை மாய்ப்பது. இது உயிரோடு வைத்து மாய்ப்பதாகும்.

நெருக்கடி நீளும்போது சனங்களின் சேமிப்பு சடுதியாகக் கரைந்து போகும். அப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறது. கையிலே எவ்வளவு பணத்தைக் கொண்டு போனாலும் பையிலே பொருள் சேருதில்லை. வருமானத்தை விடப் பன்மடங்கு செலவீனம் ஏற்படுகின்றது. அந்தளவுக்கு நாட்டின் பொருளாதார நெருக்கடி வாழ்க்கைச் சுமையை ஏற்றி விட்டுள்ளது. சமாளிக்கவே முடியாமல் திணறுகின்றன பல குடும்பங்கள். வறுமை சடுதியாக அதிகரிக்கப்போகிறது. வறுமை ஒழிப்புக்கான சமுர்த்தி உட்பட அரசாங்கத்தின் வேலைத்திட்டம் அத்தனையும் தோல்வியைத் தழுவப்போகின்றன. பதிலாக வறுமைப் பெருக்கமே நிகழவுள்ளது.

நுண்கடன்களால் பாதிக்கப்பட்டிருந்த பல்லாயிரம் குடும்பங்களுக்கு கடன் நீக்கம் செய்யப்படும் என்ற உத்தரவாதத்தை மத்திய வங்கி வழங்கியிருந்தது. இதைக்குறித்து பாராளுமன்றத்திலும் பலரும் வாக்குறுதியளித்திருந்தனர். ஆனாலும் அதொன்றும் நடைமுறைக்கு வரவில்லை. அதனால் பலர் தற்கொலை கூடச் செய்தனர். இருந்தும் நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை.

ஏறக்குறைய அதைப்போல இப்பொழுதும் பல விதமான வாக்குறுதிகள், உத்தரவாதங்கள் எல்லாம் வழங்கப்படுகின்றன. இதற்கெல்லாம், பெறுமதி என்ன, அர்த்தம் என்ன என்று யாரும் சிந்திப்பதில்லை. அந்தந்த நேரத்துக்கு எதையாவது சொல்லிச் சமாளித்து விடுவோம் என்றே சிந்திக்கிறார்கள். ஆனால், இது நிலைமையைச் சீராக்காது. பதிலாக உள்ளே தணலாகக் கொதித்துக் கொண்டேயிருக்கும். அந்தத் தணல் என்றோ ஒரு நாள் தீயாகப் பற்றும். அதுவே இப்பொழுது ஏறக்குறைய நடந்து கொண்டிருக்கிறது.

இப்பொழுது தேவையானது, பிரச்சினையை மூடி மறைப்பதோ உடனடியாக எதையாவது செய்து சமாளித்துக் கொள்ளலாம் என்று கருதுவதோ அல்ல. இலங்கையில் இதுதான் வழமை. எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படுவதில்லை. எல்லாவற்றையும் ஆறப் போடுவது அல்லது இழுத்தடிப்பது. 70 ஆண்டுகளுக்கு மேலாக இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபடவில்லையா? அதற்காக ஒரு பெரிய போரே நடந்து முடிந்த பிறகும் அதைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் இல்லை. அந்தப் போரில் ஒவ்வொரு குடும்பமும் சந்தித்த நெருக்கடிகளும் இழப்புகளும் அதிகம். நாடே பல்லாயிரக் கணக்கான மனிதர்களை இழந்தது. ஆனாலும் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற உணர்வு வரவேயில்லை.

இந்த இனப்பிரச்சினையும் அதன் விளைவான போரும் உண்டாக்கிய பொருளாதார இழப்பு இன்றைய பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணம் என்பதைக் கூட பலரும் உணரத் தவறுகின்றனர். அப்படி உணர்ந்தாலும் அதைப் பகிரங்கமாகப் பேச அவர்கள் தயாரில்லை.

இதையெல்லாம் மறைத்துக் கொண்டு எப்படி நம்முன்னே உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியும்? முதலில் நாம் நம்முடைய மனக்கதவுகளைத் திறக்க வேண்டும். காலம் அதற்கான சூழலை உருவாக்கித் தந்துள்ளது. வரலாறு நமக்கு அருமையான வாய்ப்பைத் தந்துள்ளது.

இந்தப் பயங்கரமான நெருக்கடிக்குள்ளும் நமக்கு மிகச் சிறப்பான வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இதை அரசியல் தலைவர்களும் கட்சிகளும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வழமையைப் போல இனவாதத்தை விற்பனை செய்ய முயற்சிக்காமல், அப்படிச் சிந்தித்து மேலும் நாட்டைப் பாழ்படுத்தாமல், நாட்டையும் மக்களையும் கருத்திற் கொண்டு புதிதாகச் சிந்திக்க வேண்டும். திறந்த மனதோடு சிந்திக்க வேண்டும். அது ஒன்றே மீட்சிக்கான வழி. அதைச் செய்யாமல் வேறு தந்திரங்களைக் கையாண்டு இப்போதும் இந்த நிலைமையைக் கடக்க முற்படலாம் என்று சிலர் எண்ணக் கூடும். அப்படிக் கடந்து போனாலும் அது நீடித்த தீர்வைத் தராது. இன்னொரு கால இடைவெளியில் மீண்டும் இன்னொரு வடிவில் நெருக்கடி வந்தே தீரும்.

இப்போது பாருங்கள், போர் முடிந்து விட்டது. இனிப் பிரச்சினை இல்லை என்றே பலரும் எண்ணினார்கள். குறிப்பாக சிங்கள மக்களிடம் இந்த உணர்வு மேலும் வலுத்திருந்தது. ஆனால் என்ன நடந்தது?

இப்பொழுது சமைப்பதற்கே வழியற்ற நிலை வந்திருக்கிறது.

ஆகவே இனியும் தாமதிக்காமல், நாடு எதிர்கொண்டுள்ள நிலைமையைப் பற்றி வெளிப்படையாக மக்களுக்குச் சொல்லி, அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும். "மக்களுக்கு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன்" என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சொல்லியிருக்கிறார்.

ஆனால், அந்த உண்மையை எப்படிச் சொல்ல வேண்டும் என்பது முக்கியமானது. ஏனென்றால் சொல்லப்படுகின்ற உண்மை சரியான முறையில் மக்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால், சொல்லப்படும் உண்மை முழுமைப்பட்டதாக இல்லை என்றால், அது நிலைமையின் தாற்பரியத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவில்லை என்றால் என்னதான் சொல்லியும் பிரயோசனமில்லை.

நிலவரத்தைப் பற்றிய உண்மையைச் சொல்வது என்பதோடு அதற்கான மாற்று வழிகள் என்ன? அதில் யாரெல்லாம் பங்கேற்க வேண்டும்? அந்தப் பங்கேற்பும் பங்களிப்பும் எப்படி இருக்க வேண்டும் என்பதும் கூடச் சொல்லப்படுவது அவசியம். முக்கியமாக தேசிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மக்களின் பங்களிப்பின் அவசியத்தைப் பற்றி சரியாக விளக்க வேண்டும். அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து பங்களிப்புச் செய்யும்போதே மாற்றங்களை உண்டாக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதெல்லாம் செய்யப்படுவதாக இல்லை. இதில் அக்கறை இருப்பதாகவும் இல்லை.

பலருடைய அபிப்பிராயமும் அல்லது எதிர்பார்ப்பும் என்னவென்றால் எங்காவது கடன் பட்டு எப்படியாவது நிலைமையைச் சீராக்கி விடுவார்கள். அதற்குப் பிறகு சுமையில்லாமல், நெருக்கடிப் படாமல் சீவித்துக் கொள்ளலாம் என்பதாகவே உள்ளது. அரசாங்கமும் கூட இப்படித்தான் சிந்திக்கிறது.

ஆனால், எங்கே கடன்படுவது? அந்தக் கடனை எப்படி அடைப்பது? அந்தக் கடனோடு சேர்ந்து வரும் நிபந்தனைகள் என்ன? அவை எப்படி நம்முடைய வாழ்க்கையைப் பாதிக்கும்?

இன்று இல்லாது விட்டாலும் நாளை நிச்சயமாக அந்தக் கடனை நாங்கள் திரும்பச் செலுத்தியே தீர வேண்டும். இல்லையென்றால் நாட்டையே அவர்கள் அடமானத்துக்கு எடுத்துக் கொள்ள நேரிடும். திரும்பக் கடனைச் செலுத்துவதாக இருந்தாலும் அதற்கு வழியென்ன? வட்டியென்ன? அது நம்முடைய பிள்ளைகளுக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் உண்டாக்கப்போகும் சுமை என்ன? என்ற விளக்கம் பலருக்கும் இல்லை.

இவ்வளவு காலமும் கடன்பட்டுச் சீவித்ததன் விளைவை இப்பொழுது அனுபவிக்கிறோம் அல்லவா. அதைப்போலத்தான் எதிர்காலத்தில் நம்முடைய பிள்ளைகளும் நெருக்கடியில் சிக்க நேரிடும்.

ஒரு எளிய உதாரணம், இப்பொழுது எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அரசு வழங்கி வந்த மானியத்தை இடைநிறுத்தியுள்ளமையே ஆகும். அரசாங்கத்தின் மானியம் நிறுத்தப்பட்டவுடன் இறக்குமதியாகும் விலைக்கே எரிபொருளை விற்க வேண்டிய நிலை.

ஆகவே இந்த மாதிரி பல மானியங்கள் எதிர்காலத்தில் நிறுத்தப்படலாம். கடன் வழங்குநர்கள் சொல்லுகின்ற அறிவுரை – ஆலோசனை இது. ஏனென்றால் அவர்கள் தங்கள் கடனை – முதலீட்டை – எப்படித்திரும்பப் பெற்றுக் கொள்வது என்பதிலேயே குறியாக இருப்பார்கள். அவர்களுக்கு தங்கள் லாபம் முக்கியமே தவிர, மக்கள் நலன் அல்ல. ஆனால், அரசாங்கத்துக்கு லாபத்தை விட மக்கள் நலனே முக்கியமாக இருக்க வேண்டும். மக்களைப் பாதுகாப்பதற்கே அரசாங்கம் உள்ளது. அந்தப் பொறுப்புடன்தான் அது சிந்திக்க வேண்டும். நடக்க வேண்டும்.

கடன் வாங்குவது எளிதல்ல. அதை விட அது ஆபத்தானது. நம்முடைய இறைமையை அது நாசமாக்கக் கூடியது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம். தவிர்க்க முடியாமல் இப்பொழுது நாம் கடன் பட்டே தீர வேண்டும் என்றால், அதற்குரிய பொறிமுறைகள் அவசியம். கடனை வாங்குவதற்கான பொறிமுறையைப் பற்றி இங்கே நான் குறிப்பிடவில்லை. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான பொறிமுறையைப் பற்றியே குறிப்பிடுகிறேன். அந்தப் பொறிமுறையைச் சரியாக வகுத்துக் கொண்டு அதை நடைமுறைப்படுத்தினால் கடன் எங்களை நெருக்கடிக்குள்ளாக்காமல் தப்பித்துக் கொள்ளலாம்.

எனவேதான் கடன் தரும்போது அவர்கள் சொல்கின்ற நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதற்குப் பதிலாக (அதைச்செய்யத்தான் வேணும். இல்லையென்றால் கடன் தரவே மாட்டார்கள்) அதை மீளச் செலுத்துவதற்கான பொறிமுறையைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இதை மக்களுக்கு புரிய வைப்பது அவசியம். அரசாங்கம் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும் என்ற எண்ணப் பாட்டிலிருந்து நாம்தான் அரசாங்கத்தை வழிநடத்த வேண்டும் என்ற உணர்வும் உண்மைப் புரிதலும் மக்களுக்கு வேண்டும். அதைப்போல அரசாங்கத்தை எல்லாவற்றுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல், அரசாங்கத்தில் எப்போதும் தங்கியிருக்க முற்படாமல் சுயமாக மக்கள் வாழ்வதற்குப் பழகிக் கொள்ள வேண்டும் என்ற தன்மையை அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

இந்தப் பரஸ்பரப் புரிதல் நிலைமையைச் சீராக்குவதற்குப் பெரிதும் உதவும்.

இதற்காகத்தான் தேசிய அரசொன்றைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்படுகிறது. தேசிய அரசின் குணாம்சம் வேறாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பில்தான் அவ்வாறு கூறப்படுகிறது. ஆனால் அதையே நம்மால் எட்ட முடியவில்லை. பிறகெப்படி தேசிய நெருக்கடிக்குத்தீர்வைக் காணப்போகிறோம்.

இப்பொழுது தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் கூட எட்ட நின்றே வேடிக்கை பார்க்கின்றன. ஆனால், நெருக்கடிகளோ அனைத்து மக்களுக்கும் ஒன்றாகவே உள்ளன. இதையிட்டு யாருடன் பேசுவது?

# மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான வழி என்ன?

இன, மத, மொழி பேதங்களுக்கும் அப்பாலும் மனித வாழ்வாதாரங்களுடன் வாழமுடியாத மக்களின் வரலாறு காணாத பல இன்னல்களையும் நாம் எல்லோரும் அனுபவித்து வருகின்றோம்.

ஒரு இனத்தின் மீது அவர்களுடைய சமூக அமைப்பை சீர்கெடச் செய்யும் மிகமோசமான செயல்களிலும் அவர்களுடைய மதங்களையும் துன்புறுத்துவதோடு மதவெறி, இனவெறிகளை தூண்டும் வார்த்தை பிரயோகங்களையும் பிரயோகித்து இனங்களுக்கிடையிலான கலவரங்களையும் குறிவைத்து தாக்கும் அழிவுகளையும் ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் பிரிந்து நிலைதடுமாறி உள்ளனர். இதனால் நிம்மதி இழந்து செய்வதறியாமல் நிலைகுலைந்து போவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. இது காலாகாலமாக நடந்தேறி வருகின்றது. இந்த அமைதியற்ற சூழல் இனிமாறவேண்டும்.

இலங்கைத்தீவு இயற்கையில் மிகவும் அழகானது. எல்லா வளங்களும், நிறைந்த பூமி என எல்லோரும் போற்றுகின்றனர். ஆனால் இதுமோசமான பூமியாக மாறிவருகிறது.

மக்கள் வாழமுடியாத சூழ்நிலைக்குள் தள்ளப்படும்போது மக்கள் எழுச்சிப் போராட்டங்களாக மாற்றமடைகின்றன. எல்லாப் போராட்டங்களும் மக்களின் தேவைகளைத்தான் முன்னிறுத்துகிறன. பெரும்பான்மையினரின் போராட்டங்கள், தமிழர்களின் போராட்டங்கள் எல்லாமே நியாயமானவைதான். அவற்றை கையாளும் முறைகளில் ஏற்படும் தவறுகளினால், மனிதர்களின் வாழ்வாதாரங்களும் இழந்து அவர்கள் நிர்க்கதிக்குள்ளாக்கின்றனர். உள்நாட்டு சர்வதேச பின்புலன்களும் இதில் தாக்கம் செலுத்துவதையும் அறியமுடிகிறது. மொழி என்பது, ஒருபிரச்சினையாக பார்க்கமுடியாது. மொழி இல்லை என்றால் உலகம் சமநிலை அடையாது.

இதை ஏன் வெறுப்புடன் பார்க்க வேண்டும். ஒருநாட்டின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் மொழி மிக மிகமுக்கியத்துவமானது. அதன் அடிப்படைத்தன்மையாகவும், அமைந்துள்ளது. நாம் எல்லோரும் அதை அலட்டிக்கொள்ள தேவையில்லை. மாறாக ஒருமொழி பேசுபவர்களை அந்நிய நாட்டவர் எனகருதவும் முடியாது. மக்கள் மக்களாக வாழ்வதற்கு மொழிமுதன்மையானது. இது உலகத்தில் உள்ள எல்லோருக்கும் பொதுவான நியதிகளாகும்.

எந்தமொழியை கற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களோ அதை கற்றுக்கொள்ளுங்கள். இது ஒரு திணிப்பு அல்ல. பல்வேறுபட்ட இனத்தவர்களுடனும் பல்வேறுபட்ட திறமைகளையும் சக்திகளையும் இறைவன் (கடவுள்) கொடுத்துள்ளான். மேலதிகமாக இன்னுமொரு மொழி தெரிந்திருந்தால் நம் அன்றாட தொழிலுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் அது மேலும்உதவும்.

ஒருசமூகம் ஒருநில புலத்தில் நீண்டகாலமாக வாழ்வார்களானால் அவர்களும் அந்நாட்டு பிரஜைகள் தான். அந்த இனக்குழுக்களுக்குரிய சகல சௌபாக்கியங்களும் சகவாழ்வுக்குரிய போதிய அளவு அனுபவிக்கும் உரிமைகளும் சலுகைகளும் உண்டு. அதுதான் ஒரு ஜனநாயக நாடாக இருக்க முடியும்.

ஒரு இனத்தின் சமய வழிபாடுகள், வாழ்விடங்கள் இன்னோரன்ன அடையாளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அவை எல்லாமே உத்தரவாதப்படுத்தப்படாத நகர்வைத்தான். இதை மக்கள் சீர்செய்ய வேண்டுமென அந்நாட்டு அரசுடன் அகிம்சையான போராட்டங்கள் மூலம் மக்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். இதை நிவர்த்தி செய்வதைத்தான் மனித இனம் விரும்புகின்றது. ஆனால் மனிதன் மனிதனாக வாழமுடியாத போக்குத்தான் இலங்கையிலும் உலகிலும் காணப்படுவதுடன் அதிகார போட்டித்தன்மைகளும் ஒரு இன மேலாதிக்கம் எல்லாமே மாற்றமடையவேண்டும்.

நிரந்தரத்தீர்வுகள் எட்டாதவரைக்கும் அழிவுப்பாதையில் தான் செல்வதை நாம் கண்டு அனுபவிக்கின்றோம். தீர்வுகளும் சட்டங்களும் மக்களுக்காகவேதான் அரசியலமைப்பு சட்டங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றுதான் அரசியல்வாதிகளுக்கும் அப்பாலும் மற்றும் பலராலும் பல்வேறுபட்ட முன்மொழிவுகள் (நகர்வுகள்) கடந்தகாலங்களிலும் முன்வைக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றது.


அவை ஒன்றுமே தீர்வைத்தரவில்லை என்றால் அப்படியானால் வேறு எவ்வகையான தீர்வுதான் சரியாக இருக்கும் என்பது சற்று சிந்திக்கவேண்டியவிடயம் இந்த சிக்கல் முடிச்சில் எங்கேயோ தவறு இருக்கிறது.என மேலும், மேலும் சிந்திக்கத் தூண்டுகிறது. ஆனால் ஆட்சியாளர்கள் மேலும் காலத்தினை கடத்தும் போக்காகத்தான் அரசியலுக்கும் அப்பாலும் கடந்த கால வரலாறுகளும் நாம் எல்லோரும் காணமுடிகிறது

நம் நாட்டு இனப்பிரச்சினையும் அரசியல் நகர்வுகளும் அதன் போக்கையும் காண்கின்றோம். பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கம் இல்லை போல் அதை வைத்துக்கொண்டு அரசியல் செய்து காலத்தினை எட்டுகின்றனர் எனசுட்டிக்காட்டத் தோன்றுகின்து.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததிலிருந்து அரசியலமைப்பு திருத்தசட்டங்கள் காலத்துக்குகாலம் ஆளும்தரப்புக்களால் மாற்றி திருத்தப்பட்டாலும் அது ஒரு திணிப்பு. அடிப்படையில்தான் அரங்கேறியுள்ளதாக கருதவும் முடிகிறது. தற்போது 19வது திருத்தச்சட்டத்தை மீள அமுலாக்கம் செய்ய ஜனாதிபதியும் சம்மதித்தைப்போல பேசப்படுகிறது. இதற்கு முன்னர் 20வது திருத்தம், 21வது திருத்தம் இன்னும் எத்தனையோ திருத்தச்சட்டங்களை வெளிப்படையாக மக்களுக்கு சொல்லுவார்களா?

இலங்கையை யார் ஆட்சிசெய்தாலும் மாறி மாறி பெரும்பான்மையினர்தான் ஆட்சி அமைக்கும் நடைமுறையாக இருக்கும். இதில் எவ்வித சந்தேகங்களும் இல்லைதான். நாடும், நாட்டு மக்களும் சுபீட்சம், சௌபாக்கியத்துடனும் வாழவேண்டுமானால், இனப்பிரச்சினை எனும் அடைமொழி உட்பூசலை அதன் உள்ளார்ந்த வெளிப்படைத்தன்மையினை மக்கள் மத்தியில் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும். இதுதான் இன்றைய தேவையாகும். ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை தன்மையினை உறுதிசெய்யும் இது அவசியமாகும்.

இங்கு யார் சொல்லுகிறார்கள் என்பதை விட மக்கள் முன்வைக்கும் கருத்துக்கள்தான் அதில் எது சரியெனில் அதைச்செய்வதுதான். இதற்கு தராதரம், வயது எதுவுமில்லை. வட மாகாணத்தை தமிழ் மக்களில் ஆளுமையின் கீழ் ஆழப்படுவதில் ஏனைய இனக்குழு பிரதிநிதிகளும் விகிதாசாரமுறையில் இணைந்திருப்பது செயல்படுவதுபோல் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் அமைப்புகளும் முறையாக ஏனையவர்களும் இருப்பர். இது ஒரு சிறந்த நிரந்தர தீர்வாக அமைய முடியும்.



றசாக் முகம்மட் அலி
அஸ்ரப் ஞாபகார்த்த நூலகம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்




# ஜப்பானுக்கு பயந்து இடம்பெயர்ந்த யுத்த வெற்றிக் கோபுரம்

முதலாம் உலகப் போர் முடிந்ததும் அதன் நினைவாக 120 அடிகள் உயரமுள்ள வெற்றிக் கோபுரம் ஒன்று 1923ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் நிறுவப்பட்டது. அதை ஆங்கிலத்தில் Cenotaph War Memorial என்று அழைப்பார்கள். செனடேப் (Cenotaph) என்பது கிரேக்கச் சொல். வெற்றுக் கல்லறை என்பது அதன் அர்த்தம். போரில் இறந்தவர்களை அங்கிருந்து சடலங்களை மீட்டு வர முடியாத நிலையில் அருகில் எங்கேயாவது புதைத்து விட்டு வருவது வழக்கம். அவ்வாறு அவர்களின் உடல்கள் இல்லாமல் அவர்களின் நினைவாக எழுப்பப்படும் நினைவிடங்களைத் தான் செனடேப் என்பார்கள்.




முதலாம் உலக யுத்தம் முடிவடைந்ததும், 1920 களில் பிரித்தானியாவிலும் அதன் குடியேற்ற நாடுகளிலும் பிரித்தானியாவுக்காக போரில் இறந்தவர்களின் நினைவாக இந்த "செனடேப்" கல்லறைகள் நிறுவப்பட்டன. பின்னர் 1939 – 1945 வரையான இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்ததும் பிரித்தானிய குடியேற்ற நாடுகளைக் கொண்ட பொதுநலவாய நாடுகளின் தலைநகரங்களில் இத்தகைய "செனடேப்" கல்லறைத் தூபிகள் நிறுவப்பட்டன. இதன் அமைப்பு ஏறத்தாள எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றன.

உலக நாடுகள் அனைத்துமே போரின் வடுக்களையும், போர் வரலாற்று நினைவுகளையும் கடந்து வந்துள்ளன. இதில் எந்தவொரு நாடும் விதிவிலக்கில்லை என்றே கூறலாம். போரின் வடிவங்களும், காலங்களும், காரணங்களும் மாறினாலும் போர்களைக் கடந்து வராத நாடு என்றொன்றில்லை.

இலங்கையில் அவ்வாறு முடியாட்சி காலத்துப் போரின் நினைவுகள் நிறையவே உள்ளன. எல்லாளனுக்காக துட்டகைமுனு அனுராதபுரத்தில் கட்டிய "தக்கின நினைவுத் தூபி" அவற்றில் முக்கியமானதாகக் கொள்ளலாம். அதுபோல, ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சியின் நினைவாக உள்ள நினைவுத் தூபிகள், முதலாம், இரண்டாம் உலக யுத்த கால நினைவுத் தூபி,ஜே.வி.பி கிளர்ச்சி நினைவாக அமைக்கப்பட்ட தூபிகளையும் கூட கூறலாம். யாழ். முற்றவெளியில் உள்ள தந்தை செல்வா நினைவுத் தூபியையும் குறிப்பிட வேண்டும். 2015 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் மோடி இலங்கை வந்திருந்தபோது இலங்கையில் கொல்லப்பட்ட IPKF படையினருக்காக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கொட்டேவில் அமைந்துள்ள நினைவுத் தூபியை வணங்கிச் சென்றதையும் கூறலாம். முப்பது வருட யுத்தத்தில் கொல்லப்பட்ட இலங்கை இராணுவத்தினரின் நினைவாக நாடெங்கிலும் நினைவுத் தூபிகளும், நினைவிடங்களும் அரசால் உருவாக்கப்பட்டிருப்பதையும் அறிவீர்கள். இவை அனைத்தும் போரிலும், சமர்களிலும் வெற்றி பெற்ற தரப்பாலும், அதிகாரமுள்ள தரப்பாலும் நிறுவப்பட்ட நினைவிடங்கள் என்பதையும் அறிவீர்கள். இந்த வரிசையில் இலங்கையில் தமிழர் தரப்பில் உருவாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான நினைவுத் தூபிகள் ஒன்று விடாமல் அழிக்கப்பட்டுவிட்டதையும் சேர்த்தே நாம் மதிப்பிட வேண்டியிருக்கிறது.

இந்த வரிசையில் காலனித்துவ ஆட்சிக் காலத்து நினைவுத் தூபிகளில் முக்கியமானதாக இந்த "வெற்றிக் கோபுர"த்தைக் கொள்ளலாம்.

1918 ஆம் ஆண்டு முதலாவது உலக யுத்தம் நிறைவடைந்த பின்னர் அப்போதைய இலங்கைக்கான பிரித்தானிய தேசாதிபதி மனிங் பிரபுவால் (Brigadier General Sir William Henry Manning) இதற்கான அடிக்கல் கொழும்பின் மையமான காலிமுகத்திடலில் டிசம்பர் 7, 1921 அன்று நாட்டப்பட்டது. இங்கிலாந்தில் சேர் எட்வின் லூடியன்ஸ் (Sir Edwin Lutyens) என்பவரால் வடிவமைக்கப்பட்ட பொது வடிவத்தைத் தான் பல நாடுகளிலும் ஒன்றுபோல் உருவாக்கினார்கள். உண்மையில் வெற்றி கோபு



ரமானது இந்து மகா சமுத்திரக் கடலில் வெகு தொலைவில் இருந்து காணக்கூடிய மெல்லிய தூபி என்று கூறலாம். லூடியன்ஸ் முதலில் கோபுரத்தின் உச்சியில் பகலில் புகையும், இரவில் நெருப்பும் வரத்தக்க வகையில் வடிவமைத்திருந்தார். அவரது மனைவி, எமிலி அம்மையார் 1925 இல் அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பி வரும் வழியில் கொழும்பில் இருந்தபோது அதைப் பார்த்து தனக்கு அந்த அமைப்பு பிடிக்கவில்லை என்று லூடியன்ஸிடம் கூறியிருக்கிறார். " இது ஒரு சுடர் என்கிற அர்த்தத்தில் தான் வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் புரிந்து கொள்கிறேன். ஆனால் இது ஒரு ஊசியின் கண் போல் இருகிறது. வெளிச்சம் இல்லாமல் அது மிகவும் வித்தியாசமாக தெரிகிறது. எனக்கு அது அவ்வளவாகப் பிடிக்கவில்லை." என்றிருக்கிறார்.

முதற் தடவை இந்த செனடேப் கோபுரம் லண்டனில் உள்ள வைட்ஹாலில் தான் 'போர் நினைவுக் கல்லறை' யாக நிறுவப்பட்டது. இந்தியாவின் இன்றைய ஜனாதிபதி இல்லமான ராஷ்டிரபதிபவன் அருகிலும் இதே போன்று அன்று நிறுவப்பட்டது.

ஆளுநர் பிரிகேடியர் ஜெனரல் சர் வில்லியம் ஹென்றி மனிங் அவர்களால் டிசம்பர் 7, 1921 அன்று நாட்டப்பட்டதை அடிக்கல்லாக பொறிக்கப்பட்ட பலகை உறுதிப்படுத்துகிறது. அதே நாளின் சிலோன் டெய்லி நியூஸ் 'சிலோனின் போர் நினைவுச் சின்னம், அடிக்கல் நாட்டுதல்! காலி முகத்திடலில் இன்று வைபவம்' என்கிற தலைப்பில் செய்தி வெளியிட்டிருக்கிறது. விழாவிற்கான ஏற்பாடுகள் பற்றியும் அதன் வடிவமைப்பு குறித்தும் விரிவான விபரங்களுடன் அந்த செய்து காணப்படுவதுடன், இதற்கான சிறந்த கிரானைட் கற்கள் மெட்ராஸுக்கு வடக்கே 30 மைல் தொலைவில் உள்ள பிரதேசமான சோளிங்க நல்லூரிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கிறது. 119 அடி உயரத்தையும் ஏழு அடி விட்டத்தையும் இது கொண்டிருக்கிறது என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1920ஆம் ஆண்டு 11,ஆம் திகதி வெளியான "The Ceylon Independent" பத்திரிகையின் படி இந்த கோபுரத்தை நிறுவ அப்போதே 150,000 ரூபா செலவழிந்திருக்கிறது.

அடுத்த நாள் சிலோன் டெய்லி நியூஸ் இந்த விழாவைப் பற்றிய சுவாரஸ்யமான விபரங்களை வெளியிட்டுள்ளது. "வெள்ளிக் கிண்ணத்தால் ஈரமான சிமெண்டைத் தொட்ட பின்னர், வெற்றிக் கோபுரத்தை கட்டும் மூன்று வேலையாட்கள் ஒரு சிங்களவரும், ஒரு தமிழரும், ஒரு முஸ்லிமும் சேர்ந்து கற்களை அங்கே நிறுத்தினர்.அதனைத் தொடர்ந்து ஆளுநரின் அறிவிப்பும், உரையும் நிகழ்த்தப்பட்டது. விழாவைத் தொடர்ந்து பிரார்த்தனை நடந்தது."

பின்னர் ஒக்டோபர்27, 1923 ஆம் நாள் "வெற்றிக் கோபுரம்" (Victory tower) என்கிற பெயரில் இது திறக்கப்பட்டது.

இதன் பின்னர் சிலோன் டெய்லி நியூஸ் அக்டோபர் 27, 1923 அன்று வெளியிட்டுள்ள பதிவுகளின்படி இந்த நினைவுதூபி ஆளுநர் மானிங்கால் காலை 7.45 மணிக்கு திறக்கப்பட்டிருக்கிறது. அச்செய்திகளின் படி இந்தியாவில் இருந்து 'ஸ்டீமர்களின்' மூலம் கொண்டுவரப்பட்ட ஒன்று முதல் நான்கு டன் வரை எடையுள்ள பெரிய கற்கள் அனைத்தும், திறமையான இந்திய பணியாளர்களால் நிலைநிறுத்தி, வடிவமைத்து, நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இந்த மாபெரும் நினைவுத்தூபிக்கு அடிக்கல் நாட்டிய ஆளுநர் மானிங் அன்றைய தினம் கூட்டத்தில் உரையாற்றுகையில், "அந்த மாபெரும் போராட்டத்தில் இலங்கை மற்றும் பிரித்தானிய ஆண்கள் ஆற்றிய பங்கிற்கு இது சாட்சியாக இருக்கும். போரிட்டு மடிந்த அந்த வீரர்கள் அமைதியாக ஓய்வெடுக்கும் நினைவிடமாக இது திகழும்."

**ஜப்பான் தாக்குதல்**

ஜப்பான் 1941 டிசம்பரில் அமெரிக்க பேர்ல் துறைமுகத்தின் மீது பாரிய விமானத் தாக்குதல்களை நடத்தி உலகையே அதிரவைத்தது. ஜேர்மன், ஜப்பான், இத்தாலி என்பன கூட்டாக உலக நாடுகளில் பரவலான தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தன. குறிப்பாக பிரித்தானிய காலனித்துவ நாடுகளின் மீதெல்லாம் அடி விழுந்தன. இலங்கை எந்த வேளையிலும் அப்பேர்பட்ட தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் நிலவியது.

1942ஏப்ரல் 5ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர்) தினத்தன்று அது நிகழ்ந்தது. ஜப்பானிய விமானங்கள் இலங்கைக்கு மேலாக பறந்தன. பேர்ல் துறைமுகத்தின் மீதான தாக்குதலில் 360 ஜப்பானிய விமானங்கள் பங்குபற்றியிருந்ததையும் இங்கு கூறவேண்டும். இலங்கை இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடு என்பதை ஜப்பானும் அறியும். பிரித்தானியாவின் பலத்தைக் குறைக்க இலங்கையைத் தாக்குவது முக்கியமானதாக இருந்தது. இயற்கைத் துறைமுகமான திருகோணமலை, கொழும்பு ஆகினவற்றையும், ஆசியாவின் பெரிய கடல்விமானத் தளமான கொக்கல கடல்விமானத் தளத்தையும், இரத்மலான சிவில் விமானத் தளத்தையும் தாக்கியழிக்க திட்டமிட்டிருந்தது ஜப்பான். ஏப்ரல் 5 ஆம் திகதி கொழும்பையும் 9ஆம் திகதி திருகோணமலையையும் ஜப்பான் தாக்கியது. இரண்டாம் உலகப் போர் வெடித்தவுடன், காலி முகத்திடலில் உள்ள வெற்றித் தூண் எதிரி விமா



னங்களுக்கு குறிப்பிடத்தக்க அடையாளமாக இருக்கும் என்றும், ஜப்பானின் வான்வழித்தாக்குதலுக்கு இலகுவாக அடையாளம் காணப்படக்கூடும் என்கிற அச்சத்தின் காரணமாகவும் அதை இடம் மாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அதை எங்கு மாற்றுவது என்பது குறித்து நீண்ட ஆலோசனைக்குப் பிறகு, இறுதியாக விக்டோரியா பூங்கா என்று அழைக்கப்படும் தற்போதைய இடத்தில் அதை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

**விகாரமகாதேவி பூங்காவில் நிறுவல்**

அந்தக் கோபுரம் காலி முகத்திடலில் இருந்து கழற்றப்பட்டு விகாரமகாதேவி பூங்காவுக்கு கொண்டு செல்லப்பட்டு பொருத்தப்பட்டது. முதலாம், இரண்டாம் உலகப்போர்களில் கொல்லப்பட்ட440 பேரின் பெயர்கள் இதில் செதுக்கப்பட்டுள்ளன.

இன்றும் அது விகாரமகாதேவிப் பூங்காவின் பின்னால் அமைந்துள்ள கொழும்பு பொதுநூலக நுழைவாயின் அருகில் காணலாம். அது அப்போது எங்கு இருந்தது என்பதை சரியாகச் சொல்வதானால்; இன்று பண்டாரநாயக்கவின் பெரிய சிலை வைக்கப்பட்டுள்ள இடத்தில் தான் அந்த நினைவுக் கோபுரம் இருந்தது என்கிறார் வரலாற்றாசிரியர் பேராசிரியர் கே.டி.பரணவிதான. அதை உறுதி செய்யக் கூடிய படங்களும் நமக்கு கிடைத்துள்ளன.

1939-1945 க்கு இடையில் நிகழ்ந்த இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்தவர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியலை இணைக்கும் யோசனையை பிற்காலத்தில் ஆளுநர் சோல்பரி முன்வைத்தார். அதன் பிரகாரம் இந்த தூபி அகற்றப்பட்டு மீண்டும் விகாரமகாதேவி பூங்காவின் ஒரு பகுதியில் (இன்றைய பொது நூலகத்துக்கு அருகில்) அப்படியே நிறுத்தப்பட்டது. அந்தத் தூபியை சுற்றி மேலதிக தூண்களுடன் அழகாக நிறுவப்பட்டது. ஆனால் அது முதற் தடவை கட்டப்பட்டதற்கு எடுக்கப்பட்ட காலத்தை விட அதிகக் காலத்தை இதை மீள நிறுவ எடுத்தது. அது மட்டுமன்றி அக்காலப்பகுதியில் இலங்கைக்கு சுதந்திரமும் வழங்கப்பட்டிருந்தது.

மீண்டும் நடைபெற்ற திறப்பு விழா பற்றி பிப்ரவரி 6, 1952அன்று வெளிவந்த சிலோன் டெய்லி நியூஸ் இப்படி தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது.'போர் நினைவுச்சின்னம் நிறைவடைந்தது'. இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக இளவரசி எலிசபெத் மலர்வளையம் வைப்பார்' என்று தலைப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மன்னர் ஆறாம் ஜோர்ஜ் திடீரென இறந்தபோது எதிர்பாராத நிகழ்வுகளின் காரணமாக இலங்கைக்கான அரச குடும்பத்து விஜயம் இரத்து செய்யப்பட்டது. 1952 ஆம் ஆண்டு பிப்ரவரி 7 ஆம் நாள் சிலோன் டெய்லி நியூஸ் தலைப்புச் செய்தியாக "அரசர் நித்திரையில் இறந்துவிட்டார், இளவரசி எலிசபெத் இங்கிலாந்தின் அரியணை ஏறுகிறார்' என்று செய்தியை வெளியிட்டிருந்தது.

ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் எதிர்பாராத மறைவின் போது இளவரசி கென்யாவில் இருந்தார். அவர் அங்கிருந்து இங்கிலாந்து திரும்ப வேண்டியிருந்ததால், இலங்கைக்கான அரச பயணத் திட்டம் மாற்றப்பட்டது. பொதுநலவாய நாடுகளில் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருந்த ஆளுநர் சோல்பரி பின்னர் ஒரு பொப்பி மலர் மாலையை இந்த போர் நினைவுத்தூபியில் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இந்த கோபுரத்தின் ஒரு பக்கத்தில் கவிதையொன்றின் ஒரு பகுதி பொறிக்கப்பட்டிருக்கிறது.

"நாம் முதுமை அடைவது போல
அவர்கள் முதிர்வடைய மாட்டார்கள்:
வயதினால் அவர்களைச் சோர்வடையச் செய்யவும் முடியாது.
வருட ஓட்டங்கள் அவர்களைப் பாதிக்காது.
சூரியன் உதிக்கிற காலையிலும்,
அஸ்தமிக்கிற மாலையிலும் கூட
நாம் அவர்களை நினைவு கூர்வோம்."

இந்த மூலக் கவிதையை எழுதியவர் பெனியோன் (Robert Laurence Binyon) என்கிற பிரிட்டிஷ் கவிஞர். முதலாவது உலக யுத்தம் 1914 ஓகஸ்ட்டில் தொடங்கிய போது, ஜேர்மன் படையினரால் கொல்லப்பட்ட பிரித்தானிய படையினரின் நினைவாக அடுத்த மாதம் செப்டெம்பர் மாதம் எழுதப்பட்ட நெடுங்கவிதையின் ஒரு பகுதி இது.

இதே கவிதையின் கீழ் இன்னொரு கவிதையின் வரிகளும் காணப்படுகின்றன. அதை எழுதியவரும் புகழ் பெற்ற பிரிட்டிஷ் கவிஞரும், இலக்கியவாதியுமான ஜோன் மெக்ஸ்வெல் எட்மன்ட்ஸ் (John Maxwell Edmonds).

நீங்கள் வீட்டிற்குச் செல்லும்போது,
அவர்களிடம் எங்களைப்பற்றிச் சொல்லுங்கள்,
நாளைய உங்கள் நாளுக்காக
எங்கள்இன்றைய நாளைக் கொடுத்தோம் என்று.

உலக யுத்தத்தின் நினைவாக ஆண்டு தோறும் நவம்பர் 11 ஆம் திகதி நினைவு கூரப்படுகிறது. அவ்வாறு உலகெங்கும் நினைவு கூரப்படும் அதே நாளில் இலங்கையிலும் இந்த இடத்தில் இராணுவ மரியாதையுடன் தேசிய வீரர்கள் தினம் நினைவு கூரப்படுவது வழக்கம். தொல்லியல் பெறுமதி மிக்க இந்த போர் நினைவுச்சின்னம் இலங்கை முன்னாள் படைவீரர் சங்கத்தினால் (SLESA) இலங்கை கடற்படையின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு, நினைவுச் சின்னத்தை இரவில் ஒளிரச் செய்ய வான வெளிச்ச விளக்குகளும் நிறுவப்பட்டன.

ஒரு பாரிய நினைவுச் சின்னமொன்று 80 ஆண்டுகளுக்கு முன்னரேயே சிதைவுறாமல் பெயர்த்து எடுக்கப்பட்டு இன்னோரிடத்தில் நிறுவப்பட்ட சாதனையையும் கொண்ட இந்தத் தூபி அடுத்த வருடம் நூற்றாண்டு வயதைக் கொண்டாட இருக்கிறது.

(தொடரும்)

## அரசியல் - பொருளாதார நெருக்கடிக்கெதிரான போராட்டங்கள்

# புதிய இலங்கை தேசத்தினைக் கட்டியெழுப்ப உதவுமா?

## சில அவதானிப்புகள்

**(கடந்த வாரத் தொடர்)**

ஆனால், அந்த வாதம் 2019ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் முடிவுகளின் பின்னர் செல்லுப்படியற்றதாகி விட்டது. அதனை இனியும் முன்வைக்க முடியாது. ஆகவே, இம்முறையினை ஒழிப்பது தொடர்பாக சிறுபான்மை கட்சிகள் தயக்கம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. உறுதியான பாராளுமன்ற அரசாங்க முறையொன்றின் மூலம் சிறுபான்மை மக்களின் நலன்களை பாதுகாக்க முடியும். அதற்கு உலகில் பல நாடுகளை உதாரணமாக கொள்ளலாம் (கனடா, நியுசிலாந்து, பிரித்தானியா). மே மாதம் 11ம் திகதி ஜனாதிபதி ஆற்றிய உரையிலும் அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாகவும் குறிப்பிட்டார். நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு நிறைவேற்று ஜனாதிபதி முறையும் காரணமென்பதனை இன்று அவர் புரிந்துக்கொண்டுள்ளார். ஆயினும் அது காலம் கடந்த ஞானமாகும்.

தற்போதைய போராட்டங்களினூடாக வலியுறுத்தப்பட வேண்டிய பிரிதொரு முக்கியமான விடயம் மதசார்பற்ற இலங்கையினை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவம் தொடர்பான கருத்தாடலாகும். இன்றைய போராட்டங்களுடைய நிலையான பெறுபேறு இலங்கையினை மதசார்பற்ற நாடாக நிலைமாற்றம் செய்வதன் மூலம் ஏற்படலாம். புதிய இலங்கை தேசம் என்பது மதசார்பற்றதாக அமைய வேண்டும். அவ்வாறன்றில் கடந்த 74 ஆண்டுகளாக உரமூட்டி வளர்க்கப்பட்டுள்ள இன, மத மற்றும் மொழி பிரதேச தேசிய வாதம் தொடர்ந்தும் இலங்கை தேசத்தினை அழித்துக் கொண்டே இருக்கும். அந்த அழிவு காலத்திற்கு காலம் புதிய புதிய வடிவங்களில் வடகிழக்கு தமிழர், முஸ்லிம்கள், மலையக மக்கள் என்ற அடிப்படையில் இந்த நச்சு வட்டும் சூழன்று கொண்டு இருக்கும். ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு தரப்பினர் இலக்கு வைக்கப்படுவர் என்பது எமது கடந்தகால இலங்கை அனுபவமாகும். மதச்சார்பற்ற தேசம் ஒன்று உருவாக்கப்பட்டால் அது மதத் தலைவர்களை அரசியலில் இருந்து ஒதுக்கி வைப்பதற்கான வாய்பினை வழங்கும். இலங்கை தேசத்தின் தற்போதைய நெருக்கடிக்கு அரசியலில் இருந்து மதத்தனை பிரித்து வைக்காமை பிரதான காரணமாகும். ஆகவே, தற்போதைய நெருக்கடிக்கு பௌத்த பிக்குகளும் பொறுப்பு கூற வேண்டும் என்ற கோசமும் இன்று எழுச்சி பெற்று வருவதனை காணமுடிகின்றது. இது ஒரு முற்போக்கான அபிவிருத்தியாகும். இக்கருத்தாடலை தொடர்ச்சியாக பேணவேண்டும், சமூகமயப்படுத்த வேண்டும்.

**புதிய ஜனநாயக கலாசாரத்தின் எழுச்சி**

இந்தப் போராட்டங்களின் ஊடாக பலமான ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக சுதந்திரமான அச்சமின்றி கருத்துக்களை வெளியிடுவதற்கு சாதகமான சூழ்நிலையொன்று உருவாகியுள்ளது; அவர்களின் ஆதிக்கத்தினை அச்சமின்றி விமர்சிப்பதற்கு குறிப்பாக, அரசியலில், நிர்வாகத்தில், சட்டத்தினை அமுல்படுத்;துவதில், தேசிய பாதுகாப்பில், ஊடகத்தில், நீதியினை நிர்வகிப்பதில் மற்றும் தனியார் துறையில், நிலைமை ஏற்பட்டிருப்பதாக பேராசியர் ஜயதேவ உயன்கொட குறிப்பிடுகின்றார். இது ஒரு முக்கியமான மாற்றமாகும். ஒரு பலமான, சர்வாதிகார ஆட்சியாளரை எதிர்ப்பது சாதாரண விடயமல்ல. மிகவும் இருக்கமான பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியிலே இத்தகைய எதிர்ப்புகள் இடம்பெற்று வருகின்றன. மே மாதம் 9ம் திகதி ஆர்பாட்டக்காரர்கள் மீது குண்டர்கள் மேற்கொண்ட தாக்குதல்கள் இப்போராட்டத்தினை முடிவிற்கு கொண்டு வந்துவிடும் என பலரும் அச்சம் கொண்டார்கள். ஆனால் ஒரு சில மணித்தியாலத்திற்குள்; மீண்டும் இளைஞர்கள், ஏனைய தரப்பினரின் ஆதரவுடன் அணித்திரண்டு தமது போராட்டத்தினை தொடர்ந்தது மாத்திரமல்லாமல், தாக்குதல் மேற்கொண்டவர்களையும் அடையாளம் கண்டு தக்க பாடம் கற்பித்து, அந்த தாக்குதலின் பின்னால் இருந்த சூத்திரதாரர்களையும் அம்பலப்படுத்தினார்கள். இது இந்தப் போராட்டத்திற்கு புதிய பரிணாமத்தினை வழங்கியதுடன், இதுவரைக்காலம் கைக்கட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் போராட்டத்தில் இணைந்துகொள்ள வழி செய்தது. இது இப்போராட்டத்தின் பொது நோக்கத்தினை மேலும் வலுப்படுத்தியுள்ளது எனலாம்.

இதன் மூலம் வெளிப்பட்ட பிரிதொரு விடயம் யாதெனில், இந்தப் போராட்டங்கள் ஒரு குறிப்பிட்ட கருத்தியலை, தலைமையினை, படிநிலையமைப்பினை, தனிப்பட்டவர்களை அடிப்படையாகக் கொண்ட மரபு ரீதியான ஊழல் நிறைந்த மற்றும் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பாற்பட்ட போராட்டம் என்பதனையாகும். இதுவும் ஒரு வகையான நேரடி ஜனநாயக முறையாகும். இதன் காரணமாக போராட்டக்களம் திறந்ததாகக் காணப்படுகின்றது. எந்தவொரு சமூக வகுப்பினையும் இன, மத, பால்நிலை மற்றும் வேறுப்பட்ட அடையாளத்தினை கொண்டவர்களும் எந்நேரமும் வந்துபோகக்கூடிய இடமாக காணப்படுகின்றது.

போராட்டங்கள் ஒரு பக்கம் வெற்றிகரமாக இடம்பெற்று வரும் அதேவேளை, இதன் பிரதிபலிப்புகளை சட்டத்தினையும் நீதியினையும் நிர்வகிக்கும் நிறுவனங்களின் செயற்பாடுகளில் அவதானிக்க முடிகின்றது. நீதி மன்றங்களின் அண்மைக்கால தீர்ப்புகள், மனித உரிமை ஆணைக்குழுவின் சுயாதீன செயற்பாடுகள், குறிப்பாக அரச அடக்குமுறையினை கண்டித்து அறிக்கை வெளியிடுவது, பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவ தளபதிகளை விசாரணைக் குட்படுத்தியுள்ளமை, ராஜபக்ஷக்களுக்கு எதிரான ஊழல் வழக்குககளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மீள ஆரம்பித்துள்ளமை மற்றும் கணக்காய்வாளர் திணைக்களத்தின் செயற்பாடுகள் என்பன அண்மைய உதாரணங்களாகும். இவை எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்ற கேள்வியினையும் இங்கு முன்வைக்க வேண்டும். தீவிர நிறுவன மறுசீரமைப்புகளின் மூலம் இது சாத்தியமாகலாம்.

(தொடரும்)



கலாநிதி இரா.ரமேஷ்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
அரசியல் விஞ்ஞானத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்





முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதியின் 99வது ஜென்ம தின நினைவேந்தலும், அல்லலுறும் இலங்கை மக்களுக்கு உதவி அளித்து வரும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர் பி. பி தேவராஜ், பேராசிரியர் அ. சர்வேஸ்வரன், திருமதி உமா சந்திரபிரகாஷ், கே. ரி குருசாமி, வைத்தியகலாநிதி அனுஷந்தன் சிவப்பிரகாசம், சிரேஷ்ட ஊடகவியலாளர் என். எம். அமீன் கவிதாயினி சீமரா அலி, கவிஞர் காத்தான்குடி பவுஸ், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், தம்பிராசா ஈஸ்வரராஜ உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

படம்: எம். நசார்



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட நேற்று முன்தினம் 03 ஆம் திகதி நிறுவனத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார். நிறுவனத்தின் ஆசிரியர் பீட பணிப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் சிசிற பரணதந்திரியும் செயற்பாட்டுப்பணிப்பாளராக சட்டத்தரணி பிரபாத் மஞ்சுள மாகும்புரவும் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர். அதன் பின்னர் நிறுவனத் தலைவருடன் பணிப்பாளர்கள் இருவரும் எடுத்துக்கொண்ட புகைப்படம். ஆசிரியர் பீட பணிப்பாளர். சிசிற பரணதந்திரி, றிவிர நாளிதழின் பிரதம ஆசிரியராகவும் மவ்பிம நாளிதழின் ஆசிரியர் பீட பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளமையும் குறிப்பித்தக்கது.

# புதிய பாகிஸ்தான் அரசாங்கம் எதிர்க்கட்சிகளை வேட்டையாடுகிறது

## தெஹ்ரீக் ஈ இன்சாப் உப தலைவர் சௌத்ரி குற்றச்சாட்டு

பாகிஸ்தானில் பதவிக்கு வந்துள்ள புதிய அரசாங்கம் பதவி வகித்த இம்ரான்கானின் தெஹ்ரீக் ஈ இன்சாப் முக்கியஸ்தர்கள் மற்றும் தொண்டர்களை வேட்டையாடுவதாகவும் சோடிக்கப்பட்ட வழக்குகளைப் போடுவதாகவும் இக்கட்சியின் மூத்த உப தலைவரான சௌத்ரி ஹுசைன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவரும் இவரது சகோதரரும் தம்மைக் கைது செய்வதில் இருந்து விலக்களிக்கும்படி தொடுத்த முன்ஜாமின் மனுவை பரிசீலித்த இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் இருவருக்கும் பத்து நாள் முன்ஜாமீன் வழங்கி தீர்ப்பளித்ததோடு பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகுமாறு உத்தரவிட்டது. நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்த சௌத்ரி ஊடகவியலாளர்களுடன் உரையாடும் போதே புதிய அரசின்மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.



தமது கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் மீது 107 புகார்கள் பொலிசில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் இப்படி பொய் வழக்குகள் போடுவதும் அரசியல் கட்சித் தலைவர்கள் மீது அழுத்தம் பிரயோகிப்பதும் புதிய அரசின் வழக்கமாகி விட்டது என்றும் தெரிவித்திருக்கும் அவர், விசாரணைக் குழுவை மாற்றி அமைத்தது, வழக்குதொடுநரை அகற்றியது, தேர்தல் ஆணைக்குழுவில் தமது விசுவாசிகளை உறுப்பினர்களாக நியமனம் செய்தது எனப்பல தவறான முடிவுகளை எடுத்து வருவதாகவும் கூறியுள்ளார்.

இந்த அடக்குமுறை ஆட்சியில் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்பானது ஒரு நம்பிக்கைக் கீற்றை ஏற்படுத்தியுள்ளது என்றும் பிரதம நீதியரசர் சாதாரண மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவராகத் திகழ்கிறார் என்றும் சௌத்ரி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

# சர்வதேச மகளிர் தினம் - 2022



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்பு தமிழ்ச்சங்கம் ஒழுங்கு செய்த 'நானும் ஒரு பெண்' நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர் சிரேஷ்ட சட்டத்தரணி மாலா சபாரட்ணம் மற்றும் மனிதநேய நிதியத்தலைவர் அபிராமி கைலாசப்பிள்ளைஆகியோர் மங்கல விளக்கேற்றினர். சங்கத் தலைவர் சட்டத்தரணி காண்டீபன் தலைமையுரை நிகழ்த்த மாலா சபாரட்ணம் சட்டத்தரணி ஜெயந்தி விநோதன் திருமதி அபிராமி கைலாசப்பிள்ளை, மங்களேஸ்வரி சங்கர் ஆகியோர் சங்கம் சார்பில் கௌரவிக்கப்பட்டனர். மலையகத்தின் முதல் பெண் நீதிபதி ஜீவராணி கருப்பையா பேராசிரியர் இராஜலக்ஷ்மி சேனாதிராஜா கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகாந்த குரு, குத்துச்சண்டை வீராங்கனை செல்வி இந்துகா தேவி கணேஷ் ஆகியோரையும் இசைவிருந்தளித்த செல்வி அபிராமி ரகுநந்தனையும், படங்களில் காணலாம்.

ஏ.கே.விஜயபாலன்

# 'மனிதநேய ஒன்றிணைவு' அவசர நிவாரண பணியில் இணைந்துள்ள சன்ஷைன் ஹோல்டிங்ஸ்

**மனிதநேய பணியானது 200,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டதாகும்**

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால் நாடு முழுவதிலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவசரகால நிவாரணங்களை வழங்கும் நோக்கில், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, CBL குழுமம், Citi, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC ஸ்ரீ லங்கா ஆகியவற்றின் ஒன்றிணைவில் ஆரம்பிக்கப்பட்ட 'மனிதநேய ஒன்றிணைவு' எனும் மனிதாபிமான செயற்திட்டத்திற்கு சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி (Sunshine Holdings PLC ) நிறுவனமும் தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளது .

மேற்படி செயற்திட்டத்தின் நிறைவேற்று பங்காளியான சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் சுயாதீன கணக்காய்வாளர் PwC Sri Lanka

மனிதநேய ஒன்றிணைவு

ஆகியோர் உட்பட ஒருமித்த எண்ணம் கொண்ட பெருநிறுவன பங்காளிகளுடன் முன்னெடுக்கப்படும் 'மனிதநேய ஒன்றிணைவு' முயற்சியானது, நாடு முழுவதும் உள்ள 200,000க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் 40,000 ற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்நிவாரணம் தற்போது விநியோகிக்கப்படுகின்றது. பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரி



மாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' வேலைத்திட்டமானது 6090 நாட்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் மனித வள குழும தலைவர் மிச்சேல் சேனாநாயக்க அவர்கள் கருத்து தெரிவிக்கையில், "சன்ஷைன் ஹோல்டிங்ஸ்" நிறுவனத்தை சேர்ந்த நாங்கள் எப்போதும் நல்ல விஷயங்களை வாழ்வில் கொண்டு வருவதை நோக்காகக் கொண்டுள்ளோம், 'மனிதநேய ஒன்றிணைவு' அந்த நோக்கத்தின் ஒரு உருவகமாகும். தேசத்தைக் கட்டியெழுப்புவதில் நாம் அனைவரும் முன்னோக்கிச் செல்லவும், நமக்குரிய பங்களிப்பை ஆற்றவும் வேண்டியிருப்பதால், இத்தகைய பொது நலன் பணியில் எங்களையும் ஒன்றிணைத்துக் கொண்டுள்ள டயலொக், MAS, Hemas, CBL மற்றும் Citi ஆகிய நிறுவனங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இலங்கை அதன் மீள்தன்மையால் வடிவமைக்கப்பட்டுள்ளது, எனவே, சவால்கள் எமக்கு எதிராக வீசப்பட்ட போதிலும், நமக்கிடையிலான ஒன்றிணைந்த காரணத்தின் கீழ் நாம் தொடர்ந்து வலிமையிலிருந்து வலிமைக்கு முன்னேறுவோம். இலங்கை மீண்டும் எழுச்சி பெறும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன், மேலும் இந்த செயலூக்கமான முயற்சி செழித்தோங்குவதைக் காண்பதில் ஒருமித்த எண்ணம் கொண்ட பங்காளிகளுடன் இணைவதில் சன்ஷைன் மகிழ்ச்சி அடைகிறது" என்றார்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் டயலொக் என்டர்பிரைஸ் பிரிவின் பிரதம அதிகாரி நவின் பீரிஸ் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், "இந்தக் கூட்டமைப்பில் நல்ல பல நிறுவனங்கள் இணைந்திருப்பதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். சவாலான காலகட்டங்களுக்கு மத்தியில், 'மனிதநேய ஒன்றிணைவு' போன்ற நேர்மறையான, நோக்கத்துடன் கூடிய முயற்சிகள் கருத்துருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுவதைக் காண்பது நமது தேசத்தின் வளர்ச்சிக்கு நிறைய நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது. 17 மில்லியன் வாடிக்கையாளர்களையும், இலங்கையின் பரந்த வலையமைப்பையும் கொண்டுள்ள டயலொக் நிறுவனமானது, அவசியத் தேவையுடையோரின் பசியைப் போக்க உதவுவதை, காலத்தின் தேவைக்கு ஏற்ற கௌரவிக்கப்படுவதான செயற்பாடாக பணிவுடன் நோக்குகின்றது. ஒருமித்த எண்ணம் கொண்ட நிறுவன பங்காளர்களுடன் ஒன்றிணைந்தவாறு, பாதிக்கப்பட்டுள்ள 200,000 குடும்பங்களுக்கு அவசர நிவாரணங்களை வழங்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம், இன்றுவரை இந்த இலக்கின் ஒரு பகுதியை நாங்கள் ஏற்கனவே அடைந்துள்ளோம். அவ்வாறே இன்னும் பலவற்றைச் சாதிக்கும் வகையில் இந்த ஒன்றிணைந்த முயற்சியில் எங்களுடன் கைகோர்க்க முன்வருமாறு இலங்கையின் ஏனைய பெரு நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன் " என்றார்.

# மொஹிதீன் பேக் நினைவலைகளை சுமந்து வரும் "பாரம்பரியம்"

மொஹிதீன் பேக் என்ற பெயர் இலங்கையின் எல்லா திசையிலும் ஒலிக்கும் பெயர் தான். பல தசாப்தங்களாக இலங்கையில் புகழ்பூத்த பெயர். சிங்கள பௌத்த மக்களிடையே அவருக்கிருக்கும் செல்வாக்கு தனித்துவமானது.

சிங்கள மக்களிடையே அவர் புகழ் பெற்றிருந்தது போலவே தமிழ் இசையுலகிலும் அவர் புகழ் பெற்றிருந்தார் என்பது யாவரும் அறிந்ததே.

ஏராளமான இஸ்லாமிய கீதங்கள் பாடி புகழ் தேடிக்கொண்ட, மொஹிதீன் பேக் பிரபல சிங்கள, தமிழ் சினிமா பின்னணிப் பாடகருமாவார். தமிழகத்தின் சேலம் நகரில் 1918 ஆம் ஆண்டு கரீம் பேக், பீஜான் பீ தம்பதியின் புதல்வராக பிறந்த இவர், இலங்கையிலேயே தன் வாழ்வினை அமைத்துக்கொண்டார்.



அனைத்து இன மக்களின், சிறப்பாக இலங்கை வாழ் பௌத்த மத சகோதரர்களின் பெரும் நேசத்தினை தனதாக்கிக்கொண்ட இவருக்கு, 1966ல் சிறந்த திரைப்பட பாடகருக்கான, சரசவி விருது கிடைத்தது. 1987ல் கலாசூரி விருது வழங்கி இலங்கை அரசு இவரை கௌரவப்படுத்தியதோடு 2020ஆம் ஆண்டு, பெப்ரவரி 20 ஆம் திகதி இவரது நினைவாக முத்திரை வெளியிட்டும் இவரை பெருமை படுத்தியது.

இலங்கையின் முதலாவது சுதந்திர தின நிகழ்வில் இவர் பாடியமை ஒரு வரலாற்று பதிவாகிறது. ஒர் உன்னத கலைஞரின் தேசிய பெறுமதிக்கு, இன, மத,மொழி பேதம் கிடையாது என்பதற்கு முன்னுதாரணமாக மொஹிதீன் பேக் திகழ்ந்தார்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் அதிகமான இஸ்லாமிய கீதங்கள் பாடி ஆயிரகணக்கான நேயர் நெஞ்சங்களில் வாழும் இவர், முஸ்லிம் சேவையில் முதல் முதலாக உருது பாடல் பாடிய பெருமையையும் தனதாக்கிக்கொண்டார்.

இந்தியா, இலங்கையின் புகழ்பூத்த பாடகர்கள் பலரோடு பாடி பிரபலம் பெற்ற இவர், தன்னை தமிழகத்திலும்,இலங்கையிலும், ஒரு பிரபலமிக்க பாடகராக

பிரகாசிக்க இலங்கை வானொலி முஸ்லிம் சேவையே காரணம் என பல்வேறு ஊடகங்களில் மனநிறைவாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 7ஆம் திகதி( 07.06.2022) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில், இத்தகு பெருமைமிகு காலஞ்சென்ற முதுபெரும் பாடகர் கலாசூரி மொஹிதீன் பேக்கின் நினைவுகளை நினைத்துப் பார்க்கிறோம்.

இவரது வாரிசுகளான பிரபல பாடகர்கள், இஷாக் பேக், மொஹீனா பேக் ஆகியோர் இணைந்து, தம் தந்தை மொஹிதீன் பேக் அவர்களின் நினைவுகளை நேயர்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

இந் நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா றினூஸியா தயாரித்தளிக்கிறார்.

எம்.எஸ்.எம். ஜின்னா

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# பட்டினி நிலையைத் தவிர்க்க சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் ஏற்படுத்தப்பட வேண்டும்

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நடைபெறும் யுத்தம் முடிவின்றித் தொடர்கிறது. உக்ரைனில் மிகப்பெரிய அழிவுகள் ஏற்பட்டுவரும் நிலையில் ரஷ்ய இராணுவத்திற்கும் எதிர்பார்க்கப்படாதளவுக்கு மிகப்பெரும் சேதங்கள் நாளுக்கு நாள் எற்பட்டு வருகின்றன.

உக்ரைனுக்கு நேட்டோ நாடுகள் தொடர்ச்சியாக வழங்கிவரும் அதிநவீன இராணுவத் தளவாடங்களும் பயிற்சிகளும் ரஷ்ய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக தொடர்ந்து போராடும் வல்லமையை உக்ரைனுக்கு வழங்கி வருகிறது என்ற போதிலும் தமது தரப்பில் நாளாந்தம் சுமார் 60 பேர் வரையில் உயிரிழந்து 600 பேர் வரையில் காயப்படுவதாகவும் உக்ரைன் கூறுகிறது. ரஷ்யத்தரப்பிலிருந்து இது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. எனினும் உயிரிழப்புகளும் காயப்பட்டோர் எண்ணிக்கையும் உயர்வாக இருக்கும் என்று அமெரிக்கா கூறுகிறது.

மேற்கு நாடுகளின் உதவிகள் சிலவாரங்களில் முடிவடைந்துவிடும் என ரஷ்யா எதிர்பார்த்தது. எனினும் மேற்கத்திய உதவிகள் உக்ரைனின் இராணுவரீதியிலான வீழ்ச்சியைத் தடுத்து வருவதாக ரஷ்யா குற்றம் சாட்டுகிறது. மூன்றாம் உலகப்போர் தொடங்கிவிட்டதாக அந்த நாடு முழங்கிவருகிறது. நேட்டோ உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தமது புதிய இராணுவ ஆயுதங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான சிறந்ததொரு களத்தை இப்போர் திறந்து விட்டிருக்கிறது.

குறிப்பாக, துருக்கியின் ஆளில்லா சிறிய ரக ட்ரோன்கள் மற்றும் இங்கிலாந்தின் ஜவலின் ஏவுகணைகள் போன்ற சாதனங்கள் ரஷ்ய ராணுவத்திற்கு மிகப்பெரிய சேதங்களை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இதுதவிர உக்ரைனுக்கு தேவையான நிதியுதவிகளை மேற்கு நாடுகள் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றன. எனவே இது நடைமுறையில் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவை முதன்மையாகக் கொண்ட மேற்குலக நாடுகளுக்கும் இடையிலான போராக மாறிவருகிறது.

ஐரோப்பாவில் உள்ள நாடுகள் புதிதாக நேட்டோ அங்கத்துவத்தைப் பெற விண்ணப்பித்துள்ள நிலையில் ரஷ்யா அவற்றை கடுமையாக விமர்சித்து வருகிறது. நேட்டோவின் விரிவாக்கம் தமது கொல்லைப்புறத்திற்கு வருவதை ரஷ்யா விரும்பவில்லை. பழைய சோவியத் ஒன்றியக் கனவில் மிதந்துவரும் ரஷ்ய அதிபர் உக்ரைனியப் போரில் எப்படியாவது வெற்றிபெற்றுவிட வேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறார்.

முன்னரங்கப் போர்க்களத்தில் முக்கியமான தளபதிகள் பலரை இழந்தவிட்ட போதிலும் தளர்வுப்போக்கை ரஷ்யா காட்டுவதாக இல்லை. அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை இறுக்கமாக்கி ரஷ்யாவுக்கு நெருக்கடி கொடுக்க முனைந்தாலும் அந்நாட்டின் எரிபொருள் இறக்குமதியில் தங்கியுள்ள ஐரோப்பிய நாடுகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன. மறுபுறம் ரஷ்யா உக்ரைனின் பிரதான துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதிகள் நிகழாவண்ணம் தடுத்துவருகிறது. உலக உணவு ஏற்றுமதியில் உக்ரைன் கணிசமான பங்களிப்பை வழங்கிவந்நது. அது தடைப்பட்டுள்ள நிலையில் ஆபிரிக்க நாடுகள் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கி வருகின்றன.

ஒருபுறம் ரஷ்யாவின் எரிபொருள் ஏற்றுமதி வர்த்தகம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உலக சந்தையில் எரிபொருள் விலைகள் துரிதமாக அதிகரித்து வருகின்றன. மறுபுறம் உக்ரைனின் உணவு மற்றும் தானிய ஏற்றுமதிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் உலக சந்தையில் உணவுப் பொருள் விலைகள் அதிகரிப்பதோடு உணவுப் பொருள் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. எல்லா உலக நாடுகளிலும் பெற்றோலியப் பொருட்களின் விலைகள் துரிதமாக அதிகரித்துள்ளன. உணவுப்பொருட்களின் விலைகளும் ஏற்றம் கண்டுள்ளதுடன் நிரம்பல் சங்கிலியில் தொய்வு நிலை தோன்றியுள்ளது.

குறிப்பாக, ஆபிரிக்க நாடுகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமைக்கு உக்ரைனிலிருந்தான உணவுப்பொருட்கள் கிடைக்காமை காரணமாகக் கூறப்படுகிறது. எரிபொருள் விலையதிகரிப்பு உணவுப் பொருள் பற்றாக்குறை என்பவற்றோடு உலகளாவிய ரீதியில் ஒரு பொருளாதாரப் பின்னடைவை நோக்கி நாடுகள் சென்று கொண்டிருக்கின்றமை தெரிகிறது.

உலகின் பல நாடுகளில் வறுமையும் பட்டினியும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டு வருவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். உலகில் எந்தவொரு யுத்தமும் எவருக்கும் வெற்றியை ஏற்படுத்துவதில்லை. மாறாக முழு உலகமுமே அதனால் பாதிக்கப்படுகிறது.

நாட்டுத் தலைவர்களாக ஒரு சிலர் எடுக்கும் தீர்மானங்களும் அவர்களது வரட்டுப் பிடிவாதங்களும் பல மில்லியன் கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என்பதை அவர்கள் ஒருபோதும் உணர்வதில்லை. மனித வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் இடையில் அகப்பட்டுக்கொண்டு பாதிக்கப்பட்டவர்களின் அழுகுரல்கள் எவருக்கும் கேட்பதில்லை.

உலக அரசியல் பொருளாதாரத் தளத்தில் நிலவும் இத்தகைய ஒரு நிச்சயமற்ற நிலையில் இலங்கை இப்போது எடுத்துவரும் நடவடிக்கைகள் அதன் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வாக அமையுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சிலமாதங்களாக இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் தீர்மானங்கள் காரணமாக சாதாரண பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரிய பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. முதலில் அரசாங்கத்தால் பின்பற்றப்பட்ட விலைக் கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்பட்டன. அதனால் பால்மா, கோதுமை, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பாரிய அதிகரிப்பைக் கண்டன.



**நாட்டுத் தலைவர்களாக ஒரு சிலர் எடுக்கும் தீர்மானங்களும் அவர்களது வரட்டுப் பிடிவாதங்களும் பல மில்லியன் கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என்பதை அவர்கள் ஒருபோதும் உணர்வதில்லை. மனித வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் இடையில் அகப்பட்டுக்கொண்டு பாதிக்கப்பட்டவர்களின் அழுகுரல்கள் எவருக்கும் கேட்பதில்லை**

டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்து தேய்வடைந்தபோது விலைகள் மீண்டும் அதிகரித்தன. மேலே நாம் கண்ட உக்ரைன் ரஷ்ய யுத்தசூழல் காரணமாக உலக சந்தையில் பொருள் விலைகள் அதிகரித்தபோது இங்கே மீண்டும் ஒரு தடவை பொருள் விலைகள் அதிகரித்தன.

இப்போது இலங்கையில் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த வரி அதிகரிப்புகளைக் காரணம் காட்டி வியாபாரிகள் மீண்டும் பொருள் விலைகளை அதிகரித்துள்ளனர். அது மிக அண்மையில் மின்சாரக் கட்டணங்களும் போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் இன்னொரு தடவை விலைகள் எகிறியுள்ளன.

சாதாரண மக்களால் கற்பனை செய்துபார்க்க முடியாதளவுக்கு பொருள் விலை அதிகரிப்பு காணப்படுகிறது. இலங்கை அரசாங்கம் முந்திரிக் கொட்டையாக சர்வதேச நாணய நிதியம் எவற்றையெல்லாம் செய்யச் சொல்லுமோ அவற்றையெல்லாம் செய்ய ஆரம்பித்துள்ளது.

பொதுமக்கள் மீது அந்த நடவடிக்கைகள் ஏற்படுத்தும் பாதிப்புகள் பற்றி அது கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய சீர்திருத்தங்களைச் செய்வது அவசியம் என்ற போதிலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மிகமிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குறைந்தபட்ச வாழ்க்கையையேனும் கொண்டு நடத்துவதற்குத் தேவையான அடிப்படை நிவாரணங்களையேனும் வழங்காமல் தொடர்ந்து சுமைகளைச் சுமத்திச் செல்வது நாகரிகமான ஒரு அரசாங்கத்தின் நடவடிக்கையாக அமையாது.

அண்மையில் தமிழ் நாட்டு மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒரு தொகுதி உதவிப் பொருட்கள் நாட்டை வந்தடைந்தது. இப்போது அவை பங்கீடு செய்யப்பட்டு வருகின்றன. அதைத் தவிர மக்களுக்கு வேறெந்த உதவியும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

பாராளுமன்றத்தில் அண்மையில் ஏற்பட்ட வன்முறைகள் காரணமாக கொளுத்தப்பட்ட மாளிகைகள் பற்றி கண்ணீர்க்கதைகள் கூறப்பட்டனவேயன்றி பொதுமக்கள் கண்களில் வடியும் கண்ணீர் துயர் துடைக்க வழிகள் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இலங்கை மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டிய காலப்பகுதி இது. மாறாக பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் எல்லாச் சுமைகளையும் ஒரே தடவையில் மக்கள் மீது சுமத்துவது மனிதாபிமானமற்ற ஒரு நடவடிக்கையாகும்.

தற்போது தீவிரமாகியுள்ள பொருளாதார நெருக்கடிகள் பற்றாக்குறைகளை ஓரளவுக்கு நீங்கி மக்கள் வாழ்க்கை ஓரளவுக்கு இயல்பு நிலைக்கு திரும்பும் வரையில் அவற்றை பிற்போடுவதுதான் நல்லது. சர்வதேச நாணய நிதியமும் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் அதற்கென சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் ஒன்றை உருவாக்கிச் செயற்பட வேண்டும் என்றும் சிபாரிசு செய்கிறது.

இந்த சமூக பாதுகாப்பு வலைப்பின்னலை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்தும் அதேவேளை விலைச் சீர்திருத்தம் வரிச் சீர்திருத்தம் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறுகிறது. நாட்டின் மக்கள் வாழ்க்கைச் செலவுச் சுமை அதிகரித்து பற்றாக்குறைகள் காரணமாக எரிவாயுவுக்காக பாதைகளில் படுத்துறங்கும் அவலநிலையின் மத்தியில் சமூகத்தின் பாதுகாப்பு பற்றி எதுவித கரிசனையும் கொள்ளாமல் தான்தோன்றித் தனமாக விலையதிகரிப்பு கட்டண அதிகரிப்பு மற்றும் விரி அதிகரிப்பு என்பவற்றை மேற்கொள்வது துப்பாக்கியைத் தன் பக்கம் நீட்டித் தன்னைத்தானே சுட்டுக்கொள்வதை ஒத்ததாகும். பட்டினி நிலையைத் தவிர்க்க

---



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# தொடரும் தைவான் பாதுகாப்பு வலயத்தின் மீதான சீனாவின் ஊடுருவல்

சமகால உலக அரசியல் போக்கானது மேற்கு எதிர் கிழக்கு என்ற நிலையை கொண்டதாக அமைந்து வருகிறது. ஜப்பானில் நடைபெற்ற குவாட் நாடுகளின் நிகழ்வு அத்தகைய முரண்பாட்டை மேலும் அதிகரிப்பதாக அமைந்திருந்தது. சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் எதிரான தீர்மானங்களும் உரைகளும் அதனை வெளிப்படுத்தியதுடன் எச்சரிக்கைகளும் மேற்கு நாட்டுத் தலைவர்களால் முன்வைக்கப்பட்டது. ஜோ பைடன் ஆட்சிக்கு வந்த பின்னர் பல சந்திப்புகளை மேற்குலகம் கீழைத் தேசத்திற்கு எதிராக மெற்கொண்டுள்ளது. அவை அனைத்தும் ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகின்றதே அன்றி மேற்குக்கு ஆரோக்கியமான வெற்றியை எட்டக் கூடியதாக அமையவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகவே தெரிகிறது. ஆனால் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் தனது உலகளாவிய ஆதிக்கத்தை பாதுகாப்பதற்கு தொடர்ந்தும் போராடிவருகிறது. இக்கட்டுரையும் சீனா தைவான் வான்பரப்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தேடலாக அமையவுள்ளது.

*31.04.2022 அன்று சீனாவின் 30 போர் விமானங்கள் தைவானின் பாதுகாப்பு வான் பரப்புக்குள் பிரவேசித்துள்ளன. அதில் 20க்கு மேற்பட்ட விமானங்கள் தாக்குதல் விமானங்கள் என தைவான் வான்பாதுகாப்பு நிலையம் அறிவித்துள்ளது. கடந்த ஜனவரி 23 இல் சீனாவின் போர் விமானங்கள் 39 இதே வான்பாதுகாப்பு பிரதேசத்தின் மீது ஊடுருவலை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 2021 ஒக்டோபர் 4 இல் ஒரே நாளில் 56 தடவை ஊடுருவலை சீனாவின் விமானப்படை மேற்கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது. அதன்படி கடந்த வருடம் 969 ஊடுருவலும் 2020 இல் 580 ஊடுருவலையும் சீனாவின் விமானப் படை தைவானின் வான்பாதுகாப்பு பகுதிக்குள் ஊடுருவியுள்ளமை தெரியவருகிறது. 2022 இல் 550 வரையான ஊடுருவலை சீனா, தைவான் பாதுகாப்பு வான் பரப்பில் மேற்கொண்டுள்ளது.*

*இதுமட்டுமன்றி சீனா தைவானுடன் ஒரு போரை மேற்கொள்ள திட்டமிடுவதாக மேற்கு நாடுகளும் அவற்றின் ஊடகங்களும் அதிகமாக உரையாடிவருகின்றன. ஆனால் தைவானிய மக்களைப் பொறுத்தவரை சீனா தைவான் மீது ஒரு போரை திணிக்காது என நம்புவதாக பிபிசி அண்மையில் எடுத்த புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. உலகம் அச்சமடைய செய்வது போல் அந்த மக்கள் சீனா போரை நிகழ்த்தும் என கருதவில்லை என்ற பதட்டமற்று தைவான் மக்கள் காணப்படுவதாகவும் தெரியவருகிறது. ஆனால் மேற்குலக நாடுகள் சீனா ஒரு போரை திட்டமிடுவதாகவும் மேற்கொள்ள தயாராவதாகவும் போர் ஆயுதங்களை பரிசோதிப்பதாகவும் வெளிப்படுத்தி வருகின்றன. ஆனால் சீனாவின் இரு தேசம் ஒருநாடு என்ற கொள்கையை ஏற்றுக்கொண்ட அமெரிக்காவும் தைவான் மீதான சீனாவின் அணுகுமுறையை கண்டித்திருந்ததுடன் தைவானுக்கு இராணுவ ரீதியில் உதவுவதாகவும் போர் ஒன்று ஏற்பட்டால் அமெரிக்கா தைவானுக்காக செயல்படும் என்றும் தெரிவித்துள்ளது. இதனை சற்று விரிவாக நோக்குவது அவசியமானது.*



*முதலாவது சீனாவின் ஊடுருவலின் நோக்கம் தைவான் மீதான தனது செல்வாக்கை அதிகரிப்பதற்கும் தைவானை கண்காணிப்பதும் நோக்கமாகவுள்ளது. சீனாவின் புவிசார் அரசியலின் முக்கியத்துவம் கருதி சீனாவுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது. சீனப் புரட்சியை அடுத்து கொமிங்டான் கட்சியினர் தைவானை தமது பிரதேசமாக மாற்றிய போதும் தற்போது சீனர்கள் தைவானியர்களாக தம்மை அடையாளப்படுத்துவதில் அதிக ஈடுபாட்டைக் காட்டுகின்றனர். சீனக்குடியேறிகள் தைவானியர்களாக மாற்றப்பட்டுள்ளனர் ஆனால் சீனாவின் பாதுகாப்பு வலயமாக அமைந்துள்ள தைவான் சீனாவுக்கு விரோதமான நாடுகளுடன் கொண்டுள்ள உறவே முரண்பாட்டுக்கான அடிப்படையாகவுள்ளது. தைவானின் வான்பாதுகாப்பின் பலத்தையும் சீனா தனது மேலாதிக்கத்தையும் வெளிப்படுத்தும் நோக்குடனேயே தைவான் வான்பரப்பை இலக்குவைத்து நகர்கிறது. அதனை ஒரு தொடர் நிகழ்வாக பதிவு செய்வதிலும் மேற்குலகக் கண்டனத்தை அடுத்து போர் விமானங்களின் ஊடுருவலையும் சீனா ஒரு வழமையான நடவடிக்கையாக கையாண்டுவருகிறது. அதாவது இது சீனாவின் பிடி இறுக்கமானது என்பதையே கோடிட்டுக் காட்டுகிறது. அமெரிக்காவும் மேற்கும் எடுக்கு நிகழ்தகவுக்குள் சீனா இயங்காது என்பதை விமானப்படையின் ஊடுருவல் வெளிப்படுத்துகிறது.*

*இரண்டாவது, அமெரிக்காவும் மேற்குலகமும் மென் அதிகாரத்தை அதிகம் முதன்மைப்படுத்தும் சீனா ஒரு போரை நோக்கி நகர்வது இலகுவில் வீழ்த்துவதற்கு உதவும் எனக் கருதுகிறது. ரஷ்யா போன்று ஒரு போரை நோக்கி சீனாவை நகர்த்துவதே அமெரிக்காவின் நோக்கமாகும். ஏற்கனவே சீனாவின் பொருளாதார வளர்ச்சி வேகம் சரிந்துள்ளது. கொவிட் தொற்றின் விளைவினால் சீனப் பொருளாதாரம் பல வீனமடைந்துள்ளது. அதன் தாக்கம் மேற்கு நாடுகளையும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளிவருகிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரை அதிக நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது. ஆனால் மேற்கு ஊடகங்களும் மேற்கை மையப்படுத்திய நிதி நிறுவனங்களும் சீனாவை நோக்கியே பொருளாதார நெருக்கடியை உரையாடி வருகின்றன. சில ஆய்வாளர்கள் குறிப்பிடுவது போல் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளின் பொருளாதாரம் மந்த நிலையை நோக்கி நகர்வதாக குறிப்பிடுகின்றனர். அவ்வாறான நிலைகட்குள்ளேயே குவாட் அமைப்பை ஒரு பொருளாதார அமைப்பாக மாற்றுவது பற்றிய உரையாடலை ஜோ பைடன் நிர்வாகம் ஜப்பானிய மகாநாட்டில் ஆரம்பித்திருந்தது.*

*மூன்றாவது, தைவான் சீனப் போர் சீனாவை வீழ்த்துவது மட்டுமல்ல அமெரிக்கப் பொருளாதாரத்தையும் நிமிர்வடையச் செய்யும் என அமெரிக்க புலனாய்வுத் துறைகள் கருதுகின்றன. உலகளாவிய ரீதியில் நாடுகளது புலனாய்வுத் துறையினர் தனித்து இராணுவத் தேவைக்கானவை மட்டுமல்ல. அவை பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கவும் அதனால் இலாபத்தை ஈட்டுவது பற்றியுமே நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ரஷ்ய உக்ரையின் போர் அமெரிக்காவின் இராணுவ ஆயுத தளபாடங்களின் சந்தைக்கான வாய்ப்பினை அதிகரித்துள்ளது. உலகளாவிய ரீதியில் 39 சதவீதமான ஆயுத விற்பனையைச் மேற்கொள்ளும் நாடாக அமெரிக்காவே காணப்படுகிறது. மேற்கு நாடுகளுக்குள்ளும் அமெரிக்காவே 57 சதவீதமான ஆயுத ஏற்றுமதி மேற்கொள்ளும் நாடாக உள்ளது. ரஷ்ய உலகளாவிய ரீதியில் 19 சதவீதம் மட்டுமே ஏற்றுமதி செய்கிறது. கொவிட் காலப்பகுதியில் அமெரிக்க ஆயுத ஏற்றுமதி 37 சதவீதமாக உள்ளதென SIPRI எனும் இராணுவ ஆய்வு நூல் குறிப்பிடுகின்றது. அமெரிக்க ஏற்றுமதியில் 47 சதவீதம் மேற்காசியாவை நோக்கியதாகவே அமைந்துள்ளது. சவுதி அரேபியா மட்டும் 24 சதவீதமான ஆயுதங்களை அமெரிக்காவிடமிருந்து பெறுகிறது. தற்போது 96 நாடுகளுக்கு அமெரிக்கா தனது இராணுவ ஆயுத தளபாடங்களை ஏற்றுமதி செய்கிறது. இதில் இஸ்ரேல், தென் கொரியா போன்று தற்போது உக்ரைனும் அமெரிக்காவின் ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்யும் நாடாக மாறியுள்ளது. இதனை மேலும் அதிகரிப்பதே அமெரிக்கா உலகளாவிய ரீதியில் Grate OR Big போர்களை உருவாக்க முனைகிறது. அதனை நோக்கமாகக் கொண்டே தைவானை ஊக்குவிக்கிறது. உக்ரைன் போன்று தைவான் போரும் அமெரிக்காவின் ஆயுத தளபாட ஏற்றுமதிக்கான வாய்ப்பினை அதிகரிக்கும்.*

*நான்காவது, அமெரிக்கா சீனாவினது இராணுவ வலிமையை தடுக்கவும் அதன் மூலம் தனது மேற்குப் பசுபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள இராணுவத் தளங்களை பாதுகாக்கவும் முனைகிறது. குறிப்பாக அமெரிக்காவின் பிரதான இராணுவத் தளங்களான Guam, Okinava போன்றவற்றை பாதுகாப்பதே முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது. தைவானுடனான அமெரிக்க நட்புறவு மட்டுமல்ல சீனாவின் இராணுவ ஆதிக்கம் தைவானில் சாத்தியமாகுமாக இருந்தால் அமெரிக்கத் தளங்களுக்கான பாதுகாப்பும் போக்குவரத்தும் ஆபத்தானதாகவும் நெருக்கடி மிக்கதாகவும் அமையும் என அமெரிக்கா கருதுகிறது. இதுவே தென் சீனக்கடலையும் தைவானை பற்றிய கரிசனையும் அமெரிக்காவுக்கு அதிகரிப்பதற்கு அடிப்படைக் காரணமாகும். அதனுடன் மேற்கு நாடுகளின் காலனித்துவத்திற்குள் அகப்பட்டுள்ள மேற்குப் பசுபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள தீவுகளுக்கு சீனாவின் தைவான் மீதான எழுச்சியால் ஆபத்து நிகழும் என்பதை அந்த நாடுகள் கருதுகின்றன. அவை தமது பிடியிலிருந்து சீனாவின் பிடிக்குள் அகப்பட்டுவிடும் என்பதே அத்தகைய அச்சமாகும்.*

*எனவே அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் தைவான் மீதான சீனாவின் போரை ஊக்குவிப்பதுடன் அதில் சீனாவை தோற்கடிக்க முடியுமெனவும் கருதுகின்றன. ஆனால் தைவானை தனது தாய் நிலம் எனக்கருதும் சீனா அதனை சீனாவுடன் இணைத்துக் கொள்வதே அதன் பாதுகாப்புக்கு சாதகமானது என்பதை எண்ணமாகக் கொண்டுள்ளது. ஹெங்கொங் தொடர்பான சீனாவின் கொள்கையையும் தைவான் பொறுத்து அளவீடு செய்ய வேண்டும் என்பதையும் கவனம் கொள்வது அவசியமானது.*

## வாழ்வாதாரமா சேதாரமா 225



தமிழ்க் கவி பேசுகின்றார்

# எங்கெங்கு காணிலும் வரிசையடா

காலையில் வைத்தியசாலைக்குச் சென்று மருத்துவ முகாமில் மருந்து எடுத்துக் கொண்டு திரும்பினேன். அதென்னவோ வைத்தியசாலையில் ஒருபுறம் கொரனா தடுப்பூசிகள் போடப்பட்டுக் கொண்டிருக்க, மறுபக்கத்தில் மக்களும் ஊழியர்களில் சிலரும் விட்டேத்தியாக முகக்கவசங்களை கடாசிவிட்டு போய்க் கொண்டிருந்தார்கள். பெரும்பாலும் பொது இடங்களில் முகக்கவசம் நிராகரிக் கப்பட்டு வருகிறது.

இரு கோடுகள் என்றொரு படம் வந்தது. அதில் ஒரு புதிர். ஒரு கோடு போட்டிருக்கும் அதை அழிக்காமல் சின்னதாக ஆக்க வேண்டும். இதுதான் அந்தப் புதிர். அந்தப்படத்தின் நாயகன் புதிரை சுலபமாக விடுவித்தான். எப்படி? அந்தக்கோட்டுக்கு அருகே ஒரு பெரிய கோட்டை வரைந்து விட்டான். இப்போது முதல் போட்ட கோடு சிறியதாகி விட்டது. அதேதான். இப்போது கொரோனாவைப்பற்றி பார்ப்போம் அது ஒன்றும் தொலைந்து போகவில்லை. என்றாலும் அது சிறிய பிரச்சினையாகிவிட்டது. அதற்கு அருகே பொருளாதாரப் பிரச்சினை என்ற பெரிய கோடு விழுந்து விட்டது. கொரனா மக்களை பதுங்க வைத்திருந்தது ஆனால் பொருளாதாரப் பிரச்சினை மக்களை வீதிக்கு இழுத்திருக்கிறது.

எங்கெங்கு காணிலும் வரிசைதான். கடைகள் அநேகமாக ஓழிகடைகளாக மாறி வருகிறது. எரிபொருள் விலை அதிகரிக்க அதிகரிக்க. பண்டங்களின் விலையும் அதிகரிக்கும்தானே எனவே பொருட்கள் தம்மைப் பதுக்கிக் கொள்கின்றன. காட்சிக்காக பொருட்களை வைத்திருக்கிறார்கள். அவை தேமே யென்று கிடக்கின்றன. மிகப் பெரிய ஆடம்பர வாழ்க்கை வாழ்பவர்கள் மட்டுமே வாங்கக் கூடிய பொருட்கள் கடை அலமாரிகளை நிறைத்து நிற்கின்றன.

சகல பொருட்களுக்கும் சலுகை விலையில் வாங்க முடியும் என்று விலையைக் குறித்த அரசாங்கம், அங்கேயும் பெட்டிகளை அத்தியாவசிய பொருட்களின் பெட்டிகளை காலியாகவே வைத்திருக்கின்றன.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறதாம். பிரபல நகரங்களில் இது சாத்தியமாக இருக்கலாம். மாதம் ஒருமுறையே எரிபொருள் நிரப்பும் வழக்கம் உள்ளவள் நான். அதைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் வைத்தியசாலையிலிருந்து திரும்பும் வழியில் எனது உந்துருளி நின்று விட்டது அதன் எரிபொருள் தீர்ந்து போய்விட்டது என்பதை நான் உணர்ந்துகொண்டேன். இம்முறை அது கொஞ்ச நாட்கள் அதிகமாகவே நிலைத்து நின்றிருக்கிறது. என்றாலும் சூழ்நிலையை உணர்ந்து நேராக எரிபொருள்' நிரப்பு நிலையத்திற்கு வண்டியை விட்டேன்.

சுமார் நூறு மீட்டர் தூரத்துக்கு நீண்டிருந்த உந்துருளி வரிசையில் நானும் இணைந்து கொண்டேன். அங்கேநான் மிக அதிசயமானதாக இல்லாத பொது மனித புத்திக்குட்பட்ட பல சம்பவங்களைப் பார்த்தேன்.

போர் நடந்த காலத்தில் ஒவ்வொரு வாகன ஓட்டுநர்களும் ஒரு சிறு சேலைன் பைப்போ அல்லது அரைஇஞ்ச் பைப்போ ஒரு மீட்டர் அல்லது அதற்கும் குறைவாக வைத்திருப்பார்கள். அந்தப்பொருள் வாகனத்தின் ஒரு அங்கம் போல வேலைக்குதவும். காட்டு வழியில் இப்படி எரிபொருள் இல்லாமல் வண்டி நின்று போவது சர்வ சாதாரணம். நீண்ட தூரம் நடக்க முடியாமல் நீண்ட நேரம் காத்திருந்து வருகிற வாகனங்களை மறித்து அவர்களிடமிருந்து ஒரு சிறங்கையளவோ ஒரு சுண்டு அளவோ எரிபொருளை வாங்கி தமது வாகனத்தில் போட்டுக் கொண்டு எண்ணைக் கடையை காணும்வரை பயணிக்கலாம். இப்படி எரிபொருளை ஒரு வாகனத்திலிருந்து இன்னொரு வாகனத்திற்கு மாற்றிக்கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இந்த பைப் வகைகள் உதவும். வாயால் உறிஞ்சி போத்தலில் இறக்கி மாற்றுவார்கள்.

அட அதேதாங்க உந்துருகளிலிருந்து பைப்பை போட்டு உறிஞ்சி போத்தலில் எடுத்து பேசிக் கொண்டிருக்க வரிசை நகருகிறது. இப்போது ஒரு பெண் நடுத்தர வயதிருக்கும் ஆனால் மிக இளைமையான பெண்களைப் போல ஆடை அணிந்திருந்தாள். ஆடைகளை விட அணிமணிகளாக பெயர் எழுதிய தங்கச் சங்கிலி தாலிக்கொடி கைகளில் தங்கக்காப்பு காதுகளில் லோலாக்கு, மூக்கில் மின்னும் பேசறி. அண்மையில் திருமணமான பெண்ணைப்போல பல லட்ச ரூபாக்கள் பெறுமதியான அணிமணிகளுடன். கலகலப்பாக பேசியபடி வரிசையில் நின்றவர்கள் பலரிடம் வலியப்போய் பேசினாள் பேச்சின் சாரம் அவள் ஒரு சிறு வர்த்தகர் போல காட்டியது.

'அண்ணை தாவன் பெற்றோல் அடிச்சிட்டுத் தாறன். இப்ப ராசாண்ணையின்ர பல்சரக்கொணந்து லைனில விட்டிருக்கிறன்.' என்றவள் களுக்கென சிரித்துவிட்டு. 'நேற்று ஆட்டோவக் கொணந்து கொஞ்சம் அடிச்சிட்டன்.'என்றாள். கதையைக் கேட்டவன் சொன்னான்

' நீ இப்ப அடிச்சிட்டு திரும்ப வந்து லைனில நில்லு நான் வந்து மாத்திறன்' என்று. அதே சமயம் வரிசையின் முன்புறம் ஒரு பிளஷர் வந்து லைனில் நின்ற சுப்பர்கப்பை மாற்றியதுடன் அது நின்ற இடத்தில் புகுந்து நின்றது. அட பாவியளா உங்கட வீடுகளுக்க கொண்டு போய் வைக்கிற பொருளா இது. பெற்றோலின்ர குணந் தெரியாமல். கந்த புராணத்தில ஒரு பாட்டு வருமே கூடு கட்டிய தூக்கணாங்குருவி குஞ்சுகளுக்கு வெளிச்சமாக மின்மினிப் பூச்சியை களிமண்ணில் ஒட்டி கூட்டில்வைக்கும். இந்தக்குருவி நெருப்புக் கொள்ளியை மின்மினி எனக்கருதி கொண்டு போய் பெட்டியில் வைத்ததாம்.

**'மெய்ச்சோதி தங்கு சிறு கொள்ளிதன்னை**
**கச்சோதம் என்று கருதி குடம்பைதனில்**
**உய்த்துமாண்ட கதை போல**
**அச்சோ பல் இமயவரை இன்று சிறை**
**வைத்த பாவம் அதனால்**
**இச்சூர பத்மன் முடிவெய்து நாளை எய்தி**
**னனே.'**



வைத்துவிட்டு மறுபடி லைனுக்குள் வருகிற வண்டிகள் அதிகம் இதற்காக குடும்பத்திலிருந்து இருவர் வருகிறார்கள் இந்த பைக்குகளிலிருந்து கறந்து எடுக்கப்படும் பெற்றோல் வீடுகளில் சேமிக்கப்படுகின்றன. எமது வீட்டுக்கு அண்மையில் ஒருவர் குழந்தையை சுமப்பது போல இரு கைகளிலும் எதையோ சுமந்து கொண்டு வந்தார்.

அதை மூடியிருந்த துணியை அகற்றியபோது அங்கே குழந்தை போல நான்கு பிளாஸ்டிக் போத்தல்களில் பெற்றோல். என்ன கொள்கலன்களில் கொடுக்கிறார்களா? என்று கேட்டேன். அவர் ஒரு அசட்டுச்சிரிப்புடன் இது... நான் ஒரு வழியால வாங்கினது என்றார். இப்படியே ஒரு ஆட்டோ ரைவரை ஒரு தேவைக்காக அழைத்தேன் அவர் வந்து எனது வேலையை முடித்தபின்

'நான் செற்றுக்குப் போகவேணும் அதுதான் கெதியா வந்தன்' என்றார்.

' அட கொஞ்ச நேரம் முன்னம் கூப்பிடக்க செற்றிலதானே நிக்கிறன் எண்டீங்க' என்றேன்.' ஓ...அது ஒரு இருவத்தைஞ்சு லீட்டர் அடிச்சு கொணந்து வீட்டில கழட்டி வச்சிட்டு மறுபடி அடிக்கப்போறன். தட்டுப்பாடு வந்திட்ட கரைச்சலாப்போம்'

பெற்றோல் இருக்கும் வீடுகளுக்குள் இப்போது மின்சாரம் நிற்கும் போது மெழுகுவர்த்தியோ மண்ணெய் விளக்கோ எரிய வைக்கப்படும். போர்நடந்த காலத்தில் இப்படி பதுக்கப்பட்டுக் கிடந்த பெற்றோல் பலரை பலி கொண்டிருக்கிறது.

பலர் படுகாயமடைந்துள்ளனர். இது வன்னி வரலாறு கற்றுத்தந்த பாடம். தட்டுப்பாடுகளை உடைத்து அவற்றை மாற்றி அனுபவிக்கும் திறமை பாராட்டுக்குரியதுதான்.

உண்மையிலேயே பொருளற்றோர் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தவிக்க சாமர்த்தியமுள்ளவர்கள் தேவைக்கதிமாக தேக்கிவைத்து இன்பங் காண்பது எந்த வகை. மூன்றாம் உலக நாடுகளை பெருமளவில் சுரண்டிக் கொழுக்கும் வல்லரசுகளுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்.

# லண்டனில் மலையக இலக்கிய மாநாடு 2022

## சில குறிப்புகள்

இலங்கையில் மலைநாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் கொடூர சுரண்டலுக்குள்ளாகும் தொழிலாளர்கள் பற்றி 1974ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் அமைப்பின் சார்பில் எடித் பொன்ட் என்ற பெண்மணி இலங்கையில் ஆய்வு மேற்கொண்டு 'தேயிலையின் நிலை ' என்ற தலைப்பில் வெளியிட்ட ஆய்வறிக்கை இங்கிலாந்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. கிரநாடா தொலைகாட்சி ஒளிபரப்பிய தேயிலைத் தோட்டமக்களின் வாழ்நிலை பற்றிய நிகழ்ச்சியும் உலக அரங்கில் மலையகத் தொழிலாளரின் வாழ்நிலையினை வெளிப்படுத்தியது. இலங்கை என்றால் தேயிலை என்றும் தேயிலை என்றால் அங்கு வாழும் தொழிலாளர்களின் ஈனநிலைதான் என்ற சித்திரமே இங்கிலாந்திலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் நிலவியது.

இலங்கையில் 1980 களில் ஈழவிடுதலைப்போராட்டம் வெடித்தெழுந்தபோது உலக அரங்கில் ஈழத் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் முன்னுரிமை பெற்றது.

இந்நிலையில், ஐரோப்பாவின் இலக்கியச் சந்திப்பு மலையக இலக்கியம் பற்றிய பிரக்ஞையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்துள்ளது. மலையகத் தமிழர்களின் நிலை, தாயகம் திரும்பிய தமிழர்களின் நிலை பற்றி பெர்லின் இலக்கியச் சந்திப்பில்(1989) நிகழ்ந்த உரையாடல் முக்கியமானது. நடேசையர் நூற்றாண்டு நிறைவையொட்டி (1987)பெர்லினில் அப்பெரியார் நினைவு கூரப்பட்டமை மலையகம் பற்றிய சிந்தனையை புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் எடுத்துச் செல்ல உதவிற்று. மலையகத்தின் சிறுகதைச் சிற்பியான அமரர் என். எஸ்.எம்.ராமையாவின் 'கோயில்' என்ற சிறுகதை இலக்கியச் சந்திப்பில் கலைச் செல்வனால் வாசிக்கப்பட்டு, அக்கதை ஜேர்மனிய மொழியில் மொழிபெயர்க்கப் பட்டதையும் நினைவு படுத்துவது பொருந்தும்.

பாரிசில் நிகழ்ந்த என்.எஸ்.எம்.ராமையாவின் நினைவுப்பேருரையும், 'மலையகப் பரிசுக்கதைகள்' நூல் வெளியீடும் 1995)பாரிசில் இடம்பெற்ற முக்கிய மலையக இலக்கிய நிகழ்வுகளாகும். நெதர்லாந்திலும் 'மலையகப் பரிசுக்கதைகள்' வெளியீடு நிகழ்த்தப்பட்டு, மலையக எழுத்தாளர்கள் பரந்த அறிமுகம் பெறுவதற்கான வாய்ப்பை நல்கியது.

லண்டனில் மாத்தளை சோமுவின் நூல்களை புதினம் ராஜகோபால் வெளியிட்டு, அவரது பல நூல்களை லண்டனில் அறிமுகப்படுத்த உதவியிருந்தார். மலையக இலக்கியம் பற்றிய மாத்தளை சோமுவின் இலக்கிய உரையும் பொருள் பொதிந்ததாக இருந்தது. லண்டனில் நடைபெற்ற 'மலையகப் பரிசுக்கதைகள்' நூல் வெளியீட்டில் பேராசிரியர்.சிவசேகரம், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், நடிகர் சிலோன் சின்னையா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். 'மலையகத்தின் நூற்றாண்டுத்துயர்' என்ற தொனிப்பொருளில் லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கில் தெளிவத்தை ஜோசப், விஜயசிங்கம், வழக்கறிஞர் செல்வராஜ் ஆகியோர் பங்காற்றி சிறப்புச் சேர்த்தனர். லண்டனில் இர.சிவலிங்கத்தின் மறைவிற்கான அஞ்சலி நிகழ்வில் எஸ்.முத்தையா, எஸ்.வி.ராஜதுரை, எம்.நேமிநாதன், என்.சுசீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டமை மலையக்கல்விமான் ஒருவருக்கு புகலிட தமிழர் சமூகம் அளித்த பெருங்கௌரவமாக அமைந்தது. நெதர்லாந்தில் 'கலைஒளி' முத்தையாபிள்ளையின் 7ஆம் ஆண்டு நினைவுதினப் பேருரையை (1998) கலாநிதி. இரத்தினம் நித்தியானந்தன் நிகழ்த்திச் சிறப்பித்தார். நோர்வேயில் நடைபெற்ற இலக்கிய சந்திப்பு நிகழ்வில் சிறிமாசாஸ்திரி ஒப்பந்தத்தின் 50 ஆண்டு நிறைவு குறித்த உரையாடல் ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் வி.நடராஜா தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது.

லண்டனில் நடைபெற்ற 'கூலித்தமிழ்' வெளியீட்டு நிகழ்வில் அம்ஷன்குமார், வழக்கறிஞர் செ.சிறிக்கந்தராசா, இரா.ராமலிங்கம்,எம்.என்.எம்.அனஸ், மாதவி சிவலீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

'மலையகத்தின் எழுச்சித்தலைவர் பெ.சந்திரசேகரம்' என்ற நூலின் வெளியீட்டுவிழா ராம்ராஜ் தலைமையில் லண்டனில் நடைபெற்றது. இலங்கையிலிருந்து எச்.எச்.விக்ரமசிங்க கலந்துகொண்டிருந்தார்.

மலையகம் குறித்த இந்நிகழ்வுகளின் உச்ச கட்ட வளர்ச்சியின் வெளிப்பாடாக இம்மாதம் 11 ஆம் திகதி விம்பம் அமைப்பு ஒழுங்கு செய்திருக்கும் முழுநாள் மலையக இலக்கிய மாநாடு திகழ்கிறது.

காத்தாயி, கோகிலம் சுப்பையா, இர.சிவலிங்கம், சோ.சந்திரசேகரம் சி.வி.வேலுப்பிள்ளை, தமிழோவியன், சாரல்நாடன் ஆகியோரின் நினைவரங்குகளில் மலையகம் சார்ந்த 26 நூல்கள் அறிமுகம் பெறுகின்றன. நாவல், சிறுகதை, கவிதை, கூத்து, அரசியல், சமூகவியல், சட்டம் சார்ந்த பல்துறை நூல்கள் இந்த மாநாட்டில் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து உரைஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். ந.சரவணன், க.ஆதவன், கரவைதாசன், சுகன், டாக்டர். தம்பிராஜா, யமுனா ராஜேந்திரன், வழக்கறிஞர் செ.சிறிக்கந்தராசா, வி.சிவலிங்கம்,பால சுகுமார், ப.சந்தோஷ், எஸ்.தினேஷ்குமார், எம்.என்.எம்.அனஸ், எம்.பௌசர், ராகவன்,பெ.



சிவஞானம் , மயூரன், மாதவி சிவலீலன், நவஜோதி யோகரட்னம்,தோழர் வேலு, கோகுலரூபன், நா.சபேசன், மாஜிதா, அஞ்சனா, பாரதி சிவராஜா, வேணி சதீஸ், பூங்கோதை, மீனாள் நித்தியானந்தன் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து அணி சேர்க்கிறார்கள்.

சி.வி.வேலுப்பிள்ளை 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூல் வெளியீடு இம்மாநாட்டின் பிரதான நிகழ்வாக அமைகிறது. சி.வி. யின் இக்கட்டுரைகள் தினகரனில் வெளியாகி,65 ஆண்டுகள் கடந்த நிலையில், மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்ரமசிங்க ஆகியோர் இந்த நூலைப் பதிப்பித்துள்ளனர்.

சாம் பிரதீபனின் 'மெய்வெளி' நாடக அரங்கின் தயாரிப்பில் 'காத்தாயி காதை' நாடகம் மாநாட்டின் முக்கிய கலை நிகழ்வாக மேடையேறுகிறது. றஜீதா பிரதீபன் நாடகத்தில் பிரதம பாத்திரமேற்றுச் சிறப்பிக்கிறார். மலையகச் சிறார்களின் ஓவியக் கண்காட்சியும் மலையக நூல், சஞ்சிகைகள் கண்காட்சியும் இம்மாநாட்டின் மற்றுமிரு முக்கிய அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன.

மு.நித்தியானந்தன் ...

# கிளிநொச்சியில் சிறப்பாக நடைபெற்றது தேசிய கலை இலக்கிய பேரவையின் புத்தக அரங்க விழா

தேசிய கலை இலக்கிய பேரவை கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் நூறு மலர்கள் மலரட்டும் புத்தக அரங்க விழாவினையும், கண்காட்சி மற்றும் விற்பனையும் கடந்தவாரம் நடாத்தியிருந்தது. நீண்ட காலத்திற்கு பின்னர் கிளிநொச்சியில் இடம் பெற்ற இந் நிகழ்வு இலக்கியவாதிகள், படைப்பாளி மற்றும் வாசகர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிகழ்வில் இலங்கையிலும் புலத்திலும் இருந்த வெளிவந்த பல படைப்பாளிகளின் நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டன. நூல்கள் விசேட விலைக் கழிவில் விற்பனை செய்யப்பட்டது, அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்தோடு கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

அந்த வகையில் முதலாவது நாளில் பேராசிரியர் சிவசேகரத்தின் சிவசேகரம் கவிதைகள் நூல் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது. தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் தேசிய கலை இலக்கிய பேரவையின் தலைவருமான க.தணிகாசலம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நூல் அறிமுகத்தை கவிஞர் கருணாகரனும், கருத்துரையினை சட்டத்தரணி சோ. தேவராஜாவும் வழங்கினார்கள்.



நிகழ்ச்சியை ஆசிரியர் த.ஸ்ரீபிரகாஸ் தொகுத்து வழங்கினார்.

இதனை தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு நாடக அரங்க கல்லூரியின் தயாரிப்பில்

குழந்தை மா. சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பில் பேராசிரியர் க.ரதிகரனின் நெறியாள்கையில் உருவான அன்ரன் செகோவின் தான் விரும்பாத தியாகி நாடகமும், சண் நாடக குழுவினரின் தயாரிப்பில் பு.கணேசராஜாவின் எழுத்து நெறியாள்கையில் உருவான தலை எழுத்து நாடகமும் அரங்கேற்றப்பட்டன.





அத்தோடு நூல்களின் விற்பனை அரங்கும் இடம் பெற்றது. இரண்டாவது நாள் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது இதன் போது ஐந்து நூல்களின் அறிமுகம் நடைப் பெற்றது. கவிஞர் கருணாகரனின் கடவுள் என்பது துரோகியாயிருத்தல் என்ற நூலினை எழுத்தாளர் ச.சிந்தாந்தன் அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து.

தெய்வீகனின் உன் கடவுளிடம் போ நூலினை யாழ் பல்கலைகழகசிரேஸ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் அறிமுகம் செய்து உரையாற்றினார். தமிழ்க்கவியின் நரையன் நூலினை ஆசிரியர் ப. தயாளன் அறிமுகம் செய்து உரையாற்றினார். இராஜேஸ் கண்ணனின் கிராமத்து மனிதர்கள் நூல் தொடர்பில் எழுத்தாளர் தமிழ்க்கவி உரையாற்றினார். சிந்தாந்தனின் அம்ருதாவின் புதிர் வட்டங்கள் நூலினை கலாநிதி சு.குணேஸ்வரன் அறிமுகம் செய்து உரையாற்றினார். நிகழ்ச்சியினை ஆய்வாளர் சத்தியதேவன் தொகுத்து வழங்கினார்.

மூன்றாவது நாள் நிகழ்வு காலை 10 மணிக்கு ஆசிரியர் விஜயசேகரம்தலைமையில் இடம்பெற்றது. நிகிழ்வினை கலாசார உத்தியோகத்தர் ச.தனுஜன் தொகுத்து வழங்கினார். நூல் அறிமுக நிகழ்வில் அலெக்ஸ் பரந்தாமனின் ஒரு பிடி அரிசி நுலினை கவிஞர் திருநகரூர் ஜெகா அறிமுகம் செய்து உரையாற்றினார். தொடர்ந்து சாந்தனின் சித்தம் சரிதம் நூலினை எழுத்தாளர் மு. அநாதரட்சகன் அறிமுகம் செய்து உரையாற்றினார். பின்னர் அருட்தந்தை அன்புராசாவின் கொரோனா ஊரடங்கும் நானும் என்னூர் நாய்களும் என்ற நூலினை ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன் அறிமுகம் செய்து உரையாற்றினார். இறுதியாக கவிஞர் தீபச்செல்வனின் நடுகல் நூலினை எழுத்தாளர் கனகபாரதி செந்தூரன் அறிமுகம் செய்து உரையாற்றினார். தொடர்ந்து கருத்தாடல்களுடன் நிகழ்வு நிறைவுபெற்றது. தேசிய கலை இலக்கிய பேரவையினர் அர்ப்பணிப்புடன் தங்களது பணிகளை மேற்கொண்டிருந்தார்கள். கிளிநொச்சியில் நிகழ்வுகளை நடாத்துவதற்கு பலரும் தங்களது ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார்கள். பெரியளவில் மக்களை திரட்டி நிகழ்வுகள் இடம்பெறவில்லை எனினும் ஒரு ஆரோக்கியமான காலத்தின் தேவை கருத்திய நிகழ்வாக நடைபெற்று நிறைவுற்றமை குறிப்பிடத்தக்கது.

மு.தமிழ்ச்செல்வன் ...
















"துணிந்தெழு" சஞ்சிகை, "துணிந்தெழு வலையமைப்பு" ஆகியவற்றை வெற்றிகரமாக நடத்திவரும் கட்டார் நாட்டிலிருந்து இயங்கும் ஸ்கை தமிழ் நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே. எம். பாஸித் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த போது சிரேஷ்ட ஊடகவியலாளரும் அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரியுமான நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், சிரேஷ்ட வானொலி அறிவிப்பாளரும், செய்தி வாசிப்பாளரும், நடிகையுமான ரஞ்சனி ராஜ்மோகன், சீஜீசீ டோக் சொப் பணிப்பாளரும், தொலைக்காட்சித் தயாரிப்பாளருமான றினூஸா நௌசாட், சிரேஷ்ட ஊடகவியலாளரும், தொலைக்காட்சித் தயாரிப்பாளருமான சமீஹா சபீர், சிரேஷ்ட கவிஞர் நஜ்முல் ஹுசைன் ஆகியோருக்கு "துணிந்தெழு விருது" வழங்கி வைத்தார். இவ் விருது தமிழகத்தின் புகழ்பெற்ற சிறப்புப் பேச்சாளரும், இளம் சமூக செயல்பாட்டாளரமான சுல்தானா பர்வீனுக்கும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




## சுத்தம் சுகம் தரும்

**சி. மௌநேஷ், மட்டக்களப்பு**

காலையில் எழுந்திடுவோம்
கடமைகள் முடித்திடுவோம்
கலியுகவரதனை நினைத்து
ஒவ்வொரு நாளும் நெற்றியில்
திருநீறு அணிந்திடுவோம்
காரியத்தில் இறங்கிடுவோம்
வீட்டைச் சுத்தம் செய்யும்
வித்தையை கற்றிடுவோம்
பாடசாலை மாணவர்கள்
பாடசாலை போகட்டும்
வேலையைச் செய்பவர்கள்
வேலைக்குப் போகட்டும்
எங்கு போனாலும் அவரவர்
தம் தம் வேலைகளைச்
சுத்தமாகச் செய்யட்டும்...
சுத்தம் சுகம் தரும்...
கந்தையானாலும்...
கசக்கிக்கட்டு என்பது
முன்னோர் முதுமொழி...!

## உறவுகள் உயிர் பெற.....!

**இரா.ஜெயக்குமார்**

மனித உறவுகளை
மலினப் படுத்தாது
நாளைய சந்ததியை
நாணயமாய் நடத்து!

வார்த்தைக் குண்டுகளை
வீரமென வீசாதே!
வெல்ல மொழியாலே
வெல்லப் பார் மனங்களையே!

சின்னத் தனங்களினால்
சினந்தீர்க்கும் வல்லவரின்
வில்லத் தனங்களினை
விலக்கி வைத்து விடு!

உடன்பாடு காணுகின்ற
உயர்ந்த குணத்தாலே
தடம் பதித்து நடந்து
தகைமைகள் பெற்று விடு!

பணிவோடு பணியாற்றி
துணிவோடு துயர் போக்கு!
கனிவான மொழியாலே
களிப்படைய வைத்து விடு!

உறவுப் பாலங்கள்
உள்ளத்தே உருவாக
அர்த்த வாழ்வு தனை
அகிலத்தே பெற்று விடு!



## பிள்ளை உள்ளம்!

**கலாபூஷணம் கீழ்கரவை கி. குலசேகரன், அப்புத்தளை.**

கள்ளம் இல்லாத
பிள்ளை உள்ளம்!
கற்பனைக்கும் எட்டாத
அன்பின் இல்லம்!
அள்ளக் குறையாத
அன்பைச் சொரியும்!
அதுவே அனைவர்க்கும்
இன்பம் தரும்!

பேதங்கள் அறியாத
பிள்ளை உள்ளம்!
பேசிடும் மொழிகளோ
இனிக்கும் வெல்லம்!
பாதகம் தெரியாத
வெள்ளை உள்ளம்!
பழகிடும் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்!

எவரையும் கவர்ந்திடும்
அன்பு உள்ளம்!
எண்ணிடவே இனிக்கும்
இன்ப உள்ளம்!
தவம் இருந்தே
இங்கு பெற்றி உள்ளம்!
தன்னலம், பகை
அறியாத உள்ளம்!

## அவலம் சுமந்த ஆயிஷா....!

**ஷெல்லிதாசன் திருகோணமலை**

சகோதரி எமக்கு......
தெருவில் இறங்க பயமாய் இருக்குது
மிருகங்கள் திரியுது சாலைகளெங்கும்
உனக்கு நடந்ததை
எண்ணிப் பார்க்கையில்
உடம்பே நடுங்கி உறையுது இரத்தம்.!

மாட்டோம் அந்த மிருகங்க ளருகிலே
மறந்தும் இனிநாம் போகவும் மாட்டோம்
ஆயிஷா எப்படி (பேர்) அவலத்தை
தாங்கினாய்
அம்மம்மா என்ன கொடுமைத் துயரடி!

போதையில் ஊறிய மனித ஜன்மங்கள்
புத்தியை இழந்து நாய்களாய் அலைகிறார்
வீதியால் போகிற அப்பாவிச் சிறுவரை
வேட்டை யாடி குதறிக் கொல்கிறார்

ஆயிஷா உன்போல எத்தனை சிறிசுகள்
அநியாயப் படுவோரால்
நாசமாய் போயினர்
கேட்கப் பார்க்க யாருமே இல்லையா
நடந்த பின்னாலே ஒப்பாரி ஓலமா?

ஆயிஷா உனக்காக அழுது புலம்புறோம்
ஆற்ற முடியாத துயரால் துடிக்கிறோம்
காற்றில் கலந்த உன்பெரு ஓலங்கள்
காதிலே வந்தெம்மை கதற வைக்குது.

போதை வெறியரை பொல்லா மனிதரை
நீதி முன்னாலே நிறுத்தி அகற்றுங்கள்
நாளைய சந்ததி நாம்தலை நிமிர்ந்து
வாழ ஓர் வழி காண விரையுங்கள்..!
அவளுக்காக அஞ்சலிக்கும்
பள்ளித் தோழிகள்.

## இதுவுமொரு காதலா?

**பாண்டியூர் பொன். நவநீதன்**

வஞ்சியவள்
அஞ்சி வருசம் முன்னே
அன்பு வலை வீசி ஒரு
மீன் பிடித்தாள் மீன்
அவன், அவளின்
அன்பு நண்பர் ஆனான்!

கொஞ்சங் கொஞ்சமாக
அஞ்சிவருசங்கள் ஓடியது
இனி(ய) அவளைத் தான்
மணம் முடித்தால் என்ன?
அவளிடத்தே அதற்குச்
சம்மாங் கேட்டான்! அவள்
இட்டைப் பகடையினை உருட்டிவிட்டு...
"என்பக்கம் வந்தால் முடிக்கலாம்" என்றாள்!

வஞ்சக நெஞ்சோடு
வஞ்சியவள் தன்னோடு
அஞ்சி வருசங்கள் மேலாகப்
பழகியிருக்கிறாளே என்று
சஞ்சலமான அன்பு
நெஞ்சொடிந்து போனவனாய்...

என்னை நீ பிடித்த அன்றே
இதை நீ சொல்லியிருந்தால்
முடித்திருப்பேன்" என்று
அவளுறவை அறுத்துப் போனான்!
இதுவும்மொரு காதலா?

## அழகின் இரகசியம்

**எம்.எச். முஹம்மட்**



என்னவள் முகம் கொண்ட
மதியே!
என் வயிரவளுக்கு சதி
செய்கிறாய்!

உனில் கருமை ரேகை
படர்கிறது
உறுத்தும் தனிமை வாட்டம்
வதைக்கிறது

நீதித்தமும் தேய்ந்துதான்
தோய்கிறாய்
நீண்ட கருமை வானில்
உதிக்கிறாய்

துடிக்கும் என் வெண்மேக இதயத்தில்
பிறந்தவள் அப்படியில்லை
துயில் அவள் முக வனப்பு
என்றும் பௌர்ணமி

என் உறக்கத்தை கொள்ளையடித்த
பிறை நுதலுடையவள்
காலம் உனை அவளாய் மாற்ற
என்றும் அடக்கமாய் இரு



## தந்தை எனும் விருட்சம்

**நுஜாஹ் பின்த் அமீர்**

அன்பை எதிர்பார்க்கும் பிள்ளையிடம் அதை
வெளிக்காட்ட முடியாமல்
ஒளித்து வைத்திருப்பவர்

பிள்ளையின் வளர்ச்சியில் உறுதுணையாய்
பிள்ளை வாழ்வில் வெற்றி
காணும் போது
உள்ளுக்குள் மகிழ்ந்தும் வெளியில்
காட்டாதிருப்பவர்

பிள்ளையின் வெற்றி என்று
வரும் போது தாயை
முன் நிறுத்துபவர்

விந்து எனும் விதையை
துணைவிக்கு கொடுத்து
குடும்பம் எனும் பாதையில்
பிள்ளை எனும் கிளைகளோடு
வீர நடை போடுபவர்

வாழ்வின் உயர்விற்காய்
சொந்தங்களை துறப்பவர்
அயராது உழைப்பவரும் தன்
துயரங்களை மறைத்து
கம்பீரத் தோற்றமளிப்பவர்

தன் வாழ்வில் கிடைக்காததை
சொந்தங்களுக்கு
கிடைக்க வேண்டும் என்று நினைத்து
தைரியத்தை கற்றுத் தருபவர்

பாசத்துக்கும் தாயையே அடையாளம்
காட்டும் விருட்சமே தந்தை



## என் கவிதை

**என். பாரத், மானிப்பாய்**

கவிதையே
உன்னை
என் கவிதை
என படைத்திடவா
நீ மொழியினில்
பிறந்தவள் தானே
உன்னை அழகாக்க
உன்னிடம்
உவமையும் உருவகமும்
இருக்கின்றது

நீ
மொழிகளில்
விளையாட
சிலேடையும்
மோனையும்
இருக்கின்றது
இதை விட
என்ன வேண்டும்
கவிதையே
உன்னையே என்
கவிதை என
படைப்பேன்
கவிதையே

## தனிமையானவன்



**அஜி அஜந்தன் மருக்காரம்பளை வவுனியா**

நான்
தனித்திருக்கின்றேன் – என்
ஒவ்வொரு இரவிலும்
என்னோடு சேர்ந்து
எனக்காய் சபிக்கப்பட்டது
இந்தத் தனிமை
ஒன்று மட்டுமே

எந்தன்
விழிகளின் வழி
சிதறிக்கிடக்கும்
கண்ணீர்த்துளிகளும்
கனதியாய் நீளும் இந்த
கணங்களின் ரணங்களும்
உங்களுக்கு ஒருபோதும்
தெரியப்போவதில்லை

அடடா
இந்தத்தனிமை
எத்தனை அழகானது
எந்தன்
மனச்சுவரோரம் மலரும்
எண்ணங்களுக்கு
வண்ணம் பூசிச்செல்லும்
இந்தத் தனிமையை மட்டும்
என்னை விட்டு
எவராலும் பிரித்துவிட முடிவதில்லை

அன்பாய் கதை பேசி
ஆசை முத்தமிட்டு – என்னை
அள்ளி அணைத்திட
அன்னை இருப்பதையும்

கன்னத்தோடு
கன்னம் சேர்த்து
காதில் வந்தே – பல
கதைகள் கூறும்
காதலி ஒருத்தி என்
கண்ணெதிரே இருப்பதையும்

தோளில் சாய்ந்தே
தொலைதூரம் செல்ல
தோழன் ஒருத்தன் என்
கூடவே இருப்பதாகவும்

எந்தன்
வண்ணக்கனவுகளிற்கு
வாசமூட்டிச்செல்லும்
இந்தத் தனிமையை மட்டும்
என்னை விட்டு எவராலும்
பிரித்துவிட முடிவதில்லை

தன்னந்தனி நடந்து
தள்ளாடி விழுந்து
தனக்குள் சிரித்து
தடுமாறி நின்று
கண்கள் இரண்டிலும்
கண்ணீர் வடிய
காலம் கடக்கின்ற
யாருமற்ற எனக்கு
தனிமை அத்தனை
அழகுடையதே

கருகி வீழும்
இலையொன்றின்
சருகு போல
இயங்க மறுக்கும் – என்
இதய வாசலில்
இசை மீட்டிக் கொண்டிருக்கிறது
இந்த தனிமை

உள்ளத்துக்குள்
உறங்கிக்கிடக்கும்
உணர்வுகளை சுமந்து கொண்டு
உயரப்பறக்கும் – இந்த
ஊமைக்குருவியின் ஓலம்
தனிமை ஒன்றை தவிர
வேறு யாருக்கும்
தெரிவதில்லை

ஊமைக்குருவியது
உயரப் பறந்தாலும் அதன்
உணர்வுச் சிறகுகள்
உதிராது ஒருபோதும்..

நான்
தனித்திருக்கின்றேன் – என்
ஒவ்வொரு இரவிலும்
என்னோடு சேர்ந்து
எனக்காய் சபிக்கப்பட்டது
இந்தத் தனிமை
ஒன்று மட்டுமே

## அன்றும் இன்றும்

**"ஏரூர்க்கவி" எச்.எம்.எம்.றசீம்**

கமலமாய்க் கமழ்ந்து
கலங்கரையாய் ஒளிர்ந்தோம்
கர்வமது தளைத்து
கற்பூரமாய்க் கரைகிறோம்

நல்லவராய் நிலைத்து
நானிலம் சிறந்தோம்
மதுவதனை குடித்து
மற்றவரில் கேடாகிறோம்

அறிவில் உயர்ந்து
அறத்தில் மலர்ந்தோம்
சினத்தில் கலந்து
சீக்கிரத்தில் வீழ்கிறோம்

உழைப்பில் சேர்த்து
உண்ணக் கொடுத்தோம்
பிடித்தவை புசித்து
பிணியில் வாழ்கிறோம்

முறையோடு நடந்து
முத்தென மிளிர்ந்தோம்
குறையோடு கதைத்து
கறைகளைச் சுமக்கிறோம்

மதியால் நிறைந்து
மனதால் சிரித்தோம்
வீணாக அலைந்து
வம்புகள் புரிகிறோம்

மூப்பில் முதிர்ந்து
முதியோரை மதித்தோம்
இளமை சுகித்து
இன்று நகைக்கிறோம்

பொறுப்புடன் பணிந்து
சிறப்புடன் வாழ்ந்தோம்
அர்ப்பணிப்பு மறந்து
அகத்தில் நலிகிறோம்

முயற்சிகள் செய்து
முன்னணியில் வந்தோம்
பின்வழி தேடியலைந்து
பின்னணியில் நிற்கிறோம்

சட்டத்தை மீறாதிருந்து
சச்சரவுகள் குறைத்தோம்
சதி, செயல்கள் புரிந்து
சமநீதியில் கைதாகிறோம்

மெய்யோடு இருந்து
மேன்மைகள் பெற்றோம்
தவறுகளில் இணைந்து
தருணமதில் அழுகிறோம்

அன்று அயராது
ஆன்றோரில் வாழ்ந்தோம்
இன்று இடையராது
இழிவுகள் தேடுகிறோம்

## உனது நேசிப்பும் எனது காத்திருப்பும்

**அ. ஜெகன் சுவிஸ்**

தெரு ஓரங்களும்
தென்னம் தோப்புக்களுமாக
எனது நாட்களின்
நகர்வுகளில்
சூரியன் வந்து
என்னை தட்டி
துயில் எழுப்பிய
காலம் ஒன்றில்

மூடிய கூரையின்
கீழ்
வாழ்வின் முழுமையை
அனுபவித்து
இருந்த நீ
என்னையும் எண்ணி
எனக்காக செய்த
நற் செயல்களின்
எண்ணங்களில் நான்
நெகிழ்ந்ததுண்டு

மனிதம் நிறைந்த
மனிதர்களின்
அரவணைப்பு கிடைக்கும்
என்ற எண்ணங்கள்
கூட என்னை
ஏமாற்றிய போது
உன் மனிதாபிமானப்
பண்புகளே
என் பின்னால்
முன்னோக்கிய
நகர்வின் நம்பிக்கையை
தந்து நின்றது

நான் எனது
மரணத்தை
எழுதி வைத்த
போது

அதனை அழித்து
வாழ்தலின் அவசியம்
சொல்லித் தந்த
உனது செயல்கள்
மறக்க முடியாத
நிகழ்வுகளாக
இன்னும் என்னுள்ளே

ஆனாலும்
பின் ஒரு காலத்தில்
நீயே என்
மரணத்தை எழுதி
வைத்து விட்டு
சென்றது
இன்றும் என்னால்
விடை காண முடியாத
வினாவாக தொடர்கிறது

நிறைந்த ஏக்கங்கள்
சுமையாக
வாழ்வின் பொருள்
தேடி
மனிதர்களின்
நேசிப்புப் பார்வைக்காக
இன்னும் எனது
காத்திருப்பு
மரணம் வரையான
காத்திருப்பாக

## எனைத் தேட விரும்புகிறேன்...



**முபர்ரிஜ்**

இருளின் கருமை எடுத்து
தனிமை செய்ய விரும்புகிறேன்
வாழ்வின் கடுமை விடுத்து
துன்பம் களைய விரும்புகிறேன்

பரந்த வயல் வெளியில்
வரப்புகளுக்கு இடையில்
அடர்ந்த இருள் வெளியில்
மின்மினியின் ஒளியில்

சிற்றோடை ஒன்றுக்கு அருகில்
நீரின் சலசலக்கும் இசையில்
சில்வண்டுகளின் ஒலியில்
நிசப்தத்தின் மொழியில்

பனி பொழியும் இரவில்
குளிர் காற்றின் வருடலில்
நாற்றுக்களின் அசைவில்
அசைவற்று இருக்க விரும்புகிறேன்

அடர்ந்த இருள் வெளியில்
இயற்கையின் மடியில்
என்னைத் தொலைத்து மீண்டும்
எனைத் தேட விரும்புகிறேன்

## மக்களின் எதிர்பார்ப்பை... (06ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கம் சார்ப்பில் எடுக்கப்படும் முக்கியமான தீர்மானங்கள் மக்கள் பிரதிநிதிகளால் கண்காணிக்கப்படுவதுடன் மதிப்பாய்வு செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளும் அவசியம். சுயாதீன ஆணைக்குழுக்கள் முழுமையான சுயாதீனத் தன்மையுடன் இயங்குவதன் தேவையும் தற்பொழுது உணரப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்கு சர்வதேச நாடுகளின் உதவியை நாடுவதாயின் அவர்கள் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான கட்டமைப்பு மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். எனவே இதற்கான அடித்தளத்தை அரசியலமைப்பின் ஊடாக ஏற்படுத்தக் கொடுப்பதற்கு அரசியல்வாதிகள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவது அவசியம். ஒட்டுமொத்த நாடுமே பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், மக்கள் பிரதிநிதிகள் மீண்டும் மீண்டும் தமது குறுகிய அரசியல் நோக்கங்களைப் பற்றிச் சிந்திக்காது கூட்டுப்பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். நாட்டை இந்த நிலைமையிலிருந்து மீட்பதற்கு அரசியல் பிரதிநிதிகள் மாத்திரமன்றி ஒட்டுமொத்த சமூகமும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்பதை ஒவ்வொரு சம்பவங்களும் எமக்கு உணரவைக்கின்றன.

எனவே, எதிர்கால சந்ததிக்கு சிறந்ததொரு சூழலை உருவாக்கக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்துவதற்கு அனைவரும் கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்வதே காலத்தின் தேவையாகும்.

## உணவு நிவாரணங்களுடன்... (06ஆம் பக்கத் தொடர்)

இதேசமயம் இந்திய உதவிகளுக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது நன்றிகளைத் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

"தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் ஆதரவுக் கரம் நீட்டிய இந்திய மக்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் வழங்கிய உதவியையும் பாராட்டுகிறேன்" என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இலங்கைக்கு இந்தியா நிவாரண உதவியாக அனுப்பிய அரிசி, பால்மா உள்ளிட்ட பொருட்களை நாட்டு மக்களுக்கு விநியோகிக்கும் பணி ஏற்கனவே தொடங்கியுள்ளது.

குடும்பம் ஒன்றுக்கு தலா 10 கிலோ அரிசி அடங்கிய பொதி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்திய அக்கறை குறித்து இலங்கையின் பெரும்பான்மை மக்களும் தமது நன்றிகளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவே இலங்கையின் உண்மையான நண்பன் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்பதையே இந்நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.

---

## Nestlé Lanka PLC இன் வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பாக அதன் அனைத்து பங்குதாரர்களுக்குமான அறிவித்தல்

Nestlé Lanka PLCஇனது அனைத்து பங்குதாரர்களினதும் கவனத்திற்கு கடந்த ஏப்ரல் மாதம் 26ம் திகதி 2022 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க, நிறுவனமானது அதன் வருடாந்த பொதுக்கூட்டத்தை எதிர்வரும் ஜூன் மாதம் 9ம் திகதி 2022 அன்று காலை 10 மணிக்கு இணையத்தினூடாக நடாத்த தீர்மானித்துள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கையானது, பதிவு செய்யப்பட்ட பங்குதாரர்களுக்கு தபால் மூலமும் மின்னஞ்சல் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, மேலும் கொழும்பு பங்கு பரிவர்தனை இணையதளத்தினூடாகவும் (www.cse.lk), நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாகவும் இதனைப் பார்வையிடலாம் (https://www.nestle.lk/investors/key-facts-and-figures). கடந்த ஏப்ரல் மாதம் 26ம்திகதி 2022 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் இப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முறைமைகள் விளக்கப்பட்டுள்ளன.

பின்வரும் இணைப்பினூடாகவோ அல்லது எமது பெருநிறுவன இணையதளத்தினூடாகவோ (www.nestle.lk) நீங்களும் இவ்வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குகொள்வதற்கான பதிவினை மேற்கொள்ளலாம்.
https://forms.office.com/r/FtzyHVJSns

மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்பு கொள்ளவும்.
0114794595 -keerthi.pathiraja@lk.nestle.com

**Nestlé Lanka PLC**
**பணிப்பாளர் சபை சார்பில்**
**கீர்த்தி பதிராஜா, காரியதரிசி**

---

## பெறுகை அறிவித்தல்

## விடுதிக் காப்பாளர் சேவையை வழங்கல்

## களனி பல்கலைக்கழகம்

களனி பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான (றாகம மருத்துவ பீடம் அடங்கலானது) உள்ளக மற்றும் வெளியக விடுதிகளுக்கு விடுதி காப்பாளர் சேவைகளுக்காக பதிவு பெற்ற மனிதவளத்தை வழங்கும் நிறுவனங்களிலிருந்து 2022.06.21 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

2022.06.20 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 1000 ரூபாவை பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், இந்த பண வைப்பிற்காக பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பொது நிருவாகத்திற்கான உதவி பதிவாளரிடமிருந்து உரித்தான கேள்விப் படிவங்கள் மற்றும் தேவைப்படும் ஏனைய விபரங்களை பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் உரித்தான விடுதிகளை மாணவர் சேவைகளுக்கான சிரேஷ்ட உதவி பதிவாளருடன் தொடர்பு கொள்வதன் மூலம் உரித்தான விடுதிகளை பரீட்சிக்கலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு அவற்றின் இடது பக்க மேல் மூலையில் **"Tender for Hostel Caretaker at the Kelaniya University"** என குறிப்பிடப்பட்டு களனி பல்கலைக்கழக தளுகம இடப்பரப்பிலுள்ள பிரதான பாதுகாப்பு அலுவலகரின் அலுவலகத்தில் 2022.06.21 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் பூர்த்தி செய்யப்படாத விலைமனுக்கள் எவ்வித மதிப்பீடுமின்றி நிராகரிக்கப்படும்.

பெற்றுக் கொண்ட கேள்விகள் 2022.06.21 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு களனி பல்கலைக்கழக தளுகம வளாகத்தின் பீடாதிபதியின் குழு கூட்டத்தின் மண்டபத்தில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஒருவர் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்,**
**05.06.2022.**

---

NLDB

கமத்தொழில் அமைச்சு

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

## பதவி வெற்றிடம்

இலங்கையின் தகுதியுள்ள பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி :**

## கால்நடை மருத்துவர்

## (Veterinary Surgeon) – MM 1-1 – 2016

**தகைமைகள்** : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கால்நடை மருத்துவப் பட்டம் (BVSc) மற்றும் இலங்கை கால்நடை மருத்துவப் பேரவையில் (SLVC) பதிவு செய்யப்பட்டிருத்தல்.

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : **MM 1-1-2016**: ரூபா. 53,175/- - 10x1,375/- - 15x1,910/- - 95,575/-

**சம்பளம்** : வாழ்க்கைச் செலவுப் படி - ரூபா 7,800/-

மேலேயுள்ள சம்பளத்திற்கு மேலாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகள் செலுத்தப்படும்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும்**

i. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தையும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கான தகுதியையுடையவராகவிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த குணநலன்களையுடையவராகவிருத்தல் வேண்டும்.
iv. ஆங்கிலத்தில் வேலை செய்யும் அறிவாற்றல் தனித்துவமான நன்மையாகும்.

2022 ஜூன் 21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து சுயதரவு மற்றும் உறவினரல்லாத இருவரின் பெயர்கள், அவர்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை அடக்கிய சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றை பதிவுத் தபாலில் தலைவர், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும்.

அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**

---

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

SMIB

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயல்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளரர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயல்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

## தகவல் தொழில்நுட்பத் தலைவர் (Head of IT) – ஒப்பந்த அடிப்படை

**முக்கிய பொறுப்புகள்**

வேலையின் ஒட்டுமொத்த நோக்கமானது வங்கியின் பார்வை மற்றும் வணிகத் திட்டங்களின் பிரகாரம் பயனுள்ள ICT மூலோபாயத்தை மதிப்பாய்வு செய்து வடிவமைத்து செயல்படுத்துவதாகும். வணிக இலக்குகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்க, பொருத்தமான ICT தீர்வுகளைத் தீர்மானித்தல், ICT கொள்கைகள் மற்றும் வங்கியின் ICT செயல்பாடுகள் தொடர்பான நடைமுறைகளை மதிப்பாய்வு செய்தல். வங்கியின் செயல்பாட்டுத் தேவைக்கு ஏற்ப தேவையான மென்பொருள் முறைமைகளை வடிவமைத்தல், மேம்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் மற்றும் அனைத்து வன்பொருள் முறைமைகளும் முறையாகப் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்தல், பங்குபெறுதல், IT ஊழியர்களை நிர்வகிக்கவும் ஒருங்கிணைக்கவும் மற்றும் வணிக இலக்குகள் மற்றும் திட்டங்களை நோக்கி அவர்களின் செயல்திறனை கண்காணித்தலும் ஆகும்.

**தகுதிகள்**

கணினி அறிவியல்/தகவல் முறைமைகள்/கணனி பொறியியல் ஆகியவற்றில் இளமாணிப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பம் அதற்கு சமமான தகைமை. மேலே உள்ள தகைமையுடன் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான துறையில் முதுமாணிப் பட்டம் ஒரு பிரத்தியேகமான நன்மையாக இருக்கும். உயர் தகவல் தொழில்நுட்பத்தில் சான்றளிக்கப்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**அனுபவம்**

ஒட்டுமொத்தமாக, வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் 10 வருடகால அனுபவம், இதில் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவம்.

மேலும், விண்ணப்பதாரர் IBM AS/400 முறைமைகள், ஜாவா, Dotnet மற்றும் Oracle பற்றிய ஆழமான அறிவு பெற்றிருக்க வேண்டும். IT திட்ட முகாமைத்துவம் மற்றும் இணைய பாதுகாப்பு திறன்கள் ஒரு நன்மையாக இருக்கும். விதிவிலக்காக எழுத்து மற்றும் வாய்மொழி தொடர்பு திறன் தேவை.

**சம்பளம்:** மாதாந்தக் கொடுப்பனவு

**ஒப்பந்தக் காலம்:** இரண்டு வருடங்கள்

**பொது நிபந்தனைகள்**

**தேர்வு முறை** - வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.

*நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.*

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்** - 20/06/2022

**விண்ணப்பிக்கும் முறை**

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்வி/தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண்களை அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்த விதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு தகவுத்திறன்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

விண்ணப்பங்களை careers@smib.lk மூலமாக மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.

---

## *RIFAYIYYA LADIES' ARABIC COLLEGE*

*159, Kapuwatta, Denipitiya, Weligama.*

Email :- Secretary@rifayiya.org
WhattsApp:- 0773 409 999
Cont.Num :- 0764423173/ 0764423174/ 0774423175
0412261999/ 0765849999

## பெண்களுக்கு பாதுகாப்பான சூழலில் பாடசாலைக் கல்வியுடன் அல்ஆலிமா பாடநெறி

**தகைமைகள்**
- ❖ தரம் 8 சித்தியடைந்திருத்தல்
- ❖ குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்திருத்தல்

- ❖ விடுதி வசதி
- ❖ சமையல் பயிற்சி வகுப்பு
- ❖ கணனி பயிற்சி
- ❖ விஷேட தஜ்வீத்/ பிக்ஹ் வகுப்புக்கள்
- ❖ சிறந்த பட்டதாரி ஆசிரியர்கள்

**வசதி குறைந்த ஆர்வமுள்ளவர்களுக்கு ஸகாத் நிதி உதவி**

மேலதிக விபரங்களுக்கு மேலுள்ள இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் வாரிஸ் அலி மௌலானா**
**பணிப்பாளர்**
**TEL:- 0773281939**

---

## *RIFAYIYYA LADIES' ARABIC COLLEGE*

*159, Kapuwatta, Denipitiya, Weligama.*

## வெலிகாமம் ரிபாயிய்யா மகளிர் அரபுக் கலாசாலை வெற்றிடங்கள்

1. **அல் ஆலிமாக்கள்** ***(Moulaviyas) – Full time***
   - ❖ அங்கீகரிக்கப்பட்ட அரபுக் கலாசாலையொன்றில் அல் ஆலிமா சான்றிதழ் உள்ளவர்கள்
2. **காரியாலய இலிகிதர் (Office Clerk) Full/Part Time**
   - ❖ குறைந்தபட்சம் G.C.E (A/L) சித்தி, கணனி அறிவு
   - ❖ ஆங்கில/ அறபு மொழி தேர்ச்சியுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
3. **விடுதி உதவி மேற்பார்வையாளர் (Assistant Hostel Warden-Full Time)**
   - ❖ G.C.E (A/L) சித்தி
   - ❖ அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை
4. **ஆங்கில/அறபு மொழி (பேச்சு) ஆசிரியை**
   Spoken English/ Spoken Arabic Teachers (Part Time)

மேற்படி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள பெண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

***WhatsApp:- 0773409999***
***Email:- Secretary@rifayiya.org***

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

*0412261999/ 0765849999/ 0764423173/ 0764423174/ 0764423175*

---

## அறிவித்தல்

**WAYAMBA UNIVERSITY OF SRI LANKA**
**FACULTY OF AGRICULTURE & PLANTATION MANAGEMENT**

## Admission of Diploma Holders in Agriculture to B.Sc. Agriculture Degree under the provision for special entry 2020/ 2021

மேற்படி பட்டதாரி பாடநெறியின் 2020/ 2021 கல்வியாண்டிற்காக விவசாய டிப்ளோமாதாரர்களை சேர்த்துக் கொள்வதற்காக 2022 ஜூன் 01 முதல் 2022 ஜூன் 25ம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களை பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து மற்றும் 2022 ஜூன் 05ம் திகதிய சன்டே ஒப்சவர் பத்திரிகையில் பிரசுரமான அறிவித்தலில் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்,**
**குளியாப்பிட்டி.**

---

திகதி 02.06.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4774
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,284,940.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 7 7 4 3 3 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,025,848.00

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 804
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,226,280.00
வெற்றி இலக்கினம் Z வெற்றி இலக்கங்கள் 25 50 70 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,799,874.40

**ராசீ சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0083
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,906,180.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 04 15 19 36
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,700,074.80

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3016
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,857,380.00
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 10 21 32 61
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,470,922.56

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1252
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,425,880.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 2 5 5 2 0 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,464,906.00

**கோடி 25+ Mega POWER மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1122
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,003,660.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 254,144,358.00
N 25 04 26 58 76
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# உருத்திராட்ச பூனை

'ஹி.. ஹி.. ஹி.... எல்லாருக்கும் வணக்கம். நான் தான் சோமநாதன். எப்பிடியும் சம்பாதிக்கலாம். எப்பிடியும் வாழலாம். உந்தப் பேய்ச்சனங்கள் அறியாமல் பார்த்துக் கொண்டால் போதும். இது தான் என்ரை கொள்கை.

எனக்கு ஏற்றபடி விதானை வேலை கிடைச்சுது. எப்பிடிக் கிடைச்சுது எண்டு கேளாதையுங்கோ. அது பரம ரகசியம். ஊரை விழுங்கிறது எனக்கு கை வந்த கலை. சுடலை திருத்த வேண்டுமென்று வெளிநாட்டிலை இருக்கிறவங்களிட்டை காசு வாங்கினேன். அந்தக் காசிலை சீமெந்து வாங்கினேன். அந்த சீமெந்துப் பைக்கற்றுகளை தந்திரமாக என்ரை வீட்டிலை பறிக்கப்பண்ணினேன். பிறகு என்ன?

பக்கத்து ஊரிலையும் விதானை வேலை பார்த்தனான். உவன் சோட்டர் தான் போஸ்ற்மாஸ்ரர். இரண்டு பேரும் சேர்ந்து 'பிளான்' பண்ணினோம். பிறகு என்ன? உயிரோடை இல்லாத நாப்பது பேருக்கு பிச்சைச் சம்பளம்....!

ஏழை எளியதுகளுக்கு ஆடு வளர்க்கிற திட்டம்...! நான் எனக்கு ஒத்துழைக்கிறவையை மட்டும் தான் தெரிவு செய்வேன். குட்டி ஈண்டால் எனக்குத் தான் எண்டு சொல்லிப்போடுவேன்.

தெற்கிலை அந்தோணிப்பிள்ளையின்ரை வீட்டில தான் யுத்த காலத்திலை ஊர்ப் பள்ளிக்கூடம் இயங்கியது.

அதிபராக இருந்த வேலாயுதத்தார் கஷ்டப்பட்டுத் தான் பள்ளிக்கூடத்தை நடத்தியவர். நேர்மையான மனிசன் தான். ஆனால் என்ரை தாளத்துக்கு ஆட மறுத்திட்டார். விடுவேனோ? எவ்வளவு கரைச்சல் குடுத்து அவரை அனுப்பி வைச்சேன்!

அந்தோணிப்பிள்ளையின்ரை மச்சான் என்னைப்பற்றி நல்ல எண்ணம் வைச்சிருந்தவன். அதாலை ஐந்து பரப்பு தோட்டக்காணியை குறைஞ்ச விலைக்கு தந்தவன். நான் என்ன செய்தனான் தெரியுமோ? கொழுத்த லாபத்துக்கு அதை வித்துப்போட்டேன். அது என்ரை பிறவிக் குணம். அதாலை அவனுக்கு கடுங்கோவம்... என்னை வெட்டிறன் எண்டு கத்தியோடை திரிஞ்சவனாம். அதாலை கொஞ்ச நாள் நான் வெளிக்கிடையில்லை.

உந்தக்கதையை சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தராய் இருக்கிற வெறிக்குட்டி இப்பவும் சொல்லித் திரியுறானாம்...!

நான் கொஞ்சக் காலம் பிள்ளையார் கோயிலிலை தலைவராயும் இருந்தனான். வெளிநாட்டிலை கோயிலுக்கு காசு சேர்த்துவாறதாய் சொன்னேன். நாலு ரிக்கற் புத்தகங்களை பொருளாளரிட்டை வாங்கினேன். நாலு புத்தகத்திலும் மொத்தமாய் இருநூறு ரிக்கற். திரும்பி வந்தவுடனை நல்ல கதையொண்டு விட்டேன். அது என்ன தெரியுமோ?

ரிக்கற் புத்தகங்கள் துலைஞ்சு போச்சு எண்டு தான்...!

அவை என்ன செய்யிறது? என்னை கோயிலாலை வெளியேற்றிப் போட்டினம்! அதாலை என்ன? நான் தான் உழைச்சிட்டேனே...!

பிறகு நான் தெற்கிலை இருக்கிற அம்மன் கோயிலிலை ஒரு மாதிரி தலைவர் ஆகினேன்.

அது எனக்கு நல்ல வாய்ப்பு. ஆரம்பத்திலை பொருளாளராய் இருந்த நல்லநாதன் என்னர திருவிளையாடல்களுக்கு சம்மதிக்கேல்லை. அதாலை அவரை அனுப்பி வைச்சிட்டன். திருகுதாளங்களிற்கு ஒத்து வரக்கூடிய பூசகர். அல்லது அவரையும் எப்பவோ அனுப்பியிருப்பேன்.

பிறகு என்ன?

கோயிலைத் திருத்தவெண்டு சீமெந்துப் பைக்கட்டுகள் வாங்கினோம். கோயிலடியிலை ஒரு வீட்டிலைதான் வைக்க வேணுமெண்டு சொல்லிப் போட்டாங்கள்.

என்ன செய்யலாம்?

அருமையான ஐடியா!

அதே மேசன்மாரைக் கொண்டு அதே நேரத்திலையே என்ரை வீட்டு வேலைகளையும் ஆரம்பிச்சேன். அவங்கள் மூலமே சீமெந்துகள் ஒவ்வொண்டாய் வீட்டை வரத்தொடங்கியது.

உந்த விசயமும் கொஞ்சப் பேருக்குத் தெரிஞ்சிட்டுது. இது தான் எனக்குக் கவலை..!

ஊரிலை ஒற்றுமையாய் இயங்கிய ஒரு ரியூட்டறியை என்ரை நரிப்புத்தியாலை இரண்டாக்கினேன். ஒற்றுமையாக இளைஞர்கள் இயக்கிய விளையாட்டுக் கழகத்தை என்ரை நரிப்புத்தியாலை இரண்டாக்கினேன்.

இன்னொரு சம்பவம்... இருபது வருசமாகுது. அந்த நேரம் சைவர்களை மதம் மாத்திற வெளிநாட்டு நிறுவனம் ஒண்டுக்கு அதுக்கான கட்டிடம் கட்ட காணி தேவையாம் எண்டு அறிஞ்சேன். நல்ல சந்தர்ப்பம்...

கணிவாங்கித் தாறதிற்கு புறோக்கர் காசு எவ்வளவு எண்டு விசாரிச்சேன். எங்கே வாங்கலாம்? அப்போது ஊரிலை அதிபராயிருந்த தவக்குமார் அதிபரின் ஞாபகம் வந்துது. அவர் வெறும் புத்தக படிப்புத்தான்.

அப்பாவி. என்ரை நரிப்புத்திக்கு ஈடு குடுக்க முடியுமோ? தந்திரமாகக் கதைச்சேன். மிந்திரை வீதியிலை இருந்த அவற்றை அஞ்சு பரப்பு காணியை வாங்கிக் குடுத்தேன். எனக்கு அந்த நேரம் சுளையாய் பதினையாயிரம் கிடைச்சுது.

பிறகு அவங்கள் கட்டிடம் கட்டினாங்கள். விசயம் ஊர்முழுக்க பரவிவிட்டுது. மதம் மாத்திறவைக்கு காணி கொடுத்ததற்காக சனமெல்லாம் அதிபரைத்தானே திட்டித் தீர்த்துது. அவரும் பிறகு விசயம் அறிஞ்சு அழுதவராம். நான் தானே புத்திசாலித்தனமாய் காணி விற்பனையிலை சாட்சிக்கு ஒப்பமிடவும் மறுத்திட்டேனே! பிறகு, அந்தக் கட்டிடத்துக்கு கல் எறிந்ததுக்காக ஊர்ப்பெடியள் கொஞ்சப்பேர் உள்ளுக்கையும் இருந்தவங்கள்.

எனக்கென்ன? சுளையாய் பதினையாயிரம்! இன்னொரு சம்பவம்....

ஊரிலை ஒரு துண்டு நிலமில்லாத ஒருதர் உரும்பிராயிலை இருக்கிறார். என்ரை ஊர்... என்ரை பள்ளிக்கூடம் எண்டு வந்தார்.

விடலாமோ? பள்ளிக்கூடத்திலை என்ன நடந்தாலும் நான் தான் மாலை மரியாதையுடன் அழைக்கப் படுவேன். இதுக்காக வெளிநாட்டவர் ஒரு தருட்டை இருந்து முப்பதாயிரம் ரூபா பரிசளிப்பு விழாவுக்கென்று வாங்கிக் குடுக்கிறனான்.

இந்த அதிபர் வந்த பிறகு எனக்குப் பிடிக்காத விசயங்களை செய்யத்தொடங்கி விட்டார். வீடு வீடாய் திரிஞ்சு பிள்ளையளை சேர்த்தார். எல்லாரும் பள்ளிக்கூடத்திற்கு காசுகளை அள்ளியிறைக்கத் தொடங்கியிட்டினம்.

அப்ப என்ரை முப்பதாயிரம்ரூபா வெளி நாட்டுக் காசுக்கு என்ன மதிப்பு? அதோடை விழாக்களுக்கு ஊரிலை இருக்கிற வேறை ஆக்களையும் கூப்பிட தொடங்கிவிட்டார். எளிய சாதியளின்ரை பிள்ளையளை படிப்பிச்சு முன்னேற்றப் போறாராம்.

பள்ளிக்கூடம் முன்னேறும் போலை தெரிஞ்சுது. நான் விதானையாய் இருக்கேக்கை எளியசாதியளை அதிகாரத்தோடை நிக்க வைச்சுத்தான் கதைக்கிறனான். இப்ப கூட கோயிலுக்கை விடுறயில்லை. ஆனால் பிள்ளையொண்டைத் தத்தெடுக்க மட்டும் நான் சாதி பாக்கயில்லை!

அந்தப் பிள்ளையையே உடுவில்லை வேறை மதப்பள்ளிக்கூடம் ஒண்டிலை எவ்வளவு காசை குடுத்து படிப்பிக்கிறேன். ஊரிலை இருக்கிற எளிய சாதிப் பிள்ளையள் படிச்சு வர விடலாமோ? சந்தர்ப்பத்தைப் பாத்துக் கொண்டு இருந்தேன்.

வெறிக்குட்டி நவதாசன்ரை மோன் சுதனும் ஊர்ப் பள்ளிக்குடத்திலை தான். அவன் நல்ல நடிகன்! அதிபருக்கு எதிராக அவன்மூலம் வாத்திமார் பலரையும், படிப்பறிவில்லாத பெற்றோர் சிலரையும் தூண்டிவிட்டேன்.

என்ரை அடியாளாய் தைலங்கடவையிலை இருக்கிறவன் சுத்தன்ரை மோன் கிறிஸ்குமார். அவன்ரை வீட்டில தான் மதமாற்ற வேலையளுக்கும் ஒழுங்கு செய்து குடுத்திருக்கிறேன். அவன்ரை பிள்ளையளும் ஊர்ப் பள்ளிக்குடத்திலை தான் படிக்கினம்.

அவனையும் அதிபருக்கு எதிராய் அனுப்பிவிட்டேன். அதிபரோடை நண்பன் மாதிரி நடிச்ச சிறுவர் உத்தியோகத்தரான வெறிக்குட்டி மூலம் தந்திரமாய் தகவல்களை அறிஞ்சேன்.

ஊர் வாத்தி சுதன் மூலம் அதிபர் வராத நாள் பார்த்து பாடசாலைக் கேற்றுக்கு வேறை ஆமைப் பூட்டு போட்டு பூட்டுவித்தோம். படிக்கிற பிள்ளையளை பள்ளிக்கூட கேற்றுக்கு வெளியிலை றோட்டிலை நிப்பாட்டினோம். மீடியாக்காரரர் சிலரையும் காசு குடுத்து அனுப்பினேன்.

மாகாண கல்விச் செயலாளரை வரப்பண்ணி அதிபரை மாட்டிவிட்டேன். எல்லாம் வெறிக்குட்டியின் மோன் சுதன்ரை உதவியாலைதான். இனி ஊரவர் ஆரெண்டாலும் ஊர்ப்பள்ளிக்கூடத்தை நிமிர்த்த நினைப்பினமோ? ஏலுமெண்டால் வரட்டும்.

உந்தப் பேய்ச்சனங்களை எப்பிடி ஏமாத்திறதெண்டு எனக்குத் தெரியும்! இருந்தாலும்.... இந்தக் கோயிலாலும் துரத்துதுகளோ எண்டு ஒரு பயம் ... ஹி... ஹி... ஹி... திருவிழா ஆரம்பிச்சுட்டுதல்லோ! நான் பசுத்தோல் போர்த்தும் நேரம்...! அப்ப நான் வாறன்...!

**(யாவும் கற்பனையே)**

இரா. ஜெயக்குமார் ...✍



**அதிபராக இருந்த வேலாயுதத்தார் கஷ்டப்பட்டுத் தான் பள்ளிக்கூடத்தை நடத்தியவர். நேர்மையான மனிசன் தான். ஆனால் என்ரை தாளத்துக்கு ஆட மறுத்திட்டார். விடுவேனோ? எவ்வளவு கரைச்சல் குடுத்து அவரை அனுப்பி வைச்சேன்! அந்தோணிப்பிள்ளையின்ரை மச்சான் என்னைப்பற்றி நல்ல எண்ணம் வைச்சிருந்தவன். அதாலை ஐந்து பரப்பு தோட்க்காணியை குறைஞ்ச விலைக்கு தந்தவன். நான் என்ன செய்தனான் தெரியுமோ? கொழுத்த லாபத்துக்கு அதை வித்துப்போட்டேன். அது என்ரை பிறவிக் குணம். அதாலை அவனுக்கு கடுங்கோவம்... என்னை வெட்டிறன் எண்டு கத்தியோடை திரிஞ்சவனாம். அதாலை கொஞ்ச நாள் நான் வெளிக்கிடையில்லை.**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 26

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | ■ | 03 | 04 |
| 05 | | ■ | ■ | ■ | 06 | ■ | |
| | ■ | 07 | 08 | ■ | 09 | | |
| ■ | 10 | ■ | 11 | 12 | | ■ | ■ |
| 13 | | 14 | | | ■ | 15 | 16 |
| 17 | | | | | ■ | ■ | |
| 18 | | | ■ | 19 | | 20 | |
| 21 | | | | | ■ | | ■ |

திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 26
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :26

**இடமிருந்து வலம்**

(01) வியப்பு.
(03) ருசி.
(05) அடிப்பதற்கு பயன்படுத்தும் சவுக்கு.
(07) ஒரு நீர்நிலை.
(09) நீதிமன்ற விசாரணையின்போது இது தேவைப்படும்.
(11) நஞ்சு. (திரும்பியுள்ளது)
(13) ஒருவருக்குச் செய்யும் நன்மை.
(15) பெண்மாடு.
(17) செல்வம்.
(18) இரத்தக் கசிவுள்ள காயம்.
(19) எதிர்பாராத நேரத்தில் எடுக்கப்படும் நடவடிக்கை.
(21) சிறுவர்களின் விளையாட்டுப் பொருள் உடைந்துவிட்டது.

**மேலிருந்து கீழ்**

(01) கோட்டை மதிலைச் சுற்றி பாதுகாப்புக்காக அமைக்கப்படும் நீர்நிலை அரண்.
(02) திக்கு.
(04) ஒரு தமிழ் மாதம்.
(06) அறிமுகம் இல்லாதவரை இப்படியும் குறிப்பிடுவர். (தலைகீழ்)
(08) பயனற்ற வீண்செலவு. (குழம்பியுள்ளது)
(10) தங்கநகை.
(12) ஒரு ரகசியம் அனைவராலும் அறியப்படும் நிலை. (குழம்பியுள்ளது)
(13) இரத்தம்.
(14) அவலட்சணம். (குழம்பியுள்ளது)
(16) திறமையுள்ள சிறுவர்களை இப்படியும் சொல்வர்.
(20) மன்மதன் மனைவி.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 25

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) மூலிகை (03) வல்லாரை (06) இல்லம்
(07) சும்மா (09) பலம் (11) ஊறு
(12) புலமை (13) சக (15) திறமை
(16) பந்து (18) தடை (20) தையல்
(23) பகடி (24) கார்

**மேலிருந்து கீழ்**

(01) மூச்சு (02) கைம்மாறு (03) வல்லமை
(04) இல்லறம் (05) பாரை (08) ஊகம்
(10) பதிப்பு (13) சபதம் (14) சிந்தை
(17) துயர் (19) கடை (21) கால்
(22) கீரி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 24

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**ஆர். கீர்த்தனா,**
பனான,
மாதெனிய,
வரகாப்பொல.

**இரண்டாம் பரிசு**
**எம்.ஆர். அய்னா ஷெய்னப்,**
இல. 117, அன்னல் வீதி,
மாஞ்சோலைச்சேனை,
கிண்ணியா 03.

**மூன்றாம் பரிசு**
**ஸிபானா ஷாபி,**
20/2,
பாத்திமா மாவத்தை,
மாத்தறை.

### பாராட்டு பெறுவோர்

**1. பி. விதுஷா,**
வி.வி. வீதி, பெரியநீலாவணை 1B,
கல்முனை.

**2. கே.எப். மில்ஹானி,**
14, புளியடி குறுக்கு வீதி,
ஏறாவூர் 6.

**3. ஏ.எல்.ஏ. அஸீஸ்,**
17/A, சிறிமல் மாவத்த,
தெஹிவளை.

**4. ஏ.எல். கலீல்,**
80/06, வனகம, இறக்காமம்.

**5. எஸ். செல்வராஜா,**
270/3, பசறை வீதி,
மூன்றாம் கட்டை, பதுளை.

**6. எம்.வி.எப். பஸீனா,**
இல. 71, மரிக்கார் வீதி,
களுத்துறை தெற்கு,
களுத்துறை.

**7. ஏ. செபஸ்தியான்,**
இல. 24/2,
உடுப்பிட்டிய,
உக்குவளை.

**8. U. வைஷ்னவ்,**
127K, புதிய சோமநாதர் வீதி,
பாண்டிருப்பு 01B,
கல்முனை.

★ ★ ★



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 8

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# ஈழத்து நவீன கவிதை முன்னோடி மஹாகவி உருத்திரமூர்த்தி

ஈழத்து கவிதை வளர்ச்சி ஒரு மதிப்பீடு என்ற கட்டுரையில் பேராசிரியர் கலாநிதி செ. யோகராசா பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

ஈழத்து நவீன கவிதை பிரக்ஞைபூர்வமாக முகிழ்ப்பது ஏறத்தாழ நாற்பதுகளின் நடுப் பகுதியிலேயாகும். இவ்விதத்தில் மறுமலர்ச்சி, பாரதி (கொழும்பு), பாரதி (மண்டூர்) சஞ்சிகைகளில் எழுதிய கவிஞர்கள் முக்கியம் பெறுகின்றனர். மஹாகவி, சாரதா, அ.ந.கந்தசாமி, நாவற்குழியூர் நடராசன், கே. கணேஷ் என இவர்கள் பலராயினும் இவர்களுள் முதன்மை இடம் பெறுபவர் மஹாகவியே!

மஹாகவி மேற்கண்டவாறு முதன்மையிடம் பெறினும் ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளில் முதன்மையானவர் என்ற விதத்திலே இவரது முழுமை 1950களிலேயே ஆரம்பிக்கிறது. பாரதிதாசனுக்குப் பின்னர் தளர்ச்சி கண்ட நவீன தமிழ்க் கவிதை மீண்டும் எழுச்சியுறுவது இவரூடாகவே என்பது மிகையன்று. இவ்விதத்தில் சமகால வாழ்வை நோக்கி, சிறுகதைக்குரிய பண்புகளோடு, யதார்த்தப் பாங்குடன் நவீன கவிதையைத் திசை திருப்பினார் மஹாகவி. காட்சிப்படுத்தல்,பேச்சோசைப் பாங்கு, உணர்வு அழுத்தத்திற்கேற்ப அடி அளவு மாற்றம் முதலியன இவரால் அறிமுகமாகின. இத்தியாதி பண்புகள் சிலவற்றை சிறந்த முறையில் தேரும் திங்களும் வெளிப்படுத்துகிறது எனலாம்.

ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை
என்று
வந்தான் ஒருவன்....
நில் என்றான் ஓராள்
நிறுத்து என்றான் மற்றோராள்
புல் என்றான் ஓராள்
புலை என்றான் இன்னோராள்
கொல் என்றான் ஓராள்
கொளுத்து என்றான் வேறோராள்
கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடு பறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர் தெறித்தது
நிலம் சிவந்து
மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்....

மேலும் மஹாகவி குறும்பா வடிவத்தை அறிமுகப்படுத்தியமை, (சமூகப் பிரச்சினையை எடுத்துரைக்க அது சிறந்த வடிவமாக இருந்தமையை இன்று வரை பலராலும் உணரப்படவில்லை) நவீன காவிய வளர்ச்சிப் போக்கில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தியமை,கவிதை நாடக முயற்சிகள் என்பனவும் கவனத்துக்குரியன (ஞானம் சஞ்சிகையின் 100 ஆவது இதழ் செப் டெம்பர் 2008).






குறும்பா எனப் பெயரிட்டு அழைக்கப்படும் யாப்பு ஆங்கிலத்தில் லிமரிக்ஸ் என்ற பெயரில் அமைவது. எட்வேட் லியர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. லிமரிக் கவிதை வடிவத்தினை முதன் முதலில் 1966ஆம் ஆண்டில் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் மஹாகவி. 'லிமரிக்'குக்கு அவர் சூட்டிய தமிழ்ப் பெயர் 'குறும்பா'. உருவத்தில் குறுகியது. எனவே 'குறும்பா'. படிக்கிறவர்கள் 'இவ்வளவு குறும்பா? 'என்று கேட்பார்கள்; எனவே உருவம், உள்ளடக்கம் இரண்டையுமே குறிக்கும் பொருத்தமான பெயர் குறும்பா.

இளம்பிறை என்ற சஞ்சிகையிலே 1965 ஜனவரியிலிருந்து மஹாகவி குறும்பாக்களை எழுதினார். 1966இல் மஹாகவியின் குறும்பா ஒரு தொகுதியாக வெளிவந்தது. பின்னர்' தமிழுக்கு அறிமுகமாகும் புதிதான கவிதை வடிவம்' என்னும் சிறப்புக் குறிப்புடன் மித்ர பதிப்பக வெளியீடாக 2002ஆம் ஆண்டில் வெளி வந்த இத்தொகுப்பின் உள்ளே 100 குறும்பாக்கள்' என்னும் அறிமுகமும் இடம்பெற்றிருந்தது.

'மஹாகவி குறும்பா' என்னும் தொகுப்பில் முதலாவதாக இடம்பெற்றிருக்கும் குறும்பா:

'உத்தேசம் வயது பதினேழாம்.
உடல் இளைக்க ஆடல் பயின் றாளாம்.
எத்தேசத் தெவ்வரங்கும்
ஏறாளாம்! ஆசிரியர்
ஒத்தாசையால்,பயிற்சி பாழாம்' (ப. 27)

தமிழரின் சொத்தான ஓர் அரியகலை, நமது கண் முன்னாலேயே பாழாக்கப் படுவதை மஹாகவி இக் குறும்பாவில் படம்பிடித்துக் காட்டுகின்றார். இந்த அவலத்தை, ஆபாசமற்ற வார்த்தைகளில், ஆனால் உயிர்த் துடிப்பு சற்றும் குலைந்து போகாத வகையில் சித்திரித்துக் காட்டி இருப்பது மஹாகவிக்கே உரிய தனிச் சிறப்பு ஆகும்.

மேலும், மஹாகவி பழைய மரபான யாப்பு வடிவங்களைப் பேச்சு வீசைப் பாங்கில் எளிமைப்படுத்தினார். சாதாரண பேச்சு வழக்குச் சொற்கள் கருத்து தொடர்புகளுக்கு ஏற்ற வகையில் சிறு வாக்கியங்களாகத் தொடரும் போதுஅவற்றினூடே வெண்பா, விருத்தம், கட்டளைக் கலிப்பா முதலிய யாப்பு வகைகளின் வடிவ நிலை புலப்பட்டு நிற்றல் மஹாகவி கவிதைகள் பலவற்றின் பொதுப் பண்பாகும்.

சோமு வாதம்பி சுறுக்காய் வெளிக்கிடன்
நேரமாச்செல்லே? நெடுக இருக்கிறை?
என்னதவிற்காரரர் இன்னும் வரவில்லை?
ஒத்துக்காரர்தான் அடுக்களைக்குள் நிற்கிறார்
ஊமையன்ரை காரருக்குச் சொன்னியெல்லே..?
சொல்லிவிட்டேன்
காரை இன்னும் காணன் வருவானோ கட்டாயம்?
வந்து விட்டான் போல வரட்டும் வெளிக்கிடுவம்
(கோடை நாடகம் உரையாடற் பகுதி)

'நவீன உள்ளடக்கங்களை வெளியிட யாப்பு உதவாது' என்ற புதுக்கவிதையாளரின் கொள்கை ஆதாரம் அற்றது எனக் காட்டியவர் இவர் என்று கூறுகிறார் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்.

இன்றைய நடைமுறை வாழ்க்கையை யதார்த்தபூர்வமாக கவிதையில் சித்தரித்து காட்டியமை தமிழ் கவிதைக்கு மஹாகவி வழங்கிய முக்கிய பங்களிப்பாகும்.

'இன்னவைதாம் கவிஎழுத
ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை, நீர் திருப்பிச்
சொல்லாதீர், சோலை கடல்
மின்னல், முகில், தென்றலினை
மறவுங்கள். மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றை பாடுங்கள்'

என்று தன் ஆரம்ப காலத்திலேயே அவர் கவிதை எழுதினார். நிகழ்கால பிரச்சினைகளையும், கவிதையின் பாடுபொருளாக்கி அதனை இன்றைய யுகத்திற்கு இழுத்து வரல் அவசியம் என்று பிற்காலத்தில் அவர் எழுதினார்.

'இன்றைய காலத் திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத் தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத் திழப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுக்கள்'

இவரது கவிதைகளின் பாடுபொருள்களில் முக்கிய அம்சமாக சமகால உணர்வும், சமூக உணர்வும் அதிகம் காணப்படுகின்றன. இவையே மஹாகவியின் கவிதையாக்கங்கள் பலவற்றுக்கும் அடிநாதமாக அமைந்த உணர்வு நிலை.

அவர் தனது மண், அதன் சமூகபண்பாட்டு அம்சங்கள் அங்கு வாழும் தொழிலாளர்கள், விவசாயிகள், கலைஞர் முதலியோரது முயற்சி, திறன் ஆகியவற்றில் ஈடுபாடும் கொண்டிருந்தார்.

ஏழைகள், பாதிக்கப்பட்ட மக்கள், நடுத்தர வர்க்கத்தினர் என்போர் மீது அவருக்கு மிகுந்த அனுதாபம் ஏற்பட்டிருந்தது. அவர்களின் அந்த நிலைக்கு காரணமான சமூக முரண்பாடுகள் மீது அவர் வெறுப்புக் கொண்டார். அவரது பல்வேறு கவிதையாக்கங்களிலும் புலப்பட்டு நிற்கின்ற உணர்வு நிலைகள் இவைகள் எனலாம்.

மஹாகவியின் இயற்பெயர் து. உருத்திரமூர்த்தி. இவர் 1927 ஜனவரி 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அளவெட்டி என்னும் கிராமத்தில் பிறந்தார். தமது 14ஆம் வயதில் கவிதை எழுத ஆரம்பித்தார். இவர் ஆரம்பத்தில் பண்டிதன் என்னும் புனைபெயரில் கவிதைகளை எழுதினார். பின்னர் மஹாகவி என்னும் புனைபெயரைத் துணிச்சலோடும் நம்பிக்கையோடும் சூட்டிக்கொண்டார். புதுக்கம்பன், புதுநாப்புலவன், மாபாடி, மஹாலட்சுமி முதலிய புனைபெயர்களிலும் கவிதை படைத்துள்ளார். தமது 16ஆம் வயதில் எழுதிய கவிதைகளை வானகம், புரட்சி, கவிக்கன்னி ஆகிய தலைப்புக்களில் சிறிய கையெழுத்துத் தொகுதிகளாக வெளியிட்டார் ;

இவர், தமது 28ஆம் வயதில் திருமணம் முடித்தார். பாண்டியன் சேரன், சோழன், இனியாள், ஔவை ஆகிய ஐந்து பிள்ளைகளின் தகப்பன் ஆவார்.

1945 நவம்பர் 20இல் கொழும்பு திறைசேரியில் எழுதுவினைஞராக தனது அரச சேவையை ஆரம்பித்த இவர், தொடர்ந்து திருகோணமலை கடற்படை அலுவலகத்திலும், பின்னர் கொழும்பு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திலும் பணியாற்றி, 1967இல் இலங்கை நிர்வாக சேவைக்கு தேர்வு பெற்றார். அதன்பின் மாவட்டக் காணி அதிகாரியாக (DLO) மன்னாரில் நியமனம் பெற்று, பின்னர் யாழ்ப்பாண மாவட்டக் காணி அதிகாரி (1968 - 1969), மட்டக்களப்பு அரச செயலகத் துணைவர் (1970) ஆகிய பதவிகளை வகித்து, 1971இல் கொழும்பு அரச கரும மொழித் திணைக்களத்தில் உதவி ஆணையாளராக நியமனம் பெற்றார்.

(1) வள்ளி (2) வீடும் வெளியும் (3) மஹாகவி கவிதைகள் (4) மஹாகவியின் ஆறு காவியங்கள்: கல்லழகி, சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கண்மணியாள் காதை, கந்தப்ப சபதம், தகனம் (5) மஹாகவியின் மூன்று நாடகங்கள்: கோடை, புதியதொரு வீடு, முற்றிற்று(6) நூறு குறும்பாக் கவிதைகள் என்பன மஹாகவியின் நூல்களாக வெளிவந்துள்ளன.

குறும்பா வடிவத்தை அறிமுகப்படுத்தியமை, பேச்சோசைப் பாங்கில் யாப்பு இலக்கணத்தில் அமைந்த கவிதைகளை எழுதியமை, காவிய வளர்ச்சிப் போக்கில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தியமை போன்ற செயற்பாடுகளின் முன்னோடி முதல்வர் மஹாகவி, 20.06.1971 அன்று இருதய நோயினால் அமரரானார்.




# பிரசன்னாவுக்கும் இருக்கிறதா கொலையில் தொடர்ப எவரையும் சந்தேகப்படுவதுதானே பொலிசாரின் மரப!

30

"அடடா... ஊர்வசி அக்கா இன்னிக்கி நேரத்தோட வந்துட்டீங்க போல...?" என்று கேட்ட படியே தனது கையில் இருந்த பத்திரிகையை கட்டிலின் மீது போட்டாள் பிரசாந்தினி.

"ஆமாம் பிரசாந்தினி இன்னிக்கி கொஞ்சம் நேரத்தோடயே வந்துட்டேன். ம்... உங்கள் எக்சேம் முடிந்து விட்டதா?"

"ஆமாம் அக்கா எல்லாம் முடிஞ்சிரிச்சி!"

"ம்... இதென்ன பேப்பர் எல்லாம் வாங்கி வந்திருக்கீங்க உங்களுக்கு பேப்பர் எல்லாம் படிக்க நேரமிருக்கா?" "படிப்பதற்கென்றால் நேரம் குறைவுதான் அக்கா... ஆனால், இன்றைய பத்திரிகை எனக்கு முக்கியத்துவம் வாய்ந்தது...அதுதான் இன்டைக்கு பேப்பரை வாங்கினேன்!"

"ஓ... அப்படியோ... அப்படி என்ன முக்கியத்துவம் அதில் இருக்கிறது?"

"அதைக் கொஞ்சம் நீங்களே படித்துப் பாருங்களேன்!" என்று சொல்லியப்படியே, அந்த பத்திரிகையை எடுத்து சரண்யாவின் கையில் கொடுத்தாள் பிரசாந்தினி.

பத்திரிகையைக் கையில் எடுத்தாள் சரண்யா.

அது, 'சூரியோதம்' என்ற தினசரிப் பத்திரிகை.

"இரண்டாம் பக்கத்தைப் பாருங்கள் அக்கா!" என்று

அந்தப் பக்கத்தை காட்டினாள் பிரசாந்தினி.

சரண்யாவின் விழிகள், அந்தப்பக்கத்தை மேய்ந்தன.

பல்கலைக்கழக மாணவனதும் மாணவியினதும் கொலை பொலிசாருக்கே மர்மம்!

இது தலைப்பு!

கடந்த ஜுன் மாதம் 12ஆம் திகதி ஹட்டனின் உள்ள வட்டவளையில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். என்று இதுவரையில் நம்பப்பட்டு வந்த பல்கலைக்கழக மாணவனதும் மாணவியினதும் மரணம் கொலை என்று இப்போது பொலிஸார் ஊர்ஜிதம் செய்துள்ளார்கள்.

வட்டவளையில் இருந்து தற்கொலை செய்து கொள்ளப் போவதாக அந்த பல்கலைக்கழக மாணவி கடிதம் எழுதி வைத்திருந்தாலும் பல்கலைக்கழக மாணவனான தனது காதலனுடன் அன்று அவள் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளவில்லை என்றும் வேறு யாரோ ஒருவர் அவர்கள் இருவரையும் பாதாளத்திற்குள் தள்ளி விட்டிருக்கிறார்கள் என்று இப்போது பொலிஸார் கண்டுபிடித்திருக்கிறார்கள்!

ஆனாலும், அப்படி தள்ளிவிட்டது யார் என்ற விபரத்தை இன்னமும் பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியாது போயுள்ளது.

இதனால் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நடத்துவதற்காக துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜிடம் ஒப்படைத்திருப்பதாக வட்டவளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ராகவன் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

செய்தியை முழுமையாகப்படித்து விட்டு, மெல்ல நிமிர்ந்து பிரசாந்தினியைப் பார்த்தாள்.

அவள் மனம் எண்ணியது.

"தீபன் தீபிகா கொலையைப் பற்றி இவளிடம் எப்படி விசாரணையை ஆரம்பிப்பது என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அதற்கு அவளே இப்போது வழி அமைத்துக் கொடுத்து விட்டாளே! இனி அவளிடம் நேரிடையாகவே இதைப்பற்றிக் கேட்டு விடலாமே!

சாட்டையை சுழற்றிவிட நினைத்தாள் சரண்யா.

"இந்த இருவரும் உங்களுடைய பல்கலைக்கழக நண்பர்களா?"

"இல்லை... ஆனால் இறந்து போன தீபன் எனது நெருங்கிய நண்பன், தீபிகாவுடன் நான் பேசியது கூட இல்லை!"

"தீபன் தீபிகா என்பது தான் இறந்து போனவர்களின் பெயரா?"

"ஆமாம் அக்கா... தீபன் என்பது மிகவும் நல்ல நேர்மையான நடத்தையைக் கொண்ட ஒரு நண்பன்! அவனுக்கு நடந்த இந்த துரதிஷ்டசம்பவத்தைப் பற்றி எண்ணும் போதுதான் எனக்கும் கவலையாக இருக்கிறது!"

"தீபன் என்பது உங்களுக்கும் முக்கியமான ஒரு நபரா பிரசாந்தினி!"

"சரண்யா இப்படிக் கேட்டதும், திடீரென்று பிரசாந்தினியின் முகத்தில் இருள் சூழ்ந்தது.

விழிகளில் இருந்து, நீர்த்துளிகள் உருண்டோடி வந்தன!

இப்போது, கரகரத்த குரலில் அவள் பேசினாள்.

"தீபன் எனது வாழ்வில் முக்கிய நபரானது சுமார் ஏழு எட்டு வருடங்களுக்கு முன்பே... அந்தக் கலையை நான் இப்போது உங்களுக்கு சொல்லுகிறேன் அக்கா... அப்போது என் மனதில் உள்ள பாரம் கொஞ்சமாவது குறையும்!"

"நான் உங்களிடம் தப்பாக ஏதாவது கேட்டு விட்டேனா?"

"ஐயோ அப்படி எதுவும் இல்லை அக்கா... உங்களிடம் அதைப் பற்றி பேசுவதற்காகத்தான் நான் இந்த பேப்பரையே வாங்கி வந்தேன்... காரணம் நீங்க என்னைவிட மூத்தவர், அதனால் எனக்கு ஏதாவது ஆலோசனை சொல்வீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன்."

தீபன் தீபிகா கொலையைப் பற்றி பிரசாந்தினிக்கு எதுவுமே தெரியாமல் இருந்தால் கூட, தீபனைப் பற்றிய சில ரகசியமான விஷயங்கள் பிரசாந்தினிக்கு கண்டிப்பாக தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது என்று சரண்யா உறுதியாக நம்பினாள். அதனால், அவள் வாய் மூலமாகவே அறிந்து கொள்ள விரும்பினாள் அவள்.

"சொல்லுங்கள் பிரசாந்தினி உங்களுக்கு என்ன உதவி தேவையோ அதையும் கேளுங்கள்.... எனது அண்ணா பொலிஸில் இருப்பதால் நீங்கள் எதற்கும் பயப்படத் தேவை இல்லை!"

"பேனா நண்பர்கள் மூலமாகத்தான் எனக்கு தீபனின் நட்பு கிடைத்தது. அப்போது நான் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். ஓலெவல் முடித்த பிறகு, விடுமுறை நாட்களின் தீபனுக்கு கடிதம் எழுதினேன். தீபனும் எனக்கு கடிதம் எழுதுவார். நாங்கள் மிகவும் ஏழைகள் அக்கா. எனக்கு இரண்டு தம்பிகளும் இரண்டு தங்கைகளும் இருக்கிறார்கள். அப்பா கூலி வேலை செய்கிறார். அம்மா மண் சட்டி, பானைகள் செய்யும் இடத்தில் வேலை செய்கிறார்! "கவலைப்படாதீங்க பிரசாந்தினி... உங்கள் நல்ல மனசுக்கு நீங்க நல்லா இருப்பீங்க... சரி உங்கட தீபனைப் பற்றி சொல்லுங்களேன்!"

அடுத்து, தீபனைப் பற்றி பிரசாந்தினி சொன்ன தகவல்கள்,

சரண்யாவை வியப்பினுள் வீழ்த்தின.

(இளமை தொடரும்)



## கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.
ஆமாம்,
இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:
**கொல்லுவதோ இளமை**
தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்
கொழும்பு10.

# சவாலான சூழலுக்கு மத்தியில் மெச்சத்தக்க வருமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ள அமானா தகாஃபுல்

அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ், 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மெச்சத்தக்க நிதியியல் பெறுபேறுகள் மற்றும் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

இக்காலாண்டினுள் மொத்த வரையப்பட்ட கட்டுப்பண வருமானமாக ரூபா 889 மில்லியனுடன் 42% என்ற வேகமான ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டு முழுவதும் நிறுவனத்தால் பதிவாக்கப்பட்ட அதிசிறந்த வளர்ச்சியைத் தொடர்ந்து நிலைநாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் சீரான மற்றும் விரைவான வளர்ச்சியைப் பேணி வருகின்றமைக்காக பல்வேறு விருதுகளையும் வென்றுள்ளது. The Global Economics வழங்கிய "இலங்கையில் வேகமாக வளர்ச்சி கண்டு வரும் காப்புறுதி நிறுவனம் என்ற விருதும் இதில் அடங்கியுள்ளது.



2022 1 ஆம் காலாண்டிற்கான இந்த 42% ஆண்டு வளர்ச்சியானது, 2021 1 ஆம் காலாண்டில் அமானா இன்சூரன்ஸ் அடையப்பெற்ற 27% வளர்ச்சிக்கு மேலாக உள்ளதுடன், இது கடந்த இரண்டு ஆண்டுகளில் நிறுவனம் அடைந்துள்ள பன்மடங்கு அதிவேக வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த மொத்த வரையப்பட்ட கட்டுப்பண வருமான வளர்ச்சி வீதங்கள் உள்நாட்டு பொதுக் காப்புறுதித் துறையில் மிக உயர்வாக காணப்படுகின்றன.

2022 1 ஆம் காலாண்டில், மோட்டார் காப்புறுதிக்கான மொத்த வரையப்பட்ட கட்டுப்பணம் 50% ஆல் அதிகரித்துள்ள அதே நேரத்தில், மோட்டார் அல்லாத காப்புறுதியின் மொத்த வரையப்பட்ட கட்டுப்பணங்களும் இந்த காலகட்டத்தில் 34% கணிசமான வளர்ச்சியைப் பெற்றுள்ளன.

# 'தற்பொழுது படியுங்கள் பின்னர் பணம் செலுத்துங்கள்':




வெற்றிகரமான வாழ்க்கை மற்றும் தொழிலுக்கு தரமான கல்வி அவசியம் என்பதில் ஆழநெவய உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு இலங்கையின் பொருளதாரம் மந்தநிலையில் காணப்படுகின்ற இந்த கடினமான இந்த தருணத்தில் உயர்கல்வியை நடுத்தர வர்க்கத்தினருக்கு தடையின்றி வழங்குவது என்ற நோக்கத்தின் விரிவாக்கமே இந்தப் புதிய திட்டமாகும்.

இது தொடர்பில் ஆழநெவய இன் நிறுவுனரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கனகநாயகம் சயந்தன் குறிப்பிடுகையில், 'இலங்கையிலுள்ள எதிர்கால சந்ததியினர் தமது கல்வி/

முன்னேற்றகரமான வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டு நிதி மற்றும் டுகைநளவலடந உதவிகளை வழங்கும் தளமான Moneta, மாணவர்கள் துறைசார்/கல்விசார் தகுதியைப் பெறுக்கூடிய வகையில் கல்விக்கான நிதித் தடைகளை நீக்குவதற்கும், நான்கு தவணைகளில் வட்டி இன்றி கட்டணங்களைச் செலுத்தும் வகையிலும் தனித்துவமான தயாரிப்பொன்றை முதன் முறையாக இலங்கையில் அறிமுகப்படுத்தியது. இந்நாட்டின் உயர்கல்வியில் மறுக்க முடியாத முன்னணியாளராகத் திகழும் Achievers Lanka Business School உடன் இணைந்த கூட்டாண்மையாக இலங்கையில் முதல் தடவையாக 'தற்பொழுது படிக்கவும், பின்னர் பணம் செலுத்தவும்' முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் ரீதியான அபிலாஷைகளை கல்வியின் ஊடாக அடைந்து கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். தமது கல்வியைத் தொடர்வதற்கு எதிர்பார்த்துள்ளபோதும், அதற்குத் தேவையான முதலீட்டை மேற்கொள்ள முடியாதுள்ளவர்களுக்கு இது சிறந்ததொரு வாய்ப்பாக அமையும். ' என்றார்.

# இலங்கையில் 'Hikvision Partner Summit 2022'

வீடியோ கண்காணிப்பு பொருட்கள் மற்றும் தீர்வுகளின் முன்னணி விநியோகஸ்தரும் இலங்கையில் Hikvision இற்கான தேசிய விநியோகஸ்தருமான IT Gallery, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நேரடி பங்குபற்றுதலுடன் பௌதீக ரீதியாக "Hikvision Partner Summit 2022" நிகழ்வை சமீபத்தில் நடாத்தியிருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதன் நாடளாவிய பங்காளிகளின் செயல்திறனை அங்கீகரிப்பதற்காக, Hikvision இன் 300 இற்கும் அதிக பங்காளிகளின் பங்குபற்றலுடன் இம்மாநாடு இடம்பெற்றது.

இந்நிகழ்வு குறித்து கருத்துத் தெரிவித்த, IT Gallery Computers Private Limited யின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான டிலந்த பெரேரா, "Hikvision இலங்கையிலும் உலகெங்கிலும் உலகின் மிகப்பெரிய வீடியோ கண்காணிப்பு தீர்வுகளை உற்பத்தி செய்யும் நிறுவனம் எனும் வகையில், ஒரு உறுதியான நற்பெயரைக் கட்டியெழுப்பியுள்ளதென நாம் நம்புகிறோம். இந்த ஆண்டுக்கான பாதுகாப்பு சேவை தொடர்பான சந்தையில் உள்ள சிறந்த நிலைமைகளைப் பற்றி எமது கூட்டாளர்களுக்கு அறிவிப்பதும், அது தொடர்பில் தெளிவூட்டுவதும், முக்கியம் என்பதன் அடிப்படையில், இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் போது இடம்பெற்ற கருத்து பகிர்வின் போது, இத்தொழில்துறையானது வெறுமனே பாதுகாப்பை மாத்திரம் கருத்தில் கொள்வதிலிருந்து எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதை உள்ளடக்கியதாக அமைந்தது. சமூகங்கள், நிறுவனங்கள் ஆகிய அனைத்து பிரிவினருக்கும் உரிய பாதுகாப்பு மற்றும் நிலைபேறான தன்மையின் புதிய நிலைகளை கொண்டுவரும் அதே நேரத்தில், பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் தொடர்பில் பரந்த அளவிலான செயல்பாடுகளை கொண்டதாக இது அமைந்திருந்தது." என்றார்.




பாதுகாப்பு சேவையில் அதிக பிரபலமடைந்து வரும் விடயமான செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பிலும் இம்மாநாட்டில் அதிகளவில் தெளிவூட்டப்பட்டது. பெரும்பாலான வாடிக்கையாளர்கள் AI இன் பெறுமதியை உணர்ந்துள்ளதோடு, தன்னியக்க வாகன இலக்கத்தகடு அடையாளம் காணுதல் (ANPR), இயக்கங்கள் தொடர்பான தன்னியக்க முன்னறிவித்தல்கள், தவறான எச்சரிக்கை மணி பிழைகளின் குறைப்பு போன்ற பல்வேறு விடயங்களில், AI பயன்பாடுகளுக்கான புதிய செயலிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி, காட்சி திறன்களை மேம்படுத்துதல் உள்ளிட்ட, இணையம் தொடர்பான பொருட்களில் (IoT) பாதுகாப்புத் துறையானது உலகின் ஒரு முக்கிய அங்கமாகியுள்ளது. AIoT ஆனது ஆற்றல், பொருட்கள் போக்குவரத்து சேவை, உற்பத்தி, சில்லறை விற்பனை, கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு தொழில்துறைகளையும் டிஜிட்டல் மயமாக்கி, வியாபித்துள்ளது.

# இலங்கையின் சிறுவர்களுக்கான எட்டு நெனச கல்விச் சேனல்களை வழங்கும் Dialog Television

Dialog TELEVISION
நெனச TV
அலைவரிசை இலக்கம் 122 - 129

அறிவுள்ள எதிர்கால சந்ததியினருக்காக Dialog நிறுவனம் தனது தொலைக்காட்சி வலையமைப்பில் எட்டு இலவச நெனச கல்வி அலைவரிசைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அனைத்து வயது மாணவர்களுக்கும், குறிப்பாக அவர்களின் கல்வி ஆண்டுகளுக்கான ஆயத்தப்படுத்தலில் தனது உதவியை வழங்குவதே இந்த எட்டு அலைவரிசைகளினதும் பிரதான நோக்கமாகும். DialogTelevision ஆனது இந்த அலைவரிசைகளில் சிறுவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இலங்கையில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவுடன் இணைந்துள்ளதோடு புதுமையான கற்பித்தல் முறைகள் மூலம் அனைத்து பாடத்திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அலைவரிசைகளின் அனைத்து கல்வி நிகழ்ச்சிகளும், Dialog Television முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு திட்டங்கள் மூலம் கண்டுகொள்ளக்கூடியதாக இருப்பதோடு, இக்கல்வி நிகழ்ச்சிகள் தேசிய பாடத்திட்டத்தின்படி நடத்தப்படும். பாடசாலை கல்வியில் 1 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புக்களுக்கான பாடத்திட்டத்தை உள்ளடக்கிய விதத்தில் பாடத்திட்டம் அமைந்திருப்பது பாடசாலைகளுக்கு பெரும் ஊக்கமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# TCL 20L+ உடன் தனது மொபைல் சாதனங்கள் தெரிவை விரிவாக்கம் செய்துள்ள சிங்கர்



தேசத்தின் தொழில்நுட்ப சாதனங்களின் பங்காளராகத் திகழும் சிங்கர் ஸ்ரீ லங்கா, தனது மொபைல் தொலைபேசித் தெரிவுகளில் TCL 20L+ ஐ உள்ளடக்கியுள்ளதனூடாக அந்தத் தெரிவுகளை விரிவாக்கம் செய்துள்ளது. 20L+ என்பது TCL 20 திரைத் தரம் அடிப்படையிலான பரந்த மொபைல் சாதனங்கள் தெரிவில் அங்கமாக அமைந்துள்ளது. உயர் தரம் வாய்ந்த திரைகள் வடிவமைப்பில் TCL தன்வசம் கொண்டுள்ள நிபுணத்துவத்தை மேலும் உறுதி செய்யும் வகையில் இந்த புதிய அறிமுகம் அமைந்துள்ளது.

TCL 20L+ இல் உயர் வினைத்திறனான உள்ளம்சங்கள் அடங்கியுள்ளன. இவற்றில்6.67 inch FHD+ 60Hz திரை உடன் NXTVISION தொழில்நுட்பம், Qualcomm Snapdragon 662 Octacore processor ஆகியன காணப்படுகின்றன. சிங்கர் ஸ்ரீ லங்காவின் web store (www.singersl.com) இல் இந்த சாதனம் விற்பனைக்குள்ளதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த சிங்கர் விற்பனை நிலையங்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற விற்பனை விநியோகத்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யலாம். Milky Way Black மற்றும் North Star Blueஆகிய இரு வர்ணத் தெரிவுகளில் இவை அமைந்துள்ளன.

சிங்கர் ஸ்ரீ லங்கா வினைத்திறன் தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்துவதுடன், உயர் வினைத்திறன் வாய்ந்த சாதனங்களை இலங்கை சந்தைக்கு கொண்டு வந்து வழங்குகின்றது. Rheinland Circular Polarization சான்றளிப்பு மற்றும் Low Blue Light சான்றளிப்பு ஆகியன TCL 20L+ க்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த சாதனத்தில் சிறந்த கமரா கட்டமைப்பு காணப்படுகின்றது. நான்கு பின்புற கமராக்கள் அடங்கியுள்ளதுடன், இதில் 64megapixel primary shooter, 8 megapixel wide angle, 2megapixel macro மற்றும் 2megapixel depth கமராக்கள் ஆகியன அடங்கியுள்ளன. 16 மெகா பிக்சல் முன்புற கமரா selfie shooter ஆக காணப்படுவதுடன், நடுத்தரளவு விலையிடலில் அமைந்துள்ளது.

# மேற்கு அவுஸ்திரேலிய கல்விமுறை இலங்கையில் ஆரம்பம்

இலங்கைக்கு முதல் தடவையாக மேற்கு அவுஸ்திரேலிய கல்விமுறையை அறிமுகப்படுத்தும் முகமாக IIHS (International Instituteof Health Sciences) நிறுவனம், ISWA என்னும் சர்வதேசப் பாடசாலையை (The International School of Western Australia) (www.iswa.edu.lk) இலங்கையில் நிறுவியுள்ளது.

இலங்கையில் காணப்படுகின்ற பிரித்தானிய கல்விமுறைக்கு புறம்பாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற அவுஸ்திரேலிய கல்விமுறையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் வகையிலான மேற்படி திட்டத்துக்கான உடன்படிக்கையில் மேற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் சார்பாக SCSA நிறுவனமும் IIHS நிறுவனமும் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளன.

அதன் பிரகாரம், IIHS நிறுவனத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்படுகின்ற The International School of Western Australia நிறுவனத்தின் மூலம் மாணவர்களுக்கு அவுஸ்திரேலிய கல்விமுறையின் கீழ் கல்வி கற்பதற்கான வாய்ப்பு கிடைக்கும். இறுதியில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் அவர்களுக்கு வழங்கப்படும். அவுஸ்திரேலியாவில் உயர் கல்விக்கான வாய்ப்புகளுக்கு முன்னுரிமை கிடைக்கின்றமை, வீசாவுக்கு விண்ணப்பிக்கும் போதும்,தொழிலுக்கு விண்ணப்பிக்கும் போதும் முன்னுரிமை கிடைக்கின்றமை போன்ற பல்வேறு நன்மைகள் WACE இன் கீழ் கற்கும் மாணவர்களுக்கு கிடைக்கும். உள்நாட்டு மற்றும் லண்டன் O/L பரீட்சையில் ஆங்கிலம்,கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு B சித்தியுடைய மாணவர்களுக்கு இப் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். C சித்தியுடைய மாணவர்களுக்கும் 03 மாத முன்கல்வி பாடநெறியை பூர்த்திசெய்துவிட்டு இதில் இணைய முடியும்.



# 105வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண் மற்றும் செவிப்புலன் பரிசோதனையை இலவசமாக வழங்கும் Eric Rajapakse Opticians

100 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவம் கொண்ட இலங்கையின் முன்னணி கண் சிகிச்சை நிபுணர்களான Eric Rajapakse Opticians, தமது 105 வருட பயணத்தைக் கொண்டாடிடும் வகையில் அனைத்து கிளைகளிலும் இலவச கண் மற்றும் செவிப்புலன் பரிசோதனை முகாம்களை ஏற்பாடு செய்கின்றது.

இந்த பரிசோதனை முகாம்கள் தற்போது கொள்ளுப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, மாலபே மற்றும் கிரிபத்கொட கிளைகளில் நடைபெறவுள்ளன. மேலும் இம் முகாம்கள் ஜூன் மாதம் இறுதி வரை தொடரும். இலங்கை வாழ் மக்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள இந்நிலையில், அவர்களின் கண்பார்வை மற்றும் செவித்திறனை சிறந்த முறையில் கவனித்துக்கொள்வதற்கான வாய்ப்பை இந்த பரிசோதனை முகாம்கள் வழங்கும். பரிசோதனைகளைத் தொடர்ந்து, காட்சியறைகளில் கிடைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கண் மற்றும் செவிப்புலன் பராமரிப்புப் பொருட்களுக்கு சிறப்புத் தள்ளுபடியையும் பெறலாம். நுசiஉ சுயதயியமளந கண் மற்றும் செவிப்புலன் பரிசோதனை முகாம்கள் பற்றிய மேலதிக தகவல்களை 0115 355 555 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

Eric Rajapakse Opticians முகாமைத்துவப் பணிப்பாளர் ராஜீவ் ராஜபக்ஷ தெரிவிக்கையில், 'தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள இலங்கையர்கள் நெருக்கடியான காலகட்டத்தினை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறான சமயங்களில், சுய ஆரோக்கியம் முக்கியமான கவனிப்பைப் பெறுவதில்லை, ஆனால் அது அப்படி இருக்கக்கூடாது. எங்களது 105வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் தருணத்தில், எமது சக இலங்கையர்களின் பொருளாதாரச் சுமைகளை இலகுபடுத்துவதற்கும் அவர்களின் கண்கள் மற்றும் செவித்திறனை சிறப்பாகக் கவனித்துக்கொள்வதற்கும் நாம் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என தீர்மானித்தோம். அனைத்து இலங்கையர்களையும் தங்களின் அன்புக்குரியவர்களின் கண்கள் மற்றும் செவிப்புலன் ஆரோக்கியத்தினை பரிசோதிக்க இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.






# படித்ததும் பகர்வதும் 97



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### வீட்டுத் தோட்டங்கள்

எமது நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி, நீண்ட காலத்தில் பாரிய உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாக பொருளியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். இத்தகைய உணவுத் தட்டுப்பாட்டால் அதிகம் பாதிப்படையக்கூடிய இரண்டு உலக நாடுகளில் ஒன்றாக இலங்கையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமரும்கூட இவ்வருட ஆகஸ்ட் மாதமாகும்போது நம் நாடு பாரிய உணவுப் பிரச்சனையை எதிர் நோக்க வேண்டி வருமென எச்சரித்துள்ளார். விவசாய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி அதனை முறையாக தொடர்வதிலுள்ள இடையூறுகள், உற்பத்திப் பொருட்களுக்கான தட்டுப்பாடுக,ள், காலநிலை மாற்றம் போன்றன இதற்கு காரணமாக இருக்கின்றன எனலாம்.

இப்பாரிய சவாலை வெற்றிகரமாக எதிர் நோக்குவதற்கு ஒவ்வொருவரும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த வகையில் உணவு தட்டுப்பாட்டை ஓரளவுக்கேனும் தவிர்த்துக் கொள்வதற்கான



மிகச் சிறந்த நீண்ட கால திட்டமாக வீட்டுத்தோட்ட பயிர்செய்கையை எடுத்துக் கூறுகின்றனர். ஒவ்வொருவரும் தமது வீட்டுத்தோட்டங்களை அது சிறியதாக இருப்பினும் அல்லது பெரியதாக இருப்பினும் சரியே, அவற்றை முறையாக பயன்படுத்திக் கொள்வது அவசியம்.

நகரப் பிரதேசங்களில் வசிப்போருக்கு போதிய பரப்பளவுள்ள வீட்டுத் தோட்டம் பொதுவாக இருப்பதில்லை. இவர்கள் தமது வீடுகளில் மலர்களை வளர்ப்பது போன்றேனும் உணவுப் பயிர்செய்கைகளை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டியது அவசியமாகும்.

வீடுகளுக்கு அன்றாடம் தேவைப்படுகின்ற மரக்கறிவகைகளான தக்காளி, போஞ்சி, கத்தரி, கறிமிளகாய், பச்சை மிளகாய் போன்றவற்றை வீட்டுப் பயிர்செய்கையில் இலகுவாக மேற்கொள்ள முடியும். இவற்றோடு இடவசதிக்கேற்ப மிளகு, கோப்பி, போன்றவற்றைக்கூட ஓரிரண்டு தாவரங்களாக நட்டு பயன்பெற முடியும்.

இத்தகைய பயிர்களைத்தான் வீட்டுத்தோட்டங்களில் மேற்கொள்ள வேண்டும் என்றில்லாமல் தத்தமது வீட்டுத் தோட்டத்தின் அளவு, அமைப்பு, பொருத்தம், தமது தேவை என்பவற்றுக்கேற்ப தீர்மானித்து பயன்படுத்திக் கொள்ள முடியும். இதன் மூலம் தமது தேவை போக மேலதிக வருமானத்தைக் கூட பெற்றுக்கொள்ள இயலும். இதற்கு ஒவ்வொரு தனி மனிதரினதும் ஆர்வமும் ஈடுபாடுமே அவசியமாகும்.

உரிய அரசாங்க திணைக்களங்களும், தனியார் நிறுவனங்களும், சமூக சேவை அமைப்புகளும் இவ்விடயத்தில் ஆலோசனை வழங்குதல், வழிகாட்டல்களை மேற்கொள்ளுதல், விதைகள், உரங்கள், கிருமிநாசினிகள் வழங்குதல் போன்ற வழிமுறைகள் மூலம் வீட்டுப் பயிர் செய்கை திட்டத்தை விரிவாக்க உதவிட முடியும் இது வீட்டுக்கும் நாட்டுக்கும் பெரும் பயனளிக்கும் சிறந்த பொருளாதாரத் திட்டமாக இருக்கும்.

## நெஞ்சுக்கு நீதி

வீட்டுத் தோட்டங்களில் நற்பயிர்கள் நட்டிடுவோம்
விரும்பும் உணவுகளை நல்லதாய்ப் பெற்றிடுவோம்
நாட்டின் பொருளாதாரம் வளர்த்திட இணைவோம்
நாங்களும் நல்லதில் பங்காளிகள் உணர்ந்திடுவோம்

## பிரிந்தார் பெருமை

### கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம்

சிறுவர்களுக்கு 'கதை சொல்லல்' என்பது ஒரு தனியான கலை. ஒரு சிலரால் மட்டுமே இக்கலையை சிறப்பாகக் கையாள முடியும். இத்துறையில் வெற்றிகரமாக முத்திரை பதித்த கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம். கடந்த 2022 மே மாதம் 11ம் திகதி இவ்வுலகை பிரிந்தார். வானொலியிலும், தொலைக்காட்சியிலும், மேடையிலும், பாடசாலையிலும் மட்டுமன்றி வெவ்வேறு நிகழ்வுகளில் தனக்கே உரிய தனிப்பாணியில் சிறுவர்களுக்கு கதை சொல்வதில் பிரபலம் பெற்றவர் இவர்.



மட்டக்களப்பு மாவட்ட, மஞ்சந்தொடுவாய் ஊரில் 1931ல் பிறந்த இவர் கலைத்துறையில் பல்வேறு சாதனைகள் புரிந்ததன் மூலம், தான் பிறந்த மண்ணுக்கு புகழ் சேர்த்தார். பத்திரிகை உலக ஜாம்பவான் எஸ். டி. சிவநாயகம் பிரதம ஆசிரியராக இருந்து, இலங்கையில் வெளிவந்த பிரபலமான பத்திரிகைகளான தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் துணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

பயங்கர இரவு, அன்பு தந்த பரிசு, உறைபனித் தாத்தா, சிறுவர் கதை மலர் என்பன இவர் வெளியிட்ட நூல்களாகும். இவரது ஆற்றல், திறமை, சாதனைகளுக்காக பல முக்கிய பிரமுகர்களாலும், பல அமைப்புகளாலும் பல்வேறு வகையில் சிறப்பித்து, கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்.

வடகிழக்கு மாகான சபையின் சிறுவர் இலக்கியத்துக்கான சாகித்திய மண்டல பரிசு, மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது, உட்பட பல பரிசு களையும், விருதுகளையும் பெற்றுள்ள இவருக்கு புலவர்மணி ஏ. பெரியதம்பி பிள்ளை "நகைச்சுவை குமரன்" என்றும், வித்துவான் பண்டிதமணி வி. கந்தையா "வில்லிசை செல்வன்" என்றும், திருமுருக கிருபானந்த வாரியார் 'அருட்கலைத் திலகம்' என்றும், முன்னாள் அமைச்சர் செ. இராசதுரை 'வில்லிசை செல்வர்' என்றும் பட்டங்கள் வழங்கி பெருமை படுத்தியுள்ளனர்.


கொழும்பு தமிழ் சங்கம் "சிறுவர் இலக்கிய செம்மல்", மட்டக்களப்பு இந்து சமய அபிவிருத்தி சங்கம் "கலைக்குரிசில்" இலங்கை அரசாங்க கலாசார அமைச்சு "கலாபூஷணம்" என சிறப்பு விருதுகளையும் வழங்கி மாஸ்டர் சிவலிங்கத்தை கௌரவித்துள்ளன.

தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் சுதந்திர பத்திரிகையாளனாக நான் சேவையாற்றிய காலத்தில் இவரோடு சிநேகத்துடன் கதைத்து, கலந்துரையாடிய விடயங்கள் இன்றும் என்னால் மறக்க முடியாதவை. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார் உட்பட அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

## புது வரவு

### "ஓசை" யின் சங்கமம்

மூதூர் முகைதீன் தொகுத்து வழங்கியுள்ள, நூறு கவிஞர்களின் நூறு கவிதைகள் அடங்கிய "சங்கமம்" எனும் கவிதைத் தொகுதி மூதூர் கலை இலக்,கிய ஒன்றியத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது.



2005 முதல் 2015 வரை வெளிவந்த "ஓசை" எனும் கவிதை சிற்றிதழில் கவிதை படைத்த நூறு கவிஞர்களின் கவிதைகளே இந்நூலில் இடம்பிடித்துள்ளன. மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டும் கலந்து பல்வேறு தலைப்புகளில் உணர்வுகளை தூண்டும் கவிதைகளாக இக்கவிதைகள் இருப்பது விசேடமாக குறிப்பிடத்தக்கது.

பத்து ஆண்டுகளில் இருபத்தி எட்டு இதழ்களாக வெளிவந்த 'ஓசை' கவிதை சிற்றிதழை பற்றி பிரபல எழுத்தாளர் திக்குவல்லை கமால் வீரகேசரியில் 2009ல் எழுதியுள்ள விமர்சன குறிப்பும், ஓசையின் இருபத்தி ஐந்தாவது இதழ் தொடர்பாக 2014ல் நவமணியில் பிரசுரமான விமர்சனக் குறிப்பும், இக்கவிதை தொகுதியான 'சங்கமம்' பற்றி ஏ. எஸ். உபைதுல்லாஹ்வின் நோக்கும் இந்நூலில் ஆரம்பத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பல பிரதேசங்களிலும் வாழுகின்ற வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட கவிஞர்கள் எழுதியுள்ள கவிதைகள் என்பதால் இக் கவிதை தொகுதியிலுள்ள கவிதைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கண்ணோட்டத்தில் எழுதப்பட்டு, வித்தியாசமான உணர்வுகளை தூண்டுகின்ற பல்சுவை கவிதைகளாக இருப்பது விசேடமாக குறிப்பிடத்தக்க அம்சமாகும் .

நூல்: **சங்கமம்** வகை: **கவிதைத் தொகுதி**, தொகுப்பாசிரியர்: **மூதூர் முகைதீன்**, முதற்பதிப்பு: **டிசம்பர் 2021**, பக்கங்கள்: **xvii + 126**, வெளியீடு: **மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்**, விலை: **ரூபா. 300.00**, தொடர்புகளுக்கு: **0774203500**

## நலமே வாழ்வோம்

### அச்சுறுத்தும் குரங்கம்மை

உலகை அச்சுறுத்தும் மற்றுமொரு பயங்கர நோயாக குரங்கம்மை (monkeypox) விஸ்வரூபமெடுத்துள்ளது. இந்த வைரஸ் தொற்றின் தாக்கம் உலகில் அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இத்தொற்று மேற்கு, மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் அதிகமாகக் காணப்படும் வைரஸ் மூலம் பரவும் நோயாகும். இது சின்னம்மையைப் போன்ற அரிய தொற்றுநோய் எனப்படுகிறது. ஆனால் சின்னம்மையைவிட இதன் தாக்கம் சற்று குறைவு என்பது ஆறுதல். காய்ச்சல், தலைவலி, முகத்திலிருந்து தொடங்கி உடலுக்கு பரவும் கொப்புளங்கள் போன்றவை இதன் ஆரம்ப அறிகுறிகள். இளைஞர்கள், குழந்தைகளுக்கு இந்த வைரஸ் தாக்கும் அபாயம் அதிகமென வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.




குரங்கம்மையை ஏற்படுத்தும் வைரஸ் தோலின் மேற்புறத்தில் உள்ள உடைந்த உயிரிகள் மூலமாகவும், சுவாசக் குழாய் மூலமாகவும் பரவ வாய்ப்புள்ளது.

கண், காது, மூக்கு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மியூகோஸ் திசுக்கள் மூலமாகவும் பரவக்கூடும். தற்போது கனடா, பிரிட்டன், பெல்ஜியம், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, ஸ்பெயின், இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இதன் பாதிப்பு அதிகரித்து வருகிறது. குரங்கம்மை வைரஸ் தொற்றுக்கு உள்ளாவனர்களுடன் நெருங்கிய தொடர்புடைய நபர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு அமெரிக்க தீர்மானித்துள்ளது. இதேவேளை, உலகில் முதல் நாடாக பெல்ஜியம், குரங்கம்மையால் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தும் செயற்பாட்டை கட்டாயமாக்கியுள்ளது.

தற்போது பல நாடுகளில் பரவி வரும் 'மங்கிபொக்ஸ்' என்ற குரங்கம்மை குறித்து, இலங்கையின் வைத்தியசாலைக் கட்டமைப்பையும், வைத்தியவர்களையும் தெளிவூட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நோய் நம் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில், நாட்டுக்கு வந்துள்ள, வருகின்ற குரங்கம்மை தொற்றுடைய வெளிநாட்டவர்களை அடையாளம் காண விமான நிலைய தரப்புக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, விமான நிலையத்தில் இந்நோய் தொற்றுடையவர்களை இனங்கண்டு, அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பேசும் படம்



இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# வேலைகளைப் பொறுப்பெடுத்தல் ( Undertaking Tasks)



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 09



கே. பத்மானந்தன்

**ஒரு முகாமையாளர் ஒரு நிறுவனத்தில் ஒரு வேலையைப் பொறுப் பெடுப்பதற்கு முன் அல்லது ஆரம்பிப்பதற்கு முன் பல விடயங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். தான் செய்யப்போகின்ற வேலையின் முடிவு அல்லது பெறுபேறுகள் அல்லது விளைவுகள் (Completion of work or Out puts of the work)எவ்வாறு இருக்கும் என்பது பற்றிய தெளிவு, தான் குறிப்பிட்ட வேலையினைச் செய்யும்போது தானும் நிறுவனமும் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சனைகள் (Expected prob lems or Issues) பற்றிய தெளிவு, செய்து முடித்த பின் அந்த வேலையிலிருந்து நிறுவனம் பெறக்கூடிய இலாபம்( Profit) பற்றிய தெளிவு என்பன இருக்க வேண்டும் .**

அதே போல் முகாமையாளர் தான் செய்யப்போகின்ற வேலையின் மூலம் தனது நிறுவனத்திற்கு அதிகரித்த இலாபம் ஈட்டும் வழிவகைகளைப் பற்றியும் சிந்திக்கவேண்டும். இந்த விடயங்களிக் கருத்தில் கொண்டே முகாமையாளர் தான் ஒரு வேலையைத் தொடங்குவதா இல்லையா என்று தீர்மானிக்க வேண்டும். பல முகாமையாளர்கள் இவற்றைக் கருத்தில் கொள்ளாமல் பல வேலைகளைத் தொடங்கி இறுதியில் நிறுவனங்களை நட்டத்துக்கு உள்ளாக்கிய பல சம்பவங்களை நாங்கள் பார்க்கிறோம்.

இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்கு கின்றார் .

**"முடிவும் இடையூறும்**
**முற்றியாங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல்".**
( குறள் 676)

இக்குறளில் ஒருவர் ஒரு செயலில் ஈடுபட முன் அச்செயலால் எதிர்பார்க்கப்படும் பயன் அல்லது விளைவுகள், அச் செயலை செய்ய முயற் சிக்கும் போது இடையே வரும் அல்லது ஏற்படும் தடைகள் அல்லது இடையூறுகள் , அச்செயலை செய்வதற்கான முறைகள் ஆகிய அனைத்தையும் முதலில் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் . குறிப்பாக இங்கு படுபயன் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவது அதிகரித்த இலாபம் ஆகும். ஆகவே ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவம் குறிப்பாக வர்த்தக நோக்குள்ள நிறுவனத்தின் முமாமைத்துவம் அதிகரித்த இலாபம் தரக் கூடிய வேலைகளைச் செய்ய முற்படல் வேண்டும் அப்போது தான் நிறுவனத்தை வெற்றிகரமாக இயக்கமுடிவதுடன் இலாபகரமானதாவும் மாற்ற முடியும் என்ற உண்மையை திருவள்ளுவர் உரைக்கின்றார் .



.ஆலோசனைகளைப் பெறல் (Consultancy)

முகாமையாளர் ஒருவர் தனது நிறுவனத்தில் வேலையொன்றை அல்லது செயல் ஒன்றைத் தொடங்க முன் வேலையின் இலக்கு அல்லது நோக்கம் (Objective), தேவையான ஊழியர்களும் கருவிகளும் (Labor and Equipment), வேலை முறை அல்லது வேலையின் தொடர்ச்சித்தன்மை (Methodology or Continuity of work), நிபுணர்களின் கருத்துக்கள் (Consultancy), ஊழியர்களின் கருத்துக்களும் விருப்பு வெறுப்புகளும் (Labor Opinion and Feedback) ஆகிய விடயங்களைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

இந்த விடயங்களை எல்லாம் நிறுவனத்தின் முகாமைத்துவமானது கருத்தில் கொண்டு ஊழியர்களின் பங்குபற்றலை (Labor Participation) குறித்த வேலையில் அல்லது தொழிலில் உறுதி செய்து செய்ய வேண்டும். இதன் மூலம் பங்கு பற்றுதலுடனான ஒரு தலைமைத்துவத்தை (Participatory Leadership) முகாமைத்துவமானது உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும். இக் கருத்துகளை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

**"செய்வினை செய்வான்**
**செயன்முறை அவ்வினை**
**உள்ளறிவான் உள்ளம்**
**கொளல் ".** ( குறள் 677)

அதாவது ஒரு செயலைச் செய்யத் தொடங்குபவன் அச்செயலைச் செய்ய வேண்டிய முறையாதெனில் அச்செயலை இதற்கு முன்பு செய்திருப்பவனிடம் அச்செயலின் உண்மையான இயல்பைப் பற்றிய கருத்தைக் கேட்டு அறிந்து ஏற்றுக் கொள்வதேயாகும் என்கிறார் திருவள்ளுவர். இதன்மூலம் முகாமையாளர் என்பவர் ஒரு செயலைத் தொடங்க முன் அச்செயல் தொடர்பாக அனுபவமும் அறிவும் ஆற்றலும் உள்ளவர்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் அறிந்து உள்வாங்கிக் கொண்டு அச்செயலைத் தொடங்க வேண்டும் என்ற கருத்தை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். இதே கருத்தை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியிலும் வலியுறுத்துகின்றார்

**"இனத்தாற்றி எண்ணாத**
**வேந்தன் சினத்தாற்றிச்**
**சீறிற் சிறுகும் திரு".**
(குறள் 568)

இங்கு திருவள்ளுவர் தனது அமைச்சர்களுடன் கலந்து ஆலோசனை செய்யாது தான் கொள்ளும் சினத்தின் வழி செயற்படுகின்ற அரசனது செல்வம் எவ்வாறு குறைந்து செல்லுமோ அதே போல் அனுபவம் உள்ளவர்களின் கருத்துக்களை, ஆலோசனைகளை, அறிவுரைகளைக் கேளாது அல்லது கருத்தில் கொள்ளாது நிறுவனத்தை நடத்த முற்படுகின்ற முகாமையாளர் இறுதியில் நட்டத்தினையே எதிர்கொள்வார் என்ற கருத்தினை வலியுறுத்துகின்றார்.

ஒரு செயலில் அல்லது தொழிலில் ஈ.டுபடுகிறவன் செய்ய வேண்டிய மிக முக்கியமான பணி அச் செயலில் அல்லது தொழிலில் ஈடுபடமுன்னர் அச் செயல் குறித்து முழுமையாக உணர்ந்தவனின் (Expert) அனுபவ கருத்தினை ( Practical Knowledge) அறிந்து கொள்ளல் என திருவள்ளுவர் கூறுகின்றார் .இங்கு கீழிருந்து மேல்நோக்கிய முடிவெடுக்கும் பொறிமுறை (Bottom to Top Approach) பற்றியும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். அதாவது நிபுணர்களின் கருத்துக்கள் ஊழியர்களின் கருத்துக்கள் விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முகாமைத்துவம் முடிவுகளை மேற்கொள்வதன் மூலம் அவர்களின் பங்குபற் றலை தொழிலில் ஊக்குவிக்க முடிகிறது என்பதை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

அதேபோன்று யாரிடம் ஆலோசனை பெற வேண்டும் என்ற தெளிவும் முகாமையாளரிடம் இருக்க வேண்டும். ஆலோசனை சொல்பவர் கற்ற அறிவும் பெற்ற அறிவும் கொண்டவராக மட்டும் அல்லாமல் நடைமுறை உலகில் நடக்கின்ற விடயங்களை தனது விரல் நுனியில் வைத்திருக்கின்ற ஒருவராகவும் இருக்க வேண்டும். ஆலோசனை சொல்லக் கூடிய ஒருவர் நிறுவனத்தில் நடக்கின்ற நல்லது கெட்டதுகளை அலசி ஆராய்ந்துஅங்கு வேலை செய்யும் அனைவரிடனும் பேசி கருத்துக்களைக் கேட்டு அறிந்து ஆலோசனை சொல்ல வல்லவராக இருக்க வேண்டும்.

இக்கருத்துக்களை திருவள்ளுவர் அதாவது ஆலோசன சொல்பவர் எப்படி இருக்க வண்டும் என்பதை

**"அறனறிந்து ஆன்றமைந்த**
**சொல்லான் எஞ்ஞான்றுந்**
**திறனறிந்தான் தேர்ச்சித்**
**துணை".** (குறள் 635)

இங்கு அறத்தை அறிந்து கல்வியால் நிறைந்து, அடக்கமான சொல்லை உடையவராய், எப்போதும் செயலாற்றும் முறைகளைத் தெரிந்தவரே கலந்து முடிவு எடுப்பதற்கு ஏற்ற துணையாவார் என்கிறார் திருவள்ளுவர் . அதாவது கற்ற அறிவும் (Theoretical knowledge) பெற்ற அறிவும் ( Practical Knowledge) உள்ள தக்க தருணத்தில் தக்க ஆலோசனை சொல்லக் கூடிய ஒருவரே சரியான ஆலோசகர் என்கிறார் திருவள்ளுவர். எனவே முகாமையாளர் இப்படியான ஒருவரிடமே ஆலோசனை பெற வேண்டும் . அப்போதுதான் சரியான் ஆலோசனைகளை பெற்று தந்து நிறுவனத்தை வெற்றிகரமாக நடாத்த முடியும்.

நிறுவனத்தின் இலக்குகளை நிர்ணயித்த பின் எல்லோரினதும் கருத் துக்களைக் கேட்டு அவர்களின் பங்குபற்றலுடன் வேலையை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டும் என்ற திருவள்ளுவரின் கருத்துக்கள் பீற்றர் ட்ற க்கரின் ( Peter Drucker) குறிக்கோள் மூலம் முகாமைத்துவம் (Management by Objectives/ MOB)என்ற முகாமைத்துவ தந்திரோபாயத்துடன் மிகவும் ஒத்துப் போவதைக்காணலாம்.

(தொடரும் )

## லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்

# களனி கிளை அலுவலகத்திற்கு கட்டிடமொன்று வாடகை அல்லது குத்தகைக்கு தேவை

**கேள்வி இலக்கம்: LECO/22/NCB/PR4/155**

கொழும்பு கண்டி பிரதான வீதியில் கிரிபத்கொட முதல் பேலியகொடைக்கு இடையில் அமைந்துள்ள தரைப் பிரதேசத்தில் 8000 - 10,000 சதுர அடிக்கு இடையில், நீர், மின்சாரம், தொலைபேசி, வடிகாலமைப்பு மற்றும் உயிரியல் கழிவகற்றல் வசதிகள், கழிவு நீர் அகற்றும் வசதிகள் மற்றும் போதுமான வாகன நிறுத்தும் வசதிகள் 8 -10 இடையிலான கட்டிடமொன்று (மேல் மாடி எனில் மின் உயாத்தி வசதிகளுடன்) வாடகைக்கு/ குத்தகைக்கு பெற்றுக்கொள்ளத் தேவை.

உத்தேச வாடகை/ குத்தகை ஒப்பந்த காலம் 2 வருடங்களாகும்.

பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் 2022.06.20ம் திகதி 14.00 மணி வரை ஏற்க்கப்படும்.

விலைமனுப் பத்திரங்கள் திறத்தல், விலைமனுப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்த உடனேயே இடம்பெறும்.

**சகல கேள்வியுடனும் கீழ்க்காணும் தகவல்களும் உற்படுத்தப்படல் வேண்டும்.**

- தொலைபேசி இலக்கம்
- உறுதி மற்றும் வரைபட பிரதிகள்
- எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை/ குத்தகை தொகை
- ஏனைய குறித்த விபரங்கள்
- மின்னஞ்சல் முகவரி
- கட்டிட வரைபடத்தின் பிரதிகள்
- சகல நிபந்தனைகள்

தற்போதுள்ள கொவிட் 19 நிலைமையை கருத்திற் கொண்டு விலைமனுக்கள் திறத்தல் விடயங்கள் ஒன்லைன் (online) முறை ஊடாக ZooM தொழில்நுட்பத்தின் வழியாக நடைபெறும்.

விலைமனுக்களை திறத்தல் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொடர்பு ஊடங்கள் (Zoom Meeting Link) பெற்றுக்கொள்வதற்காக கேள்விதாரர்களால் மேற்கொள்ளப்படும் வேண்டுதல் Procuremente@leco.lk மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். குறித்த வேண்டுதலில் கேள்வி இலக்கம் மற்றும் கேள்வியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு 011-2371679ஐ அழையுங்கள்)

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடையும் தினத்திற்கு மற்றும் நேரத்திற்கு முன்பு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் பத்திரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கம்பனியின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்கள், விலைமனுக்கள் திறக்கப்படும் தினத்திற்கு மற்றும் நேரத்திற்கு முன்பு லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட் ஐ அடைதல் வேண்டும்.

வளாகத்தின் உரிமையாளர் மாத்திரம் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகைத் தலைப்பு மற்றும் கேள்வி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையெனில் தயவு செய்து மேலதிக முகாமையாளர் மனிதவளங்கள் மற்றும் நிர்வாகியை இல. 011-2371600 ஊடாக அழையுங்கள்

PROCUREMENT NOTICE
www.leco.lk

**பொது முகாமையாளர்**
**லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி பிரைவட் லிமிட்டட்**
**ஈ.எச். குரே கட்டிடம்,**
**இல. 411, காலி வீதி,**
**கொழும்பு-03**

## லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்

# வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை மொறட்டுவை

**கேள்வி இலக்கம்: LECO/22/NCB/PR4/208**

மொறட்டுவை மாநகர எல்லை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்கள் செல்லக்கூடிய அகலம் 12 அடிக்குக் குறையாத பிரவேச பாதையுடன் கிட்டத்தட்ட 10 பேர்ச் காணியில் அமைந்துள்ள மூன்று அறைகள் கராஜ் மற்றும் ஏனைய சகல வசதிகளுடன் வீடு மொறட்டுவை தெற்கு பாவனையாளர் சேவை அதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லமாக பாவிப்பதற்கு வாடகை/ குத்தகைக்கு தேவை.

உத்தேச வாடகை/ குத்தகை ஒப்பந்த காலம் 2 வருடங்களாகும்.

பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் 2022.06.22ம் திகதி 14.00 மணி வரை ஏட்கப்படும்.

விலைமனுப் பத்திரங்கள் திறத்தல், விலைமனுப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்த உடனேயே இடம்பெறும்.

**சகல கேள்வியுடனும் கீழ்க்காணும் தகவல்களும் உற்படுத்தப்படல் வேண்டும்.**

- தொலைபேசி இலக்கம்
- உறுதி மற்றும் வரைபட பிரதிகள்
- எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை/ குத்தகை தொகை
- ஏனைய குறித்த விபரங்கள்
- மின்னஞ்சல் முகவரி
- கட்டிட வரைபடத்தின் பிரதிகள்
- சகல நிபந்தனைகள்

தற்போதுள்ள கொவிட் 19 நிலைமையை கருத்திற் கொண்டு விலைமனுக்கள் திறத்தல் விடயங்கள் ஒன்லைன் (online) முறை ஊடாக ZooM தொழில்நுட்பத்தின் வழியாக நடைபெறும்.

விலைமனுக்களை திறத்தல் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொடர்பு ஊடங்கள் (Zoom Meeting Link) பெற்றுக்கொள்வதற்காக கேள்விதாரர்களால் மேற்கொள்ளப்படும் வேண்டுதல் Procuremente@leco.lk மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். குறித்த வேண்டுதலில் கேள்வி இலக்கம் மற்றும் கேள்வியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு 011-2371637ஐ அழையுங்கள்)

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடையும் தினத்திற்கு மற்றும் நேரத்திற்கு முன்பு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் பத்திரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கம்பனியின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்கள், விலைமனுக்கள் திறக்கப்படும் தினத்திற்கு மற்றும் நேரத்திற்கு முன்பு லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட் இற்கு அடைதல் வேண்டும்.

வளாகத்தின் உரிமையாளர் மாத்திரம் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகைத் தலைப்பு மற்றும் கேள்வி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையெனில் தயவு செய்து மேலதிக முகாமையாளர் மனிதவளங்கள் மற்றும் நிர்வாகியை இல. 011-2371600 ஊடாக அழையுங்கள்

PROCUREMENT NOTICE
www.leco.lk

**பொது முகாமையாளர்**
**லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி பிரைவட் லிமிட்டட்**
**ஈ.எச். குரே கட்டிடம்,**
**இல. 411, காலி வீதி,**
**கொழும்பு-03**


# பதவி வெற்றிடம்

**களஞ்சியசாலை பொறுப்பாளர்**

தேவைப்பாடுகள்

- கையிருப்பை முகாமைப்படுத்தல் மற்றும் பண்டங்களை வழங்கல்.
- களஞ்சியசாலை தொடர்பாக முன்னைய அனுபவம்.
- தொழிலாளர்களை முகாமைபடுத்தல் மற்றும் வரவு பதிவுகளை பேணல்.
- திங்கட்கிழமையிலிருந்து வெள்ளி வரையும் வியாபார நேரங்களில் விருப்பார்வ நேர்முகப்பரீட்சை

**அலுவலக உதவியாளர் (Runner) ஆண்**
உரிமத்துடனான மோட்டார் சைக்கிள் இருத்தல் வேண்டும்.

தேவைப்பாடுகள்

- பணவரவுகளை சேகரித்தல் மற்றும் வெளியக வேலை.
- தற்போதுள்ள வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை பேணல்
- வங்கி வேலைகள் மற்றும் ஆவணமாக்கல் வேலையை செய்தல்
- திங்கட்கிழமையிலிருந்து வெள்ளி வரையும் வியாபார நேரங்களில் விருப்பார்வ நேர்முகப்பரீட்சை

**SAIFI TRADING COMPANY**
NO. 96, NEW MOOR STREET
COLOMBO 12

Best way
to fulfil
your
Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

தினகரன் வாரமஞ்சரி

BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

ධාන්‍යවල තෙතමනය ඉවත් කිරීමේ යන්ත්‍ර කට්ටල්
ටොන් 4, ටොන් 6 සහ ටොන් 25



1. වී, ඉරිඟු ඇතුලත් ධාන්‍ය සඳහා විශේෂයි
2. දැනටමත් සෑම දිස්ත්‍රික්කයකම මෙම යන්ත්‍ර සාර්ථකව ක්‍රියාත්මකයි.
3. තෙතමනය ඔබට අවශ්‍ය පරිදි සකසා ධාන්‍ය වියලා ගත හැක.
4. ස්වයංක්‍රීයව පාලනය වේ. කොරියානු තාක්ෂණය.

තොග සහිතයි

විජේසූරිය මාකටින් සර්විසස් (පුද්ගලික) සමාගම
071 417 48 17 / 011 2 732 962







சுபோத முதியோர் இல்லம் மற்றும் பகல் நேர கண்காணிப்பு நிலையம்

2 ஆம் கிளை | 2009 இல் தாபிக்கப்பட்டது

உங்கள் பெற்றோர், நெருங்கிய உறவினர்கள், நோயாளர்கள்ருபவ் அங்கவீனர்கள். நாம் அவர்களை மிகவும் கவனமாக பார்த்துக் கொள்வோம். தினசரி, மாதம் அல்லது நீண்ட காலத்திற்கு. இணைக்கப்பட்ட குளியலறைகள் மற்றும் அழகு இயன் மருத்துவ சிகிச்சைகள்.

சிறந்த அனுபவமுடைய மருத்துவ பணியாளர்கள். அமைதியான சூழ்நிலையில் அனைத்து வசதிகளுடன் அமைந்துள்ளது.

அவசர மருத்துவ சிகிச்சை நிலையங்கள் மற்றும் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு அருகாமையில்.

இல. 7/13, தெலவள பாதை, மவ்ர மாவத்தை, இரத்மலான.

0726 506 485 | 0716 790 672







ACADEMY OF CULINARY ART
BY CHEF JEAN PIERRE

CLASSES IN
1. FOOD PREPARATION
2. PASTRY / BAKERY
3. DIPLOMA / ADVANCED DIPLOMA


CLASS DURATION
- ONE DAY CLASS
- 6 MONTH DIPLOMA
- 1 MONTH CLASSES
- 3 MONTH CLASSES

INFORMATION
- TIME PER CLASS - 4 HOURS
- INDIVIDUAL CLASSES / MINIMUM 3 STUDENTS
- NO AGE LIMIT, EVERYONE IS WELCOME

THE SAFEST PLACE TO LEARN

AN OPPORTUNITY TO BECOME A CERTIFIED CHEF

FOR REGISTRATION
CALL OR SMS : 0779 144 219 WHATSAPP : 0766 351 191
FACE BOOK : JEAN PIERRE INSTAGRAM : @CHEFJEANPIERRE.CATERING



# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 121 வாகனங்கள் தேவை
தேவை

நீண்ட கால வாடகை அடிப்படையில் படிவேன் தேவை. சாரதியுடன் அம்பாறை, பாணந்துறை, ம ட்டக்களப்பு, காலி , கம்பஹா, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், மாத்தறை, பாணந்துரை, திரு கோணமலை, கொ ழும்பு ஆகிய மாவ ட்டங்களில் இருந்து அழையுங்கள். 0764315431 034192

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

நீங்கள் தொழில்சார் ஓய்வு பெற்றவரா இல்லையெனில் தற்போது செய்யும் தொழிலின் சம்பளம் போதாதா இல்லையெனில் முகாமையாளராக பதவியுயர்வை எதிர்பார்த்து இருப்பவரா! இல்லையெனில் தொழில் தேடுபவரா இல்லையெனில் வீட்டுப் பெண்மணியா? மாதாந்தம் ரூ. 75, 000 இற்கு மேற்பட்ட சம்ளத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அழையுங்கள். மிஸ் பெரேரா 076 8683318 034247

### 207 வியாபார ஸ்தலம்
விற்பனைக்கு

கண்டி குண்டசாலை 80 பேர்ச் சதுர வடிவ காணி கென்டோஸ் சொக்ளட் தொழிற்சாலைக்கு முன்னால் 180 அடி அகலமான கார்பட் பிரதான வீதியில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால், 21730 சதுர அடி காணி. காணியைச் சுற்றி 15 அடி உயர பாதுகாப்பு சுவர் இரும்பு கேட்டுடன் வர்த்தக வங்கிகள், BOI, பல்லேகெலே விளை யாட்டர ங்கு, அரச அதிகார சபைகள் மற்றும் ரி ஜென்ட் ஹோட்டலுக்கு அருகில். நடைதூரம் ஐந்து நிமிடம் காணியில் இருந்து டொக்டர்களுக்கு பொருத்தமானது. மின்சாரம், நீர் உண்டு. பெறுமதி ரூ. 85 மில்லியன். 0777438169, 07772 82147 031616

## வேலைவாய்ப்பு

### 312 வெற்றிடங்கள்
தொழில் நுட்பம்

கனரக வாகன மெக்கானிக் தேவை. அனுபவமுள்ள மெக்கானிக், அசோக் லேலண்ட் பிரைம் மூவர் மற்றும் 10 சக்கர வாகனத்திற்கு தேவை. கிராம சேவகர் மற்றும் பொலிஸ் ச ான் றி த மு டன் வாருங்கள். Gex Logistics, Sri Lanka, 30/5, கோத்தமி லேன், கோத்தமி ரோட், கொழும்பு08. 011 2671101 034426

### 318 வெற்றிடங்கள்
டிரைவர்கள்

கனரக சாரதி தேவை. பிரைம் மூவர் மற்றும் 10 சக்கர சாரதிகள் தேவை. கிராமசேவகர் மற்றும் பொலிஸ் சான்றிதழுடன் வாருங்கள். Gex Logistics, Sri Lanka, 30/5, கோத்தமி லேன், கோத்தமி ரோட், கொழு ம்பு 08. 011 2671101 034399

### வெற்றிடங்கள்
வீட்டு வேலையாளர்

இரு பிள்ளைகளுடன் த ங் கி யி ரு க் க க் கூடிய பெண் தேவை. மேலதிக விபரங்களுக்கு 0762649067, 0717590211 இல. 163, தெற்கு கல்லவத்த, ஏக்கல. 034529

வீட்டில் தங்கி சமையல், வீடு சுத்திகரிப்பு செய்வதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட சுறுசுறுப்பான பெண் தேவை. கூடுதல் சம்பளம். 0777556919 034238

### 325 தொழில்துறை
பொது

கனரக வாகன உதவியாளர் தேவை. பிரைம் மூவர் மற்றும் 10 சக்கர வாகன உதவியாளர் தேவை. கிராமசேவகர் மற்றும் பொலிஸ் சான்றிதழுடன் வாருங்கள். Gex Logistics, Sri Lanka, 30/5, கோத்தமி லேன், கோத்தமி ரோட், கொழு ம்பு 08. 011 2671101 034415

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து
கொழும்பு மாவட்டம்
விற்பனைக்கு

கெஸ்பேவவுக்கு அருகில் இரு மாடி வீடுகள் 02 காணியின் பெறுமதிக்கு விற்பனைக்கு தூய உறுதி, சுற்று மதில், கேட் பஸ் பாதைக்கு 100 மீ ற்றர் விலை 2.25 0772061 030/ 07116009 8 2 034102

நாவலமுல்ல 10 பேர்ச் அரலிய மாவத்த 01 பேர்ச் 280/ லேலண்ட் சந்திக்கு KM2, அழையுங்கள் 0775209111 மீகொ டவுக்கு 4 km. 034207

மூன்று மாடி வீடு பொரலஸ்கமுவ 9.5 பேர்ச் 05 படுக்கையறை 12 அடி உயரமான சுற்றுமதில் சமையலறை அத்துடன் வேலையாள் கழிப்பறை சிங்கர் பென்றி அத்துடன் 02 ஓய்வு பிரதேசங்கள். 03 வாகன நிறுத்துமிட வசதிகள் ரூப்டொப் உடன் அழகான சுற்றுப்புறம். அதி கூடிய பாதுகாப்பு. தொடர்பு 0778510282, 0704644640 034014

### 617 வீடு சொத்து
கம்பஹா மாவட்டம்
விற்பனைக்கு

நீர்கொழும்பு, பிட்டிபன வீதி 15.5 பேர்ச் நேஷன் டி ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்ப ட்ட முழுமையான வீடு விற்பனைக்கும் விலை விசாரணைகள் 2022.06.19 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளே ஸ், கொழும்பு 02 என் ற மு கவரிக்கு குறைந்த பட்சகோரிக்கை 1 0 மில்லியன் 07734 27535 034328



### 619 வீடு சொத்து
குருணாகல் மாவட்டம்
விற்பனைக்கு

பொ ல் கா வ லை , கனேகொட, கொ ட வெலவத்த விவசா ய, வியாபார, குடியிறுப்பு, வேறு, 102/78, பேர்ச், பொ ல்காவலை ரயில் நிலையம், பிரதான பாடசாலைகள், வைத்திய சாலைக்கு 05 விநாடி தூரத்தி ல் , குருநாகல் த ம்பொ க்க அதிவேக பிரவே சத்திற்கு 20 விநா டி கள் தூரத்தில் சமத ரையான 02 கா ணித் துண்டு கள் விற்பனைக்கு 1 பேர்ச் ரூ. 97, 000/ , 07730085 11 034213

மஹவ , ரந்தெனிகம, ரயில் நிலையத்திற்கு அ ருகில் 2 ஏக்கர் 40 பேர்ச், மின்சாரம், கிணற்று நீர், தென்னை, கஜு, மா, பலாவுடன் மு ழு மை யான புதிய வீடு வி ற்பனைக்கு 75/ இலட்சம் (உரித்துரிமையுடன் தூய உறுதி) 076 7246166 034201

### 620 வீடு சொத்து
புத்தளம் மாவட்டம்
விற்பனைக்கு

வென்னப்புவ 71.5 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.06.19 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளே ஸ், கொழும்பு02 என்ற முகவ ரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 35.8 மில்லியன் 0773427535 034327

### 621 வீடு சொத்து
கண்டி மாவட்டம்
விற்பனைக்கு

அலவத்துகொட A9 பாதைக்கு முகப்பாக 8 பேர்ச் முழுமையான வீடு விற்பனைக்கு. 0764193858/ 0717393858 034205

கண்டி, ஹுலுகங்க 157.7 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.06.19 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளே ஸ், கொழும்பு02 என்ற முகவ ரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 12.8 மில்லியன் 0773427535 034329

### 629 வீடு சொத்து
இரத்தினபுரி மாவட்டம்
விற்பனைக்கு

எம்பிலிப்பிட்டிய 300 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2022.06.19 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழு ம்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 21 மில்லியன் 0773427535 034331

### 630 வீடு சொத்து
காலி மாவட்டம்
விற்பனைக்கு

எல்பிட்டிய, எத்கந்துர 377.6 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சு வீ கரிக்கப்பட்ட கா ணி விற்பனைக்கு. வி லை விசாரணைகள் 2022.06.19 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழு ம்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 24 மில்லியன் 0773427535 034333

### 632 வீடு சொத்து
ஹம்பாந்தோட்ட மாவட்டம்
விற்பனைக்கு

திஸ்ஸமஹாராம, கதிர்காம வீதி 171 பேர்ச் நேஷன் டி ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2022.06.19 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு, 242, யூனியன் பிளே ஸ், கொழும்பு02 என்ற முகவ ரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 34.2 மில்லியன் 0773427535 034334

### 641 வீடு சொத்து
கொழும்பு மாவட்டம்
வாடகைக்கு குத்தகைக்கு

இரண்டாம் மாடியில் ஒரு அறை வீடு வாடகைக்கு. வாகன நிறுத்துமிட வசதிகளுடன் வாடகை 25,000/ இல. 18, பழைய கொட்டா வ வீதி, மிரிஹான, நுகேகொடை. தொ.பே 077 2 3 606 49 034021

கொழும்பு15 அளுத்மாவத்த வீதி, சகல வசதிகளுடன் 02 அறைகளுடன் வீடு வாடகை ரூ. 35, 0 00/ கௌரவமான சூழல் 0778886314 வன வாசல் திப்பிட்டி கொட அனெக்ஸ் சகல வசதி களுடன் 3 மாத மு ற்பணம் ரூ. 14, 000/ 0774413778 034274

தெஹி வளையில் 03 ப டுக்கையறைகள், வாகனத் தரிப்பிடமொன்று, குளியலறைகள், தளபா டங்கள் உடன் பு த்தம் புதி ய இரண்டு மாடி வீடு. அழைக்கவும்: 0 777574111. 033668

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

Rs. 500/- (For 15 Words)
* Cost of each additional word Rs. 20/-
ලුහුඬු දැන්වීම්කරුවන්ගේ විශ්වසනීය වෙළඳපොළ

Sunday Observer adz
Rs. 500/- (For 15 Words)
* Cost of each additional word Rs. 20/-
Trusted Marketplace of Classified Advertisers

வாரமஞ்சரி
Rs. 150/- (For 15 Words)
* Cost of each additional word Rs. 10/-
சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

| | + adz | Three Papers |
|---|---|---|
| Classified Ads (For 15 Words) | Rs. 700/- * Cost of each additional word Rs. 20/- | Rs. 850/- * Cost of each additional word in Sunday Observer and Silumina Rs. 20/- * Cost of each additional word in Thinakaran Varamanjaree Rs. 10/- |
| Photo Classified (For 15 Words) | Rs. 800/- * Cost of each additional word Rs. 15/- | Rs. 1,000/- * Cost of each additional word Rs. 15/- |
| Box Ads | Rs. 3,000/- + VAT | Rs. 4,000/- + VAT |

The convenient way to make your payment... Acc.No. 000000377 Green light for Online Transfer BOC LAKE HOUSE BRANCH
E-mail - classified@lakehouse.lk
Ramani - 077 7 278 948 / Piyumi - 011 2 429 383 / Gayani - 011 2 429 342

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ச் சேவைக்கு சுயாதீன அறிவிப்பாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

## கல்வித் தகைமைகள்

1. க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

**மற்றும்**

க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்

## தொழில்முறைத் தகைமைகள்

1. ஒலிவாங்கிக்கு ஏற்ற குரல்வளமும், சிறப்பான மொழியாற்றலும், உச்சரிப்பு தெளிவும், சிறந்த ஆளுமையும் உடையவராக இருத்தல்
2. கணனியில் வேலை செய்யும் ஆற்றல்

**வயதெல்லை:** 18 முதல் 25 வரை

முழு விபரங்களுடன் கூடிய சுயவிபரக்கோவையை ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பணிப்பாளர், தமிழ்ச்சேவை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், த.பெ. இல. 574, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சுயாதீன அறிவிப்பாளர் - தமிழ் என்று குறிப்பிடவும்.

பாதுகாப்பு அமைச்சு
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# விலைமனுக்கோரல்

**KDU பட்டப்படிப்பு திட்டங்களை ஊக்குவிப்பதற்காக மற்றும் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பிரிவில் நடத்தப்படும் பட்டப்படிப்பு திட்டங்களுக்கு சர்வதேச மாணவர்களை சேர்ப்பதற்காக கல்வி முகவர்கள் / ஆலோசகர்களை தேர்வுசெய்வதற்கான விலைமனுக்கோரல்**

**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE/93/2022**

1. பாதுகாப்பு அமைச்சு, அமைச்சின் கொள்முதல் குழுவின் தலைவரினால், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை, இலங்கையின் துணை வேந்தர் சார்பாக KDU பட்டப்படிப்பு திட்டங்களை ஊக்குவிக்க மற்றும் சர்வதேச மாணவர்களை பட்டப்படிப்பு திட்டங்களுக்கு இணைப்பதற்காக கல்வி முகவர்கள் / ஆலோசகர்களை தேடுகின்றனர்.
2. KDU பட்டப்படிப்பு திட்டங்களை ஊக்குவிக்க மற்றும் சர்வதேச மாணவர்களை பட்டப்படிப்பு திட்டங்களுக்கு இணைப்பதற்காக பின்வரும் பண்புகளையுடைய கல்வி முகவர்கள் / ஆலோசகர்களை தேடுகின்றனர்.
   - **உள்ளூர் அறிவு மற்றும் கலாச்சார இணக்கம்**

     கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கம் பற்றிய உள்ளூர் அறிவு மற்றும் கல்வித் தகுதிகள், அந்த நாடுகளில் உள்ள நிறுவனங்களின் நற்பெயர் மற்றும் தரவரிசை மற்றும் பாடத்தின் சிறப்புகள் மற்றும் பலம் பற்றிய குறிப்பிட்ட தகவல்கள்.
   - **உள்ளூர் இணைப்புகள்**

     சாத்தியமான முகவர் வைத்திருக்கும் இணைப்பு மற்றும் வலைப்பின்னல். சந்திக்க வேண்டிய மக்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் பற்றிய அறிவு
   - **எதிர்கால மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்**

     KDU இன் தரக் குறியீட்டினை உயர்த்தும் திறன், கல்வித் துறையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் ஆட்சேர்ப்பு நடைபெறும் நாடுகளில் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன்.
   - **பல்கலைகழகங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்**

     சந்தையைப் புரிந்து கொள்ளும் திறன் மற்றும் மாணவர்கள் மற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் கருத்து உட்பட, KDU க்கு அறிவுரைகளை வழங்குவதற்கான விருப்பம்.

   **ஒப்பந்த காலம்**

   KDU 2 ஆண்டுகளுக்கு ஒரு ஒப்பந்தத்தில் இணைய முன்மொழிகிறது - இது ஒரு ஆரம்ப ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கும்.

   திருப்திகரமான செயல்திறன் மற்றும் பல்கலைக்கழகத்தின் விருப்பத்திற்கு உட்பட்டு மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கும் ஆர்வம்.

   **ஊக்குவிப்புத் தொகை**

   பட்டியலிடப்பட்ட வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முகவர்கள் / ஆலோசகர்களுக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டணம் செலுத்தப்படும்.

   குறிப்பாக, வெளிநாடுகளில் இருந்து தகுதியான மாணவர்களை தேர்வுசெய்து இணைத்துக்கொள்வதற்கு KDU இப்போது இந்த நோக்கத்திற்காக சாத்தியமான முகவர்கள் / ஆலோசகர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.
3. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
4. 2022.06.21 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் மனுக்கள் திறக்கப்படும்.
5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), இரத்மலான ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி / தொலைநகல் 011 2632430, 0710219449, directorlogistics@kdu.ac.lk, ocrepair@kdu.ac.lk மற்றும் விலைமனுக் கோரலில் www.kdu.ac.lk/ocls/tender-notices பார்வையிடலாம்).

தவிசாளர்
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,
இரத்மலான, இலங்கை.

## ICRC

### செஞ்சிலுவை சர்வதேச குழுவிடமிருந்தான அவசரமானதும் முக்கியதுமான அறிவித்தல்

### தயவுசெய்து எச்சரிக்கையாக இருங்கள்

செஞ்சிலுவை சர்வதேச குழுவின் (ஐசிஆர்சி) இலச்சினையானது புலம்பெயர்வு/விசா திட்டங்கள் தொடர்பில் அதிகாரமற்றவர்களும் அடையாளப்படுத்தப்படாதவர்களும் சமூக மற்றும் ஏனைய ஊடகங்களூடாக விளம்பரப்படுத்தி மோசடியாக பணம் பெறுதலானது ஐசிஆர்சியின் கவனத்திற்கு வந்துள்ளது.

இது தொடர்பாக ஐசிஆர்சி அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளது.

தயவுசெய்து அவ்வாறான செய்திகளில் ஐசிஆர்சி தொடர்புபடவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும். புலம்பெயர்வு நடைமுறைகள் எது தொடர்பிலும் ஐசிஆர்சி ஈடுபடுவதில்லை. இவ்வாறான நோக்கங்களுக்காக அடையாளப்படுத்தப்படாத வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடும்படியாகவும் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சலூடாக வங்கிக் கணக்கிலக்கங்களை தெரியப்படுத்தும்படியாகவும் எவரையாவது ஐசிஆர்சி வேண்டிக்கொள்ளவில்லை.

ஐசிஆர்சி
இலக்கம் 29, லெயாட்ஸ் வீதி, கொழும்பு 05

---

### இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

### பொதுப் பட்டமளிப்பு 2021

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொது பட்டமளிப்பு 2021, 5, 6 மற்றும் 7 ஜூலை, 2022 ஆகிய திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ([illegible]) நடைபெறும். பட்டம்பெற இருப்போருக்கு, பட்டதாரி விண்ணப்ப படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பட்டதாரி விண்ணப்ப படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 10 ஜூன், 2022 ஆகும்.

மேலதிக தகவல்களை **www.ou.ac.lk/convocation/2021** எனும் இணையத்தளத்திற்கு சென்று பார்வையிடவும்.

விசாரணைகளுக்கு - 0112881040/461

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
2022 ஜூன் 05

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

---

# லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்

# கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை – வத்தளை

**கேள்வி இலக்கம்: LECO/22/NCB/PR4/176**

வத்தளை பாவனையாளர் சேவை அதிகாரப் பிரதேசத்தில், நீர்கொழும்பு வீதிக்கு முகப்பாக (பேலியகொட முதல் மாபோல அதிவேக வீதிக்கு அருகில்) அல்லது பழைய நீர்கொழும்பு வீதி அல்லது ஹுனுப்பிட்டிய வீதி (ஹெந்தளை சந்தி முதல் ரெயில் கேட் வரை) அல்லது நீர்கொழும்பு வீதிக்கு அருகில் எவரிவத்த வீதி அல்லது ஹேகித்த வீதி அல்லது ஸ்ரீவிக்ரம வீதி அல்லது தெலங்கபாத்த வீதி அல்லது அல்விஸ் வீதி அல்லது அதற்கு அருகில் பாவனையாளர் சேவை நிலையமாக பாவிப்பதற்கு தகுந்த கிட்டத்தட்ட 40 பேர்ச் காணியில் அமைந்த நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் வடிகாலமைப்பு வசதிகளுடன் அகலம் 20 அடிக்குக் குறையாத பிரவேச பாதை உள்ள 2000 சதுர அடிக்குக் குறையாத கட்டிட மொன்று உடன் குடியேறும் அடிப்படையில் வாடகை/ குத்தகைக்குப் பெறுவதற்கு தேவை கட்டிடத்தை சுற்றி மதில் இருப்பின் மிகவும் பொருத்தமானது.

உத்தேச வாடகை/ குத்தகை ஒப்பந்த காலம் 2 வருடங்களாகும்.

பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் 2022.06.21ம் திகதி 14.00 மணி வரை ஏற்கப்படும்.

விலைமனுப் பத்திரங்கள் திறத்தல், விலைமனுப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்த உடனேயே இடம்பெறும்.

**சகல கேள்வியுடனும் கீழ்க்காணும் தகவல்களும் உட்படுத்தப்படல் வேண்டும்.**

- ❖ தொலைபேசி இலக்கம்
- ❖ உறுதி மற்றும் வரைபட பிரதிகள்
- ❖ எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை/ குத்தகை தொகை
- ❖ ஏனைய குறித்த விபரங்கள்
- ❖ மின்னஞ்சல் முகவரி
- ❖ கட்டிட வரைபடத்தின் பிரதிகள்
- ❖ சகல நிபந்தனைகள்

தற்போதுள்ள கொவிட் 19 நிலைமையை கருத்திற் கொண்டு விலைமனுக்கள் திறத்தல் விடயங்கள் ஒன்லைன் (online) முறை ஊடாக ZooM தொழில்நுட்பத்தின் வழியாக நடைபெறும்.

விலைமனுக்களை திறத்தல் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொடர்பு ஊடங்கள் (Zoom Meeting Link) பெற்றுக்கொள்வதற்காக கேள்விதாரர்களால் மேற்கொள்ளப்படும் வேண்டுதல் Procurement@eleco.lk மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். குறித்த வேண்டுதலில் கேள்வி இலக்கம் மற்றும் கேள்வியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு 011-2371637ஐ அழையுங்கள்)

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடையும் தினத்திற்கு மற்றும் நேரத்திற்கு முன்பு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் பத்திரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கம்பனியின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்கள், விலைமனுக்கள் திறக்கப்படும் தினத்திற்கு மற்றும் நேரத்திற்கு முன்பு லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட் ஐ அடைதல் வேண்டும்.

வளாகத்தின் உரிமையாளர் மாத்திரம் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகைத் தலைப்பு மற்றும் கேள்வி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையெனில் தயவு செய்து மேலதிக முகாமையாளர் மனிதவளங்கள் மற்றும் நிர்வாகியை இல. 011-2371600 ஊடாக அழையுங்கள்

PROCUREMENT NOTICE
www.leco.lk

**பொது முகாமையாளர்**
**லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி பிரைவட் லிமிட்டட்**
**ஈ.எச். குரே கட்டிடம்,**
**இல. 411, காலி வீதி,**
**கொழும்பு-03**

LECO

Repeat Your ad For Better Offers

---

கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

# பெறுகை அறிவித்தல்

## வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு டிராக்டர்கள், நீர் பம்பிகள் மற்றும் ஜீஐ குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு டிராக்டர்கள், நீர் பம்பிகள் மற்றும் ஜீஐ குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு டிராக்டர்கள், நீர் பம்பிகள் மற்றும் ஜீஐ குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக்கிழங்கு / வெங்காய செயற்றிட்டத்திற்கான டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்கள் | LK-MOA- PMU-273967-GO-RFB | 02 | 288,000.00 | 5,000.00 |
| கிளிநொச்சி மாவட்டத்தில் மிளகாய் செயற்றிட்டத்திற்கான டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்கள் | LK-MOA- PMU-273702-GO-RFB | 02 | 288,000.00 | 5,000.00 |
| அம்பாறை மாவட்டத்தில் மிளகாய் மற்றும் Soursop செயற்றிட்டத்திற்கான டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்கள் | LK-MOA- PMU-283079-GO-RFB | 03 | 360,000.00 | 5,000.00 |
| மட்டக்களப்பு மாவட்டத்தில் மிளகாய், வாழைப்பழம் மற்றும் மாதுளம் செயற்றிட்டத்திற்கான டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்கள் | LK-MOA- PMU-283080-GO-RFB | 04 | 480,000.00 | 7,500.00 |
| அம்பாறை மாவட்டத்தில் மிளகாய் செயற்றிட்டத்திற்கான மின்சார நீர் பம்பிகள் | LK-MOA- PMU-273414-GO-RFB | 300 | 540,000.00 | 7,500.00 |
| பதுளை மாவட்டத்தில் அன்னாசி செயற்றிட்டத்திற்கான இயந்திரத்தினால் இயங்கும் நீர்ப் பம்பிகள் | LK-MOA- PMU-277608-GO-RFB | 300 | 540,000.00 | 7,500.00 |
| பதுளை மாவட்டத்தில் விதை உருளைக்கிழங்கு செயற்றிட்டத்திற்கான இயந்திரத்தினால் இயங்கும் நீர் பம்பிகள் | LK-MOA- PMU-277600-GO-RFB | 220 | 395,000.00 | 5,000.00 |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழைப்பழம் / மிளகாய்ச் செயற்றிட்டத்திற்கான இயந்திரத்தினால் இயங்கும் நீர் பம்பிகள் | LK-MOA- PMU-277317-GO-RFB | 250 | 450,000.00 | 5,000.00 |
| மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளரிக்காய் செயற்றிட்டத்திற்கு Vertical Trills முறைமைக்கான ஜீஐ குழாய்கள் இயந்திரத்தினால் இயங்கும் நீர் பம்பிகள் | LK-MOA- PMU-260811-GO-RFB | 4000 | 435,000.00 | 5,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022-06-06ஆம் திகதியிலிருந்து 2022-06-27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. 2022-06-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022-05-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு டிராக்டர்கள், நீர் பம்பிகள் மற்றும் ஜீஐ குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 2022-06-05.**

---

SMIB

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிக்கு 33 எண்ணிக்கையான மேசைக் கணனிகள் மற்றும் மைக்ரோசொப்ட் உரிமங்களை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரிப்பதற்காக முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள்

**பகுதி அ - 33 எண்ணிக்கையான மேசைக் கணனிகளுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள்**

| | |
|---|---|
| பெறுகையின் விளக்கம் | 33 எண்ணிக்கையான மேசைக் கணனிகளுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள் |
| ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | ரூபா 3,500.00 |
| கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கான திகதி | 2022-06-06ஆம் திகதி முதல் 2022-06-17 திகதி வரை - மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை |
| கேள்வி முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | 2022-06-20ஆம் திகதி மு.ப. 10.00 மணி |
| மேசைக் கணனிகளுக்காக சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை முறியின் பெறுமதி | ரூபா 60,000.00 |

**கேள்விதாரர்களுக்கான தகுதி அளவுகோல்கள் (33 எண்ணிக்கையான டெஸ்க்டாப் கணினிகள்)**

1. கேள்வி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு ஏலதாரரின் திறனைப் பற்றிய ஆவணங்கள் மற்றும் பிற ஆதாரங்களை வங்கிக்குச் சமர்ப்பிக்கத் தயாராக இருக்க வேண்டும்.
2. வழங்கப்பட்ட பொருட்களின் தயாரிப்பு மற்றும் மாதிரி இலக்கங்களைத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் மற்றும் கொள்கைகள் / உற்பத்தியாளர்களின் தொழில்நுட்ப ஆவணங்களினால் விளக்கம் அறிவிக்கப்பட வேண்டும். இணைக்கப்படும் எந்த மேலதிக அம்சங்களும் மேலதிக அம்சங்களாக கேள்வி ஆவணங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்
3. கேள்விதாரர் மற்ற நிறுவனங்களுக்கு இதே போன்ற சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் ஒரே நிறுவனத்தில் 100 மேசைக் கணனிகளை பராமரித்திருக்க வேண்டும்.
4. கேள்விதாரர் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கியதாக நாடளாவிய ரீதியில் அலுவலகங்களைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்காக 4 மணிநேரத்திற்குள் எந்தவொரு SMIB கிளையையும் சென்றடையக் கூடியதாகவிருத்தல் வேண்டும். கேள்விதாரர்களின் பெயரில் பின்வரும் ஆவணச் சான்றுகள் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிளை/பிராந்திய அலுவலகத்தின் முகவரி, தொடர்பு விவரங்கள் மற்றும் தொடங்கும் திகதி என்பன வழங்கப்படல் வேண்டும். (ஒவ்வொரு கிளை/பிராந்திய அலுவலகமும் தொடங்கும் திகதியிலிருந்து குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)
5. உற்பத்தி அங்கீகார கடிதம் வழங்கப்பட வேண்டும்

**பகுதி ஆ - 33 எண்ணிக்கையான மைக்ரோசொ.ஃப்ட் உரிமங்களுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள்**

| | |
|---|---|
| பெறுகையின் விளக்கம் | 33 எண்ணிக்கையான மைக்ரோசொ.ஃப்ட் உரிமங்களுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள் |
| ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | ரூபா 2,500.00 |
| கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கான திகதி | 2022-06-06ஆம் திகதி முதல் 2022-06-17 திகதி வரை - மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை |
| கேள்வி முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | 2022-06-20ஆம் திகதி மு.ப. 10.00 மணி |
| மேசைக் கணனிகளுக்காக சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை முறியின் பெறுமதி | ரூபா 25,000.00 |

**கேள்விதாரர்களுக்கான தகுதி அளவுகோல்கள் (33 எண்ணிக்கையான மைக்ரோ சொ.ஃப்ட் உரிமங்கள்)**

1. கேள்விதாரர் இலங்கையில் ஒரு கூட்டிணைக்கப்பட்ட நிறுவன அமைப்பாக இருக்க வேண்டும்.
2. கேள்வி எடுப்பவர் மைக்ரோ சொ.ஃப்ட் பங்குதாராக இருக்க வேண்டும்
3. கேள்விதாரர் மைக்ரோசொ.ஃப்ட் உரிமத்தில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் இலங்கையில் உள்ள வங்கிகள்/நிதி நிறுவனங்கள் தொடர்பான சட்டரீதியான வழிகாட்டுதல்களை முழுமையாக அறிந்திருக்க வேண்டும்.
4. முதன்மை அல்லது மைக்ரோ சொ.ஃப்ட் விநியோகஸ்தரிடம் இருந்தான உற்பத்தியாளர் அங்கீகாரக் கடிதம்

**பகுதி அ மற்றும் பகுதி ஆ இரண்டிற்கும் பொதுவான கேள்வித் தகவல்**

1. RFP ஆவணங்கள் 2022-06-06ஆம் திகதி முதல் 2022-06-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பித்த பின்னர் பிரதான முகாமையாளர், லொஜிஸ்டிக்ஸ் பிரிவு (4வது மாடி), அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, இல. 269, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
2. மேலே சுட்டிக்காட்டியவாறு கேள்விக்குரித்தானதும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதுமானதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஆகக் குறைந்த காலப்பகுதியான 2022.06.20ஆம் திகதியிலிருந்து 2022.10.18ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருக்கும் கேள்விப்பிணையொன்று பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவிற்கான விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. கேள்விகள் 2022-06-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும் மற்றும் மு.ப. 10.00 மணிக்குப் பிறகு பெறப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும் மற்றும் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.
4. கேள்விதாரர்கள் பகுதி அ அல்லது பகுதி ஆ அல்லது மேலே கொடுக்கப்பட்ட இரண்டு பகுதிகளுக்கும் கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்
5. மேலதிக விவரங்களுக்கு பிரதான முகாமையாளர், லொஜிஸ்டிக் பிரிவு, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 0117722879 எனும் தொலைபேசி எண்ணைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**CEO/பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு 03.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ■ | 05 |
| 06 | ■ | 07 | ■ | 08 | 09 |
| 10 | 11 | ■ | 12 | 13 | ■ |
| ■ | 14 | 15 | 16 | ■ | 17 |
| 18 | ■ | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | ■ | ■ | 26 |

பெயர் ........................................................
வகுப்பு ........................................................
தொலைபேசி இல ........................................................
பாடசாலை பெயர் ........................................................
வதிவிட முகவரி ........................................................
........................................................

............................ ............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர்/ கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) அங்கொன்று இங்கொன்றாக நெருக்கமற்ற குடிமனைகள், எங்குமே பச்சைப் பசேலென்ற மரங்கள், கண்ணுக்கு இனிய காட்சிகள், பரபரப்பு இல்லாத வாழ்க்கை... நகரத்தைவிட வாழ்வதற்கு இனிமையான இடம் இதுதான்.
(08) பொருட்களை விற்பனை செய்யப்படும் இடம்.
(10) மீன்பிடித் தொழிலாளர்கள் மீன்களைப் பிடிப்பதற்காகப் பயன்படுத்துகின்ற உபகரணங்களில் இதுவும் ஒன்று.
(12) நாகணவாய் என்று மற்றொரு சொல்லும் இப்பறவைக்கு உண்டு. 'கிளிபேசும்' என்பது போல இப்பறவைக்குரிய ஒலிமரபும் 'பேசும்' என்பதுதான்.
(14) யானையைப் பராமரிப்பவனையும், தேரோட்டியையும் குறிக்கும் சொல்.
(19) முகத்தின் ஒத்தபொருள் சொல்.
(23) அக்கால தமிழ் இலக்கியங்களில் அதிகம் குறிப்பிடப்பட்டுள்ள அழகிய மலர். பாரி என்ற மன்னன் இம்மலர்க்கொடி படர்வதற்காக தனது தேரையே வழங்கினான்.

**மேலிருந்து கீழ்**

(01) பணத்தை பாதுகாப்பாக வைப்பில் இடுவதற்கான நிதி நிறுவனம் இது. எமது பணத்துக்கு வட்டியும் கிடைக்கும். (தலைகீழான சொல்)
(03) நாடு செழிக்க வேண்டுமானால் இடைக்கிடை இது தேவை. ஆனால் அதிகமாகி விட்டால் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டு விடும்.
(05) வினாவுக்குரிய பதிலாக வழங்கப்படுவது.
(08) ஆழ்ந்த உறக்கத்தில் வருவது. நித்திரை நீங்கினால் இதுவும் கலைந்து விடும்.
(11) மணலும் மணல் சார்ந்த இடமும். (தலைகீழான சொல்)
(12) மூவிடப் பெயர்களில் ஒன்று இது. நான், நாம் போன்றவற்றைக் குறிப்பிடுவது. (தலைகீழான சொல்)
(15) ஏமாற்றம், இழப்பு, பிரிவு போன்றவற்றால் உள்ளத்தில் ஏற்படுகின்ற சகோதரனை இவ்வாறு விளிக்கலாம்.
(17) இளைய சகோதரனை இவ்வாறு விளிக்கலாம்
(18) கூர்மையானது. தரையில் எங்காவது கிடந்தால் பாதத்தைப் பதம் பார்த்து விடும். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 13

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) எரிபொருள் (08) வால் (10) கடுகு (13) பால்
(15) குரு (18) அடவி (21) தூரிகை (24) பரி

**மேலிருந்து கீழ்**

(01) எலி (03) பொட்டு (05) வாள் (10) கல்லூரி
(12) குருவி (16) படகு (20) அரி

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 12

### பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
**அமீர் அஸ்கானா,**
தரம் 10, கமு/சது/இலுக்குச்சேனை அரச பாடசாலை,
இறக்காமம் 02.

இரண்டாம் பரிசு
**கு. துவாரகன்,**
தரம் 05 E, கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி,
33A, சர்வோதய வீதி,
பெரியநீலாவணை.

மூன்றாம் பரிசு
**எம்.எம்.எம். அப்ராஸ்,**
தரம் 04A, மா/ ஸாஹிரா கல்லூரி,
மாத்தளை.

### பாராட்டு பெறுவோர்

**1. கே. கவிசாந்,**
தரம் 09R,
மட்/பட்/ இராமகிருஸ்ண வித்தியாலயம்,
பாலமுனை, மண்டூர்.
**2. எம்.ஏ.எம். யூஸுப்,**
தரம் 09A, மாறை/அறபா தேசிய பாடசாலை,
411, அலுத் வீதிய, வெலிகம.
**3. எம்.ஏ. அஸ்மி,**
தரம் 08,
கமு/சது/ இலுக்குச்சேனை வித்தியாலயம்,
88/10, இறக்காமம் 02.
இறக்காமம்.
**4. ஸபியுர் ரஹ்மான்,**
தரம் 07,
ACE சர்வதேச பாடசாலை,
10F/3, மகாபுத்கமுவ,
கொட்டிகாவத்தை.
**5. சுஸ்மிதன் ஆனந்தன்,**
தரம் 12, நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 14
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

***தெளிவுரை :***
*எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும்; அவ் வுயர்வு கைகூடா விட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.*

## உலகின் மிக நீளமான கண்ணாடி பாலம்

*உலகின் மிக நீளமான கண்ணாடி பாலம் வியட்நாமில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வியட்நாமில் உள்ள சன் லா என்ற பகுதியில் இரண்டு மலைகளுக்கு இடையே 492 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இந்த வெள்ளை டிராகன் பாலமானது 632 மீட்டர் நீளமுடையது. இந்த தொங்கு பாலத்தில் உள்ள கண்ணாடிகள் 40 மி ல்லி மீற்றர் தடிமத்தில் உடையாத விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே நாளில் 450 பேர் நடக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*





*இப்பாலத்தின் திறப்பு விழாவின்போது பாலத்தில் பாரம் பரிய டிராகன் நடன நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த பாலம், உலகின் மிக நீளமான கண்ணாடி பாலம் என்ற கின்னஸ் சாதனையையும் பெற்றுள்ளது. கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ள இந்த கண்ணாடி பாலத்தில் ந டக்க மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சீ னாவில் உள்ள குவாங்டாங் மாகாணத்தில் இருக்கும் 526 மீட்டர் கண்ணாடி பாலமே இதற்கு முன்னர் அதிக நீளமுள்ள கண்ணாடி பாலமாக இருந்தமை குறிப்பிடத் தக்கது.*

**சுஜானி திருஆலன்,**
நெடுங்குளம், வவுனியா.

## சேர் பொன் அருணாசலம்



*இலங்கையின் தேசிய வீரர்களில் முக்கியமானவர் சேர் பொன்னம்பலம் அருணாசலம். இவர் 1853 ஆம் ஆண்டு செப்டெம்பர் 14 ஆம் திகதி பிறந்தார். இவர் கொழும்பு றோயல் அக்கடமி (தற்போதைய றோயல் கல்லூரி) யில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இங்கு கல்வி கற்றபோது 1870 இல் இராணி புலமைப் பரிசிலைப் பெற்று, லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் கிறைஸ்ட் கல்லூரியில் கலைமாணிப் பட்டம் பெற்றார்.*

*பொன்னம்பலம் அருணாசலம் இங்கிலாந்தில் பரிஸ்டர் ஆகவும் 1875 ஏப்ரலில் சிவில் சேவை உத்தியோகத்தேர்வில் சித்தி பெற்ற முதல் இலங்கையராகவும் இலங்கை திரும்பினார். 1913 ஆம் ஆண்டு வரை அரசாங்க சேவையில் பல்வேறு உயர் பதவிகளை வகித்தார். முதலில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பணியாற்றிய இவர் கண்டி காவல்துறை நீதிமன்றத்திலும் தொடர்ந்து இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள நீதிமன்றங்களிலும் அலுவலராகப் பணி புரிந்தார். இவ்வனுபவம் காரணமாக மட்டக்களப்பில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றும் சந்தர்ப்பமும் இவருக்குக் கிடைத்தது. இவ் அனுபவத்தைப் பயன்படுத்தி 'சிவில் சட்டச் சுருக்கம்' என்ற நூலை எழுதினார்.*

*மாவட்ட நீதிபதி பதவி வகித்த காலத்தில்தான் அப்போது தேசாதிபதியாக இருந்த சேர் ஆர்தர் கோர்டன் இவரைப் பதிவாளர் நாயகமாக (18881902) நியமித்தார்.*

*பல்வேறு நுணுக்கங்களுடனான குடிசன மதிப்பீட்டு முறையினை அறிமுகப்படுத்தினார். இப்பதவியை வகித்த காலத்திலேயே சட்ட சபையில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராகவும் விளங்கினார்.*

*1913 ஆம் ஆண்டு தனது 60ஆவது வயதில் அருணாசலம் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இவரது அரச சேவையைப் பாராட்டி ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் பங்கிங்ஹாம் அரண்மனையில் வைத்து இவருக்கு சேர் பட்டம் வழங்கினர். இவர் 1924 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி தனது 71 ஆவது வயதில் காலமானார்.*

**ஜே.பிரணவிந்த்**
கொட்டகல

## பழமொழிகளும் விளக்கங்களும்

### அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

**விளக்கம்:** ஒருவரது மனநிலையை அவரது முகத்தைக் கண்டு அறியலாம். அவரது முக பாவனைகளை வைத்தே அவரது மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

மனிதருக்கு முகபாவனைகள் அவரது மன எண்ணங்களை பொறுத்து அமையும் என்பதே இதன் விளக்கமாகும்.

★★★

### உடம்பைத் தூக்கிக் கடம்பில் போடு

**விளக்கம் :** கடம்பு என்பது இங்கே கடம்ப மரத்தையும் கடம்ப மரத்தால் செய்யப்பட்ட கட்டிலையும் குறிக்கிறது.

கடம்ப மரத்தால் செய்யப்பட்ட கட்டிலில் படுத்தால் உடல் நிலை எப்போதும் சீராக இருக்கும் என்பதே இதன் விளக்கமாகும்.

★★★

### விண் பொய்த்தால் மண் பொய்க்கும்

**விளக்கம் :** விவசாயத்திற்கு மழையையே நம்பியிருக்கும் காலத்தில் பருவ மழையை நம்பி பயிர் செய்வர்.

உரிய காலத்தில் வரவேண்டிய மழை பெய்யாமல் பொய்த்துப்போனால் பயிர் வளராமல் உரிய விளைச்சல் இல்லாமல் மண்ணும் பொய்த்துப்போகும்.

★★★

### ஊரோடு ஒத்து வாழ்

**விளக்கம்:** ஊரோடு ஒத்து வாழ் என்றால், நீ வாழும் ஊர், சொந்த ஊராக இருந்தாலும் சரி, வேறு ஊராக இருந்தாலும் சரி, அதனை பொருட்படுத்தாமல்

அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் அன்புடனும் ஆதரவுடனும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

**பெ. திலானுஷா,**
மாபோல, வத்தளை.

## தெரிந்துகொள்வோம்..!

- *சைக்கிளைக் கண்டு பிடித்தவர்*
  ***மார்க்மில்ட்டன்***
- *தானே தன் கையால் மகுடம் தரித்த மன்னர்*
  ***நெப்போலியன்***
- *பெண்களின் கருப்பையின் நிறை என்ன*
  ***60 கிறாம்***
- *பல்லில்லாத பிராணி எது?*
  ***தேவாங்கு***
- *அதிக நீர் அருந்தும் பறவை எது?*
  ***புறா***
- *சீனப் பெருஞ்சுவரைக் கட்டிய மன்னர் யார்?*
  ***ரிசன்டி***

**கே.எல். ஹில்மி,**
தேசிய பாடசாலை,
சம்மாந்துறை 10.

## உழைக்கும் கரங்கள்!

*உழைக்கும் கரங்கள் உயர்ந்திடவே*
*உழவுத் தொழிலால் ஓங்கிடவே*
*உயரும் இன்ப வாழ்வினிலே*
*உலகம் எங்கும் செழித்திடவே!*

*செல்வம் கொழிக்கும் இலங்கையடா*
*செம்மை நிறைந்த பூமியடா*
*உமது உணவுத் தாகத்தை*
*எமது உழைப்பே போக்குமடா!*

**அஸ்மா பாரிஸ்,**
மள்வானை.

## இவ்வார மழலை




எஸ் ஷயான் - எப்.எக்ஸ்.நிலாணி,
நெதர்வில ஜனபதய,
வைத்தியசாலை வீதி,
தெமோதர.







**எம்.ஆர். எம். உமர்,**
தரம் 05 B,
கோட்டேகொட மகா வித்தியாலயம்.



**சி. மௌநேஷ்,**
அமிர்தகளி, மட்டக்களப்பு



**எச்.எம். முன்சிப்,**
தரம் 09, அல் அமீர் வித்தியாலயம்,
சம்மாந்துறை 10.



**ஷைனி நிரஞ்சன்,**
தரம் 01, கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்,
கொழும்பு 06.

# விளையாட்டு




# இலங்கை அணியுடன் மீண்டும் இணையும் லசித் மாலிங்க

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ரி 20 மற்றும் ஒருநாள் தொடர்களுக்கான இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்துவீச்சு ஆலோசகராக முன்னாள் வீரர் லசித் மாலிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ரி 20 தொடர் 7ம் திகதி கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 தொடர் நிறைவுப் பெற்ற பின்னர் இரண்டு அணிகளுக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் டெஸ்ட் தொடர்கள் நடைபெறவுள்ளன. இவ்வாறான நிலையில் இறுதியாக நடைபெற்றுமுடிந்த அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ரி 20 தொடரில் அணியின் வேகப் பந்துவீச்சு ஆலோசகராக செயற்பட்டிருந்த லசித் மாலிங்க, மீண்டும் இலங்கையில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ரி 20 மற்றும் ஒருநாள் தொடர்களில் வேகப்பந்துவீச்சு ஆலோசகராக செயற்படவுள்ளார் என இலங்கை கிரிக்கெட் அறிவித்துள்ளது.

லசித் மாலிங்க இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சு ஆலோசகராக ஏற்கனவே செயற்பட்டிருந்தமை மாத்திரமின்றி, இறுதியாக நடைபெற்றுமுடிந்த ஐபிஎல் தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டிருந்தார். அதேநேரம், இந்த அணியானது இறுதிப்போட்டிவரை முன்னேறி இரண்டாவது இடத்தை பிடித்துக்கொண்டது.

லசித் மாலிங்கவின் வருகையானது இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர்களின், குறிப்பாக நுவான் துஷார மற்றும் மதீஷ பதிரண ஆகிய மாலிங்க பாணியில் பந்துவீசும் வீரர்களுக்கு மிகச்சிறப்பான அனுபவமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அவுஸ்திரேலியா அணியில் இருந்து வெளியேறுவதற்கு அரசியலே காரணம்

**– ஜஸ்டின் லாங்கர்**



ஜஸ்டின் லாங்கர் இங்கிலாந்து அணிக்கு ப யிற்சியாளராக பதவி ஏற்க ம றுத்த போதிலும், அவுஸ்திரேலியா வுடன் ஒரு கடுமையான வெளி யேற்றத்திற்கு வழிவகுத்த காளைகள் அரசியல் பற்றி மனம் திறந்துள்ளார்.

அவுஸ்திரேலியா கடந்த ஆண்டுரி 20 உலகக் கோப்பை மற்றும் ஆஷஷ் தொடரை வென்றதால் தலைமை பயிற்சியாளராக இருந்த போதிலும், லாங்கர் பெப்ரவரியில் குறுகிய கால ஒப்பந்த நீடிப்பை நிராகரித்த பின்னர் பதவி விலகினார்.

சில மூத்த வீரர்கள் அவரது பயிற்சி பாணியில் மகிழ்ச்சியடையவில்லை, ஆனால் ரிக்கி பொண்டிங், ஸ்டீவ் வோ, மெத்யூ ஹைடன் மற்றும் மறைந்த ஷேன் வோர்ன் உள்ளிட்ட பல முன்னாள் அணி வீரர்கள் கிரிக்கெட் அவுஸ்திரேலியாவால் மோசமாக நடத்தப்பட்டதாக அவர் புறப்படுவதற்கு பல மாதங்களுக்கு முன்பு வதந்திகள் தொடர்ந்தன.

சி.ஏ.வின் அப்போதைய இடைக்காலத் தலைவர் ரிச்சர்ட் ஃப்ரூடென்ஸ்டைனுடன் அவர் தனது பதவியை விட்டு விலகிய மறுநாளே அவர் நடத்திய ஒரு உரையாடலை நினைவு கூர்ந்தபோது, லாங்கர் தான் விலகிச் செல்ல வழி வகுத்த விரக்திகளை அம்பலப்படுத்தினார்.

பேர்த்தில் நடைபெற்ற வர்த்தக சபை நிகழ்ச்சியில் பேசிய லாங்கர், கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் வலைத்தளத்தில் மேற்கோள் காட்டி பின்வருமாறு கூறினார்: முதல் விஷயம் (ஃபிரூடென்ஸ்டைன்) என்னிடம் கூறியது என்னவென்றால், 'உங்கள் தோழர்கள் அனைவரும் உங்களை ஊடகங்களில் ஆதரிப்பது மிகவும் நன்றாக இருக்க வேண்டும்' என்பதுதான்.

ஆமாம், தற்காலிகத் தலைவர், ஆனால் அனைத்து மரியாதையுடனும், அந்த தோழர்களும் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் ஜாம்பவான்கள் என்று நான் கூறினேன். அவை அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் துணி. அவை அவுஸ்திரேலிய கிரிக்கெட். அவர்கள் கிரிக்கெட்டில் உலகம் முழுவதும் வேலை செய்கிறார்கள். எனவே ஆமாம், என் தோழர்கள் என்னை கவனித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்களிடம் இருந்திருந்தால் கற்பனை செய்து பாருங்கள்'.

முரண்பாடாக, எனது பயிற்சி வாழ்க்கையின் கடைசி ஆறு மாதங்கள் 12 வருட பயிற்சியின் மிகவும் சுவாரஸ்யமான காலமாகும். நாங்கள் எல்லாவற்றையும் வென்றது மட்டுமல்லாமல், எனக்கு ஆற்றல் இருந்தது, எனக்கு கவனம் இருந்தது, நான் மகிழ்ச்சியாக இருந்தேன் காளைகள் அரசியலைத் தவிர. அவுஸ்திரேலிய ஆண்கள் தலைமை பயிற்சியாளராக ஆண்ட்ரூ மெக்டொனால்டை நியமித்துள்ள நிலையில்,

அவுஸ்திரேலியாவுக்காக 105 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய முன்னாள் தொடக்க ஆட்டக்காரரான லாங்கர், தனது நாட்டின் கடுமையான கிரிக்கெட் போட்டியாளர்களுக்கு பயிற்சியளிப்பதில் தனக்கு ஆர்வமில்லை என்று வலியுறுத்தினார். நான் ஒருபோதும் இங்கிலாந்து கிரிக்கெட்டிடம் பேசியதில்லை, என்று அவர் தனது தலையை அசைத்து கூறினார்.

# பங்களாதேஷ் டெஸ்ட் அணியின் புதிய தலைவராக சகீப் நியமனம்



பங்காளதேஷ் டெஸ்ட் அணியின் தலைவராக அனுபவ சகலதுறை வீரர் சகீப் அல் ஹஸன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் பின்னர் மொமினுல் ஹக் பங்களாதேஷ் டெஸ்ட் அணியின் தலைவர் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

கடந்த காலங்களாக துடுப்பாட்டத்தில் பிரகாசிப்பை மொமினுல் ஹக் வெளிப்படுத்த தவறிய பட்சத்தில், அவருடைய தலைவர் பதவி குறித்து ஆராயுமாறு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது. எனவே, தன்னுடைய துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தும் முகமாக அவர் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இதன்காரணமாக சகீப் அல் ஹஸன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். சகீப் அல் ஹஸன் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் புகாரளிக்காத காரணத்தால் கடந்த 2019ம் ஆண்டு அவருக்கு ஐசிசி தடைவிதித்திருந்தது. அதனால், தன்னுடைய தலைவர் பதவியையும் சகீப் அல் ஹஸன் இழந்திருந்தார்.

இதன்பின்னர் 2019ம் ஆண்டு தலைவர் பதவியை ஏற்றுக்கொண்ட மொமினுல் ஹக்கின் கீழ் பங்களாதேஷ் அணி நியூசிலாந்தில் வரலாற்று டெஸ்ட் தொடர் வெற்றியை பதிவுசெய்ததுடன், மொத்தமாக 17 போட்டிகளில் 3 வெற்றிகளையும், 12 தோல்விகளையும் சந்தித்துள்ளது.

சகீப் அல் ஹஸன் முதன்முறையாக 2009ம் ஆண்டு அணியின் தலைவர் பொறுப்பை ஏற்றிருந்ததுடன், அதனைத்தொடர்ந்து கடந்த 2017ம் ஆண்டு முஷ்பிகூர் ரஹீம் பதவி விலகியதை தொடர்ந்து தலைவராக நியமிக்கப்பட்டார்.

சகீப் அல் ஹஸன் பங்களாதேஷ் டெஸ்ட் அணியின் தலைவராக 14 போட்டிகளில் செயற்பட்டுள்ளதுடன் அதில் 3 வெற்றிகளையும், 11 தோல்விகளையும் சந்தித்துள்ளார். புதிய தலைவராக சகீப் அல் ஹஸன் நியமிக்கப்பட்டுள்ளதுடன், உப தலைவராக லிட்டன் டாஸ் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெஸ்டமோல்ட் ஆறு தேசிய மரதன் வெற்றியாளர்களுக்கு அனுசரணை







நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பிரதான வர்த்தகநாமமான நெஸ்டமோல்ட், அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஆறு தேசிய மரதன் வெற்றியாளர்களுக்கு அனுசரணைகளை

வழங்கியுள்ளது. ஏராளமான இலங்கை விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்திய ஒரு வர்த்தகநாமமாக, 2021 மார்ச் இல் நடைபெற்ற 46 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் மரதன் ஓட்டப்பந்தய வெற்றியாளர்களின் வளர்ச்சிக்கு உதவுவதற்காக நெஸ்டமோல்ட் நிதி உதவி, தடகள பயிற்சிக் கருவிகள் மற்றும் ஒரு வருடத்திற்கான நெஸ்டமோல்ட் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

'35 ஆண்டுகளுக்கும் மேலாக, திறமையான விளையாட்டு வீரர்களின் அபிலாஷைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடனும், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அவர்களின் திறமைகளை

வெளிப்படுத்துவதற்கான களங்களை உருவாக்குவதற்காகவும், நெஸ்டமோல்ட் இலங்கையின் மிகப்பெரிய மரதன் ஓட்டப் போட்டிகளின் அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. இந்த நிச்சயமற்ற

காலகட்டங்களில், இலங்கையின் ஆறு மரதன் வெற்றியாளர்களுக்கு அனுசரணை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். வரவிருக்கும் போட்டிகளுக்கு அவர்கள் தம்மை மனதாலும்

உடலாலும் 100 வீதம் தயார்படுத்திக் கொள்ள நாம் இதன் மூலமாக உதவுகிறோம். எங்கள் ஆதரவு மேலும் பல இளம் விளையாட்டு வீரர்களுக்கு அவர்களின் பயிற்சியைத் தொடரவும், மரதன்

விளையாட்டில் வெற்றிகரமாக வாழ்க்கையை முன்னெடுக்கவும் ஊக்கமளிக்கும் என்று நம்புகிறோம்,' என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான துணைத் தலைமை அதிகாரியான ருவான் வெலிகல தெரிவித்தார்.

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் அனுராத விஜேகோன், விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான அமல் எதிரிசூரிய மற்றும் தேசிய விளையாட்டு

அறிவியல் நிலையத்தின் பணிப்பாளரான சஜித் ஜயலால் ஆகியோரின் பங்கேற்புடன் தேசிய விளையாட்டு அறிவியல் நிலையத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. அனுசரணைகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

1. முத்துசாமி சிவராஜன்: இலங்கை விமானப்படை
2. வேலு கிறிஷாந்தனி: இலங்கை கடற்படை
3. திஸ்ஸ குணசேகர: இலங்கை இராணுவம்
4. மதுஷானி ஹேரத்: இலங்கை இராணுவம்
5. சிசிர குமார: இலங்கை கடற்படை
6. சமந்திகா லியனகே: இலங்கை இராணுவம்

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக திகழ்ந்து வருகிறது. நெஸ்டமோல்ற்று 60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் குடும்பங்களின்

நம்பிக்கையை வென்று, அவர்களால் சுவைத்து மகிழப்பட்டு வருகிறது. பிரத்தியேகமாக இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற இது, நாட்டின் மிகவும் அபிமானம் பெற்ற தனித்துவ அடையாளத்துடனான மோல்ற்று பானமாகும். இது மோல்ற்று பார்லி மற்றும் பாலின் நலச்செழுமையை வழங்குவதுடன், உடலையும் மனதையும் உற்சாகப்படுத்த தேவையான

அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களால் செறிவூட்டப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# Senthooram
# செந்தூரம்

2022 ஜூன் 5 ஞாயிற்றுக்கிழமை



# இப்படியும் திருடலாமா?





ஜெர்மனியின் கொபேனிக் நகரில் இருக்கும் மேயர் அலுவலகத்தில் திருடுவது எப்படி என்று திட்டம் போட்டார் 57 வயதாக இருக்கும் வில்ஹாம் வொயிட். ஆனால் அவர் போட்ட திட்டத்தை யாரும் சிந்தித்துக் கூட பார்த்திருக்க மாட்டார்கள்.

பொதுவாக திருட்டு வேலை என்றால், ஆயுதங்களை கொண்டு மிரட்டித் திருடலாம் இல்லையென்றால் காலம் நேரம் பார்த்து யாருக்கும் தெரியாமல் இரகசியமாகத் திருடலாம். ஆனால் வில்ஹாமின் வழி தனி வழி. இராணுவத்தை கொண்டு கச்சிதமாகத் திருடிக் காட்டினார்.

வெவ்வேறு கடைகளில் இராணுவத் தளபதி ஒருவருக்கான உடைகளை வாங்கினார். 1906 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி அந்த ஆடையை அணிந்து கொண்டு இராணுவ முகாம் ஒன்றுக்குச் சென்றார். தளபதிபோல் வேசம் போட்டிருந்த வில்ஹாமை பார்த்த எல்லோருமே சலூட் அடிக்க ஆரம்பித்தார்கள்.

அப்போதெல்லாம் தளபதிகள் சொல்வதை குருட்டுத் தனமாக செய்வது தான் ஜெர்மனி இராணுவத்தின் வேலை. அதனை பயன்படுத்திக் கொண்ட வில்ஹாம் அங்கிருந்த கிட்டத்தட்ட 20 இராணுவத்தினருக்கும் தம்மை பின்தொடருமான உத்தரவிட்டார்.

அப்படி வந்த இராணுவத்தை கொண்டுபோய் மேயர் அலுவலகத்திற்கு முன்னாள் நிறுத்தினார். மேயரை கைது செய்யுமாறு இராணுவத்திற்கு உத்தரவிட்டார். ஏன், எதற்கு என்று கேட்காத இராணுவம் நேராக அலுவவலகத்திற்குள் புகுந்து மேயரை இழுத்து வந்தனர்.

அந்த அலுவலகத்திற்கு சென்ற வில்ஹாம், பணப் பெட்டியை காண்பிக்குமாறு உத்தரவிட்டார். அங்கே சுமார் 4,000 மார்க்ஸ் பணம் இருந்தது. யாரும் பார்ப்பதற்கு முன் அத்தனை பணத்தையும் பைக்குள் போட்டுக்கொண்டார்.

தொடர்ந்து மேயரை காரில் போட்டுக் கொண்டு பெர்லின் பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமாறு இராணுவத்தின் ஒரு குழுவுக்கு உத்தரவிட்டார். எஞ்சிய வீரர்கள் தம்முடன் இருக்குமாறு கூறினார். ஆனால் அரை மணி நேரம் கழித்து அங்கிருந்து நைசாக நழுவிக்கொண்டார் வில்ஹாம்.


இன்னுமே என்ன நடந்தது என்று தெரியாத படையினர் மேயரையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்றார்கள். நடந்தது எல்லாமே தலையில் மிளகாய் அரைக்கும் வேலை என்பது புரிவதற்கே இன்னும் சில மணி நேரம் தேவைப்பட்டது.

பின்னர் தப்பிச் சென்ற வில்ஹாமை பிடிக்க தீவிர தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டது. சில நாட்களின் பின் பெர்லினில் வைத்து சிக்கிக் கொண்ட வில்ஹாமுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. என்றாலும் இரண்டு ஆண்டுகளிலேயே விடுதலை பெற்றார்.

இது ஒரு பயங்கரத் திருட்டு என்றாலும் யாரும் செய்யத் துணியாத குறும்புத்தனமான வேலை. இதனால் அவரது புகழ் ஊரெல்லாம் பரவியது. அவது மெழுகுச் சிலை ஒன்றும் அண்டர் டென் லின்டன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது. அவர் பற்றிய கதைகள், செய்திகள் உலகெங்கும் பரவியது. தனது கதையைக் கூறும் புத்தகம் ஒன்றையும் வெளியிட்டார். அது அமோகமாக விற்பனையானது.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



## ஊரை ஏமாற்றிய கில்லாடி

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஆர்தர் பர்கியுசன் வரலாற்று பிரபலமான மோசடிக்காரர். இங்கிலாந்தின் தேசிய நினைவுச் சின்னங்கள் மற்றும் அரச கடடடங்கள் ஏமாற்றி விற்ற கில்லாடி அவர். 1920களில் அவர் இங்கிலாந்தை பார்க்க வந்த அமெரிக்க சுற்றுலா பயணிகளுக்கு மத்திய லண்டனில் இருக்கும் ட்ரபல்கர் சதுக்கத்தில் உள்ள நெல்சன் தூணை 6000 பௌண்ட்களுக்கு விற்றார், பிக் பென் மணிக்கூட்டு கோபுரத்திற்கு 1000 பௌண்ட் முற்பணம் பெற்றார், பக்கிங்ஹாம் மாளிகையை விற்க 2000 பௌண்ட் முற்பணம் பெற்றார்.

அமெரிக்கர்களை இலகுவாக ஏமாற்ற முடியும் என்று நினைத்தாரோ தொரியவில்லை 1925 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு அவர் வெள்ளை மாளிகையே விற்றார். ஒரு பண்ணைக்காரருக்கு வருடாந்தம் 100,000 டொலர் தவணை கொடுப்பனவு அடிப்படையில் விற்றார்.

அமெரிக்கா வந்த அவுஸ்திரேலிய நாட்டவர் ஒருவருக்கு அமெரிக்காவின் அடையாளமாக இருக்கும் இராட்சத சுதந்திர தேவி சிலையையே விற்க முயன்றார். அவர் ஒரு விபரம் தெரிந்த அவுஸ்திரேலியர் போல், நேராக பொலிஸுக்கு சென்றுவிட்டார். கைது செய்யப்பட்ட பர்கியுசன் ஐந்து ஆண்டு சிறைக்குப் பின் 1930 ஆம் ஆண்டிலேயே விடுதலை பெற்றார்.

ஆனால் மக்களை ஏமாற்றும் வேலையை கைவிடவில்லை. 1938 ஆம் ஆண்டு இறக்கும் வரை தனது வேலையை சிறிய அளவிலாவது செய்து வந்திருக்கிறார். ஏமாறுபவர்கள் இருக்கும் வரை பர்கியுசன் போன்றவர்களுக்கு கொண்டாட்டம் தான்.

## பூஜ்ய நாணயம்

இந்தியாவில் ஊழலுக்கு எதிராக போராடுவதற்கு விசித்தரமான பணத்தாள் அச்சடிக்கப்படுகிறது. அந்தப் பணத்தாலின் பெறுமதி வெறும் பூஜ்யம் தான். இதனை பூஜ்ய நாணயம் என்று அழைக்கலாம். ஐம்பது ரூபா நோட்டு வடிவத்தில் இருக்கும். ஆனால் பெறுமதி இடும் இடத்தில் பூஜ்யம் மாத்திரமே இருக்கும்.

அரச ஊழியர்கள், அதிகாரிகள் யாராவது லஞ்சம் கேட்டால் அதனை எதிர்க்கும் வகையில் இந்த பூஜ்ய நாணயத்தை கொடுத்துவிடுவார்கள். 5ஆம் தூண் என்ற அரச சார்பற்ற நிறுவனமே இந்த நாணயத்தை அச்சிட்டு விநியோகிக்கிறது.



2007 ஆம் ஆண்டு இந்த இயக்கம் ஆரம்பித்தது தொடக்கம் இதுவரை 2.5 மில்லியனுக்கும் அதிகமான பூஜ்ய நாணயங்கள் விநியோகிக் கப்பட்டிருக்கின்றன.

## வேதனை தரும் புகைப்படம்



இந்தப் புகைப்படத்தைப் பார்த்தால் தனது தாயை மகன் அழைத்து செல்வது போல் மேலோட்டமாகத் தெரியும். ஆனால் இந்தப் புகைப்படத்தின் பின்னணி மிகவும் கொடியது, வோதனைக்குரியது. புகைப்படத்தில் இருக்கும் ஆடவரின் பெயர் கிறிஸ்டோபர் பார்கோ. அமெரிக்காவின் நியுயோர்க் நகரைச் சேர்ந்தவர். 2006 ஆம் ஆண்டில் தனது தந்தையை கொலை செய்ததாக இவர் குற்றங்காணப்பட்டார். அதேபோன்று புகைப்படத்தில் இருக்கும் தனது தாயை கொலை செய்ய முயன்றார் என்றும் குற்றம் நிரூபிக்கப்பட்டது.

இந்தக் கொலை முயற்சியில் தனது தாய்க்கு அவர் கடும் காயத்தை ஏற்படுத்தி இருக்கிறார்.

# அரசின் கலாபூஷண விருது பெற்ற பல்துறைக் கலைஞன் கலைக்கமல்

அரசா ங்கம் கலைஞர்களையும் இலக்கியவாதிகளையும் வருடாந்தம் பாராட்டி கௌரவித்து அரசின் உயர் விருதான கலாபூஷணம் விருது வழங்கி கௌரவித்து வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் 2021ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது பெறுவதற்குரிய வாய்ப்பை கலைஞர் கலைக்கமலும் பெற்றிருந்தார். இலங்கையில் அவ்விருது வழங்கும் விழா கொழும்பில் நடைபெறுகின்றபோது அவ்விருதை பெறுவதற்குரிய தகுதி பெற்ற கலைஞர் கலைக்கமல் உம்றா கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவுக்கு சென்றிருந்ததால் அவரால் இந்த விழாவில் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

புனித மக்கா பயணத்தை முடித்துக் கொண்டு தாய்நாட்டுக்கு வந்த பின் தேசமான்ய ஸைட் சிவாஜி மௌலானா, கலைஞர் கலைக்கமலுக்குரிய கலாபூஷணம் விருதை வழங்கினார்.

1977களில் பாடகராக, கவிஞராக கலையுலகில் அறிமுகமானவர் கலைக்கமல். இதுவரை 5000 இற்கும் மேற்பட்ட இசை நிகழ்ச்சிகளில் கடந்த 40 ஆண்டுகளாக பாடி பல்லாயிரக்கணக்கான ரசிகர்களைக் கவர்ந்தவர். கதை, கட்டுரை, கவிதை என பல்வேறு துறைகளிலும் ஈடுபாடுள்ள கமல் 'ஓடக்குழல்' எனும் புதுக்கவிதை கதையை இலங்கையில் முதன் முதலில் எழுதி இலக்கிய உலகில் பிரபலமானார்.

இலங்கை வானொலியில் தமிழ், முஸ்லிம் சேவை நடத்திய இசை தேர்வில் 1996 ஆம் ஆண்டு சித்தியடைந்து வானொலி தொலைக்காட்சி மேடைகளிலும் பிரசித்தி பெற்று முன்னணி பாடகராகத் திகழ்ந்தார். 40 வருடகால வரலாறு காணும் வலம்புரி கவிதா வட்டத்தின் 5 ஸ்தாபகர்களில் இவரும் ஒருவராவார்.





2015ஆம் ஆண்டு தென்னிந்திய கும்பகோணத்தில் நடத்தப்பட்ட இசை இலக்கிய மாநாட்டில், இலங்கையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பாடகராக இவர் தெரிவு செய்யப்பட்டதுடன், இவர் கவிக்கோ அப்துல் ரகுமானால் 'இசைச்சுடர்' என்ற விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

'கீத்ராத்' எனும் தனிமனித பாடல் நிகழ்ச்சியை 55 தடவைகள் நடத்தி ஜனரஞ்சகப் பாடகர் எனும் பாராட்டையும் பெற்றவர் கலைக்கமல். இந்தியா முதல் ஐரோப்பிய நாடுகளில் பாடியுள்ளதுடன் கலைகள், சுய பாடல் இறுவட்டுக்கள் 20 வெளியிட்டுள்ளார். '

'மஹ்தூமி கஸீதா' குழுவின் தலைவரான கலைக்கமல், நாடளாவிய ரீதியில் பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

'இசைச்சுடர்', 'இசை மதி', 'ஈழத்து இசைமுரசு' எனும் பட்டங்களைப் பெற்ற கலைக்கமல் பிரபல பாடகர் இசையொலி மஹ்தூம் ஏ காதர், ஐனுல் ஸெக்கியா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

**ஜீ.மகேந்திரன்** (கிரிஷாந்)

# தால விலாசம் தந்த தங்கத் தாத்தா

"தங்கத் தாத்தா" என செல்லமாக அழைக்கப்பட்ட யாழ் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் 1878ஆம் ஆண்டு மே 25இல் பிறந்தார். 1953 ஜூலை 10 இல் தனது 75வது அகவையில் அமரரானார்.

இவர் தங்கத் தாத்தா என அன்பாக அழைக்கப்பட்டார். ஏறக்குறைய பதினைந்தாயிரம் செய்யுள்களை இயற்றியுள்ளார்.



"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" போன்ற பல செய்யுள்களை சுவையான முறையில் எளிய தமிழில் பாடியுள்ளார்.

பலவகைப் பக்திப் பாடல்களையும் அவர் இயற்றியிருக்கின்றார்.

பனையின் பெருமைகளைக் கூறும் தால விலாசம், கதிர்காமம், முருகக் கடவுளைக் குறித்து பாடிய "கதிரைச் சிலேடை வெண்பா" என்பன புகழ் பெற்றவை.

கந்தபுராணக் கதைகளும் அவை உணர்த்தும் உண்மை நூற் கருத்தும், கந்தவனக் கடவை நான் மணிமாலை, சாவித்திரி கதை


( உரை நடை நூல் ), கந்தபுராண நுண்பொருள் விளக்கம் ( சைவாங்கில வித்தியாசாலை வெளியீடு ), தந்தையார் பதிற்றுப்பத்து, நல்லை முருகன் திருப்புகழ், நல்லையந்தாதி, அருணாசலந்துரை சரித்திரச் சுருக்கம், சுகாதாரக் கும்மி (சைவ பரிபாலன சபையார் பதிப்பு ), சூரிய வழிபாடு, மருதடி விநாயகர் பாமாலை, கந்தவன நாதர் திருப்பள்ளியெழுச்சி, அட்டகிரிப் பதிகம், கல்லுண்டாய் வைரவர் பதிகம், கதிரைமலை வேலவர் பதிகம்,

செந்தமிழ்ச் செல்வியாற்றுப்படை, சிறுவர் பாடல்கள், ஸ்ரீ பொன்னம்பலம் அருணாசலம், ஜீவிய சரித்திரச் சுருக்கம், செய்யுள் நடையில் போன்றன இவர் இயற்றிய நூல்கள் சிலவாகும்.



**ஆக்கம்:எஸ்.கணேசன்**
**ஆச்சாரி சதீஷ்,** கம்பளை

## செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து




நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்தூரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீர்களா? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற whats app க்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.




நீங்கள், உங்கள் Phoneகளில் விதவிதமாக எடுத்துப் பார்த்து ரசிக்கும் Selfie படங்களை இந்த செந்தூரம் இதழில் பிரசுரிக்க உங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு என்ற 0773124543 whatsappக்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

# தமிழ்மொழியும் இலக்கியமும்; உள்ளடக்க வகுப்பொழுங்கு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடநூல்களை முன்வைத்து முன்னரும் கதையாடல்கள் பல நிகழ்ந்துள்ளன. தாய்மொழிப் பாடமேம்பாட்டுக்கும், திறன் விருத்திக்குமான ஊடகமாக இலவசக் கல்வியின் முறையிலான பாடநூல்கள் உள்ளன.

வகுப்பறைச் செயற்பாடுகளூடாக ஆசிரியர்கள் கடத்தும் அல்லது வழிப்படுத்தும் அறிவு, திறன், மனப்பாங்கு மேம்பாட்டுக்கான இலகு கருவியாக உரிய பாடநூல்கள் அமைகின்றன.

தமிழ் மொழியும் இலக்கியமும் பாடநூல் உள்ளடக்கக் கட்டுமானமானது கடந்த காலங்களில் எவ்விதம் இருந்ததென்பதும், எதிர்காலத்தில் எவ்விதம் கட்டமைய வேண்டுமென்பதும் மிகுந்த கவனிப்புக்குரியது.

மொழியின் அடிப்படைத் தேர்ச்சிகளை மாணவர் பெறுவதற்கும், படைப்பு வழிச்சிந்தனையை வளர்ப்பதற்கும், ஆசிரியர்களின் தேடல் மற்றும் வளங்கல் மட்டத்தை உயர்த்துவதற்கும் ஏற்றவாறான பாடநூல் கட்டமைவு அவசியம்.

தமிழ்மொழி இலக்கியம் பாடப் பனுவல்களைப் பொறுத்தவரை எண்பது, தொண்ணூறுகளில் பழமையின் தொடர்ச்சியே காணப்பட்டது. பின் இரண்டாயிரங்களில் கட்டமைந்த சில வகுப்புகளுக்கான புதிய நூல்களில் நவீன இழை காணப்பட்டது. ஆனால் பின் அதன் தொடர்ச்சி அறுந்த தன்மையும் கொண்டு வரப்பட்டது. அத்துடன் வகுப்பு வளர்ச்சிக்கு ஏற்றவாறானபடி முறையான உள்ளடக்க ஒழுங்கு பல கட்டங்களில் தவறவிடப்பட்டது.

காலத்துக்குக் காலம் மாறிய கலைத் திட்டப் போக்கு மற்றும் அடைவறி கருவி முறை என்பற்றினூடாக மொழிப்பாட ஒழுங்கு சிதைவு நிலைக்கு அல்லது பின்னிலைக்குத்தள்ளப்பட்டு வந்துள்ளது. இந்நிலைக்கான காரணங்கள் குறித்து விமர்சன ரீதியிலான கதையாடல்களுண்டு. எனினும் பேராசிரியர்கள், பாட நிபுணத்துவக் குழுவினர், வகுப்பு நிலை ஆசிரியர்களை உள்ளடக்கிய நூலாக்கச் செயற்பாடானது பரிணாமப் பக்குவங்களோடு முன்னிறுத்தப்படல் வேண்டும்.

குறிப்பாக வகுப்பு வரிசைக்கேற்ப உள்ளடக்கக் கனதி வளர்க்கப்படுதல் வேண்டும். உதாரணத்துக்கு 'வஞ்சியர் காண்டம்' தரம் 10, 11இலும், 'இரு துருவங்கள் நாடகம்' உயர் வகுப்பிலும் இடம் பெறுவதின் கனதி ஒழுங்கைக் குறிப்பிடலாம்.

அதுபோல் காலத்திற்கேற்ப நவீன புதிய விடயங்கள் உள்ளீர்க்கப்படலாம். உதாரணத்திற்கு குறும்படப் பிரதி, நவீன நாடகப் பிரதி என்பவற்றோடு கதைகளை நோக்கின் ஒரே பாணியில் அமையாத கதை வடிவங்கள் அல்லது வெவ்வேறு பாணியிலானபடிமுறை வளர்ச்சியை வெட்டு முகத்தைக் காட்டுவதாக அமையலாம். இவ்வாறு அமையும் போது கதைக் கட்டமைவு அல்லது உருவமைவு குறித்து மாணவர் பாட நூலிலேயே கற்றுக் கொள்ள இயலுமாகும். மறுபுறம் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்கள் நவீன தேடல் உடையவராய் இருத்தல் வேண்டுமென்பது முக்கியமான விதியாகும் என்பதை மனம் கொள்ளவேண்டும்.

**பனுவன்**

குறிப்பு: தமிழ்மொழியும் இலக்கியமும் பாடநூல் குறித்து பன்முகத் தன்மையுடன் கதையாடலாம். புதிய கல்வி முறை பாடநூல்களை மொடியூல்களூடாக முன்னெடுக்க முன்மொழிவுகளை முன்னெடுக்கும் சூழலில் இத்தலைப்பிலான கருத்தாடல் பயனுள்ளதாக அமையும். பனுவன் எழுதிய குறிப்புகளை நீங்களும் தொடரலாம் அல்லது மறுக்கலாம். எதிர்பார்க்கிறது மறுசொல்.

## மனம் ததும்பும்
# ஹைக்கூ 9

தமிழிலும் ஹைக்கூ பற்றிய கதையாடலும், சிந்தனைகளும் நீண்ட காலத்துக்கு முன்பே வேர் விடத்தொடங்கி விட்டன. தமிழில் ஹைக்கூவை அறிமுகமிட்டவர் பாரதிதான். 1916 ஒக்டோபர் 16 ஆந் திகதிய சுதேச மித்திரனில் எழுதிய ஜப்பானியக் கவிதை என்கிற கட்டுரையே தமிழில் ஹைக்கூவின் தொடக்கம்.

'ஐரோப்பியக் கவிதை, சொல் மிகுதி. ஜப்பானில் அப்படியில்லை. வேண்டாத சொல் ஒன்று கூடச் சேர்ப்பது கிடையாது. 'கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிட வேண்டும்' என்று ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக் கொண்டிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதையெழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன் வாழ்க்கையையே கவிதையாக சீர் செய்தோன் அவனே கவி. புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்துமீன், தனிமை, மோகம், மலர்களின் பேச்சு இவற்றிலே ஈடுபட்டுப்போய் இயற்கையுடனே ஒன்றாக வாழ்பவனே கவி' என்பார். ஜப்பானிய கவிதையின் சொல் இறுக்கத்தையும் இயற்கை ஈடுபாட்டையும் அக்கட்டுரையில் பாரதியார் உரைக்கிறார். அத்தோடு ஹொகுஷி என்பாரின் ஹைக்கூ ஒன்றினை தமிழில் தருகிறார்.

'தீப்பட்டெரிந்தது, வீழுமவரின் அமைதியென்னே''

பாரதி தமிழில் தொடக்கிய ஜப்பானியக் கவிதை என்கிற ஹைக்கூ அறிமுகம் பின்பு வியாபகமெடுத்தது. 1987 இலிருந்து ஹைக்கூ பற்றியதான கட்டுரைகள், நூல்கள், திறனாய்வுகள், முனைவர் பட்ட ஆய்வுகள், போட்டிகள், கருத்தரங்குகள், ஹைக்கூ கவிதைப் பிரதிகள், ஹைக்கூ இதழ்கள், பத்திரிகைகள் என தமிழில் ஜப்பானிய ஹைக்கூ தழைத்தது. பட்டாம்பூச்சி ஹைக்கூ இதழில் 'தொலைபேசிக் கம்பிகளில் செய்தி அருவி

செவிடாய்க் குந்தியிருக்கும் குருவி''

என்கிற ஹைக்கூ சான்றாகிறது.

தமிழில் ஹைக்கூ என்கிற சிந்தனையும் வளர்ந்தது. தமிழ் ஹைக்கூவின் உள்ளடக்கம், உத்திகள், அதன் அமைப்பு குறித்த அவதானம் முக்கியமானது.

உண்மையில் ஹைக்கூ காட்சிகள் பலவற்றைத் தமிழிலக்கியத்தில் காணலாம். அகநானூறு, நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், நொடிகளில் கூட ஹைக்கூவைக் காண்கிறோம்.

'மூங்கில் இலை மேலே
தூங்கு பனி நீரே''

இதில் சொற்செட்டு, அழகியல், அற்ப வாழ்வைப் பேசும் பொருளாழம் உள்ளதல்லவா.

'பயிரை
மேய்ந்தது
வேலி'' இதுவும் ஹைக்கூவின் சாயல் தானே.

'துறைமீன் பொய்கை
ஆம்பல் மேய்ந்த எருமை
குருஉக்கொடி பகன்றை சூடிப் புகுதரும்''

ஓரம் போகியாரின் அகப்பாடலிது. ஹைக்கூவின் தமிழ் மணம் மிக்கது. தமிழில் ஹைக்கூ மனம் ததும்பி நிற்கிறது.

## ஔவன் கவிதை

### நீ நுனி

அகத்தீயின் கொழுந்து
எரிமுகங்களில் படர்ந்திற்று
ஏழு தசாப்தமாய் உட்கிடந்து
துடிக்குமொரு உணர்வு
மெல்லுணர்வு மீது தீட்டப்பட்ட வலி

துடித்தெழும் சிறுகணம்
கங்குல்களைச் சுடராக்கி
நீள்பகலின் இருப்பின் மீது படரும்
மெல்லிய நறுமணம்

ஒரு மலர்
சிறு கதிர்
சில துளி ஒளி
காத்திருப்பின் நாட்கள் மீதொரு பாடல்

கங்குல் தாவி
கடல் குலாவி
காற்று மேவி கேட்கிறது
தீயின் நுனியில்

காத்திருப்பின் மீதான
நெடும் பாடல்

## ஜமீல்; நிழலுடையாப் பறவை




'கவிதைகள் அற்புதங்களை நிகழ்த்தும்' என்று நம்பும் நம் காலக் கவிஞர் ஜமீல் நிழலுடையாப் பறவைக்காரர். பறவையின் தாகமும்; தேடலும்; தீராப்பறப்பும் கொண்டவர். அன்றாடங்களின் மீது அவர் நிகழ்த்தும் பறப்பு அதிசயிக்கத்தக்கது.

ஜமீல் எனும் பறவைக்காரன் கட்டும் கூடு வலிமையானது. எளிமையான சொற்கள், உணர்வின் கவிச்சி, அனுபவத்தின் திரட்சி, மொழியின் லாவகிப்பு மிக்க இவரது கவிதைகளின் கூடு குழந்தைகளுக்கானதாகவும் கட்டமைகிறது. ஜமீல் எனும் பறவைக்காரனின் சிறகுகளில் நிழலுடையாத் தொடர்ச்சியையும், திரட்சியையும் காணுகிறோம். அவர் தொடராமல் வெளியிட்ட ஒன்பது கவிதைப் பனுவல்களும் நிழலுடையாக் கவிதைப் பறப்பின் சாட்சிகள் தானே.

இந்தப் பனுவலில் 'திறந்து கிடக்கும் மனசின் கதவுகள்' வழியே பறவையின் உடையா நிழல் கூட்டுக்குள் 'பஞ்சுமிட்டாய் விற்பவன்' ஆகி நிற்கிறார் கவிதைகளோடு ஜமீல். புதுப்புனைவு 2021இல் பதிப்பித்த இந்தப் பிரதியில் 'கவிதை நதிக்குள்; உயிர்த்தெழும் பறவையின் உடைய நிழல்' குறித்து எஸ். பாயிஸ்ஸா அலி எழுதுகிறார். 'எல்லாக் கவிதைகளுமே ஒரு வகையான போலச் செய்தல் செயற்பாடாகும். ஆன்மாவைத் தொட்டு சலனத்தை ஏற்படுத்தும் உணர்வுபூர்வமான வெளிப்பாடாகவும்....' ஜமீலின் கவிதைகளைக் காணுகிறார்.

போலச் செய்தலெனும் பிரதியெடுத்தல் தான் உடையா நிழலாகிறது. ஜமீலின் சிறகுகளில் வாழ்தலின் நிழல் தான் இலக்கியம். வாழ்தலுக்கு இருக்கின்ற உயிர்ப்பு, உணர்வு, துக்கம், துயர், வலி, மகிழ்வு, சுகம் எல்லாமே கவிதைக்கும் இருக்கிறது. அந்த நிழல்தான் ஜமீல் உருவாக்கும் பறவையின் உடையா நிழல்.

ஜமீலின் பிரதியொன்றுக்கு முன்னம் ஒரு முறை அணிந்துரை எழுதியிருக்கிறேன். 'வண்ணத்துப்பூச்சிகளினாலான உலகை




வரைகையில் வழிந்தொழுகும் சொற்களின் வசீகரம்' ஜமீலினுடையது.

ஜமீல் கவிதை வழி புனையும் சொற்களில் துளிரும் உணர்வுக் கலவையும், வாசகர் உள் மனசில் பாய்ச்சும் அதன் வீச்சும் மூலமும் நிழலுமாக நிற்கின்றன. வாழ்வெனும் ஒளியிலிருந்து அவர் பிழியும் சாரம் அது.

ஜமீல் கையாளும் உத்திகள், சொற்தேர்வு, அதன் பெறுமானம், சொற்செட்டு அல்லது நீரோட்டம் போன்றதோர் மெல்லுணர்வு யாவுமே ஒரு பறவைக்காரனின் பறப்பு முயற்சிக்கு லாவகமாய் அமைந்துள்ளன.

கவிதை என்பது அவர் சொல்வதுபோல அற்புதங்களை நிகழ்த்துவதுதான். உணர்வின் அற்புதங்கள் விரவிய பிரதி நிழலுடையாப் பறவை ஜமீல். இன்னும் எழுதுக தோழா....

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



**அப்பா:** எக்ஸாம் ஹால்ல போய் தூங்கிட்டு வந்துருக்கியே வெக்கமா இல்ல ?
**மகன்:** நீங்கதானே கேள்விக்கு பதில் தெரியலனா முழிச்சிகிட்டு இருக்காதனு சொன்னிங்க.



"அந்த டாக்டர்கிட்டே போனா மூணு வேளையும் கஞ்சிதான் குடிக்கணும்.."
"ஏன்..? "
"அவருக்கு ஃபீஸ் கொடுத்தக்கு அப்பறம் அதுதான் முடியும்!"



யாழ்ப்பாணத்துக்கு எத்தனை மணிக்கு பஸ்..?
9 மணிக்கு..
அதுக்கு முன்னாடி எதுவும் இருக்கா..?
ஓ இருக்கே.. ரெண்டு டயர், லைட், கண்ணாடி எல்லாம் இருக்கு.



"வயித்துல பண்ணவேண்டிய ஆபரேஷன் கால்லே பண்ணி வெச்சிருக்கீங்களே...டாக்டர்?"
"நீங்கதானே ஆபரேஷனைத் தள்ளிவைக்கச் சொன்னீங்க...!"



**கணவன் :** வொய்ஃபுக்கு(wife) அர்த்தம் தெரியுமா? வித்அவுட் இன்பர்மேஷன் ஃபைட்டிங் எவ்ரிதிங் ( without information fighting everthing)
**மனைவி :** அதுக்கு அர்த்தம் அப்படி இல்லைங்க ! வித் இடியட் ஃபார் எவர் ( with idiot for ever)
**கணவன் :** தேவைதான்டி எனக்கு !



"என்னங்க....நான் போட்டிருக்கிற இந்த கண்ணாடி நல்லால்லேன்னு சொன்னீங்க, உங்களுக்கு இனிமே முத்தம் குடுக்க மாட்டேன்!"
"குடுக்கவே வேண்டாம்! ஏன்னா நான் பக்கத்து வீட்டுக்காரன்



**ராமு:** குரைக்கிற நாய் கடிக்காது
**சோமு:** ஏன்?
**ராமு:** ஒரே சமயத்துல இரண்டு வேலையை அதால செய்ய முடியாது, அதனால தான்.



பக்கத்து வீட்டிலே டி.வி. ரிப்பேராம்... உடனே ஒரு மெக்கானிக்கை அழைச்சுட்டு வாங்க..." "அவங்க மேலே உனக்கு என்னடி இவ்வளவு அக்கறை?"
"நான் இங்கே மெகா சீரியல் பார்த்து அழுத்துக்கிட்டு இருக்கேன். அங்கே அவங்க மட்டும் சந்தோஷமா இருக்காங்களே...!



டாக்டர் ; ஏன் சார்.. எதுக்கு நர்ஸ் கையை தடவிப் பார்த்தீங்களாம்..?
நோயாளி ; நீங்கதானே சொன்னீங்க.. ஊசி போட்ட கையை தடவிக் கொடுங்கன்னு..!

# இலக்கிய உலகில் தடம் பதித்து ஏறுநடை போட தேவை வாசிப்பே!

## கலைப்பூங்காவனம் என போற்றும் கலை குடும்பத்தில் உதித்த கவிஞர் ஏறாவூர் தாஹிர்



**உங்களைப் பற்றிய அறிமுகம் குடும்பப் பின்னணி குறித்து?**

நான் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றி தற்போது ஓய்வு நிலையில் உள்ளேன். எனது பெற்றோர் சாகுல் ஹமீத், மர்ஹூம் ஹாஜியானி ஹதீஜத் உம்மா தம்பதியராவர். மர்ஹூமா ஹாஜறா எனது வாழ்க்கைத் துணைவியாக வாழ்ந்து மறைந்தார். தற்போது என் மக்களின் அன்பான உபசரிப்பிலும் பராமரிப்பிலும் எனது வாழ்வியம் சக்கரமாக சுழன்று கொண்டிருக்கின்றது. (நீண்ட சுய வரலாறொன்றின் சுருக்கமே இவை)

**உங்களது பாடசாலை வாழ்க்கை மற்றும் தொழில் அனுபவம் பற்றியும் கூறுங்கள்?**

எனது கற்றல் செயற்பாடுகள் ஏறாவூர் அறபா வித்தியாலயத்தில் துவக்கம் பெற்று, ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையின் முற்றுப் பெற்றது. பாடசாலை விலகளின் பின் சுகாதார திணைக்களத்தில் மேற்பார்வையாளராகப் பணியாற்றிய பின்னர் ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை பணிமனையில் கணக்கு எழுதுனராகப் (Account Clerk) பணியாற்றிய போதே ஆசிரிய நியமனம் கிடைத்தது.

குளியாப்பிட்டி, மடிகே மிதியால என்ற கிராமத்தில் கற்பித்தல் தொழிலேற்று, அதன்பின் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இரண்டு வருடங்கள் பயிற்சியை முடித்து வெளியேறிய எனக்கு, பொலன்னறுவை தம்பாளை அல் ஹிலால் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியராக நியமனம் கிடைத்தது. இரண்டு வருடங்கள் அங்கு கடமையாற்றி, வெளிநாடு சென்று சவுதியில் றியாத் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பணிபுரிந்த பின், மீண்டும் தாயகம் திரும்பி ஆசிரியர் தொழிலில் இணைந்துகொண்டேன்.



உங்கள் குடும்பத்தவர்களுக்கும் இலக்கியத் துறையில் ஈடுபாடு உண்டா?

மாணவப் பருவத்தில் பாடசாலை மாணவர் மன்றம், இலக்கிய மன்றங்களின் செயலாளராகவும், 'சந்தனம்' சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்கியுள்ளேன். இனி, என்னைப் பொறுத்தமட்டில் தரமான சுவையான இலக்கியப் படைப்புகளின் தாஸன் நான். எனது குடும்பப் பின்புலமும் அவ்வாறே. எனக்கு தமிழ் கற்பித்த ஆசான்களில் என்னால் மறக்க மறந்தோராகப் பண்டிதர் எஸ். குமாரசாமிசேர், 'அவைவேந்து' யூசுப் சேர் ஆகியோர் விளங்குகின்றனர். மேலும், எனது தந்தை மர்ஹூம் சாஹுல் ஹமீத், தாயார் மர்ஹூமா ஹதீஜத் உம்மா ஆகிய இருவரும் இலக்கியத் துறையில் எனது வழிகாட்டிகளாக இருந்தனர்.

பொதுவாக எனது குடும்பமே ஒரு கலை பூங்காவனம் எனலாம். என் உடன் பிறப்புக்களான செய்னுலாப்த்தீன், அபூஹனிபா ஆகிய இருவரும் சிறந்த பாடகர்கள். இலக்கிய இரசனையும் விமர்சகருமாக சகோதரர் ரியாசுல் ஹஸன் விளங்குகிறார். இளைய சகோதரர் றிபாய்தீன் என்னைப் போல் கவிதை, கட்டுரை, பாடல் ஆக்கங்களிலும் அரபு எழுத்தணிக் கலையிலும் பளிச்சிட்டுக் கொண்டிருக்கின்றார். தங்கை பரீனாவை ஒரு கலை இலக்கியவாதி என்றால் மிகையல்ல. அவ்வாறே என் மைத்துனர் அல்ஹாஜ் நஸீரும் (ஜே.பி) சிறந்த மேடைப் பேச்சாளராகவும் கவிதை ஆற்றல் படைத்தவராகவும் திகழ்கிறார்கள். அனைத்திற்கும் மேலாக எனது தந்தையும் தாயும் ஆன்மிக செயற்பாடுகளிலும் வியத்தகு தம்பதியராக விளங்கினர்.

**உங்களுக்கு கவிதைகளில் ஈடுபாடு வந்தது எப்படி?**

இளமையிலேயே வாசிப்பில் நேசம் கொண்டவனாக இருந்தேன். என் மாலைப் பொழுதுகளும் விடுமுறை தினங்களும் பெரும்பாலும் பொது நூலகத்திலேயே கழிந்தன. அதிலும் விசேடமாக இளமையிலேயே கவிதை நூல்களை அதிக விருப்பத்துடன் வாசித்தமையும் என் பெற்றோரின் பின்புலமுமே கவிதைகளின் மீதான ஈடுபாட்டுக்குக் காரணங்கள் எனலாம். அன்றைய இளமைப் பழக்கம் இன்றுவரை என்னைத் தொட்டு தொடர்கிறது.

**கவிதைகளில் நகரத்துக் கவிதை, கிராமத்துக் கவிதை என்று வகை பிரித்துப் பார்க்கலாமா? உங்களது இரசனை எப்படியுள்ளது?**

கவிதைகள் எனப்படுபவை மனித மன எழுச்சியின் வெளிப்பாடுகளேயாகும். கவிதைகள் நாமாக உருவாக்குவதில்லை. அவை தாமாகவே கவிஞனின் உள்ளத்தில் ஊற்றெடுத்து வெள்ளமெனப் பீறிட்டுப் பாய்வனவாகும். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப அவை, கருக்கட்டி வளர்ந்து பிரசவிக்கப்பட வேண்டும். ஆனால் கவிதையெனும் முலாம் பூசப்பட்ட வசனங்கள் துண்டாடப்பட்டும், நிரல், நிரைப்படுத்தப்பட்டும் மாயா ஜாலங்களை விஞ்சியவையாய் வெளிவந்த வண்ணமே இன்றைய தமிழிலக்கியம் அதிகதியில் விரைந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

நீங்கள் கேட்டிருந்த நகர்ப்புற, நாட்டுப்புறக் கவிதைகள் இடையேயான வேறுபாடுகளை என்னால் உணர முடியவில்லை. கவிதைகள் நாடு, நகர் கடந்தவை. இன, மத, இட இடைவெளிகள் தாண்டியவை என்பதே எனது கருத்து. இரண்டையும் பகுத்து நோக்குவதில் எனக்கு உடன்பாடில்லை. இரண்டிலுமே சுவைத்து இரசிக்கத்தக்கவை நிறையவே உள்ளன. கருத்து செறிவானவை இருக்கின்றன.

**உங்கள் கவிதைகளின் தனித்துவம் பற்றி என்ன சொல்வீர்கள்?**

அதனைத் தீர்மானிப்பது நான் அல்ல. எனது கவிதைகளை நுகரும் வாசக நெஞ்சங்களே.

**இதுவரை வெளிவந்த உங்களது நூல்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

இதுவரை இரண்டே இரண்டு கவிதைப் புத்தகங்களே வெளிவந்துள்ளன. "மறக்க மறந்த மனிதம்' கருக்கட்டி, முழுமை பெறுவதற்கு எனக்கு உற்சாகமும் உத்வேகமும் தந்தவர்களில் கவிஞர் கலாபூஷணம் மீராலெப்பை சேர் (அனலக்தர்), அலியார் சுபைர் (தேனீக்களை இலக்கிய வட்ட தலைவர்), ஜனாப் மூபாஸ்தீன் (உதவி கல்வி பணிப்பாளர்), எம்.ஏ.ஸீ.ஏ. லத்தீப் ஹாஜியார் (ஜே.பி) போன்றோர் என்றும் என்னால் மறக்க மறந்தோராக விளங்குகின்றனர். அத்துடன் எனது கடைசி வரிகள் எனும் கவிச்சரம், மருத்துவம் தோற்றுப் போய் துன்பியலில் துவண்டு கொண்டிருந்த எனது துணைவியை ஒரு புத்தகமாய் உருவகித்து "அதன் வாசிப்பின் கடைசி வரிகளில் நான்' என்பதை சுட்டி நிற்பதே அப்பெயரிடலின் பிரதான நோக்கமாகும்.

**"கடைசி வரிகள் கவிதை நூலில் உள்ளடங்கியுள்ள கவிதைகளின் கருப்பொருட்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

என்னுடைய கடைசி வரிகள் என்ற கவிதை நூலானது 2008 ஆம் ஆண்டு

> உண்மையில் கவிதைகளுக்கும், பாடல்களுக்கும் வித்தியாசம் பெரிதாய் இல்லை. மரபுக் கவிதைகள் பெரும்பாலும் பாடல்களாகப் பரிணமிக்கத்தக்கவையே. இதற்குச் சான்றாக ஏறாவூர் தேனீ கலை இலக்கிய மன்ற அமைப்பின் தலைவராகவும், சிறந்த பாடகராகவும் கவிஞராகவும் மேடை நடிகராகவும் பட்டிமன்றப் பேச்சாளராகவும் விளங்கி, அண்மையில் காலமான மர்ஹூம் அலியார் சுபைர் என்பவர் எனது 'மறக்க மறந்த மனிதம்' வெளியீட்டு நிகழ்வின் போது அதே நூலில் இடம்பெற்றுள்ள 'மரணம் வேண்டாம்' என்ற கவிதையைப் பாடி அவையை வியக்கச் செய்தமையைக் குறிப்பிடலாம்.















வெளியிடப்பட்டது. 173 பக்கங்களை உள்ளடக்கியுள்ள இந்த நூலில் 86 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. பொதுவாக இதில் உள்ளடங்கியுள்ள கருப்பொருட்களை நோக்குமிடத்து ஆன்மிகக் கவிதைகள், அகம் சார்ந்த கவிதைகள் மற்றும் பல்வேறு வகையிலான கருப்பொருட்களில் அமைந்துள்ள கவிதைகள் என்று புத்தகம் முழுவதும் கவிதைகள் விரவிக் காணப்படுகின்றன. விரிவாக இதுபற்றிச் சொல்வதைவிட வாசகர்கள் அதனை வாசித்து இன்புறுவதனையே நான் விரும்புகின்றேன்.

**"மறக்க மறந்த மனிதம்" கவிதை நூலில் உள்ளடங்கியுள்ள கவிதைகள் பற்றி விசேடமாகக் குறிப்பிட விரும்புவது என்ன? இந்தத் தலைப்பை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?**

நூலின் உள்ளடக்கம் பற்றி விசேட குறிப்புகள் என்று சொல்வதென்றால் கால, நேர, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு அமைய என்னவளில் அவை பிக்காஸோ, டாவின்சி ஓவியங்கள் எனலாம். மேலும் நூலின் தலைப்பினை வாசகர்கள் சற்று நிதானித்து புரியத்தக்கதாய் அமைதல் வேண்டும் என்ற நோக்கில் தெரிவு செய்தேன்.

**பெண் எழுத்தாளர்களின் கவிதைகளை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

கவிதைகளில் ஆண், பெண் என்ற வேறுபாடுகள் தேவையற்றவை. கருத்தாழமிக்க கவிதைகளைப் படைக்கும் பெண் கவிஞர்கள் இன்று மட்டுமல்ல, தொன்றுதொட்டே இலக்கிய வானில் சிறகடித்துள்ளனர். சிறகடிக்கின்றனர். சான்றாக "இந்திய வானம்பாடி' எனும் சிறப்பிக்கப்பட்ட மேடம் சரோஜினி நாயுடுவை குறிப்பிடலாம். இந்திய உபகண்ட விடுதலை உணர்ச்சியை ஏற்படுத்திய பெண் கவிஞர் அவர்.

**ஒரு சிறந்த கவிதை எப்படி அமைய வேண்டும்?**

வாசகர் இதயங்களை வசீகரித்து ஆழ ஊடுருவி பாமரனும் படித்து சுவைக்கத்தக்க, சிந்தைக்கு விருந்தும் மருந்துமாக அகராதியின் அவசியம் (அதிகம்) அற்றவையாக திரும்பத் திரும்ப வாசிக்கத் தூண்டுவனவாக கருத்தாழ மிக்கவையாக அமைபவையே சிறந்த கவிதைகள் என்பதையும், வாசகர்களை நயக்கவும், வியக்கவும் வைப்பனவும் எனலாம்.

**கவிதைக்கும் பாடல் வரிகளுக்குமான வித்தியாசமாக எவற்றைக் குறிப்பிடுவீர்கள்?**

பொதுவாக பாடல்களும் ஒருவகையில் கவிதைகள் எனும் வரம்புக்குள் அடங்கியவையே. கண்ணதாசன், வாலி, பட்டுக்கோட்டையார் ஏன் பாரதி, பாரதிதாசன் போன்றோரின் கவிதைகளும் ஒருவகையில் பாடல்களே! பாடல்களும் பெரும்பாலும் கவிதைகளே எனலாம்.

உண்மையில் கவிதைகளுக்கும், பாடல்களுக்கும் வித்தியாசம் பெரிதாய் இல்லை. மரபுக் கவிதைகள் பெரும்பாலும் பாடல்களாகப் பரிணமிக்கத்தக்கவையே. இதற்குச் சான்றாக ஏறாவூர் தேனீ கலை இலக்கிய மன்ற அமைப்பின் தலைவராகவும், சிறந்த பாடகராகவும் கவிஞராகவும் மேடை நடிகராகவும் பட்டிமன்றப் பேச்சாளராகவும் விளங்கி, அண்மையில் காலமான மர்ஹூம் அலியார் சுபைர் என்பவர் எனது 'மறக்க மறந்த மனிதம்' வெளியீட்டு நிகழ்வின் போது அதே நூலில் இடம்பெற்றுள்ள 'மரணம் வேண்டாம்' என்ற கவிதையைப் பாடி அவையை வியக்கச் செய்தமையைக் குறிப்பிடலாம்.

**உங்களை மிகவும் கவர்ந்த கவிஞர்கள் பற்றியும் குறிப்பிடுங்கள்? என்ன காரணம்?**

எனக்குப் பிடித்த கவிஞர்களைப் பற்றிக் கூறுவதெனில், சிந்தைக்கும், சிந்தனைக்கும் விருந்தாகவும், மருந்தாகவும் கவிதைக் களம் கலக்கும் கவிதைகளின் சொந்தக்காரர்கள் அனைவருமே எனக்கும் சொந்தக்காரர்கள்தாம் ஜனரஞ்சகக் கவிஞர்கள் மட்டும்தான் என்றில்லை. எவரையும் அவ்வாறு சுட்டு விரல் நீட்டி என்னால் குறிப்பிட முடியவில்லை. இருந்தும் புரட்சிக் கமால், அவை வேந்து யூசுப் சேர் போன்றோரின் கவிதைகளும், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, சோம சுந்தரப் புலவர், சின்னத் தம்பிப் புலவர், அப்துல் காதர் லெப்பை
புலவர், முகைதீன் பிச்சை புலவர், சரிப்தீன் புலவர், தசாவதானி சேகுத் தம்பி பாவலர் போன்றோர் தமிழின் அளவு கணிசமற்ற இன்ப இரசத்தை வாசகர் இதய மனைகளுள் அள்ளி அள்ளி நிறைந்தவர்களாவர்.

**உங்களைக் கவர்ந்த கவிதை ஒன்றைப் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

என்னைக் கவர்ந்த கவிதைகள் ஒன்றா இரண்டா குறிப்பிடுவதற்கு. என்னைக் கவர்ந்த கவிதைகள் பலவற்றில் மண் வாசனை கமழும் 'புரட்சிக் கமாலின்' இரு கவிதைகளைத் தர விரும்புகிறேன்.

கார் மேகப் பட்டிலோர் பொன்னிழை பின்னியே
காட்டிடும் மின்னலின் நாட்டியம் போல்,
ஊர்ப்புறத் தோப்பிலோர் ஊஞ்சலை உந்துவார்,
உள்ளாடை பொங்கிடும் ஒப்பனை போல்,
வேர்ப்பலாவடு நின்ற வார்க்கச்சை வீங்கிட
விளையாட்டயர்வதன் விந்தையடி!
மார்கழி விடுதலை! நாளைக்குன் மாப்பிளை
வருதலுக்குமுன் ஏற்பாடோ?

எனும் நீண்ட கவிதையும்,
வண்டியின் கீழே நாயொன்று
வலமிடமாக நோக்காடி,
சண்டியன் போலே செல்கிறது
வண்டியின் கீழே நாயொன்று..
எனத் தொடரும் கவிதையும் என் மானசீக
திரையில் அடிக்கடி விழி சிமிட்டும்.

அண்மையில் நான் வாசித்த சேகனாப் புலவரின் கவிதை ஒன்றினை குறிப்பிட விழைகிறேன் இந்தக் கவிதைக்கு விளக்கம் புரியாமல் கவிஞர்கள் சிலரிடம் வினவியும், விளக்கம் அமையாமல் இருக்கிறேன். இக்கவிதையின் விளக்கத்தை கவித்துவ புலமை உள்ளோரிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன். கவிதை இதோ:

இயல் மன்னிய மஹ்மூறெனும்
எழில் பள்ளியின் நேரே
வியல் மன்னிய திருவாயொளி
மிக வீசிய என்றன்
செயல் மன்னிய கஃபாவணி
திகழ் நன்குடி வைத்தேன்
சுய மன்னவர் அபயம் பல
துயரின்றி அறிவே!

★★★★★★★

பொறிகாவன புலன் காவன
புகல் காவன பிசகா
நெறி காவல செயல்காவல
நிலை காவல வைத்தே
குறி காவல மனை காவல
குடி காவல என்றன்
அறி காவல அபயம் பல
துயரின்றிய அறிவே!

**தற்காலத்தில் இருக்கின்ற கவிஞர்களுக்கும் உங்களுக்கும் இடையிலான தொடர்பு எந்தளவில் இருக்கிறது? உங்களிடமுள்ள கவிதை தொடர்பான அறிவை இளந்தலைமுறையினருக்கு எப்படிக் கொடுக்கின்றீர்கள்?**

என்னைப் பொறுத்தளவில் தற்காலம், அக்காலம் என்றில்லை. அனைத்துத் தரம், தரப்பினருடனும் மனம் விட்டுப் பழகுகிறேன். என்னை நாடி இளம் கவிஞர்கள் வரும் போதெல்லாம் என்னால் முடிந்த தெரிந்த ஆலோசனைகள் வழங்கி, அவர்களை உற்சாகப்படுத்துவதில் மிகுந்த மன நிறைவடைகிறேன்.

**இந்தக் கொரோனாக் காலங்களில் புத்தக வெளியீடுகள் வெற்றியளிப்பதாக நினைக்கிறீர்களா?**

என்னால் வடிக்கப்பட்ட கவிதைகளின் தொகை பற்றி எனக்கே தெரியாது. அனைத்தும் நூலுருப்பெற்றிருப்பின், வெளியீடு தசாப்தங்களைத் தாண்டி இருக்கும் என்று நினைக்கிறேன். 'புத்தக வடிவெடுத்தல்' என்பது பிரசவவலியைவிட கொடியது என்பதை நீங்களும் உணர்ந்திருப்பீர்கள். கொரோனாக் காலங்களில் மட்டுமா? நாளுக்கு நாள் உச்சம் தொட விரையும் விலைவாசி? கடதாசித் தட்டுப்பாடு? சாதாரண காலத்திலேயே பிரசவ வலியை விஞ்சியிருந்த புத்தக வெளியீடு, இப்போது நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலையிலேயே உள்ளது.

**நீங்கள் இலக்கிய உலகில் எவ்வாறு அறியப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?**

ஏறாவூர் தாஹிர் என்பவரும் ஒரு கவிஞர்தான் என கவித்துவப் பரப்பு ஏற்றுக்கொண்டால் போதும்.

**ஏனைய கவிஞர்களின் கவிதைகளை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?**

நல்ல கவிதைகளைப் படைப்போரைத் தட்டிக் கொடுப்பேன். அல்லாதவர்களைத் தட்டிக் கழிப்பேன்.

**இளந்தலைமுறையினர் மரபுக் கவிதைகளைப் படித்துவிட்டுத்தான் புதுக் கவிதைகளை எழுத வேண்டுமா?**

அவ்வாறென்றில்லை. படிப்பதும், விடுவதும் அவரவர் விருப்பைப் பொறுத்தவை. படித்தால் நல்லது தானே! கவித்துவம் மெருகேறும் தானே!

மரபுக் கவிதைகள், புதுக் கவிதைகள், எனும் இடைவெளிக்குள் கவிதைப் பகுத்துப் பார்க்க விருப்பற்றவன் நான். இரண்டிலுமே தரமான, மனங்களை தடவுகின்ற கவிதைகள் உள்ளன. சான்றாகப் பல கவிதைகளைக் குறிப்பிட முடியும். (விரிவஞ்சி அவை வேண்டாம்) அத்துடன் தமிழ் இலக்கியக் களத்தில் கவிதைகள் மட்டுமின்றி, பாடல்கள், கதைகள், கட்டுரைகள், மேடைப் பேச்சுகள், உரைகள், வாழ்த்து மடல்கள், பட்டிமன்றம் என்றெல்லாம் எனது இலக்கியப் பணிகள் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

**கவிதைகள் தவிர்த்து வேறு எத்துறைகளில் ஆர்வம் அதிகம்?**

சமய, சமூகப் பணிகளுடன் இலக்கியம் பற்றிய அனைத்திலுமே.

**பல தசாப்த காலங்களாக இலக்கியத் துறையில் ஈடுபட்டு வருகின்றீர்கள். அந்தவகையில் இதுவரை உங்களுக்கு அல்லது உங்கள் படைப்புகளுக்கு கிடைத்த பரிசுகள், பாராட்டுகள், பட்டங்கள் மற்றும் விருதுகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

அவற்றைப் பட்டியலிடத் தொடங்கினால் பக்கங்கள் நீண்டு விடும். எனவே, அவை வேண்டாம். எனினும் 'கலாபூஷணம், தேசமான்ய, சமூக ஜோதி, கலைத் தென்றல்' முதலியன போதும் என நினைக்கிறேன்.

**இறுதியாக என்ன குறிப்பிட விரும்புகிறீர்கள்?**

இலக்கிய உலகம் மிக விசாலமானது, ஆழமிக்கது. வாசிப்பின் மூலமே அதில் தடம் பதித்து ஏறு நடை போடலாம் என்பதுடன் தொடர்ந்து எழுத வேண்டும். என்னை இந்த நேர்காணலில் இதய பூர்வமாக இணைத்துக் கொண்ட உங்களுக்கும், செந்தூரம் இதழாசிரியர் மற்றும் அதன் அமைப்பாளருக்கும் கலைஞர்களுக்கும் என் அகம் கனியும் நன்றிகளை தெரிவித்து விடை பெறுகின்றேன்.



நேர்கண்டவர்: வெலிகம ரிம்ஸா முஹம்மத்

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்



**எம்.டி.ஏ. ஹசன்,** கொழும்பு 12.

**கேள்வி:** நடிகை ஜெயலலிதா ஆஸ்பத்திரியில் சித்திரவதை செய்யப்பட்டா கொலை செய்யப் பட்டார்.



**பதில்:** அப்படித்தான் அன்று பரவலாகப் பேசப்பட்டது.சில பத்திரிகைகளிலும் செய்திகள் கூட வெளியாகியதுஇதனால் அது உண்மையாகக் தான் இருக் குமென்று பலரும் நம்பவும் செய்தார்கள்..ஆனாலும் இன்று வரையில் அந்த "மர்ம முடிச்சு" அவிழாமலேயே இருக்கிறது.

**எம் மாகிரட்,** எலபடகம.

**கேள்வி:** இப்போதெல்லாம் நடிகை தமன்னாவைப் பற்றிய செய்திகளே இல்லையே..அவர் இப்போது படங்களில் நடிப்பதில் லையா?



**பதில்:** 'பாகுபலி' திரைப்படத் திற்குப்பிறகு நட்சத்திர நடிகர்க ளின் படங்களில் நடிக்க வாய்ப்பு கிடைக்காததால் நடிகை தமன்னா தற்போது தெலுங்கு திரை உலகில் முன்னணி நட்சத்திர படங்களில் சிறிய வேடங்களில் நடித்து வருகிறார்.

இவரிடம் சமீபத்தில் "திரையுல கில் கற்றதும் பெற்றதும் பற்றிக் கூறுங்களேன்"என்று கேட்ட போது" பொலிவூட் திரையுலகில் அறிமுகமாகும்போது கதைகளை எனக்கு ஏற்ற அளவில் தெரிவு செய்ய வில்லை. அதனால்தான் என்னுடைய பொலிவூட் திரையு லக பயணம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை.ஆனால் அதற்கு மாறாக தென்னிந்திய திரைப்படங்களில் நடிக் கும்போது கதைகளை தெரிவு செய்தது பொருத்தமாக இருந்ததால் வெற்றிகரமான நடிகையாக வலம்வர முடிந் தது. தற்போதும் தென்னிந்திய திரைப் படங்களிலும் வலையதள தொடர்களிலும் நடிப்பதற்கு முன் உரிமை அளிக்கிறேன்" என்கிறார் நடிகை தமன்னா.

**ஆர் .கோபால்,** இப்பாகமுவ.

**கேள்வி:** ஹிப்ஹொப் ஆதியின் 'சிவக்குமார் சபதம்', 'அன்பறிவு' ஆகிய இரண்டு படங்களுமே தோல்வியாமே...அடுத்து என்ன செய்யப்போகிறார் ஆதி தமிழா?



**பதில்:** ஆதியை கதாநாயக னாக வைத்து இந்த இரண்டு படங்களையுமே தயாரித்தது தமிழ்த் திரை உலகின் முன்னணி திரைப்பட தயாரிப்பு நிறுவனங் களில் ஒன்றான சத்யஜோதி பிலிம்ஸ். இரண்டு படங்களிலும் இவரே நாயகனாக நடித்திருந் தார். ஆனால் படங்கள் வாணிப ரீதியாகவும் விமர்சன ரீதியாக வும் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. இந்நிலையில் இந்நிறுவனம் தோல்வியை தவிர்ப்பதற்காக மீண்டும் ஆதி கதாநாயகனாக நடிக்கும் 'வீரன்' என்ற பெயரில் புதிய பட மொன்றை தயாரித்திருக்கிறது.

'மரகத நாணயம்'என்ற வெற்றிப் படத்தை இயக்கிய இயக்குநர் ஏ.ஆர்.கே.சரவ ணன் இயக்கத்தில் தயாராகும்.. ஃபேண்டஸி கொடி திரில்லர் படம் என்பதால் இப்படம் அவருக்கு வெற்றியைத் தரும் என திரை யுலக வணிகர்கள் உறுதியாக அவதானிக்கிறார்கள்.

**எஸ்.எஸ்.ராஜா,** ஜாஎல.


**கேள்வி:** விரைவில் வெளிவர இருக்கும் தனுஷ் நடித்திருக்கும் ஆங்கில திரைப்படத்தில் அவர் வில்லனாக தானாமே நடித்திருக் கிறார்...உண்மையா...?

**பதில்:** தனுஷ் நடிப்பில் விரைவில் டிஜிட்டல் தளத்தில் வெளியாக விருக்கும ஹொலிவூட் திரைப் படம்'தி கிரே மேன்'இந்த திரைப்படத்தின் முன்னோட்டம் மே 25ஆம் திகதி வெளியானது.அதில் நடிகர் தனுஷ் வில்லன் கதாபாத்தி ரத்தில் நடித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கிறது. ஆனால் சிலர், வில்லன் அல்ல என்றும் சற்று எதிர்மறை தோற்றத்தில் இடம் பெறும் குணசித்திர கதாபாத் திரத்தில் தான் அவர் நடித்திருக் கிறார் என்று தெரிவிக்கிறார்கள். ரூசோ பிரதர்ஸ் என்ற ஹொலிவூட் இயக்குநர்கள் இயக்கியிருக்கும் 'தி கிரே மேன்' ஜூலை மாதம் 22ஆம் திகதி உலகம் முழுவதும் வெளியாகி றது என்பது குறிப்பிடத்தக்கது.

**எம்.மலர் ராணி,** கொழும்பு13

**கேள்வி:** 'இறுதி சுற்று'திரைப் படத்தின் மூலம் அறிமுகமான நடிகை ரித்திகா சிங் இப்போதும் படங்களில் நடிக்கிறாரா?


**பதில்:** இவர் தற்போது அருண் விஜய் நடிக்கும் 'பொக்ஸர்',



விஜய் அண்டனி நடிக்கும் 'பிச் சைக்காரன்2','கொலை'ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

**ஆர்.கே.சுதாகர்,** வத்தளை.

**கேள்வி:** சிவகார்த்திகேயனின் 'டான்' படம் எப்படி வசூலில் சாதனை படைக்குமா?



**பதில்:** படைக்குமாவா! 'டான்' படம் வெளியான 12 நாட்களில் இந்திய மதிப்பில் 100 கோடி ரூபாயை வசூலித்து சாதனை படைத்தது. இதன் மூலம் நடிகர் சிவகார்த்திகேயனின் ரசகர்கள் "ஒரு வாட்டி ஜெயிச்சா போதாது ஒவ்வொரு வாட்டியும் ஜெயிக்கணும் அப்பதான் இங்க நம்மள ஒத்துப் பாங்க்"என சிவ கார்த்திகேயன் பேசும் வசனங் களை இணையத்தில் வைரலாக்கி மக்களின் மனதை வென்று வரு கிறார் .

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# சிவகார்த்திகேயனை நேரில் அழைத்து பாராட்டிய ரஜினி



டான்' பட வெற்றிக்காக ரஜினிகாந்த் சிவகார்த்திகே யனை நேரில் அழைத்து பாராட்டியுள்ளார்.

நடிகர் சிவகார்த்திகேயன் நடிப்பில் கடந்த மே 13 திகதி வெளியான திரைப்படம் 'டான்'. அறிமுக இயக்குனர் சிபி சக்ரவர்த்தி இயக்கியுள்ள இந்த படத்தை லைகா நிறுவனமும், சிவகார்த்திகேயனின் எஸ்.கே.புரொடக்ஷன்ஸ் நிறுவனமும் இணைந்து தயாரித்திருந்தது.

இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்திருந் தார். இந்த திரைப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடிகை பிரியங்கா மோகன் நடித்திருந் தார்.

மேலும் டான் படத்தில் சூரி, சமுத்திரக்கனி, விஜய் டிவி புகழ் சிவாங்கி, ஆர்.ஜே.விஜய், முனிஷ்காந்த், பால சரவணன், காளி வெங்கட் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்ற டான் திரைப்படம் வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்று 12 நாட்களில் ரூ.100 கோடி வசூலை எட்டிய தாக லைகா நிறுவனம் தெரிவித்தது.

இந்த நிலையில் இந்த திரைப்படத்தை பார்த் துவிட்டு ஏற்கனவே டான் பட குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்து இருந்த சூப்பர்ஸ்டார் ரஜினி காந்த் தற்போது நடிகர் சிவகார்த்திகேயனை நேரில் அழைத்து பாராட்டியுள்ளார்.

# "சாணி காகிதம்" நாயகி கீர்த்தி சுரேஷ்



என்ன தான் இடைவேளை விட்டு நடித்தாலும் சாணி காகிதம்' படத்தில் சும்மா தரமான நடிப்பை வெளிப்படுத்தி ரசிகர்களின் கைதட்டலை அள்ளிய நம்ம அழகு நடிகை கீர்த்தி சுரேஷ் ஹேப்பியாக மனம் திறக்கிறார்...

● **சாணி காகிதம்' படத்தில் செல்வராகவனுடன் நடித்தது?**

அவர் ஒரு இயக்குனர் என்றாலும் நடிகராக தான் பார்த்தேன். இயக்குனர் சொல்வதை நடித்துவிட்டு சென்று விடுவார். அப்படி தான் தினம் ஷூட்டிங் நடக்கும் ஏதுவும் பேச மாட்டார். அறிமுக நடிகர் போலவே இருப்பார். பெண் கான்ஸ்டபிள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்த படம்.

● **திடீரென எப்படி இவ்வளவு எடையை குறைத்தீர்கள்?**

மகாநடி' படத்துக்கு பின் 7 மாதங்கள் வீட்டில் இருந்தபோது உடற்பயிற்சி, உணவு கட்டுப்பாடு என இருந்தேன். அதற்கு பிறகு எடையை குறைத்தேன்.

● **அண்ணன் செல்வராகவன், தம்பி தனுஷ் உடன் நடித்த அனுபவம்?**

சாணி காகிதம்' டிரெய்லர் பார்த்து தனுஷ் போன் பண்ணாரு. "செல் வராகவன் செம்மையா நடிக்கி றாரு, எனக்கு பக் பக்னு இருக் குனு' கூறினேன். "ஆமா நானே அவர்கிட்ட இருந்து தான் கத்துக் கிட்டேன், வேற மாதிரி நடிச்சு காட்டுவாரு'னு தனுஷ் கூறினார். ரெண்டு பேருடனும் நடித்ததில் மகிழ்ச்சி.

● **சிவகார்த்திகேயன் உங்கள மறந்துட்டார் போல?**

ஒரு படம் மட்டும் நடிச்சிருந்தா கண்டிப்பா கேட்டிருப்பேன். அவர் கூட 3 படங்கள் நடிச்சிருக் கேன். நிறைய டைம் இருக்கு... நாங்க நடிக்க வேண்டிய கதைகள் கண்டிப்பாக வரும்போது சேர்ந்து நடிப்போம். விஜய், விஜய் சேதுபதி, ஜெயம் ரவி, கார்த்தி கூடவும் நடிக்க வெயிட் பண்றேன். மணிரத்தினம், ராஜம வுலி, ஷங்கர் இயக்கத்தில் நடிக்க வும் ஆசை.

● **தமிழ் படங்களில் உங்களை அதிகம் பார்க்க முடியல?**

கேஷ் பாபு படத்தில் இருந்து தெலுங்கு படங்கள் நடிச்சேன், தமிழில் "அண்ணாத்தை'க்கு பிறகு "சாணி காகிதம்', அடுத்து " மாமன்னன்' பண்றேன். தெலுங்கு, தமிழ்னு பிரித்து பார்க் கவில்லை.

# வினித்ரா மேனன்



அறிமுக இயக்குநர் சஞ்சய் நாராயணன் இயக்கத்தில், முழுக்க புதுமுக நடிகர் நடிகைகள் நடித்திருக்கும் படம் “மாலைநேர மல்லிப்பூ”. சிறுவயதிலேயே பாலியல் தொழிலில் தள்ளப்படும் ஒரு இளம்பெண்ணிற்கும் அவளின் பத்து வயது மகனுக்குமான பாசப் போராட்டத்தை அடிப்படையாக வைத்து உருவாகி உள்ளது. இப்படம், பாலியல் தொழிலாளர்களுக்கும் அவர்களின் வாடிக்கையாளர்களுக்கும், அவர்கள் குடியிருக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கும், சக பாலியல் தொழில் செய்யும் தோழிகளுக்கும் இடையே உள்ள உறவையும் மிக ஆழமாக பேசுகிறது.

பிரபல தியேட்டர் ஆர்ட்டிஸ்டான வினித்ரா மேனன் பாலியல் தொழிலாளியாக நடித்திருக்கிறார். குழந்தை நட்சத்திரம் அஸ்வின் பத்து வயது மகன் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். நாய்து டோர்ஜி ஒளிப்பதிவு செய்ய, ஹர்திக் சக்திவேல் இசையமைத்திருக்கிறார். விஜயலெட்சுமி நாராயணன் தயாரித்திருக்கிறார்.

படத்தில் நடித்திருப்பது பற்றி வினித்ரா மேனன் கூறியிருப்பதாவது: இந்த படக்குழுவைப் பார்க்கும் போது இவர்களை நம்பலாமா..? என்று தோன்றியது. ஏனென்றால் என்னைவிட அனைவரும் இளையவர்களாக இருந்தார்கள். ஆனால் கதையை படித்ததும் மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டது. மொத்தமே எங்கள் யூனிட்டில் ஒரு பத்து பேர் தான் இருப்போம். நான் எனது கதாபாத்திரத்தை மிகவும் விரும்பி செய்திருக்கிறேன். மிகவும் சவால் நிறைந்த கதாபாத்திரம். அதை எடுக்கும் போது பல தருணங்களில் நாங்கள் எல்லோருமே உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறினேன். இப்படி ஒரு வாய்ப்பை கொடுத்த இயக்குநர் மற்றும் தயாரிப்பாளருக்கு நன்றி. என்னால் முடிந்த அளவிற்கு இப்படத்தில் நான் சிறப்பாக நடித்திருக்கிறேன். என்கிறார்.

# இளமையின் ரகசியம்



நமது அழகு என்பது ஆரோக்கியத்தோடு தொடர்புடையது. செயற்கை ரசாயண பொருட்களை கொண்டு உங்கள் முகத்தை நீங்கள் அழகு படுத்தலாம். ஆனால், அதில் உங்களுக்கு பல பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எப்போதும் இயற்கையான பொருட்களே நமக்கு பல ஆரோக்கிய நன்மைகளை அளிக்கின்றன. நாம் அழகாக இருக்க வேண்டும் என அனைவரும் விரும்புவோம். அதற்கான முயற்சியையும் நாம் மேற்கொள்ள வேண்டும். நம்முடைய அழகை நாம் நேசிக்க வேண்டும். தோல் நிறம் எதுவாக இருந்தாலும், அதன் அமைப்புதான் முக்கியம். தெளிவான, பளபளப்பான மற்றும் கறை இல்லாத சருமத்தை யார்தான் விரும்பாமல் இருப்பார்கள்.

நமது சமையலறையில் இயற்கையாகவே சருமத்திற்கு ஆரோக்கியமான பளபளப்பைக் கொண்டுவரக்கூடிய பல்வேறு பொருட்கள் உள்ளன. இந்த பொருட்கள் தோலை உரித்தல், ஈரப்பதமாக்குதல், பிரகாசமாக்குதல், பொலிவாக்குதல் மற்றும் சருமத்தை மென்மையாக்கும் அனைத்து பண்புகளையும் கொண்டுள்ளன. சீரான இடைவெளியில் பயன்படுத்தினால், சருமத்தின் உட்புற பளபளப்பைக் கொண்டு வரக்கூடிய சிறந்த பொருட்களின் பட்டியல் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

### பால்


பால் உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கும் சரும ஆரோக்கியத்திற்கும் பல நன்மைகளை அளிக்கிறது. ஒரு காட்டன் பேடை எடுத்து ஒரு டேபிள் ஸ்பூன் பச்சைப் பாலில் நனைத்து, அதைக் கொண்டு உங்கள் முகத்தைச் சுத்தம் செய்யவும். இது ஒரு இயற்கையான க்ளென்சர் மற்றும் உங்கள் சருமத்தை கறை இல்லாமல் பிரகாசமாக்கும். இதை தினமும் காலை குளியல் முறையில் பயன்படுத்தலாம். இரவில் தூங்குவதற்கு முன்பும் அனைத்து தூசு, மாசு மற்றும் அழுக்குகளை அகற்ற பயன்படுத்தலாம். இது உங்களுக்கு சிறந்த பளபளப்பான சருமத்தை தருகிறது.

### தயிர்

தயிர் வயதான சருமத்தை தடுக்கும் தன்மை கொண்டது. தயிரைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால், சருமத்தில் உள்ள நீரேற்றம் மற்றும் ஈரப்பதத்தை நீக்கி, கறை இல்லாமல் இளமையுடன் வைத்திருக்கும். இது தோல் நெகிழ்ச்சித்தன்மையை மேம்படுத்துகிறது மற்றும் முகத்திற்கு ஒரு சீரான தோற்றத்தை தருகிறது.

உங்கள் சருமத்தை பளபளப்பாகவும் பொலிவாகவும் வைத்திருக்க உதவும் இயற்கையான முறையில் சருமத்தை சரிசெய்யும் பொருட்களை பயன்படுத்துங்கள். அதன் மூலம், நீண்ட காலத்திற்கு நீங்கள் இளமையாக இருக்கும் சருமத்தை பெறலாம்.





## வெற்றிக்கு வழிவகுக்கும் பெண்மை



தொழில் துறையில் ஈடுபடும் பெண்கள் ஆடை, அணிகலன்கள் மற்றும் தோற்றத்திலும் கவனம் செலுத்த வேண்டும். தன்னம்பிக்கை நிறைந்த உங்கள் தோற்றமே மேலும் பல வெற்றிகளை பெற்றுத்தரும்.

உங்கள் தோற்றமே உங்களது அடையாளம். வேலைச் சூழலுக்கு ஏற்றவாறு நீங்கள் உடைகள் உடுத்தும் விதமும் இருக்க வேண்டும். முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் ஆகியோர் உங் களிடம் மதிப்பை காட்டும் வகையில், நீங்கள் அணியும் ஆடைகள் இருக்க வேண்டும். உங்களை சந்திப்பவர்கள், உங்கள் கண்களை பார்த்து பேசும் வகையில், உங்கள் தோற்றம் மரியாதைக்கு உரியதாக இருப்பது சிறந்தது.

அடர்த்தியான வாசனை தரும் திரவியங்களை உபயோகிப்பதை தவிர்க்கவும். உங்களுக்கு தனிப்பட்ட முறையில் அவற்றை பிடித்திருந்தாலும், தொழில் முறை இடங்களில் பயன்படுத்துவதற்கு அவை ஏற்றது அல்ல. குழுவுடன் சந்திப்பில் ஈடுபடும்போது அடர்த்தியான வாசனை திரவியங்கள் சங்கடமான சூழ்நிலையை ஏற்படுத்தலாம். சிலருக்கு அவை ஆஸ்துமா பிரச்சினையை அதிகரிக்கலாம். சந்திப்பு நிகழும் அறை முழுவதும் அந்தத் திரவியத்தின் வாசனையை பரப்பி விடலாம்.

பெரும்பாலான பெண்கள் பேசும்போது கைகளின் அசைவினை அடிக்கடி பயன்படுத்துவார்கள். அவ்வாறான தருணங்களில் கைகள் கவனம் ஈர்க்கும் புள்ளியாக மாறும். எனவே கைகள் மற்றும் நகங்கள் தொழில்முறை தோற்றத்துடன் இருப்பது அவசியம். நகங்கள் சுத்தமாக பராமரிக்கப்பட்டும், அளவாக வெட்டப்பட்டும் இருக்க வேண்டும். கண்களைப் பறிப்பது போன்ற 'பளிச்' வண்ண நகப்பூச்சினைத் தவிர்க்க வேண்டும்.

# உடல்மொழிகள்



அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அது போலத்தான் நாம் யார் என்பது நம் உடல் மொழியிலேயே தெரிந்து விடும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய உடல்மொழி என்பது தனித்துவமானது. ஒருவருடைய உடல்மொழியே அவரின் மனநிலையை எளிதாக வெளிப்படுத்தும். கல்லூரி, அலுவலகம், நேர்காணல் ஆகியவற்றில் நீங்கள் தனியொருவனாக மிளிர்வதும், கூட்டத்தில் ஒருவனாக மங்கிப் போவதும் உங்கள் உடல்மொழி வாயிலாகவே நிர்ணயிக்கப்படுகிறது. அதனால் உடல்மொழி பழகுங்கள். உங்களை தனித்துவமாக காட்டிக்கொள்ளுங்கள். அதற்கான சில வழிகாட்டல்கள் இதோ...

இடுப்பில் கை வைத்துக்கொண்டு நிற்பது உங்கள் பொறுமையின்மையையும், உங்களுக்கு அந்த உரையாடலில் உள்ள ஆர்வமின்மையையும் காட்டுவதாய் இருக்கும். அதனால் இடுப்பில் கை வைப்பதை மறந்துவிடுங்கள்.

அலுவலகத்தில் போலியாக புன்னகை செய்வதை தவிருங்கள். எதேச்சையாக கடந்து செல்கையில் வேறொரு மனநிலையில் இருந்துகொண்டு பிறரை பார்த்து புன்னகை செய்யும் பொழுது அது இயல்பானதாக இருக்காது. மனம் விட்டு சிரித்து உங்கள் இருப்பை பூர்த்தி செய்யுங்கள்.

நாம் எப்படி நம் கருத்தை எதிரில் இருப்பவர் காது கொடுத்து கவனிக்க வேண்டும் என நினைக்கிறோமோ, அது போலத்தான் பிறருக்கும் தோன்றும். உரையாடலின்போது பார்வையை வேறு பக்கம் செலுத்துவது, காதுக்குள் விரலை விட்டு எடுத்து அழுக்கு இருக்கிறதா என பார்ப்பது போன்றவையெல்லாம் நம் மீதான நம்பிக்கையை சுத்தமாக துடைத்துப் போட்டுவிடும். பிறருடனான உரையாடலில் கண்களைப் பார்த்து பேசிப் பழகுங்கள். அதன் பிறகு உங்கள் மீதான நம்பிக்கை பிறருக்கு கொஞ்சம் கொஞ்சமாக உயர்வதை உணர்வீர்கள். பிறருடைய உடல் அசைவுகளை பொறுத்தே நம்மை வெளிக்காட்டுவோம்.

# செல்ஃபி உலா


தேவ பிரகாஷ்
பலாங்கொடை


ஜீவன்யா புவியழகன்
நுவரெலியா


சுரேஷ் அஜய்
மாத்தளை, சேரகம


பாடசாலை நண்பர்கள்
அக்கரப்பத்தன


விதூஷா
சுன்னாகம்


எம்.ஜே.பொன்குயில்
செல்லகம


மலிஸ் அமீன்
மருதமுனை


பவித் பிரபாஷியன்
அல்வத்துறை



யதூஷா
அக்கரப்பத்தன


குருபரன், கண்டி


## கழித்தல்

| | | |
|---|---|---|
| 62 − 49 | 66 − 28 | 65 − 37 |
| 54 − 36 | 53 − 35 | 53 − 24 |
| 92 − 27 | 83 − 57 | 73 − 59 |

## எண்களை இணைத்து நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## கூட்டல்

| | | | |
|---|---|---|---|
| 82 + 11 | 16 + 13 | 20 + 29 | 53 + 21 |
| 78 + 21 | 32 + 53 | | |
| 23 + 45 | 25 + 71 | 55 + 24 | 12 + 75 |



# பொருளாதார நெருக்கடி நிலையால் அங்காடி வியாபாரத்திற்கு பெரும் பாதிப்பு

## வீதியோரம் வியாபாரம் செய்யும் றியாழ் ஆதங்கம்




தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் சிறு கைத்தொழிற்துறைகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.சிறு வியாபார முயற்சியாக எமது நாட்டின் பல நகரப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்படுகிறது. வீதியோரங்களில் அங்காடி வியாபாரங்கள் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர்கொழும்பு, தெஹிமல்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 52 வயதுடைய மொஹமட் ஹுசைன் மொஹமட் றியாழ் என்பவரை "நான் ரொம்ப பிஸி " பகுதிக்காக நீர்கொழும்பு கடற்கரை வீதியில் கத்தோலிக்க தேவாலயத்திற்கு அருகில் சந்தித்தேன். மொஹமட் ஹுசைன் நீர்கொழும்பு, சிலாபம், வென்னப்புவ, கட்டுநாயக்க மற்றும் ஜா எல் ஆகிய பிரதேசங்களிலுள்ள சன நெருக்கமான இடங்களில் அங்காடி வியாபாரம் செய்து வருகின்றார்.

**கேள்வி :** இந்த வியாபாரத்தை நீங்கள் எத்தனையாவது வயதில் ஆரம்பித்தீர்கள்?

**பதில் :** வியாபாரமொன்று செய்ய வேண்டும் என்ற ஆர்வம் சிறு வயதிலிருந்தே எனக்குள் இருந்து வந்தது. பாடசாலைக் கல்வியில் எனக்கு அவ்வளவு ஆர்வம் இருக்கவில்லை. இதனால் இடை நடுவில் படிப்பை விட்டு விட்டு பல தொழில்களில் ஈடுபட்டேன். இதனால் கிடைத்த பணத்தை மீதம் படுத்தி 22 வது வயதில் இந்த வியாபாரத்தை ஆரம்பித்தேன்.

**கேள்வி :** இந்த வியாபாரத்துக்கு எவ்வளவு முதலீடு செய்தீர்கள்?

**பதில் :** அப்போது என்னிடம் சேமிக்கப்பட்ட இருபத்தி ஐயாயிரம் ரூபாய் இருந்தது. அதனை நான் மிகவும் நம்பிக்கையுடன் இந்த வியாபாரத்துக்காக முதலீடு செய்தேன்.

**கேள்வி :** நீங்கள் பிளாஸ்டிக் பொருட்களையும் மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருட்களையுமே விற்பனை செய்து வருகிறீர்கள். இவ்வாறான பொருட்களை எங்கே கொள்முதல் செய்து வருகிறீர்கள்?

**பதில் :** நான் கிழமையில் ஒரு தடவை கொழும்புக்குச் சென்று தேவையான பொருட்களை வாங்கி வருவேன்.

**கேள்வி :** தற்போது பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. நீங்கள் முதலீடு செய்து வியாபாரம் ஆரம்பித்த போது இருந்த பொருட்களின் விலைகளுக்கும் இப்போதைய விலைகளுக்கும் எவ்வாறான வித்தியாசங்கள் உள்ளன. விலைகளில் பாரிய வித்தியாசங்கள் உள்ளன. ஆரம்பத்தில் இருப்பத்தி ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு டீசல் ஆட்டோவுக்குள் சாமான்கள் முழுவதையும் நிரம்பும் வகையில் வாங்கலாம். அதன் போது ஆட்டோவுக்குள் சாமான்களை ஏற்றிக் கொள்வதே சிரமமாக இருந்தது. அதனால் சாமான்கள் மீதம் இருக்கும். அவற்றை ஆட்டோவின் கூரையில் கட்டிக் கொண்டு வருவோம். இப்போது இருபத்தி ஐயாயிரம் ரூபாய் பணத்திற்கு மூன்று பெரிய உரப்பைகளுக்குள் நிரப்பும் அளவுக்கு கூட சாமான்களை வாங்க முடியாது. சாமான்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன.







**கேள்வி :** மூன்று உதவியாளர்களை வைத்திருக்கிறீர்கள். அவர்களுக்கு எவ்வாறு நீங்கள் ஊதியங்களை வழங்கி வருகின்றீர்கள்?

**பதில் :** விற்பனைக்கான பொருட்கள் அனைத்தும் எனது வீட்டிலேயே உள்ளன. அவற்றை வீட்டிலிருந்து ஆட்டோவிலேயே கொண்டு வருவேன் . வாடகை அடிப்படையில் ஆட்டோவொன்றை அமர்த்தியுள்ளேன். அதன் உரிமையாளரும் என்னுடன் சேர்ந்து உதவியாளராக இருக்கின்றார். நாளாந்தம் வியாபாரம் முடிந்ததும் அவருக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுப்பேன். ஏனைய இருவருக்கும் ஆயிரம் ரூபாய் வீதம் ஊதியத்தை வழங்குவேன்.

**கேள்வி :** ஒரு வாரத்திற்கு எத்தனை ரூபாய்க்கு வியாபாரம் நடைபெறும்?



**பதில் :** முன்பு ஒரு வாரத்திற்கு இருபத்தி ஐயாயிரம் ரூபாய்க்கு வியாபாரம் நடந்தால் செலவுகள் போக ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் ரூபாய் இலாபம் கிடைக்கும். ஆனால் இப்போது அப்படி கிடைக்காது. கூடுதல் சம்பளத்தையே இப்போது கொடுக்க வேண்டும். அதனால் செலவுகள் போக மூவாயிரம் ரூபாய் தான் மிஞ்சும்.

**கேள்வி :** கடந்த 2019 மற்றும் 2020 ஆகிய இரு வருடங்களில் எமது நாட்டில் கொரோனா வைரஸ் பரவும் அச்சுறுத்தல் இருந்தது. இதனால் நாட்டின் நகரப் பிரதேசங்களில் மக்கள் ஒன்று சேரவில்லை. இதனால் வியாபார நடவடிக்கைகள் முற்று முழுவதாக பாதிக்கப்பட்டன. இதன் போது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் ?

**பதில் :** வீட்டில் இருந்தேன். நீர்கொழும்பு பிரதேசத்திலுள்ள நலன்விரும்பிகள் எமக்கு சில உதவிகளை வழங்கி வந்தார்கள். அப்போதைய பொருளாதார நெருக்கடியிலும் நான் மிகவும் பொறுமையாக இருந்தேன். வியாபார பொருட்கள் அனைத்தும் எனது வீட்டிலேயே வைக்கப்பட்டிருந்தன. எந்த இடங்களிலும் வியாபாரம் செய்யவில்லை . நாட்டின் நிலமை சீரானதும் வியாபாரத்தை மீண்டும் ஆரம்பித்தேன்.

**கேள்வி :** நீங்கள் தூர இடங்களுக்குச் சென்று வியாபாரம் செய்து வருவதில்லையா ?

**பதில் :** டீசலைப் பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமம் உள்ளது. அரசாங்கம் ஒழுங்கான முறையில் டீசலை நேர்த்தியாக வழங்கினால் எமது வியாபாரத்தை தடையின்றி முன்னெடுக்கலாம் . எனது மூன்று பிள்ளைகளும் பாடசாலைகளுக்கு செல்கின்றனர். அவர்களின் அனைத்து செலவுகளும் எனது வியாபாரத்தினால் கிடைக்கும் இலாபத்தின் மூலமே மேற்கொள்ள வேண்டும்.

**கேள்வி :** உங்களுடைய வியாபாரத்தை நீங்கள் அபிவிருத்தி செய்ய விரும்புவீர்களா ?



**பதில் :** ஆம், நாங்கள் விற்பனை செய்து வருகின்ற பொருட்களை எமது நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டும். அதனால் அவற்றை எமக்கு குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யலாம். இலாபமும் நன்றாக கிடைக்கும். வியாபாரமும் முன்னேரும். இதுவே எனது ஆசையாகவும் உள்ளது.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com

# சூரியனை நோக்கி வரும் பிரமாண்டமான வால் நட்சத்திரம்!



## இவ்வளவு பிரமாண்டமான வால்வெள்ளி இதற்கு முன்னர் தோன்றியதே இல்லையாம்!

சூரியனை ஒன்பது கிரகங்கள் சுற்றி வருகின்றன. இறுதி கிரகமான புளூடோ ஒரு கிரகமல்ல என தள்ளி வைத்திருந்தார்கள். இன்றைக்கும் அதன் அந்தஸ்து கேள்விக்குறியாகத்தான் உள்ளது. சூரியன், கிரகங்கள், கிரகங்களைச் சுற்றி வரும் சந்திரன்கள் என்பன சூரிய குடும்பத்து உறுப்பினர்கள் என்றால் கோடிக்கணக்கான விண் கற்கள் பெரிதும் சிறிதுமாக சிதறிக் கிடக்கின்றன. சூரிய குடும்பத்து விருந்தாளியாக அவ்வப்போது வால் நட்சத்திரங்கள் வந்து போகின்றன. இதுதான் சூரிய குடும்பம்.

புளூடோ கிரகத்தோடு சூரிய குடும்ப எல்லை முடிவடைகிறது. நீங்கள் புளூட்டோ கிரகத்தில் இருந்து சூரியனைப் பார்த்தால் ஒரு மங்கிய வெளிச்சம் தரும் நட்சத்திரமாகவே உங்களுக்குத் தோன்றும். இந்த எல்லையை அதாவது சூரியனில் இருந்து 3.7 பில்லியன் மைல்கள் அல்லது 5.9 பில்லியன் கி.மீ. தூரத்தைத் தாண்டினால் சூரியக் குடும்பத்தில் இருந்து வெளியேறி விட்டீர்கள் என்று அர்த்தம். அதற்கு அப்பால் இன்னொரு நட்சத்திர மண்டலத்தை அடையும் வரை இருக்கப்போவது கடும் இருட்டும் குளிரும் ஆதி அந்தமற்ற விண் வெளியும்தான்.

இந்த வொயேஜர் என்ற விண்கலம் 1977 செப்டம்பர் மாதம் நாஸாவினால் ஏவப்பட்டது. கிரகங்களை ஆய்வு செய்வதற்காக மட்டுமே அனுப்பப்பட்ட இக்கலம் அந்த ஆய்வுகளை முடித்துவிட்டு மணித்தியாலத்துக்கு 35 ஆயிரம் மைல் வேகத்தில் மென்மேலும் முன்நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. கடந்த 2004ம் ஆண்டு புளூட்டோ கிரகத்தைத் தாண்டிச் சென்ற வொயேஜர்தான் மனிதனால் அனுப்பப்பட்ட ஒரு கலம் அல்லது ஒரு பொருள் சூரிய மண்டலத்தைத் தாண்டி அண்டப் பெருவெளிக்குச் சென்றிருக்கிறது. வொயேஜருக்கு ஒரு விபத்தும் நடக்காமல் போகுமானால் அடுத்த 40 ஆயிரம் வருடங்கள் பயணித்து சூரியனுக்கு சமீபமாக அமைந்திருக்கும் புரொக்ஸிமா செண்டாரி என்ற நட்சத்திரத்தை அண்மிக்கும் தூரத்தை சென்றடையும். அந்நட்சத்திர மண்டலத்தை அண்மிக்கும் போது பூமியில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும்; மனிதர்கள் வாழக்கூடிய இடமாக பூமி இருக்குமா என்பதொல்லாம் நம் கற்பனைக்கு எட்டாதவை!

வொயேஜர் கலம் சூரிய மண்டலத்தைக் கடந்ததும் பல லட்சக்கணக்கான பாறைகளைக் கொண்ட ஊர்ட்ஸ் மேகம் என்றழைக்கப்படும் பாறைகள் மண்டலத்தைக் கடந்து சென்றிருக்கும். இந்த ஊர்ட்ஸ் மேகம் என்பது நமக்கு முக்கியமானது. ஏனெனில் இந்தப் பகுதியில் இருந்துதான் அழுக்கு பனிப் பாறைகள் சூரிய குடும்பத்துக்குள் தள்ளப்படுகின்றன. எமது கிரகங்களில் மிகப் பெரியது வியாழன் கிரகம் அதன் ஈர்ப்பு விசை காரணமாக அல்லது ஊர்ட்ஸ் மேகப் பகுதியை ஒட்டியதாக கடந்து செல்லக்கூடிய ஏதேனும் ஒரு பாரிய பொருள் ஏற்படுத்தும் விசை காரணமாக அல்லது அண்டவெளி வளி (Solar Wind) ஏற்படுத்தும் விசை காரணமாக ஊர்ட்ஸ் மேகத்தில் ஏற்படும் சலனம் இப்பாறைகளை சூரிய மண்டலத்துக்குள் தள்ளி விடுவதாக விண் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இவ்வாறு சூரிய மண்டலத்துக்குள் வரும் இப்பாறைகள் சூரியனின் விசைக்குட்பட்டு சூரியனை நோக்கிப் பயணிக்கத் தொடங்குகின்றன. இப்பாறைகளே வால் நட்சத்திரங்களாக அறியப்படுகின்றன. ஒவ்வொரு வால் நட்சத்திரமும் தமக்கென ஒரு பாதையை அமைத்துக் கொண்டு சூரியனை வலம் வருகின்றன. அவ்வாறு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனுக்கு அருகில் வரும் ஒரு வால் வெள்ளியாக ஹெலீஸ் வால் நட்சத்திரம் அறியப்படுகிறது.

இது கடைசியாக 1986ம் ஆண்டு சூரியனுக்கு அருகே வந்து சென்றது. அப்போது பூமிக்கு வெகு தொலைவில் பயணித்ததால் ஹெலீஸ் வால்வெள்ளி எமது வெறுங் கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால் 1911ம் ஆண்டு இவ் வெள்ளி பூமிக்கு மிக அண்மையில் காட்சியளித்தது. அதன் நீண்ட வாலைக் கடந்து பூமி செல்லவும் செய்தது. வாலைக் கடந்து பூமி செல்லும்போது பூமி தீப்பிடித்துக் கொள்ளும், பயங்கர விளைவுகள் ஏற்படும், மக்கள் பொசுங்கிப் போவார்கள், கெட்ட பலன்கள் ஏற்படும் என்றெல்லாம் பல வதந்திகள் மக்களை பயமுறுத்தியதாகவும் சிலர் பயந்து தற்கொலை செய்து கொண்டதாகவும் பரபரப்பான தகவல்கள் அப்போது வெளியாயின. ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை. ஹெலீஸ் நட்சத்திரம் இனி 2061ம் ஆண்டே பூமிக்கு அருகே வந்து செல்லும்.

1993ம் ஆண்டு ஸூ மேக்கர் லெவி என்ற ஒரு வால் நட்சத்திரம் சூரியனைச் சுற்றி வந்தது. அது திரும்பிச் செல்லும் போது வியாழக்கிரகத்தின் ஈர்ப்புச் சக்திக்கு ஆட்பட்டு அக்கிரகத்தை சுற்றி வர ஆரம்பித்தது. ஈர்ப்பு விசை காரணமாக அவ்வெள்ளி இருபது துண்டுகளாக உடைந்து ஒவ்வொன்றாக வியாழன் கிரகத்தில் வீழ்ந்தன. 1994 ஜூலை 16 முதல் 22ம் திகதிவரை இவை வீழ்ந்தன. இத் தாக்குதல் எந்தவொரு விளைவையும் அக்கிரகத்தில் ஏற்படுத்தவில்லை. ஆனால் பூமியின் மீது இப்படி இருபது துண்டுகள் வீழ்ந்திருக்குமானால் அது பேரழிவை ஏற்படுத்தி இருக்கும்.

வால் வெள்ளிகள் அவ்வப்போது பூமிக்கு அருகில் வந்து செல்லக் காரணம் அவை சூரியனால் ஈர்க்கப்படுவதாலேயே. சில சமயம் அவற்றின் பாதை பூமிக்கு அண்மையில் அமைந்துவிடும் போது வெறுங் கண்ணால் அவற்றை பார்க்க முடியும். எழுபதுகளில் பூமியைக் கடந்து சென்ற 'கொஹோடெக்' என்ற வால் வெள்ளியை அந்திசாயும் வேளையில் மேற்கு வானில் நீண்ட வாலுடன் பார்க்க முடிந்தது.

தற்போது ஒரு பெரிய வால்வெள்ளி பூமியைத் தாண்டி சூரியனை நோக்கி செல்லவுள்ளது. இதுவரையில் மனிதன் கண்ட வால் வெள்ளிகளிலேயே மிகப் பெரியது என்று விண்வெளி ஆய்வாளர்கள் வர்ணிக்கிறார்கள். இந்த வெள்ளியின் மையப் பகுதி அல்லது பாறைப் பகுதி எண்பது மைல் நீளமும் 129 மைல் குறுக்களவும் கொண்டது. வழமையான வால் வெள்ளிகளை விட இது 50 சதவீதம் பெரியது என்றும் சொல்லப்படும் இதன் பெயர் பெர்னார்டிநெலி – போர்ன்ஸ்டன் என்பதாகும்.

இதனை 2014ம் ஆண்டில் கண்டுபிடித்த விண் ஆய்வாளர்கள் இருவரின் பெயரால் அழைக்கப்படும் இந்த அழுக்கு பனிப்பாறையை 'பனி யானை' (Mammoth) என்றும் செல்லமாக அழைக்கிறார்கள். மெம்மோத் என்பதற்கு பிரமாண்டம் என்ற ஒரு அர்த்தமும் உண்டு. தற்போது மிக மிகத் தொலைவில் உள்ள இவ்வெள்ளி கருமையான பின்புலத்திலேயே பளிச்சென ஒளிர்வதால் அது 2031ம் ஆண்டு சூரியனை அண்மிக்கும் போது மிக நீண்ட வாலையும் சூரியனைப் போல ஒளிரும் தலையையும் கொண்டிருக்கும் என்றும் இந்நூற்றாண்டின் மிகப்பெரிய 'விண் ஷோ'வாக அது அமையும் என்றும் விண் ஆய்வாரள்கள் சொல்கிறார்கள்.

சூரியனை நோக்கி செல்லும் இவ் வால்நட்சத்திரத்தின் பாதை பூமிக்கு அண்மித்ததாக இருக்குமா இல்லையா என்பதை தற்போது சரியாகக் கணித்து சொல்ல முடியாது என்றாலும் பூமியில் இருந்து நூறுகோடி மைல்களுக்கு அப்பால் அதன் பாதை அமைந்திருக்கும் என்றும் அதனால் பூமிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்திருப்பது ஆறுதலான விஷயம். ஏனெனில் பெரிய வால்வெள்ளிகள் சூரியனின் வெப்பம் மற்றும் ஈர்ப்பு விசை காரணமாக உடைந்து துண்டுகளாக சிதறக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

இந்த வெள்ளி தற்போது சூரியனில் இருந்து இரண்டு பில்லியன் மைல் தூரத்தில் உள்ளது. மணிக்கு 22 ஆயிரம் மைல் வேகத்தில் வந்து கொண்டிருப்பதாக ஹபள் விண்வெளி தொலைக்காட்டி மூலம் தெரிய வந்திருக்கிறது.

என்ன, ஒரு ஒன்பது ஆண்டுகள் காத்திருந்தால் ஒரு பிரமாண்டமான விண்வெளி ஷோவை உங்களால் பார்க்க முடியும்!

அருள் சத்தியநாதன்
arulnathan53@ymail.com



# வீர மரணத்தை சுவைத்த மைசூர் புலி "திப்பு சுல்தான்"

“அக்னி சிறகுகள்” எனும் நூலில் முன்னாள் இந்திய ஜனாதிபதி மர்ஹூம் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அமெரிக்காவின் “நாசா” விண்வெளி மையத்திற்கு சென்றபொழுது இந்தியர் ஒருவர் பயன்படுத்திய ஏவுகணையின் புகைப்படத்தை பார்த்ததாக ஆச்சரியத்துடன் கூறுகிறார். அந்த இந்தியர்தான் திப்பு சுல்தான் ஆவார்.

குதிரை வீரன் ஹைதர் அலி ஃபக்ருன்னிஸா தம்பதியினருக்கு மகனாக திப்பு சுல்தான் 1750 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி இந்தியாவின் கர்நாடக மாநிலத்திலுள்ள தேவனஹள்ளி என்ற ஊரில் பிறந்தார். 1761 ஆம் ஆண்டு திப்பு சுல்தானின் தந்தை ஹைதர் அலி மைசூர் மன்னராக பொறுப்பேற்றார். ஹைதர் அலி மன்னராக பொறுப்பேற்கும்போது திப்பு சுல்தானுக்கு வயது 11 ஆகும். கல்வியில் சிறந்து விளங்கிய திப்பு சுல்தான், இளம் வயதிலேயே தனது தந்தையுடன் பல போர்க்களம் கண்டார். அதனால் தனது 16 வயதிலேயே யுத்த தந்திரங்கள், ராஜ தந்திரங்கள் அனைத்திலும் தேர்ச்சி பெற்று,சிறந்த படைத் தளபதியாக வளர்ந்தார்.

1767 ஆம் ஆண்டு ஆங்கிலேயருடன் முதலாம் மைசூர் போர் நடைபெற்றபோது ஜோசப் ஸ்மித் தலைமையில் போரிட்ட ஆங்கிலேய படையை எதிர்த்து வாணியம்பாடியில் தமது முதல் வெற்றிக் கனியை 17 ஆம் வயதில் திப்பு சுல்தான் சுவைத்தார்.

1767 ஆம் ஆண்டு தொடக்கம் 1769 வரை பரவலாக பல இடங்களில் ஆங்கிலேய படைக்கும் மைசூர் படைக்கும் நடந்த போர்களில் எல்லாவற்றிலும் திப்பு சுல்தான் வெற்றியே பெற்றார்.

06.12.1782 இல் மன்னர் ஹைதர் அலியின் மரணத்தை தொடர்ந்து 26.12.1782 இல் தனது 32 ஆவது வயதில் திப்பு சுல்தான் மைசூர் மன்னரானார். மன்னர் திப்பு சுல்தான் “புலி சின்னம்” பொறிக்கப்பட்ட கொடியை தனது சின்னமாக பயன்படுத்தினார். இதனால் திப்பு சுல்தான் “மைசூரின் புலி” என அழைக்கப்பட்டார்.

இரண்டாம் மைசூர் போர் அதாவது மேற்கு கடற்கரையிலிருந்து ஆங்கிலேயர்களை துரத்த வேண்டும் என்ற எண்ணத்தில் திப்பு சுல்தான் பிரான்ஸ் படையினரையும் சேர்த்துக் கொண்டு 1780 ஆம் ஆண்டில் போர் தொடுத்தார். யுத்தம் நடைபெற்று நான்கு வருட முடிவில் 1784 ஆம் ஆண்டில் பிரான்ஸ் மன்னன் 16 ஆம் லூயி பிரிட்டனுடன் சமரசம் செய்து கொண்டதால் திப்பு சுல்தான் வேறு வழியில்லாமல் போரை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. 1784 ஆம் ஆண்டு முடிவுற்ற இப்போரில் ஆங்கிலேய தளபதி உள்ளிட்ட 4,000 இராணுவ வீரர்கள் திப்பு சுல்தானால் போர்க் கைதிகளாக பிடிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். இந்த அவமானம் ஆங்கிலேயர்களுக்கு திப்பு சுல்தானை நினைத்தாலே குலை நடுங்க செய்தது.

1789 ஆம் ஆண்டு திப்பு சுல்தான் தலைமையில் ஆங்கிலேயருக்கு எதிராக நடைபெற்ற மூன்றாம் மைசூர் போரில் மராட்டிய பேரரசும், ஹைதரபாத் நிஜாமும், பிரிட்டிஷ் படைத் தளபதி கார்ன் வாலிஸுடன் இணைந்து திப்பு சுல்தானுக்கு எதிராக போர் தொடுத்தனர். திப்பு சுல்தான் எதிரிகளை துணிச்சலுடன் எதிர்கொண்ட போதிலும் 1792 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இந்தப் போரில் திப்பு சுல்தான் தோல்வி அடைந்தார். இறுதியில் ஸ்ரீரங்கப்பட்டிணம் அமைதி ஒப்பந்தத்தின்படி பல பகுதிகள் பிரிட்டிஷ், ஹைதராபாத்நிஜாம் மற்றும் மராட்டியர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மூன்றாம் மைசூர் போரின் ஆரம்பத்தில் வெற்றி பெற்ற திப்பு சுல்தான் போரின் இறுதிக் கட்டத்தில் மராட்டியர்கள் நயவஞ்சகத்தனமாக ஆங்கிலேயர்களுடன் இணைந்து கொண்டதால் ஒப்பந்தம் செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். மைசூரின் பாதி நிலப்பரப்பும் எதிரிகள் வசம் சென்றது. இழப்பீட்டுத் தொகையாக 3.3 கோடி நிர்ணயிக்கப்பட்டது. இழப்பீட்டுத் தொகையை செலுத்தும் வரை திப்பு சுல்தானின் இரு மகன்கள் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டனர். திப்பு சுல்தான் இழப்பீட்டுத் தொகையை செலுத்தி தனது இரு மகன்களை மீட்டார். ஆங்கிலேயர்களால் ஸ்ரீரங்கப் பட்டிணம் முற்றுகை இடப்பட்ட போதிலும் திப்பு சுல்தானின் கோட்டைக்குள் நுழைய இயலவில்லை. இதனைக் குறித்து ஆங்கிலேய தளபதி மன்றோ திப்பு சுல்தானின் கோட்டையை தூரத்தில் இருந்துதான் பார்க்க முடிந்தது என்று குறிப்பிட்டிருக்கிறான்.



அந்த கால கட்டத்தில் திப்பு சுல்தான் மாத்திரமே ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும் பெரும் சவாலாகவும் இருந்தார். திப்பு சுல்தானை தீர்த்துக் கட்டினால்தான் இந்தியாவில் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் நெடுநாட்களாக காலூன்ற முடியும் என்று ஆங்கிலேயர்கள் நினைத்தனர்.

திப்பு சுல்தானை போரில் நேரில் சந்திக்க திராணியற்ற ஆங்கிலேயர்கள் குறுக்கு வழியைக் கையாள ஆரம்பித்தனர். லஞ்சத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி திப்பு சுல்தானின் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் விலைக்கு வாங்கினர். இதன் பிறகு துணிச்சலாக திப்பு சுல்தான் மீது போர் தொடுக்கலாம் என்று நினைத்தனர்.

1799 ஆம் ஆண்டு நடைபெற்ற 4 ஆவது மைசூர் போரில் துரோகிகள் ஒரு பக்கம், கூட இருந்தவர்களின் குழி பறித்தல் ஒரு பக்கம் என எதிர்ப்புக்கள் ஒன்றிணைந்து தம்மை சந்தித்த பொழுதும் உதவிக்கு வருவதாக வாக்களித்திருந்த நெப்போலியனுக்கு வர இயலாத போதிலும் கலங்காமல் தமது 11,000 படை வீரர்களுடன் தானும் ஒரு போர் வீரனாக திப்பு சுல்தான் போரிட்டார்.

4 ஆவது மைசூர் போரின்போது 1799 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி எதிரிகள் திப்பு சுல்தானுக்கு உயிர்த் தியாகத்தின் வாசலைத் திறந்து கொடுத்தனர். திப்பு சுல்தான் ஸ்ரீரங்கப்பட்டிணம் கோட்டை வாசலில் குண்டுக் காயங்களுடன் சரிந்து கிடந்தார்.

திப்பு சுல்தானிடம் பணியாள் ஒருவன் “அரசே! யாரேனும் ஓர் ஆங்கிலேய அதிகாரியை அழைக்கட்டுமா? சரணடைந்து விடலாம்” என்று பதறுகிறான். “முட்டாள்! வாயை மூடு!” என்று உறுமுகிறார் திப்பு சுல்தான். ஆடுகளைப்போல இருநூறு ஆண்டுகள் பிழைப்பதை விட புலியைப்போல இரண்டு நாட்கள் வாழ்ந்து மடியலாம் என்று பிரகடனம் செய்த திப்பு சுல்தான் போர்க் களத்திலேயே வீர மரணம் அடைந்தார். திப்பு சுல்தானின் மரணம் ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில், மேலும் 150 வருடங்கள் நிலைபெற உதவியது.

திப்பு சுல்தான் மிகப் பெரியளவில் இராணுவப் படையினை கொண்டிருந்தார் எனவும் அதில் குதிரைப்படை, ஒட்டகப் படை மட்டுமல்லாமல் போரில் பீரங்கிகளையும் பயன்படுத்தியுள்ளார். ஆங்கிலேயர்களுக்கு நிகராக நவீன ஏவுகணைகளை பயன்படுத்தினார் என கூறப்படுகிறது. சக்தி வாய்ந்த 2 கிலோ மீற்றர் வரை சென்று இலக்கைத் துல்லியமாக தாக்கக்கூடிய ஏவுகணைகளை பயன்படுத்தியுள்ளார். திப்பு சுல்தானின் ஏவுகணைகளுக்கான பகுப்பாய்வு ஆவணங்கள் தற்போது லண்டனிலுள்ள ஆட்டிலறி பொருட்காட்சி மையத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் 200 ஆண்டுகளுக்கு முன் திப்பு சுல்தானிடம் இருந்து ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகள் அபகரித்த பொருட்களில் ஒன்றான வாள் 3.5 கோடிக்கு லண்டனில் ஏலமிட்ட பொழுது அதனை வாங்கி நினைவுச் சின்னமாக பாதுகாக்கக்கூட இந்திய அரசு தயாராக இல்லை. திப்பு சுல்தானின் வாழ்க்கை வரலாறை மறைக்கப் பார்ப்பது ஏன்?

இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு தமது “The Discovery of India” என்ற நூலில் திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும், பெரும் சவாலாகவும் இருந்தவர் என்றும் பிரிட்டிஷாருக்கு கடுமையான தோல்வியின் மூலம் வேதனை மிக்க அனுபவத்தை ஏற்படுத்தினார். என்றும் கிழக்கிந்திய கம்பனியின் அதிகாரத்தை உடைத்தெறியும் அளவுக்கு திப்பு சுல்தானும் அவருடைய தந்தை ஹைதர் அலியும் விளங்கினார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திப்பு சுல்தான் இஸ்லாத்தில் பிடிப்புள்ள சிறந்த முஸ்லிமாக வாழ்ந்தவர். அவருக்கு இஸ்லாத்தின் மீதான பிடிப்பு காரணமாக ஒருபோதும் பிற மதங்களின் மீது எவ்வித காழ்ப்புணர்வையும் ஏற்படுத்தவில்லை. பள்ளிவாசல்களுக்கு அளித்த கொடைகள் போல் இந்துக் கோயில்களுக்கும் மடங்களுக்கும் ஏராளமாக கொடைகள் அளித்துள்ளார். திப்பு சுல்தானின் நிர்வாகத்தில் அரசால் சமய நிறுவனங்களுக்காக செலவழிக்கப்பட்ட ஆண்டின் தொகையாக 2,33,959 வராகன்களில் இந்துக் கோயில்கள், மடங்களுக்கு மட்டும் 2,13,959 வராகன்கள் அளிக்கப்பட்டது என்ற கணக்கு விபரமானது திப்பு சுல்தான் தனது ஆட்சியில் பெருவாரியாக இருந்த இந்துக்களுக்கு பெருமளவில் ஆதரவளித்தார் என்பது புலனாகிறது. இவ்விடயத்தை சேலம் அரசு அருங்காட்சியக காப்பாளராகவிருந்த க. இலக்குமி நாராயணன் தமது “திப்புவின் சமயக் கொள்கை” என்ற நூலில் குறிப்பிடுகிறார். ஆனால், இதனை ஒப்புக்கொள்ளாத காழ்ப்புணர்வு கொண்ட கல்கத்தா பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவின் தலைவராக இருந்த ஒருவர் “திப்பு சுல்தான் முஸ்லிமாக மாறச் சொல்லி வற்புறுத்தியதால் 3,000 பார்ப்பனர்கள் தற்கொலை செய்து கொண்டனர்” என்று எழுதிய கட்டுக்கதை வங்காளம், அஸ்ஸாம், பீகார், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களிலுள்ள பாடப் புத்தகங்களில் இடம்பெற்றிருந்ததைக் கண்ணுற்ற இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவரும் ஒரிஸ்ஸா மாநிலத்தின் ஆளுநராக பதவி வகித்த பி.என். பாண்டே இச்சம்பவம் பொய்யானது எனக் கூறி இதனை எழுதியவரிடம் தொடர்புகொண்டு அவரது கூற்று அவதூறானது என்று நிரூபித்ததோடு பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் எழுதிய புத்தகத்தையே நீக்குவதற்கு காரணமான மகத்தானதொரு பணியைச் செய்தார்.

திப்பு சுல்தான் மக்களின் உடன் நலனையும் ஒழுக்கத்தையும் பொருளாதார நலனையும் கருத்திற்கொண்டு, அரசுக்கு வருமானத்தை ஈட்டும் மது விற்பனையை அனுமதித்த தமது அமைச்சரைக் கண்டித்தார். ஆங்கிலேயர்கள் விவசாயிகளை கஞ்சா பயிரிடுமாறு வற்புறுத்தி துன்புறுத்தியபோது, திப்பு சுல்தான் கஞ்சா உற்பத்தியை தடை செய்தார். மேலும், ஆங்கிலேயர்கள் விபசாரத்தை ஊக்குவித்தபோது திப்பு சுல்தான் விபசாரத்தை தடை செய்ததோடு, அநாதை சிறுமிகளை தேவதாசிகளாக தானமளிப்பதையும் தடை செய்தார். கீழ் சாதிப் பெண்கள் மேலாடை அணியக்கூடாது என மேல் ஜாதி வர்க்கம் விதித்த சட்டத்தை மாற்றி மேலாடை அணிய சட்டம் வகுத்தார் திப்பு சுல்தான். இவ்வாறு திப்பு சுல்தான் நல்லொழுக்கத்தை போதித்தார்.

திப்பு சுல்தான் போர்க்களத்தில் எந்தளவு நேர்மையாக நடந்துகொண்டார் என்பது பற்றி சில விடயங்களாவன. “தோற்கடிக்கப்பட்ட எதிரி நாட்டின் சொத்துக்களை சூறையாடுவதன் மூலம் சிலர் பணக்காரர்கள் ஆகலாம். ஆனால், அது தேசத்தை ஏழ்மையாக்கும். அப்பாவி மக்கள் மீது போர் தொடுக்காதீர்கள். பெண்களை கௌரவமாக நடத்துங்கள். அவர்களது மத நம்பிக்கைக்கு மதிப்புக் கொடுங்கள். குழந்தைகளுக்கும் முதியோர்களுக்கும் பாதுகாப்புக் கொடுங்கள்” என்று தனது இராணுவத்தினருக்கு ஆணை பிறப்பித்தார் திப்பு சுல்தான்.

விடுதலைப் போருக்கு முன்னோடியாகவும் ஆங்கிலேயருக்கு சிம்ம சொப்பனமாகவும் திகழ்ந்த திப்பு சுல்தானின் வாழ்க்கை வரலாற்றை தொலைக்காட்சித் தொடராக தயாரிக்க முற்பட்ட சஞ்சய் கான் என்பவர் திப்பு சுல்தான் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்களால் பல இன்னல்களுக்கு ஆளானார்.

சஞ்சய் கான் “The Sword of Tippu” என்ற தொலைக்காட்சி தொடரை படமாக்கிய பிரிமியர் சினிமா ஸ்டூடியோவிற்கு திப்பு சுல்தான் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்கள் தீ வைத்தபோது 55 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். ஏராளமான பொருட்சேதம் ஏற்பட்டது. சஞ்சய் கான் பலத்த காயங்களுடன் பல மாத சிகிச்சைக்குப் பின்னர் உயிர் தப்பினார்.





கலாபூஷணம்
**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**

# உலகக்கிண்ண போட்டியில் வடபகுதி வீரர்கள்




இந்தியாவில் இடம்பெறவுள்ள உலக கிண்ண மிக்ஸ் பொக்சிங் போட்டிக்கான தெரிவுப்போட்டியில் வவுனியா, கிளிநொச்சி [கிளி/மத்திய கல்லூரி மாணவி] மற்றும் முல்லைத்தீவை சேர்ந்த வீர வீராங்கனைகள் உலக கிண்ண போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

சிறிலங்கா மிக்ஸ் பொக்சிங் அமைப்பின் ஊடாக இந்தியாவில் இடம்பெற்ற உலக கிண்ண மிக்ஸ் பொக்சிங் தெரிவுப் போட்டியில் வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவை சேர்ந்த 7 வீர வீராங்கனைகள் பதக்கங்களைப் பெற்று பெருமை சேர்த்துள்ளார்கள்.

இம் மாதம் 27ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமான போட்டிகள் 30 ஆம் திகதி முடிவுற்றது. குறித்த போட்டியில் இலங்கை, இந்தியா, இத்தாலி நாடுகளைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தார்கள்.

இவர்கள் இப்போட்டியில் கிக்பொக்சிங் போட்டியில் 4 தங்கப்பதக்கங்களும் , 1 வெள்ளிப் பதக்கமும், மல்யுத்த போட்டியில் 2 வெள்ளி பதக்கங்களும் பெற்று மொத்தமாக 7 பதக்கங்களைப் பெற்று வெற்றியை தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

குறித்த இப்போட்டியில் தங்க பதக்கத்தினை பெற்ற வீர, வீராங்கனைகள் உலக மிக்ஸ் பொக்சிங் சங்கத்தினூடாக 3 மாத பயிற்சியை இந்தியாவில் இருந்து பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள உலக கிண்ண போட்டியிலும் பங்கேற்கவுள்ளனர் .

ஆசிய மிக்ஸ் பொக்சிங் சங்கத்தின் தலைவரும் பயிற்றுனருமாகிய செல்வரத்தினம் நந்தகுமார் தலைமையில் குறித்த மாணவர்கள் போட்டிக்கு சென்று பதக்கங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஓமந்தை விஷேட நிருபர்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜுன் மாதம் 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.